# செங்கோட்டுப் பள்ளு

பொன்னுச்செல்லையபாரதி.

பதிப்பாசிரியர்:
கவிஞர் ந. கந்தசாமி.

பழகு தமிழ்ப் பதிப்பகம்.
மல்லசமுத்திரம்.

நீடித்த உழைப்பு! குறைந்த வி

# திருச்செங்கோடு கைத்தறி
# நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை
# சங்கம் லிமிடெட், S. 523.

தேரடித் தெரு, திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

தமிழகத்தின் தலைசிறந்த எங்கள்
சங்கத்தில் தயாராகும்
சர்ட்டிங், கோட்டிங், கலர் & வெள்ளை டோரியா
காடா, மல், லாங்க்கிளாத் பீஸ்கள்,
கண்ணைக் கவரும். சீட்டி பிரிண்ட், வாயில், கர்ச்சீப்கள்
துண்டு ரகங்கள், 20s, 30s, & 40s;
4x8, 2x8 வேஷ்டிகள்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.
உழைப்பிற்கும் உறுதிக்கும் உத்திரவாதமுள்ள எங்கள்
சங்க கைத்தறித் துணிகள் எல்லா 'கோ-ஆப்டெக்ஸ்'
விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார். (தலைவர்)

ஓம்

மங்கலம் ஊமைநகர்

பொன்னுச்செல்லையபாரதி பாடிய

# செங்கோட்டுப் பள்ளு

பதிப்பித்து வெளியிடுதல்:

**கவிஞர் ந. கந்தசாமி.**

பதிப்புரிமை.

ஓலைச்சுவடியிலிருந்து
முதற்பதிப்பு: மே. 1967.

விலை ரூ. 3-50.

கிடைக்குமிடம்:-

கவிஞர். ந. கந்தசாமி,
மல்லசமுத்திரம், சேலம் மாவட்டம்.

கருணாநிதி பவர் பிரஸ், வேலூர் (சேலம்) போன் 29.

முதுபெரும்புலவர், இலக்கண நிறைகடல்,
கொங்குத்தொல்காப்பியர்

## பண்டித, அ கந்தசாமிப் பிள்ளையவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

திருச்சிற்றம்பலம்.

பொன்னுச்சிதம்பர பிள்ளையென்னும் புலவர் பெருந்தகை பாடியருளிய ''செங்கோட்டுப் பள்ளு'' என்கிற அரிய நூலை, ஊமையம்பட்டி கவிஞர், கந்தசாமியவர்கள் அச்சில் பதிப்பித்துள்ளதைக்கேட்டு நான் உளமிக மகிழ்ந்தேன்.

இந்நூலாசிரியர் கருணீகமரபினர், பெரும் புலமைவாய்ந்தவர். உலகியல் வழககங்களைத் தமஅருங்கவியில் அமைத்துப் பாடியுள்ளார்.

இந்நூலின் இனிய பகுதிகளை என்தாயாரவர்களும். அரங்கனூர் புலவாவேங்கடாத்திரிப்பிளளை, திருச்செங்கோடு அட்டாவதானி முத்துசாமிக் கோனூர் ஆகியவர்களும் சொல்லக்கேட்டிருக்கிறேன். அந்தக்காலத்தில் திருச்செங்கேட்டுக்கடுத்த பன்னீர் குத்திபாளையத்தில் நூலாசிரியரின் மகளிருந்தனராம் அவ்வம்மையார் இந்நூலிலுள்ள பலபாட்டுகளைச் சொல்லத் தாம்கேட்டிருப்பதாக. திருச்செங்கோடு முத்துசாமிக் கோனூா 50 ஆண்டுகளுக்குமுன் என்னிடம கூறியிருககிறா

''மாமனமகள் வடிவழகி ஊருககுப் போறாள் - நாலு
வெள்ளசசர்க்கரை வாஙகித்தாருங கணவா''
''குகையினில வாசமுற்ற குபபணனுககு''
'கஞ்சமலை போதமலை மஞ்செடுக்குது''
''ஆட்டை யாம்பட்டிச சநதைக்கு எடடெருது
ஓட்டிபபோய் விறறு...''
''சந்தை மாஙகொட்டை போல தாடியழகும்''

ஆகியதொடர்கள் நினைவுக்குவருகின்றன. இந்நூலாசிரியர் பாடிய செங்கோட்டுவேலவா ''யமகங் (ஈரிசை) காதல்'' என்னும் ஒப்பற்றநூலை எனதுதமையனூர் என்இளமைப்பருவத்தில் பலகாலும் படித்துககாட்டிப் பொருள் விளக்கக்கேட்டிருக்கிறேன் அதுமிக அருமைப்பாடுடைய நூலாகும்

''பூமேவுங் 1 கோதைவளர் புண்ணியனூர் தனமருகன்
பூமேவுங் 2 கோதை வளா புணணியனூர் காதலுககு''

---

1 கோதை - திருமகள். 2 கோதை - திருசசெங்கோடு

குறிப்பு:- இப்பாராட்டுரை இந்நூல் வெளியீட்டுவிழா (14—5—67) நடந்ததன் பின்னர் கிடைக்கப்பெற்று, இங்கு சேர்க்கப்பட்டது.

"வேழ முக 1 நாரி விநாயகரும் தென்பழனி
2 வேழ முக நாரி 3 விநாயகரும் காப்பாமே"

"நாகமலை மேவுதிரு நாதவடி வார்தமிழ்க்கு
4 நாகமலை மேவுமாத்த நாரிச ருந்துணையே"

"அரவகிரி வாசர் அயில்முருகர் காதலுக்கு
5 அரவகிரி வாசர் அடியிணையுங் காப்பாமே"

6 "கையோங்கிக குட்டிக் கருதினவா தாதையினைக்
கையோங்கிக் குட்டிக் கடுஞ்சிறையில் வைத்தபிரான்"

7 "கந்தர்பபன் வந்து கலகமுனைச் செய்யாமல்
கந்தபபன வநதேன. . ."

இப்படியே முழுவதும் யமகத்திலமைந்து, சொல்லின்பமும் பொருளின்பமும் பொதிந்து கிடக்கும் நூலாமது.

இப்பனுவலை ஆசிரியர் தம்மூரிலிருந்து திருச்செங்கோடு வரை மெதுவாக நடந்துகொண்டே எழுதிச்சென்றதாக எங்கள் பெரியம்மா சொல்லும்.

"செங்கோட்டுப்பள்ளு" "செங்கோட்டுக் காதல்" ஆகிய இவ்விரண்டு சுவடிகளும் எங்கள் வீட்டிலிருந்தன. ஒருசமயம் தீப் பட்டு அவைகள் அழிந்துவிட்டன.

மேற்படி செங்கோட்டுப் பள்ளெனும் நூலைப் பதிப்பிக்க திரு. கந்தசாமி அவர்கள் 'பெருமுயற்சி கொண்டார்' என்பதை நான்பல உதாரணங்களால் அறிவேன். என்னிடம் இரண்டொரு முறைவந்து பொருள் கேட்டுத்தெரிந்துகொண்டார். இவரது புதல்வர் பேரூர்க்கல்லூரில் என்பால் தமிழ் பயின்றவர்

இவர் கல்வி, அறிவு, ஆராய்ச்சி, தமிழ்ப்புலவர்கள்பால் பெருமதிப்பு, தாய்மொழிபபற்று, தாய்நாட்டுப்பற்று ஆகிய நற்பண்புகள் இயல்பாய் அமைந்தவர். பழங்கால ஏடுகளை ஆராய்ந்து பதிப்பிகக வேண்டுமென்னும் பேரார்வங்கொண்டவர்

இவர் உரம்பெற்றஉடல், நீடிய ஆயுள், அமைதிகொண்ட உள்ளம், மகிழ்வுநிலவும் வாழ்க்கை முதலிய நலங்களெல்லாம் நிரம்பி நீடூழி வாழுமாறு மங்கைபங்கன் திருவருள் பொழியப் பிரார்த்திக்கிறேன.

(தங்கல்) தாரமங்கலம்,
28—5—67.

**அ. கந்தசாமி,**
பேரூர்.

---

1 நாரிவிநாயகன்-திருச்செஙகோட்டுத்தலவிநாயகர்.
2 வேழமுகநாரி-வேழததால் வளர்ககப்பட்ட தெய்வானையம்மை.
3 விநாயகர் - மேலான நாயகர்.
4 நாகமலை - உமாதேவி; நாகு - இளமை, அமலை - உமை.
5 அரவகிரி - வேடுவர் - விலங்குகளின் ஆரவாரங்கொண்ட மலைகள்
6 கை... கருதினவர். அகத்தியர். 7 கந்தர்ப்பன் - மன்மதன்.

# அணிந்துரை

வித்வான். திரு வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள்

செங்கோடு என்பது திருச்செங்கோடாம். "**செங் கோடாங் கோடாந்திருத்தாவு செங்கோடு**" என்பது சென்னிமலைப்புராணம். திருச்செங்கோடு சிவபெருமானுக்குரிய தேவாரப்பாடல் பெற்ற கொங்கேழுதலங்களில் ஒன்றாகவும் முருகனுக்குரிய படைவீடுகள் ஆறனுள் ஒன்றாகியதிருவேரகமாகவும் திகழ்கின்றது. இதுபூந்துறை நாட்டிற்பொலிவுற விளங்குவது. இம்மலைமேற்கோவில் கொண்டுள்ள முக்கியமான மூர்த்திகள் அர்த்தநாரீசுவரரும், செங்கோட்டுவேலவருமாவர்.

அர்த்தநாரீசுவரர்:- சிவமென்றும் சதாசிவமென்றும் மயேசுரமென்றும் சொல்லப்பெற்ற மூவகையான பதிதத்துவங்களில் மயேசுரமானது அநேக கோலங்களாகத்திருமேனிகொண்டு சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களைப் பண்ணிக்கொண்டு விளங்கும். அதில் பிரதானவடிவம் இருபத்தைந்து பேதமாக விளங்கும். அவை சந்திரசேகரர் முதல் இலிங்கோற்பவர் ஈறாகச்சொல்லப்பெற்ற இருபத்தைந்தாம். அவற்றுள் ஒன்று அர்த்தநாரீசுரவடிவம் என்று சிந்தியாகமமென வழங்கும் மெய்மொழிச்சரிதைகூறுகிறது. "**சங்கையிலர்த்த நாரீச்சுவரன்**" (மெய்மொழி - பதியியல் 44.) மேலும் இளையபிள்ளையாராகிய முருகக்கடவுள் மயேசுவரருடைய இருதயத்தில் தோன்றினாரென்று அவ்வாகமம் கூறுகின்றது. "**ஆதிநற்கணேசன் கண்டத் தறுமுகனிருதயத்தே**" (மெய்மொழி-பதியியல் 46.) அர்த்தநாரீசுவரர் அருளேவடிவமான அம்பிகையுடன் விளங்குபவர். "**அர்த்தநாரீசுரரோ அத்துவிதப்பொருளாகும்**" என்பர் சீகாழிஅருணாசலக் கவிராயர். செங்கோட்டுவேலவராகிய முருகக்கடவுள் அழகே

வடிவமாக வேலேந்திய கரத்தினராய் விளங்குபவர். அருணகிரிநாதர் இவரைச் "சேலார்வயற்பொழிற் செங்கோடன்" என்றும் இவருடைய அழகைக்காண்பதற்கு "நாலாயிரங் கண்படைத்திலனேயந்த நான்முகனே" என்றும் கூறுவர்.

இவ்விருமூர்த்திகளுக்கும் கற்கோவிலும் சொற்கோவிலும் அமைத்து வழிபட்டு மகிழ்ந்தோர் பலர். அவருள் கண்ணகுலச்செல்வனாகிய அத்தப்பநல்லதம்பிக்காங்கேயன் (கி. பி. 16-ம் நூற்றாண்டு) மேற்றிசை நோக்கியருள் புரிந்து விளங்கும் அர்த்தநாரீசுவரருக்குச் சிற்பம்நிறைந்த கற்கோவிலெடுத்து வழிபட்டான். அவ்வாறே செல்லகுலச்செல்வனாகியஇளையான் (இருப்புலி)என்பவன் (கி பி. 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதி) கீழ்த்திசை நோக்கி விளங்கும் செங்கோட்டு வேலருக்குக் கற்பணி சிறந்த கோவிலெடுத்து வழிபட்டான்.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புலமைச் செல்வம் நிறைந்து விளங்கியவரும் சேலமாவட்டத்தைச் சார்ந்த மங்கலமென்னும் ஊமை நகரில் வாழ்ந்தவரும் கருணீக குலத்தில் கவுணிய கோத்திரத்தில் பிறந்தவருமாகிய "பொன்னுச்செல்லையன்" என்பவர் அர்த்தநாரீசுவரருக்குச் செங்கோட்டுப்பள்ளும், செங்கோட்டுவேலருக்கு ஈரிசைக்காதலுமாகிய இரண்டு சொற்கோவில்களையெடுத்து அழியாத பெரும்புகழுக்குரியராய் விளங்கினர்.

"மலைமகளை யிடப்பாகம் வைத்ததேவர்
வாசுகி மேரையர்மிசை வண்மையாக
நிலையெனவே பள்ளெனும் நாடகத்தையானும்
நிதிபனகா சல முருகர் அருளால்" (காப்பு - பாடல் 1)

என்றும்

"விண்ணவர்கோன் அரவகிரி அதனில் மேவும் விமலருட பண்ணையத்தின் பெருமை தானும், பண்ணைவளர் பள்ளர்கள் பள்ளியர்தம்செய்கை, பண்ணையினுர் நீதிநெறி முறையிதெல்லாம்

மண்ணுலகிலிது வொருபிரபந்தமாக வகுத்துரைத்தேன் புன்கவியீ தெனினும் கோதை அண்ணல் பிரபந்தமது ஆகையாலே அனை வருக்கும் செவிக்கமுர்தம் ஆகுந்தானே" (அவையடக்கம் 3) என்றும் செங்கோட்டுப்பள்ளு கூறுதலாலும்

"அரவகிரி வாசர் அயில்முருகர் காதலுக்கு
அரவகி ரிவாசர் அடியிணையுங் காப்பாமே"
(செங்கோட்டுக்காதல் 4)

"பொன்மாரியேபொழியும் பூங்கடம்பன் காதலுக்குப்
பொன்மாரி நாயகிதன் பூங்கமலத் தாள்துணையே"
(ஷை 13)

எனச்செங்கோட்டுக்காதல்கூறுதலினால் செங்கோட் டுப்பள்ளுக்கு அர்த்தநாரீசுரர் பாட்டுடைத்தலைவரென்பதும் செங்கோட்டுக்காதலுக்குச் செங்கோட்டுவேலவர் பாட்டு டைத்தலைவரென்பதும் விளங்கும். செங்கோட்டுப்பள்ளு செங்கோட்டுமலையையடுத்து விளங்கும் வயல் நிலமாகிய மருதத்தைப்பற்றியது. மருதத்திற்குரிய நிலமக்களா வோர் பள்ளரும் பள்ளியருமாவர். மருதத்திற்குரிய உரிப் பொருள் ஊடல். பள்ளன் பள்ளியருடல் கூறுவது செங் கோட்டுப்பள்ளு. செங்கோட்டுக்காதல் மலையாகிய குறிஞ் சியைப்பற்றியது இம்மலைநிலமக்கள் குன்றவரும் குறத்தி யருமாவர். குறிஞ்சிக்குரிய உரிப்பொருள் புணர்ச்சியாம் ஊடலும்கூடலுமே இன்பம்தருவதாம். "ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடிமுயங்கப்பெறின்" என்பது திருக்குறள். பள்ளும், காதலும் இன்பத்தை மிகுவிக்கும் நூலாம் என்பது கருதியே ஆசிரியர் பொன்னுச்செல்லையன் என்பவர் இவ்விரு நூல்களையும் சொல்லின்பமும் பொருளின் பழுமையையாத்துள்ளார், இவ்விருநூல்களும சொல்லாலும் பொருளாலும ஒற்றுமையுற்று விளங்குதலை நூல் நோக்கி யறிந்துகொள்க. அவற்றுள் இரண்டொன்று காட்டுதும். நூலாசிரியர் **"பள்ளெனும் நாடகத்தை நிதிபனகாசல**

முருகர் அருளால்பாட" (செங்கோட்டுப்பள்ளு 1) என்று கூறுவதனால் திருச்செங்கோட்டு வேலவருளினால் பாடினார் என்பது தெளிவாம். (பனகாசலம் - நாகமலை; செங்கோடு) செங்கோட்டுக்காதல் பாடுவதற்கு அம்மலைமேவும் அர்த்த நாரீசுரரைக்காப்புக் கூறுகின்றார். "**நாகமலைமேவு திரு நாதர்வடிவார் தமிழ்க்கு, நாகமலைமேவு மர்த்தநாரீசருந் துணையே**" (செங்கோட்டு காதல் 3) செங்கோட்டுப்பள்ளு நூலை "**இதுவொருபிரபந்தமாகவகுத்துரைத்தேன்**" (செங் கோட்டுப்பள்ளு 3) என்று கூறுகின்றார், அங்ஙனமேதான் பாடியகாதல் நூலைப்பிரபந்த மென்றே கூறுகின்றார். "**கல்விக் காசர்முருகையருட காதலெனுங் கல்விப்ர பந்த மது காக்கக்குருபைபுரிவாய்**"(காதல் 8)"**ஆசான்பிரபந்தமது வாகையால் தென்பொதிகை, ஆசர்ன்முன்னின்று அனுக் கிரகம் செய்திடுவார்**"(காதல் 11) பள்ளுநூலில் "**கோட்டு வளஞ் சேர்வடபாற் குன்றுறைசெங் கோட்டரனார்** (219) என்று கூறுகின்றார். காதல்நூலில் "**கோட்டுவளஞ்சேர் வடபாற் குன்றினையதாந் திருச்செங் கோட்டுவளஞ்சேர் மகிமைகொள்ளுதிருச்செங்குன்று**"(23)என்றுகூறுகின்றார் பள்ளுநூலில் குறிஞ்சியென்றும் சொல் நான்கடிகளிலும் வர, மடககணியாகப் பாடியுள்ளார். "**குறிஞ்சிக்கிழவ னெனுங் கொற்றவனைப் பெற்றவனார், குறிஞ்சிநிலத் துறைசெங் கோட்டிறையை நாட்டியபண், குறிஞ்சியெனா நால்வருமிங் கோதுந்தமிழ்ப்பா, குறிஞ்சி ரசத்தேன் குடிக் கத்தெவிட்டாதே**" (330) இவ்வாறே குறிஞ்சியென்னும் சொல்மடக்காக வரப்பாடியகாதற்கண்ணிகள் கண்டுமகிழத் தக்கவையாயுள்ளன.

"வேந்தன் குறிஞ்சி மிகவுரைத்தோர் பூங்குறிஞ்சி
வேந்தன் குறிஞ்சிநில மென்றசெங்குன் றூர்முருகன்" 68.
"குறிஞ்சிப் புனத்தில் குறத்தியர்க்கு மாலையிட்ட
குறிஞ்சிக் கிழவனுக்கோ கோதையரும் மாலையிட்டார்" 650

பள்ளுநாடகத்தில் மூத்தபள்ளி வாய்திறத்தல் கூறுமிடத்து "**மணமிகுமலர்திறந்தவாறுபோல்வாய்மலர்ந்து**" எனக்கூறுகின்றார், காதலிலதலைமகள் வாய்திறந்துபேசுதல் கூறுமிடத்து " **வாச மலர்திறந்த வாறுபோல் வாய் மலர்ந்து, வாச மலர்த்தேன் மதுரம் மொழியெனவே**" எனக் கூறுகின்றார். பள்ளுநாடகத்தில் மகளிரைப்புணர் தலைக் காமபூசையென்று கூறினார் " **காமபூசையிலே மணவாடைக்கும். ... மூன்னூறுகோட்டை நெல்விணுக் கழித்தான்**" (361) காதலில் "**வடுப்படா மேனிதனில் மாமதனபூசையினல் வடுப்படவும் மேனிதனில் வள்ளுகிரின்ரேகைபட**" என்றும் " **வாலசுப்பிரமண்ணியரும் மதன் பூசைக்கேது செய்தார்**" என்றும் காமபூசை கூறினர். பள்ளு நாடகத்தில் சிவபிரானையும் திருமாலையும் மாமனைக் கொன்ருேன் என்றார். "**தாமமிகுமாமனென்றும் பாராமலே முன்பு தக்கனைவதைத்தசிவ சம்புவல்லவோ**" (867) **ஆமடியோ அவர் தானேமாமனைக் கொன்றார் — உங்கள், ஆண்டவனுமாமனை முன்கொல்லவில்லையோ** (868) இச்செய்தியைக் காதலில் "**மாமனைக் கொன்ருேன் மருகன் மகமழித்து, மாமனைக்கொன்ருேன் மகன்பழிக் கஞ்சுவனே**" எனக்கூறிதல் காண்க.

பள்ளு நூலில் நமசிவாயம்பிள்ளை கணக்குஎழுதுவதில்வல்லவனென்று 727 – 728 பாடல்களில் "**விளைஞ்ச நெல்லின் கணக்கு வகை தொகை. விவரமாகவும் மண்டகப்பாளையம், தன்னிலே வளர் நமசிவாயம்பிள்ளை, தன் கணக்குக்கெழுதி வைத்தே நான்**" என்று குடும்பன் கூற்றில் வைத்துக் கூறினர்.

இச்செய்தியைக் காதல் நூலில் தலைமகன் கூற்றில் வைத்து

"ஏது விளையென் றெடுத்துரைப்பேன் ஒப்பனைகள்,<br>
ஏது விளை நிகரி தென்று சொல்லத்தோன்ற வில்லை<br>
சீர்கருணை ஞம்நமசி வாயபிள்ளை நின்றனியல்,

*சீர்வடிவங்கண்டு தெளிந்துசொல்வதல்லாமல்,*
*தன்னாலும் என்னாலும் தண்டமிழ்வாணர்கவி*
*தன்னாலும் உன்னிணைகள் தானுரைக்கக்கூடாது''*

என்று கூறுகின்றார்.

மற்றும் பள்ளு நூலில் கூறிய நாரிகணபதி முதலாகிய திருச்செங்கோட்டிலுள்ள தெய்வங்களைக் காதல் நூலிலும் கூறியிருக்கின்றார். அவற்றுள் உலகத்திற்கு அதிகம் பிரஸ்தாபமில்லாத தெய்வங்களையும் அறிந்து இரு நூலிலும் கூறியிருப்பது ஆசிரியரது நுட்பமான கருத்தினைக் காட்டுகின்றது அவற்றுள் இரண்டொன்று காட்டுதும். காதல் நூலில் "**வீரேசுரர் பாதம் மெல்லிநல்லாளும் பணிந்து, வீரே சுவரித ன்விரைமலர்ப் பொற்றொழுது**" என்ற கண்ணியில் கூறப் பெற்ற வீரே சுவரரும் வீரேசுவரியும் பள்ளு நூலிலும போற்றப்படுகின்றனர். "**வீரிவீரேசுரர்க்கும் வெங்கேவறேபால் பொங்கல் வேண்டியே கொண்டையளே**" (251) ஏனைய தெய்வங்களை நூல்களை நோக்கியறிந்து கொள்ளுக.

திருச்செங்கோட்டுப் புராணம் திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ் செங்கோட்டு வேலர் கோவை திருச்செங்கோட்டு மாலை முதலிய பழைய தமிழ் நூல்கள் திருச்செங்கோட்டை ஏரகம் என்று கூறியிருக்கவும் இந்நூலாசியர் தாமியற்றிய பள்ளு, காதல் என்னும் பின் நூல்களில் செங்கோட்டை ஏரகம் என்று குறிப்பிட்டாரில்லை. 428 - வது பள்ளுப்பாடலில் "**மேழியை — விந்தையாகிய வேளாளர் எங்கள் விருதென்றே கொண்டு போனார்**" என்று வேளாளரைப் பள்ளன் கூற்றில் வைத்துப் பொதுவிற்கூறினரே அன்றி ஆசிரியர் தாம் வாழ்ந்த காலத்தில் உபகாரிகளாய் சிறப்புற விளங்கிய கொங்கு வேளாளச் செல்வர்களில் ஒருவர் பெயரையேனும் குறித்தாரில்லை. எனினும் தாம் பாடிய காதல் நூலில் மோரூரில் சிறப்புறவிளங்கிய வேளாளராகிய நல்லதம்பிக் காங்கேயனையும் அவன் பிறந்த

கண்ணகுலத்தினரையும் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துப்பாராட்டுகின்றார். அது:

"காங்கயனும் சொல்வநிதங் கண்ணர் மகிழ்வதுபோல்,
காங்கயனும் மேல்கவிதை கைக்கொண்டருள் புரிவான்"(18)

பொருள்:- "நித்தமும் புலவர் சொல்லும் புதிய கவிதைகளை மோரூர்க்காங்கயனும் அவனது கண்ண குலத்தினரும் கேட்டு மகிழ்வது போல, செங்கோட்டில் வாழும் முருகக் கடவுளும் எனது மேலான காதல் கவிதையை ஏற்று அருள்புரிவான்" என்றபடி.

## பள்ளு

குன்றில் வாழுங் குறத்தியர் பாட்டுக் "குறம், குறவஞ்சி" எனவழங்குதல் போலச் சேரியில் வாழும் பள்ளியர் பாட்டு "பள்ளு, பள்ளு நாடகம்" எனவழங்கப்பெறும். இது தமிழ்மொழிக்குரிய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்ளில் ஒன்று. பன்னிருபாட்டியல் முதலியபாட்டியல் நூல்கள் இதனை உழத்திப் பாட்டெனக் கூறுநிற்கும். சேரியில் வாழும் பள்ளன் தன் மனைவியரிருவரில் இளையவள் மேல்பிரியமுடையவனாய் அவள்வீட்டிலேயே வாழ்ந்திருத்தலைக்கண்ட மூத்த பள்ளியானவள் சினமுற்றுப் பண்ணைத் தலைவனிடம் சென்று ஆண்டே பள்ளன் இளையபள்ளியின் வலையிலகப்பட்டு அவள்வீடேகதியாகப் பண்ணை வேலையைப்பார்க்காமலிருக்கிறான். ஆதலால் அவனை வரச்செய்து விசாரித்து அவன்செய்த குற்றத்திற்காக அவனைக் குட்டைமரத்தில் போடச்செய்து (தண்டனை கொடுத்து) அவனுக்கு நல்ல புத்தி வரச்செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்ளவும் பண்ணைத் தலைவன் பள்ளனையழைத்து விசாரித்து அவன் செய்தகுற்றத்திற்காக அவனைத்தொழுமரத்தில் மாட்டச் செய்கிறான். மூத்தபள்ளி தொழுமரத்தில் கிடக்கும் பள்ளனுக்குச் சோறுகொண்டுவரவும் பள்ளன் அவளை நோக்கித்

தான்செய்த குற்றத்தைப் பொறுத்துப் பண்ணைத்தலைவனை வேண்டித் தன்னை விடுவிக்குமாறு வேண்டிக்கொள்கிறான். மூத்தபள்ளி பள்ளன்மேல்பரிவுகொண்டு பண்ணைத் தலைவனிடம்சென்று ஆண்டே பள்ளனுக்குப்புத்திவந்துவிட்டது. அவனைத் தொழுவினின்றும் விடுவிக்கச் செய்து காலாவதியில் செய்யவேண்டிய பண்ணைவேலைகளைச் செய்யுமாறு கட்டளையிட்டருள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறாள்

பண்ணைத்தலைவன் மூத்தபள்ளியின் வேண்டுகோளின்படி பள்ளனைத் தொழுமரத்தினின்றும் விடுவிக்கிறான். பள்ளன் மிகவும் மகிழ்ச்சி யடைந்தவனாய்ப் பண்ணைத் தலைவனை வணங்கிக்கொண்டு மூத்தபள்ளியுடனும் இளைய பள்ளியுடனும் சமமாக அன்பு செய்து உழவு வேலையை மகிழ்ச்சியுடன் செய்து மிகுதியும் நெல் விளைவிக்கிறான் இதுவே பள்ளு நாடகத்தின் சுருக்கமான கருத்தாகும். இதனுடன் பலவகையான நாடகவுறுப்புக்களைப் புலவன் தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றபடி கூட்டியும் குறைத்தும்பாடுவான். புலவன் மேற்குறித்தகருத்தினையமைத்துப் பாட்டுடைத்தலைவன் சிறப்பும் தனக்கு உபகாரிகளாயிருந்தவர்களுடைய பெயரும் விளங்கும்படி வேடிக்கைநாடகமாகப் பாடுவதே பள்ளு நாடகமாம். இதற்குப் பாட்டுடைத் தலைவராவோர் தேவர்களும் மக்களுமாவர்.

முன்காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள தேவாலயங்களுக்குப் பள்ளுநாடகமும் குறவஞ்சிநாடகமும் இன்றியமையாதனவாகக் கருதினர். திருவிழாவின் முடிவில் குறவஞ்சிநாடகமும் பள்ளுநாடகமும் நாட்டியமாக நடித்துக் காட்டப் பெற்றன.

பள்ளுநாடகம் சிந்தும், கலிப்பாவும் விரவிவரச் சேரி மொழிகளாக குறித்தபொருள் எளிதில் விளங்குமாறு

பாடப்பெறும். சேரிமொழிகளாற் பாடப்பெறும் நூல்; பாமரருக்கும் பண்டிதருக்கும் மகிழ்ச்சி தருவதாம். சேரி மொழிகளாற்செய்யப்பெறும் நூல், நூலுக்குரிய எட்டுவகை வனப்புகளில் ஒன்ரும். அதனைப் புலன் என்பர் தொல் காப்பியனுர்.

"சேரிமொழியாற் செவ்விதிற்கிளந்து, ஓதல் வேண்டாது குறித்தது தோன்றிற், புலனென மொழிபபுல னுணர்ந்தோரே" (தொல் - செய்யுளியல் 241) "சேரிமொழி யென்பது பாடிமாற்றங்கள் அவற்ருனே செவ்விதாகக்கூறி ஆராய்ந்து காணுமைப் பொருட்டொடரானே தொடுத்துச் செய்வது புலன் என்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர் என்றவாறு. அவை விளக்கத்தார் கூத்துமுதலாகிய நாடகச்செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள்போல்வன வென்பது கண்டுகொள்க" என்பது தொல்காப்பியப் பேராசிரியம்.

## செங்கோட்டுப் பள்ளு

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் திருச்செங் கோட்டு மலையில் வீற்றிருந்து, உலகுயிர்களைத் தன்னுடைய திருவடி நிழலில் உறையச்செய்து, வாழ்வித்தருளும் அம்மையப்பனுகிய அர்த்தநாரீசுரன் ஆவான். இந்நூலில் சொல்நிகழ்த்துதற்குரிய கிளவித்தலைவர் களாகிய கதாபாத்திரங்களாவோர்: கோலுக்காரன், குடும்பன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைத் தலைவன், ஆசாரி, சோதிடன், பள்ளர்பள்ளியர் என்போர். இந்நூலில் வரும் பாடல்கள்; விருத்தம், சிந்து, கலிப்பா, நொண்டிச்சிந்து, கீர்த்தனை, பொய்க்கால் சிந்து, கப்பல்தரு, அகவல், தக்கை, ஏசல், கும்மி என்பன.

நூலாசிரியன் பொன்னுச் செல்லையன் முக்கூடற் பள்ளு முதல் பிற்காலத்தில் தோன்றிய சேமூர்ப் பள்ளு

வரையிலுமுள்ள பள்ளு நூல்கள் பலவற்றையும் பயின்று தெளிந்த புலமை மிகுதியினால் செங்கோட்டுப் பள்ளு என்னும் இச்சிறந்த நூலைத் திட்பமாகவும், விரிவாகவும், வேடிக்கையாகவும் படிப்போர் மனமகிழுமாறு மிகவும் அருமையாகவும் இயற்றியுள்ளார். இப் பள்ளுநூலினைப் படிப்போர் பல பள்ளு நூல்களிலுமுள்ள பல வகையான சொல் நயங்களையும், பொருள் நயங்களையும் ஒருங்கே எளிதில் அறிந்து மகிழ்பவராவர்.

இதன்கண் அர்த்த நாரீசுரர் பெருமையும், கொங்கு பூந்துறை நாட்டு வளங்களும், அந்நாட்டில் வழங்கும் பலபல தெய்வங்களின் பெயர்களும், சமயக்கருத்துக்களும், இந்நூலாசிரியரை ஆதரித்த உபகாரிகளின் பெயர்களும், பள்ளர் பள்ளியர்களின் இயல்பு, அவர்கள் வாழ்க்கையில் நிகழும் பல வேடிக்கைச் செயல்களும், பல உவமைகளும், பழமொழிகளும் விளங்க மிகவும் அருமையாகப் பாடியுள்ளார். இப் பள்ளு நாடகத்தைப் பயில்வோர் பல பள்ளு நூல்களையும் பயின்ற அறிவுடையவர் ஆவர்.

அர்த்தநாரீசுரராகிய பாட்டுடைத் தலைவரின் பெருமை இந்நூலில் பல இடங்களில் விளங்கக் கூறப் பட்டுள்ளது. அவற்றுள் இரண்டொன்று காட்டுதும்.

"மலைமகளை யிடப்பாகம் வைத்ததேவர்
வாசுகி மேரையர்" (காப்பு 1)

"திரு மேவியதென் கயிலாசன்
அருள்சேர் அரவாசலவாசன்"
தெண்டாயுத பாணி சந்
திரசேகரவேணி" (பா-4)

"பாகம் பிரியாதசர்வேசன்
நாகங்கிரியாய் வளர்ஈசன்" (9)

"கூத்தாடும் வெறிமருளினார்– புவி
யாத்தாளுக்கிடம் அருளினார்" (764)

''ஓம் நமசிவாயனுக்கு
உமையவள் நேயனுக்கு
தெண்டாயுதக் கையனுக்குத்
திருச்செங்கோட்டை யனுக்கு" (930)

இப்பனுவலில் வரும் கொங்கு பூந்துறை நாட்டு வளங்கள் படித்து மிகவும் மகிழ்வதற்குரியன:

''வீடுதோறும் பரிமளவாசம்
மிகுந்த வீதியிலேமலர் வாசம்
நீடு சோலையில் வேள்வியின் வாசம்
நிறைந்த காவில் முனிவர்கள் வாசம்
பாடுவார்தெரு வுந்தமிழ் வாசம்
பரவு கோவிலில் தெய்விக வாசம்
நாடு தோறும் திருமகள் வாசம்
நளின பூந்துறை நாடெங்கள் நாடே" (222)

''கரிபட்டுள்ளது சேரலன் மாலை
கடைபட்டுள்ளது தான் நவநீதம்
மரிபட்டுள்ளது யோகியர் மனமிவ்
வளமை சேர்கொங்குமண்டல மாமே" (228)

இந்நூல் கூறும் திருச்செங்கோட்டுத் தெய்வங்கள் பலவாம். அவற்றை நூல்நோக்கி அறிந்து கொள்க.

"நாகலிங்கேசுரர்க்கும்–குமரர்க்கும்
நாரி விநாயகர்க்கும்" (249)
''முருகாவுடையார்க்கும் – அஷ்டலிங்க
மூர்த்தி ஐம்பூதருக்கும்"
''வீரிவீரேசுரர்க்கும்" (251)

சிவசத்திகள்: சிவத்தின் திருவருளே பல சத்திகளாக வெளிபட்டுப் படைத்தல் முதலிய எல்லாச் செயல்களையும் புரிகின்றது. சிவம அமர்ந்த தெய்வம், சத்தி ஆடுந்

தெய்வம்; சிவம் கடலானால் சத்தி அதன் அலைகளாகும். உலகம் சிவ சத்திகளின் மயம். "ஆணெலாஞ்சிவமே பெண்ணெலாஞ்சத்தி" என்பது வாயுசங்கிதை. "சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ்வுலகமெல்லாம்" (சிவஞானசித்தி) சிவசத்திகள் தம்முள் பிரிவின்றி ஒன்றில் ஒன்று அடங்கும். இவ்வுண்மைகளை இந் நூ லா சி ரி ய ர் இளையபள்ளி கூற்றுக்களில் புலப்படுத்துவது மிகவும் நயமாயுள்ளது. கீழ் வரும் அடிகள் காண்க:

"தருவுலகிம் மூன்றி னையும் சத்தியல்லோ தந்தாள்
சத்தியது பெரிதுசிவன் தானடக்கம் போடி!
ஒருபங்குஅரன் சத்தியின் பங்கு ஒரு நூறேயாகும்
உலகம் எமதாண்டவர் தன் உபயமயமாகும்"
"ஆகையினால் கொழுநன் மனையாட்கடங்கவேணும்
அப்படியே எனக்கடக்கம் ஆனார் என்கணவர்" (69-70)

இந்நூலாசிரியர் சைவ வைணவ சமரச நோக்கமும் சர்வ, சமய சம நோக்கமும் உடையவர். "சிவன், திருமால் இவர்களை வேறுபிரித்துக் காட்டுதல் குற்றமாம்"என்பதனை உட்கொண்டு,

"நிலைமையரி அரன்வேறு சமயபேதம்
நித்தியமாய் நின்றபொருள் ஒன்றல்லாமல்
உலகினில் வேறிலை இவரைப்பிரித்து நிந்தை
உரைக்கவெகுதோஷமதுஉண்டு" (78)

என்று மூத்தபள்ளி கூற்றில் வைத்து விளக்குகின்றார்.

"அரன் அதிகன் உலகளந்த அரியதிகன்
என்றுரைக்கும் அறிவிலார்கள்
பரகதி சென்றறிவரிய பரிசேபோல்" என்பர் கம்பநாடர்
"சமயபேதம் இல்லாமலிருக்கும்" (235)

சிவபிரான் ஒருவனே பிரமன், மால், ருத்திரன் மகேசுரன், சதாசிவன் என்னும் ஐந்து வடிவம்

உடையவராய் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந் தொழில்களையும் செய்கின்றனர். ஆதலின் அவரை "ஐங்கோலர்" (864) என்றார். கோலம்—வடிவம்

இந்நூல் 365, 66, 67, 68, 69-ம் பாட்டுக்களில் ஆசிரியர் தம்மை ஆதரித்த, கொங்கு எழுகரை நாட்டுச் செங்குந்த குலத் தலைவர் (பட்டக்காரர்) ஆகிய நல்லைய முதலி, ஊமை நகர் பெருமாள்முதலி, முத்தண்ண முதலி, திருச்செங்கோட்டில் அந்நாளில் வாழ்ந்த செங்குந்தர்கள், (அக்குலப் பிரமுகர்கள்) ஆகியோரை மூத்தபள்ளி கூற்றில் வைத்து மிகச் சிறப்பாகப் பேசுகிறார்.

இந்நூலில் வரும் நயமான தொடர்களுட் சில.

"துரும்பினும்பருந் தூணில் உண்டெனு
விரும்புவார் முகந்திரும்புவார்" (761)

"உருக்கொண்டெங்கணும் நிறைந்தவர் – அடி
யருக்குளன்பென உறைந்தவர்" (805)

"தொண்டருக்கருள் செய்தவர் - சிறுத்
தொண்டர் மகவைக் கொய்தவர்" (810)

"நெற்றியில் வெண்ணீறு மிட்டு
மற்றொரு சந்தனப் பொட்டு
நேர்த்தியாய் அணிந்தசைந்
துலாத்தி நடந்து" (பா–25)

"கள்ளம் எதார்த்தம் எல்லாம்
கண்டதிகாரஞ்செய்யும்
வெள்ளைமெய்யுடையார் பண்ணை
விசாரிப்பான் தோன்றினரே" (143)

"குகையினில் வாசமுற்ற குப்பணனுக்குப் – பட்டுக்
குறிகட்டுசோமன் வாங்கித்தாருங்கணவா!" (57)

"மாதவத்திறைலே மழைக்குறியுண்டாயினதே" (317)

"கஞ்சமலை போதமலை மஞ்செடுக்குது — நல்ல
கன்னிப்புற்றில் மண்கரையான் பின்னி வைக்குது
செஞ்சொறித்தவளை கூப்பிட்டஞ்சல் என்குது — வயல்
சேற்றில் நண்டு ஊற்றுக்குழி பேர்த்தடைக்குது" (319)

"ஆட்டையாம் பட்டிச்சந்தைக்கு எட்டு — எருது
ஓட்டிப் போய் விற்று வந்து" (357)

"எட்டுக்குள் அடங்காதவன் வஞ்சனை
எட்டிலோர் பங்கு விட்டேன் வெளியிலே" (368)

"மட்டைக்கொம்பன் நெட்டைக்காளை குட்டைச்செவியன்
"முட்டிக் காலன் சுட்டிக்காளை சட்டித் தலையன்"

"குன்று போலுங்கருமுகில் கொண்டலைப் போலும் — மத
குஞ்சரத்தைப் போலும் சிங்கக் குட்டியைப் போலும்"
(மாட்டுவகை - 731-732-742)

"பக்கிரிச்சம்பா குறுவைசர்க்கரைவண்ணன்-நல்ல
பண்ணுடிக் காத்தன் விளங்குங் கண்ணுடிக் கூத்தன்"
(நெல்வகை – 724)

"கனலைப்புழு மொய்க்குமோ?" (590)

"சொல்லுக் குயர்ந்திடும் சண்டியே — முழுக்
கல்விக் கிசைந்திடு வண்டியே!" (602)

"காத்தகானவர்-செல்லப் பெண்மாலைமுன் சூட்டினர் - மலை
வல்லிக்கிசைந்த செங்கோட்டினர்" (602)

"மட்டார் குழலியர்கள் மதன் சமரேபுரிவார்
முட்டாளுச்சண்டையிட முடிவாமோ?" (501)

"வார்த்தை சொல்லி அம்பலத்தில் வைத்திடலாகாது" (513)

"திட்டமாய்ச்சம்பாஅரிசி தீட்டி வடித்து — நல்ல
சீனிச்சர்க்கரையும் ஆவின் பாலும் பழமும்" (615)

'சித்திரக்கூடையிலித்தனையுமடுக்கி - வட்டச்
சீமாடு கோலிகூடை சிரசினில் வைத்து

வெற்றிலை பாக்குமடியில் மெத்தவேகட்டி - கையை
வீசிவீசிக்கொண்டு ஒயிலாக நடந்து" (618)

"மோகனப் பெண்ணுளும் வந்தேன் ஆகமகிழ்வாய்" (618)

பேய்க் கோல வண்டியை/நாய்க் கோலஞ் செய் வண்டி அன்னமே – மூத்த
பெண்டியுன் ஊழியத் தொண்டியைக் கூடேண்டி சொர்ணமே! (113)

"வாழும்பிராயத்திலே – கசு
மாலச்சிறுக்கி மொழி கேட்டீர்!
பாழுக்குறைத்த நிலா – களர்
பாய்ந்திடும் நீரதும் ஆனேனே!"
"கொண்டு குலம் பழித்தீர் – பின்பு
கொண்டவள் பங்கிலிறங்கினீரோ?" (126 — 128)

"பள்ளன்-ஏற விட்டேணியை வாங்கினனே" (132)
"கொப்பிட்டகாதுக்கு நான்கூப்பிட்டால் கேளாதோ?" (163)
"மணியுதிர்ந்திடச்சிங்கார வார்த்தைகள் பலுக்கின்றுளே"
"தொத்தி வந்தவளல்ல நத்தி வந்தவளல்ல"
"காலிட்டவேலை கையில் கோலியே செய்வேன்" (214)

"பாடகந் தண்டை புலம்பப்புலம்பியே - நான் வந்தவழியைப்
பார்த்துக் கண்களும் பூத்து நிற்பாளே" (343)

"குட்டையிலே கெட்டலைந்து பட்டலேகிருய் - உந்தன்
கொடுமை யுனைச்சுடுதுகெடுதி பள்ளா" (626)

"பசுவுடன் பன்றி சேர்ந்தே – ஈனவித்தை
படித்ததுபோல் சதி முடித்தனளே" (236)

"கச்சுக் கட்டில் மெத்தையெங்கே
காளாஞ்சி தானுமெங்கேபள்ளா?" (641)
"பொன்னு பரண மெங்கே
பூமாலைத் தொங்கலெங்கே" (644)

உழுதமாட்டை நுகத்திலிடித்திடும்
உகமை போல நொடிக்காதே என்னேரம் (652)

"சிக்கிக் கொண்டு முழித்த மேலல்லோ
தெரியுமென்பதுன் பாலினிற் கண்டேன்" (655)

"குற்றம்பாராட்டாதேகோரணிசெய்யாதேபள்ளி -உந்தன்
கோபத்தைப் பாராதென் ஆபத்தைப்பாரடிபள்ளி" (663)

"வாழும் பிராயத்தில் வஞ்சனை செய்தாயே" (664)

"அழுதுகிடக்கிறான் பள்ளன்" (681)

"பட்டும் படாதசொல் பாரதமாக்கினேன்
பத்துப்பத்தாக விசாரித்துப் பாரும்" (689)

"கொழுநனார் பின்னோர் குடிமகளுடனே
தழுவினால் மனது சகித்திடு வாரோ!" (697)

"குஞ்சரந்தனக்குக் கோவணங் கொடுத்தால்
அஞ்சுமோ அதுபோல் அரிவையர் கணவன்
தனையடக்கிடவுந்தான் முடிந்திடுமோ?" (698)

"இன்பவேள் போலே இருந்திடும் பள்ளன்
தென்பது குறைந்து திகைக்கிறான் ஐயா" (709)
"கோபித்தகண்ணைக்குளிரவே பார்த்து
ஆபத்துக்குதவும் ஐயனே" (714)

"நாட்டுக்கு நாயகமாம்
வீட்டுக்கு என்னமோ" (848)

"பெண்ணும் ஆணும் பெற்றவர்கள்
பார்த்துச் சொல்லுங் கோ!" (850)
"போட்டவளும் நான் பிறகு மீட்டவளும் நான்" (856)

"அந்தி வண்ணருக்கபய மென்றுரு
சந்தினில் புகுந்தோடவே" (மாடுபிடித்தல்) (759)

"மூக்கணாங்கயிர் பிடிக்கவே – அது
தூக்கி நிலத்தோடடிக்கவே" (759)

"செண்டு முலைகளுங்குலுங்கவே – கரம்
ரெண்டிலும் பொன்வளையலுங்கவே
சித்திரம் போல் வயல் நாற்றுமே நட
உத்தியிலேகையில் பார்த்துமே
கெண்டையைக் கெண்டை கண்டோடவே – மலர்க்
கொண்டையை வண்டு கொண்டாடவே

கிஞ்சுகம் நன்மொழி கேட்கவே – குயில்
குஞ்சுகளுந்தொனி பார்க்கவே
அண்டையிலே மயில் கூட்டமா-யிணை
உண்டென நின்று கொண்டாட்டமாய்" (804)

"நஞ்சி முத்தே அபரஞ்சி முத்தே – அடி
நாகமணி அனு ராகமணி
குஞ்சிப் பெண்ணே சின்ன வஞ்சிப் பெண்ணே" (925)

"சின்னிப் பெண்ணே பசும் பொன்னிப் பெண்ணே – அடி
செங்கமலை வளர் தங்கமலை
அன்ன முத்தே இளங்கன்னிமுத்தே – நன்றாய்
அலுக்கிக் கும்மியடியுங்கடி – பெண்கள்
குலுக்கிக் கும்மியடியுங்கடி!" (926)

இந்நூலினுள் அமைந்த வேடிக்கைப் பகுதிகள் பலவாம், பண்ணைத் தலைவன் வருகை, மாடு பிடித்தல், நாற்று நடுதல், களை பறித்தல், நெல் அடித்தல் ஆகிய வற்றில் காண்க

"வளமிகுந்த அழகியைக் கண்டுளமகிழ்ந்துதான்-கிட்ட
வாடியிங்கே புகைச் சுருட்டுத்தாடி என்பாராம்" (201)

"சுரும்பணிக்கிதன் மகள் சின்னாள் நின்று
வெறும் பணிக்குகள் பேசவே
மாரிக்குடும்பன் ஓடிப் போயொரு
காரிச்சேங் கன்றைப்பிடிக்கவே
திரும்பிமுடுக்க ஓடியே பருங்
குரும்பை முலைப் பெண்ணுடை
சித்திடையைக் கட்டிப் பிடிக்கவே அவள்
மொத்துறதைப் பாரும் பள்ளீரே!" (761)

"வச்சாரிப்பள்ளியாம் மாரியும் – அந்தக்
குச்சேறிப்பள்ளியாள் வீரியும்
சந்தன மென்றுளைச் சேற்றையும் வீசிக் – கோ
விந்தன் முதுகினில் பூசியே
சக்காந்தங்களைப் பேசியே – வெகு
எக்காளங்களில் ஏசியே –" (807)

வல்லிதழ்த் தேனையுங்குடிக்கவோ – ரெண்டு
மல்லிகைச் செண்டையும் பிடிக்கவோ
வாலப் பெண்ணே என்று பதைக்கவே – கசு
மாலங் குடிக்கி யென் றுதைக்கவே (820)

''குலுக்குறள் நின்று அலுக்குருள் – முகம்
கோணுருள் அங்கே நாணுருள் (822)

''கரும்பார் மொழிபகர்ந்து – கடைக்
கண்ணிலினைஞர் தமை மிரட்டி
குரும்பை முலையலுங்க – நல்ல
கோலச்சரிகை வளை குலுங்க
நீங்காத ஆசைதரும் – பள்ள
நேரிழை மார் அரிதான் கொடுக்க'' (830-31 நெல்அடித்தல்)

## அணி

''அணியெனப்படுவது துணிவுறக்கிளப்பின்
செய்யுட்கழகு செய்து நிற்பதுவே'' என்றும்

''அதுவே பொருளணி,சொல்லணியென இருவகைத் தே'' என்றும அணியியல் விளக்கம், கூறிற்றுகலின் செய்யுட் கழகு செய்து நிற்பது அணியாமென்றும், அவ் வணியும் பொருளணியும் சொல்லணியுமாமென இருவகைத்தா மெனவும் உணர்தல் வேண்டும், இந்நூலுள் இவ்விருவகை அணிகளும் பொருந்திகிடப்பதை அங்கங்கே அறிந்து கொள்க. அவற்றுள் சொன்றிக்குழிசி நியாயமாக (ஒருபானைச் சோற்றுக்கு ஒருபருக்கை பதம் என்பதுபோல்) இரண்டென்று காட்டுதும்

''விளைவாம் வயல் திருத்தி விட்டபின்பு நெற்பயிரும்
தளையார் அரன் அருள் போல் சாலவளர்ந்தோங்கியதே (823)

''காமனும் ரதியும் போல் கலந்திருவருந்தான்
பூமணமெனவே போகமாயிருந்தோம்'' (572)

"கட்செவிதடைக்குள் அடங்கள் போல் நின்ற
உச்சிதம் பாரும் பள்ளீரே" (இவை உவமையணி) (757)

"குறிஞ்சிக் கிழவனெனுங் கொற்றவனைப் பெற்றவளுர்
குறிஞ்சி நிலத்துறை செங் கோட்டிறையை நாட்டியபண்
குறிஞ்சியென நால்வருமிங் கோதுந் தமிழ்ப்பா
குறிஞ்சி ரசத்தேன் குடிக்கத் தெவிட்டாதே"(மடக்கணி) (330)

பொருள்: குறிஞ்சிக்கிழவன் -முருகன், குறிஞ்சிநிலம் – மலைநிலம். குறிஞ்சி – குறிஞ்சிப்பண். குறிஞ்சி-குறிஞ்சிப்பூ ரசத்தேன் - இனிமையாகியதேன்.

தொட்ட இடங்களிலெல்லாம்சுவைமணங் கமழும்படி ஆசிரியர் பொன்னுச் செல்லையன் இயற்றிய இப்பள்ளு நூலை முற்றும் பயில்வோர் கவியின்பந் திளைத்து மகிழ்வர் திருச்செங்கோடு சம்பந்தமான பிரபந்தங்களையும் அத்தலத்து மருவிய தக்கராமாயணத்தையும் அச்சிற் பதிபிக்க வேண்டுமென்று நெடு நாள் முயன்றும் என்னல் அப்பணி நிறைவுருமற் போயிற்று. நூல் தோன்றிய ஊரினரும், எனது அன்பிற்கும் மதிப்புற்குமுரியவரு மாகிய கவிஞர், திரு. கந்தசாமி அவர்கள் நெடு நாள் முயற்சியின் பயனுக ஏட்டுச் சுவடியிலிருந்த இப்பள்ளு நூலை மிகவும் நன்ருக ஆராய்ந்து பரிசோதனை செய்து அச்சுவாகனமேற்றி அழகுற வெளிவரச் செய்தார்கள். அன்னவருக்குத் தமிழுலகம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும். பதிப்பாசியர் இது போன்ற வேறு பல நூல்களையும் வெளிவரச்செய்ய, அருள் புரியுமாறு, செங்கோட்டு மலையில் வீற்றிருந்தருளும் உமையொரு பாகருடைய திருவடிச் செந்தாமரை மலர்களைச் சிந்தித்து வந்திக்கிறேன்.

வேலம்பாளையம்,
ஈரோடு வட்டம்.
25—3—67.

அன்பன்,
வே. ரா. தெய்வசிகாமணி.

தெ. ஞானசுந்தரம் எம். ஏ.,
தமிழ்த்துறை, கண்டர் கல்லூரி, வேலூர் -(சேலம்).

கொங்குநாட் டினுக்குப் பொலிவினை நல்கும்
கோதில்செங் கோடமர் பெருமான்
பங்கயப் பதத்திற் பொன்னுச்செல் லையன்
பரிவொடு புனைந்தநற் "பள்ளு"
செங்கண்வெம் மறலி கரத்தகப் படாது
சீருறக் காத்தநற் கவிஞன்
பொங்குநற் புகழான் சீர்க்கந்த சாமி
புகழ்மிக ஓங்குக! வளர்க!

தன்னலம் கருதி வஞ்சகம் பேசும்
சழக்கரைக் காண்டொறும் நொந்து
பன்னருந் துன்பம் உழந்தஎன் நெஞ்சம்
பண்புறு நற்கந்த சாமி
பொன்னுளம் நோக்கி மிகமிக மகிழ்ந்து
பூரித்த; தித்தகு நல்லோர்
மன்னலால் அன்றோ தீந்தமிழன்னை
மலர்முகங் கொண்டன ளின்னும்

கொற்றமார் தமிழ்த்தாய் அரியணை யேறிக்
குறளெனும் செய்யகோல் ஏந்திப்
பற்றலர் பணியப் பொலிவுடன் அமர்ந்து
பாரெலாம் புரந்திட வேண்டின்
நற்றமிழ்ச் செல்வன் சீரிய கலைஞன்
நற்கந்த சாமிசெவ் வழியைப்
பற்றிட வேண்டும் கனவினுந் தமிழைப்
பண்பொடு பேணுதல் வேண்டும்.

செந்தமிழ் பயிலல் பிறர்க்கெடுத் துரைத்தல்
சீருறப் பதிப்பித்தல் – இவற்றால்
நந்தமிழ் வளரும்; இவ்வழி யறிந்து
நற்றொண்டு புரிகந்த சாமி
சந்ததம் இளமைப் பொலிவுடன் விளங்கும்
சரவணன் திருவரு ளதனால்
மூந்து நன் னலங்கள் யாவையும் பெற்று
முதன்மையாய் வாழியபல் லூழி!

ஸ்ரீ

கம்பன் புகழ் வாழ்க!

கன்னித் தமிழ் வாழ்க

# கம்பராமன்

கோலமுறு வலப்பாகம் பவள மாகக்
குலவுமெழி லிடப்பாகம் நீல மாகச்
சீலமுறு பேரழகை யருளாற் காட்டித்
தேனுகிப் பாலாகி யமுத மாகித்
தாலமுறு மெய்யடியா ருள்ளந் தோறும்
சாலவினித் தொளிர்கின்ற மங்கை பங்கன்
மூலமுறு நோய் தீர்க்கும் பாதப போதில்
மூவாத பேரன்பு கனிந்த சான்ருேன்.

மங்கலஞ்சேர் ஊமைநகர் சிறக்கத் தோன்றி
மாசற்ற செந்தமிழை யாய்ந்து கற்ருேன்.
துங்கமுறு சிவக்கொழுந்தைப் பாடிப் பாடித்
தூநாவில் மாருத தழும்பு பெற்ருேன்.
கொங்குகமழ் கடம்பணியும் தெய்வ ஞானக்
குழந்தைமனம் குழைக்குமருட் காத லுற்ருேன்.
சங்கையின்றிச் சமரசநல் லுணர்வு பொங்கிச்
சால்பழிக்கும் பேதமெனும் குற்ற மற்ருேன்.

தன்னிகரில் திருமுறையில் தோய்ந்து தோய்ந்து
தவமுனிவர்க் கெட்டாத இன்பம் கண்டோன்.
மன்னுபுகழ் வேதாந்த சித்தாந் தத்தின்
மயல் கடந்து மெய்ஞ்ஞான அமுத முண்டோன்.
பன்னரிய புலமையினுற் அன்பிற் றந்த
பாரதியாம் பட்டத்தை யன்பிற் கொண்டோன்.
நன்னயஞ்சேர் பொன்னுச்செல் லைய நம்பி:
ஞாலமெலாம் வாழ்க எனச் செய்த 'பள்ளு'.

சிதலையின்வா யகப்பட்டு நெஞ்சம் மாழ்கிச்
"செந்தமிழர் எனைக்காவார் அந்தோ" என்று
முதலையின்வா யகப்பட்ட களிறு போல
மூதறிஞ ரகந்தோறும் கூவிக் கூவி
விதனமுற, அதைக்கேட்டுக் கருணை யாலே
வேங்கடத்து மால்போல அபயம் நல்கிச்
சிதைவறுநற் புலமையினாற் பாது காத்துச்
செப்பமுறப் பதிப்பித்தான். ஒப்பி லாதான்.

அவன் யார்?

காந்தியருள் நெறிவழியே என்றும் செல்வோன்
கலைத்தமிழைப் பேணுவதைத் தொழிலாய்க் கொண்டோன்
சாந்தமுறு முள்ளத்தோன பண்புமிக்கோன்;
சால்புடையோர் நட பினையே விரும்பும் சீலன்;
மாந்தர்தமுள் பேதங்கள் கூறுகின்ற
மடமையினைச் சுட்டெரிக்கும் கனலே ஒப்போன்.
ஏந்தியநற் கொள்கையினாற் பள்ளு பாடும்
இயற்புலவன் தவமுருக்கொண் டன்ன நம்பி.

கற்கண்டோ நற்கனியோ அமுதோ என்னக்
கவிதையருள் செந்நாவான் மங்க லஞ்சேர்
பொற்புடைய ஊமைநகர் சிறக்க வந்தோன்
பொலிவுமிகு நற்கவிஞன்—கந்தசாமி
யற்புதமார் முயற்சியினைக் கண்டேன் கண்டேன்
அளவற்ற பேரின்பம் கொண்டேன் கொண்டேன்
சிற்பரன்றன் திருவருளால் அன்னான் மேலும்
செந்தமிழ்க்கு வளமருளி வாழி! வாழி!

# பதிப்புரை

கொங்கு நாட்டிலே அரிய தமிழ்க்காப்பியங்கள் ஏராளமாக இருந்திருக்கின்றன. அவைகளுள் பள்ளு, குறவஞ்சி, நொண்டி என்னும் நாடகங்கள் அதிகம். இவைகளில் பல அழிந்துபோய் விட்டன. இன்னும் பல அழிந்துகொண்டு வருகின்றன. மற்றும் சிலஅச்சுவாகனமெறி அவனியெங்கும் பவனிவர (ஆர்வலர் பெட்டகத்தில்) துடித்துக்கொண்டிருக்கின்றன. அப்படி துடித்த வற்றுள் ஒன்றுதான் தற்போது தங்கள் கையில் திகழும் 'செங்கோட்டுப் பள்ளு' எனும் தீந்தமிழ்க்காப்பியம். இதனை நான் சுமார் முத்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே என் இள மையில் தமிழ்கற்கத்தொடங்கியகாலத்தில்கேள்விப்படலானேன். அப்பொழுது எங்களூரில் இருந்த முதியவர்கள்சிலர் இதில் வரும் 'மழைக்குறி' முதலியசிலபாட்டுகளைச்சொல்லுவார்கள். அம் முதியோர் இந்நூலாசிரியரின் பேரனுகிய அழகப்பவாத்தியார் என்பவரிடம் சிறுவயதில் படித்தவர்கள்.

அந்நாளில் 'இந்நூலைப் படிக்க வேண்டும்' என்னும் ஆசை யால் சுவடிகள் தேடினேன். குருசாமிபாளையம் என்னும் ஊரில் அர்த்தனாரி முதலியாரவர்கள் ஒரு சுவடி தேடிப்பிடித்து அதனையும், அதிலுள்ளபடியே காகிதப்பிரதி ஒன்றினையும் செய்து கொடுத்தார். 'பள்ளு' என்னும் நூலை அதற்கு முன் நான் பார்த்ததேயில்லை. ஆதலால் அதனை உடனடியாகப் என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. இந்நூலின் அமைப்பு, பாட வேண்டிய இசைகள் முதலியவற்றை தெரிவிப்போரும் அப் பொழுது எங்களூரில் யாருமில்லை. மெதுவாகப் பார்த்துப்படித்து வந்தேன். இடையிலே இருபத்தைந்து ஆண்டுகள் பெரிதும் அரசியலிலே என் கவனம் ஓடிவிட்டது. ஆயினும், அவ்வப் பொழுது முக்கூடற்பள்ளு, வையாபுரிப்பள்ளு, திருமலை முருகன்பள்ளு முதலியவற்றைப் படிக்கும்போது இதனையும் பார்த்து தெளிவு செய்து கொண்டேன்.

சென்ற ஐந்தாண்டுகளுக்கு முன் அரசியலை விடுத்து இனி இலக்கியத் துறையில் பணிபுரிதலே நலமென்று இறங்கினேன். அதன் விளைவுகளில் ஒன்றே இப்பொழுது இந்நூல் அச்சேறி வரு வது. இதனை அச்சில் பதிப்பதற்காக சென்ற நான்காண்டுகளாக

சுவடிகள் தேடவும், ஆசிரியரைப் பற்றிய வரலாற்றை அறியவும் பல ஊர்களுக்கு அலைய வேண்டியிருந்தது.

எனக்கு முதலில் கிடைத்த ஓலைச் சுவடியை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய இயலவில்லை. அது பல குறைபாடுகள் கொண்டனவாய் இருந்தது பின்னர் தேடியதில் மல்லூர் குமார பாளையத்தில் ஒரு சுவடி கிடைத்தது. சுத்தமான பிரதி; ஆனால் மிகவும் பழுதுபட்டது. அப்புறம் திருச்செங்கோட்டில் ஒன்று கிடைத்தது. அது காகிதப் பிரதி. சென்னை அரசினர் கையெழுத்து சுவடிச் சாலையிலிருந்து பிரதி செய்யப்பட்டது. சில இடங்களில் சில வரிகளும், சில சொற்றொடர்களும் இதிலில்லை. அதற்கப்பால், எளச்சிபாளையத்தில் ஒரு சுவடி கிடைத்தது. நல்லபிரதி. இடை யிடையே சில ஏடுகள் மட்டுமில்லை.

இந் நான்கு பிரதிகளையும் வைத்துக் கொண்டு ஒருவாறு செப்பஞ்செய்தேன். புலவரேறு திரு. வரதநஞ்சைய பிள்ளை யவர்கள் வீட்டில் ஒரு பிரதி இருப்பதாகக் கேள்வியுற்று அவர் ஊருக்குச் சென்று விசாரித்தேன். திரு. பிள்ளையவர்கள் "தம் இறுதிக் காலத்தில் மதுரையில் இருந்தபொழுது இதனை அச்சிட முயன்றதாகவும், அங்கு 'இருந்த காகிதப் பிரதியை' அனுப்பி வைத்ததாகவும், ஆனால் நூல் அச்சிடப்படவில்லை. பிரதி போன இடமும் தெரியவில்லை'' என்று திரு பிள்ளையவர்களின் மருகர் கூறினர்.

புலவரேறு அவர்களின் இளவல் பேரூர் திரு. பண்டித கந்த சாமிப்பிள்ளையவர்களைக் கண்டு இந்நூலை அச்சிடுவது பற்றிப் பேசிய பொழுது ''இதனை நான் என் இளமையில் என் தாயார் படிக்கக் கேட்டிருக்கிறேன். நல்ல சுவையுள்ள நூல். திருச்செங் கோடு அஷ்டாவதானி முத்துசாமிக் கோனூர் ஐம்பதாண்டு களுக்கு முன் இந்நூலைப் பற்றி என்னிடம் சொல்லியதுண்டு. அவர் ஆசிரியரின் மகளை நேரிற் கண்டு பல செய்திகள் தெரிந்து வைத்திருந்தார். இந்நூலாசிரியர் திருச்செங்கோட்டு வேலவர் மீது 'யமகங் காதல்' என்கின்ற ஒரு நூலும் செய்துள்ளார். என் தமையனார் (வரதநஞ்சைய பிள்ளை) அதனைப் பன் முறை படிக்கக் கேட்டிருக்கிறேன். நீங்கள் எப்படியாகிலும் இப் பள்ளு நூலை அச்சிட்டு வெளிப்படுத்துங்கள். சிறந்த தொண்டு'' என்று அவர்கள் கூறினார்கள் மேற்படி யமகங் காதலினின்றும், இப் பள்ளு நூலினின்றும் சில பாட்டுகளையும் பாடிக்காட்டினார்கள்.

அப்புறம் யான் அந்த காதல் நூலையும் தேடிப் பிடித்தேன். மற்றும், மல்லூர் குமர நகரில் அவ்வூர்க் கிராம தேவதைகள், மீது இந்நூலாசிரியர் இயற்றிய சில ஊஞ்சல்கள், விருத்தங்கள் அகவல்கள் ஆகியவைகிடைத்தன. இவ்வெல்லாச் சுவடிகளையும் வைத்துக்கொண்டு பார்த்ததில் நூலாசிரியர் இதில் கையாண்டுள்ள சில சொற்களைப் பற்றி எனக்கிருந்த ஐயங்கள் தீர்ந்து தெளிவு ஏற்பட்டது.

எண்பது ஆண்டுகளுக்கு முன் திருச்செங்கோடு அஷ்டாவதானி முத்துசாமிக் கோனாரும், பதினைந்து ஆண்டுகளுக்கு முன் புலவரேறு வரதநஞ்சையப் பிள்ளையவர்களும் இந்நூலை அச்சிட முயன்றிருக்கிறார்கள். யாது காரணத்தாலோ அவர்கள் முயற்சி கைகூடவில்லை. அவ்விருபுலவர்மணிகளில் யார் அச்சிட்டிருந்தாலும் அது பல அரிய செய்திகளையும், வேறு பல சிறப்புக்களையும் கொண்டதாய் வெளிவந்திருக்கும்.

இப்பொழுது யான் அதனைச் செய்திருக்கிறேன். சிங்கங்கள் முயன்ற செயலை சிறு முயல் செய்து முடித்திருக்கிறது இக்காரியத்தைச் செய்யப் போதிய ஆற்றல் எனக்கில்லை என்றாலும் நூல் தோன்றிய ஊரிலே நான் பிறந்தேன். நான் பிறந்து வளர்ந்த வீட்டிலேதான் இந்நூலாசிரியர் பலகாலுமிருந்து பைந்தமிழமுதை பலர்க்கும் பந்தி போசனம் பரிமாறினார். அந்நாளில் அந்த வீடு நூலாசிரியரை அபிமானித்து ஆதரித்துவந்த செல்வராகிய பெருமாள் முதலியாருக்குரியதாயிருந்தது புலவர் காலத்திற்குப் பின்னரும்கூட பல ஆண்டுகள் அவ்வீட்டில் இவ்வரிய தமிழ் நூலின் நறுமணம் கமழ்ந்துகொண்டுதான் இருந்தது; இடையில் காலக் கொடுமையால் எங்கோ சற்று மறைந்து கிடந்து பிறகு என்பால் வந்தணுகி என் மனத்தைக் கவர்ந்தது. நான் அதனை அச்சுவாகனமேற்றி அனைவர் மனத்தையும் கவரப் பவனி விடுகிறேன். எனவே நான் பிறந்த வீட்டிலும், வாழ்ந்த ஊரிலும் ஒளி வீசி நின்ற இவ்விலக்கிய மணியைத் தூசுநீக்கி, மாசுபோக்கித் தமிழன்னையின் திருமேனியில் அழகுறத் திகழ்ந்து அனைவரும் கண்டுகளிக்கும்படி (அச்சில்வரச்) செய்வது என்கடமையாயிற்று ஆற்றலால் செய்ததன்று, அன்பினால் செய்தது. குறைகள் பல உள்ளன. அவற்றைப் பொறுப்பது அறிஞர் கடன்.

இந்நூலை அச்சிடப் போகிறேன்'' என்றேன் உடனே நூறு ரூபாயைத் தூக்கிக்கொடுத்தார் என் நண்பர் ஆட்டையாம்பட்டி

டாக்டர் நடேசனவர்கள். அதற்கப்பாலும் அவர் செய்த ஒத்தாசைகள் பலவாகும். "செங்கோட்டுப் பள்ளு என்னும் நூல் ஒன்று ஓலைச்சுவடியில் உள்ளது; அச்சில் கொண்டு வரலாமா?" என்று நண்பர் (திருச்செங்கோடு) காசிவிஸ்வநாதன் அவர்களைக் கேட்டேன். "அச்சிடுங்களே! இங்கே ஒரு வெளியீட்டு விழா நடத்தி நூலைச் சிறப்பிப்போம்" என்றனரவர். இப்பொழுது அவர் சொன்னபடியே 14-5-67ம் தேதியில் இந்நூல் வெளியீட்டு விழா (அவர்கள் சன்மார்க்க சங்கத்தின்சார்பில்) நடைபெறவிருப்பது மிக மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.*

"இவ்வரியநூல் அச்சேறி வெளிவரவேண்டு"மென்னும் ஆர்வத்தால் பல நண்பர்கள் அன்புடன் பொருளுதவி செய்தார்கள். ஓலைச் சுவடிகளைக் கேட்டவுடனே மகிழ்ச்சியோடு தந்துதவியவர்கள் குருசாமிபாளையம் (தற்போது பவானி) திரு. செ. அர்த்தநாரி முதலியார், மல்லூர் குமாரபாளையம் காரை வீட்டுக்காரர். எளச்சிபாளையம் தமிழாசிரியர், வித்வான் அரங்கசாமி ஆகியோராவர். காகிதப்பிரதி கொடுத்துதவியவர் திருச்செங்கோட்டு அன்பர் டி. எ. தேவராஜன்.

இந்நூலை அச்சில் கொண்டுவர எனக்கு ஆர்வத்தைக் கொடுத்துச் சிறப்புமிக்க அணிந்துரையுங்கொடுத்து, அதன் மூலமாய் அகமகிழ்வையும் கொடுத்தவர்கள் முதுபெரும்புலவர் திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள். இந்நூல் அச்சான கால முழுதும் உடனிருந்து பிழைதிருத்தல், பாட பேதங்களை நிச்சயித்தல், இலக்கணத் தகராறுகளைக் கவனித்தல் முதலியவற்றில் உதவி புரிந்தவர்கள் வேலூர் கண்டர் உயர்

---

*ஈரோடு இலக்கியப் பேரவையினரும் இந்நூலைச்சிறப்பிக்கும் வகையில் அங்கு ஒரு வெளியீட்டு விழா நடத்திக்கொடுப்பதாகப் பலமாதங்களுக்கு முன்னமே கூறியுள்ளனர். நகரங்கள், கிராமங்களில் உள்ள இலக்கியக் கழகங்கள் விழாக்கள் நடத்தி சொற்பொழிவுகள் நிகழ்த்துவிப்பது சாலவும நன்றே. அவற்றோடு பழந்தமிழ் நூல்களை அச்சிடும் பணியிலும் அக்கழகங்கள் இறங்கினால் மூலைமுடுக்குகளிலுள்ள ஓலைச்சுவடிகளில், ஐயுந்தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து, மெய்யும்பொய்யாகும் நிலையிலுள்ளபலபழந்தமிழ் இலக்கியங்கள் புத்துயிர்பெற்றுத் தமிழணங்கின் பொன்மேனியில் பொலிவுறதிகழுமன்றோ? இதனைச்சிந்திப்பது நாட்டன்பும் மொழியார்வமுங் கொண்ட நன்னெஞ்சினர் கடனும். (ப. ஆ.)

நிலைப்பள்ளியின் தலைமைத்தமிழாசிரியர், கம்பசித்திரக் காதலர். திரு. எஸ். கே. இராமராசன் அவர்கள் (கம்பராமன்) அச்சுப் பிரதிகளைச் சரிபார்ப்பதில் சுறுசுறுப்போடு ஒத்துழைத்த இளந் தோழர் திரு. தெ. ஞானசுந்தரம். எம். ஏ. மேற்கூறியோரனைவரும் ஒவ்வொருவகையில் ஒத்துழைத்து இந்நூலை வெளிக்கொண்டு வரும் அரும் பணியை நிறைவேற்றிக்கொடுத்துவிட்டனர். இவர் களுக்கும் இன்னும் இந்நூல் வெளியீட்டுக்கு ஏதாவது ஒரு வகையில் அனுகூலமாயிருந்த மற்றும் பலர்க்கும் எனது உளங் கனிந்த நன்றி.

தன்னலியன்ற மட்டும் நல்ல முறையில் இந்நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த வேலூர் (சேலம்) கருணாநிதி அச்சக உரிமையாளர் திரு. டி. கே. குமரேசன் அவர்களுக்கும் மற்றும் அவ்வச்சக ஊழியர்களுக்கும் எனது நன்றி.

மல்லசமுத்திரம்
12—5—67.

அன்பன்,
ந. கந்தசாமி

---

## 'பள்ளு' என்பது:

"உழுதுண்டு வாழ்வரே வாழ்வார்"
என்று, "வள்ளுவரும்"

"உண்ணக்காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
விண்ணில் நின்றெமைத்தேவர்கள் காப்பார்
மேவிப் பார்மிசை காப்பவர் நீரே!"
என்று, "பாரதியாரும்"

பாராட்டிய உழவுத்தொழிலாளர் வாழ்க்கையை அழகுறச் சித்தரிக்கும் பொதுமக்கள் இலக்கியமாகும். (ப. ஆ.)

---

## செங்கோட்டுப் பள்ளுப் பதிப்புக்கு

## நன்கொடை உதவிய அன்பர்கள்.

திரு. டாக்டர். கே. ஏ. நடேசன், ஆட்டையாம்பட்டி.

,, எம். ஆர். கந்தசாமி முதலியார், பெங்களூர்.

,, சுசீலா - கைலாசம் தம்பதிகள், (ஆசிரியர்கள்) வையப்பமலை.

,, எம். குழந்தைவேலு, அருணாசல ஆசாரிவீதி, சேலம்.

,, ஏ. துரைசாமி, பி. ஏ., பி. எல்., (அட்வகேட்), சேலம்.

,, எம். டி. ஆறுமுகம், மல்லசமுத்திரம்.

,, க. ரங்கசாமிக் கவுண்டர், முஞ்சனூர்.

,, வி. சண்முகசுந்தரம், குருசாமிபாளையம்

,, சண்முககந்தசாமி, (இளங்கவிமணி) தாரமங்கலம்.

,, கர்ணம். ஏ. வெங்கடாசலம், ,,

,, பெ. வேலு (வித்வான்) தமிழாசிரியர், ,,

,, சஞ்சீவிராய பிள்ளை, தேவூர்.

,, டி. ஏ. தேவராஜன், திருச்செங்கோடு.

,, ஏ. என். ராமசாமி, பஞ்சாயத்போர்டுத் தலைவர், அத்தனூர்.

,, தேவி ஜவுளிஸ்டோர்ஸ், ஈரோடு.

,, எம். ஏ. வெங்கடாசலம், ஈரோடு.

,, சின்னுக் கவுண்டர் (சோதிடம்) துத்திப்பாளையம்

,, பெ. கந்தசாமிக் கவுண்டர், ,,

,, கே. ஆர். முத்து, கொழுங்கொண்டை.

,, ஆசிரியர் திருப்பதி, ,,

,, என். துரைசாமி, ,,

,, கே. சி. பெருமாள், ,,

,, ஆசிரியர் கந்தசாமி, ,,

,, பள்ளி மாணவர்கள், ,,

,, சு. நடேச கவுண்டர், சூரியக்கவுண்டன்பாளையம்.

# ஆசிரியர் வரலாறு.

பெயர்: பொன்னுச் செல்லையன்' "பொன்னு சிதம்பரம் பிள்ளை என்பது ஊர் வழக்கு. இவருக்கு 'பாரதி' என்று ஒரு சிறப்புப்பெயர் இருந்ததாய் இவர் பாடிய ஊஞ்சல் பாட்டொன்றால் அறியப் படுகிறது.*

மரபு: சீர்கருணீகர், கவுணியகோத்திரம். தந்தை: வேலைய பிள்ளை.

ஊர்: மங்கலம் கிராமம் ஊமையம்பட்டி. (திருச்செங் கோட்டின் வடகீழ்த்திசையில் 12கல் தொலைவில் உள்ளது; மல்ல சமுத்திரத்திற்குமேற்கில் ஒரு கல் தொலைவு.)

ஆதரித்தவர்கள்: மேற்படி ஊரில் சித்தமருத்துவராய்ச் சீரும் சிறப்பொடு வாழ்ந்த பெருமாள் முதலி, அவர்தம்பி முன்சீப் முத்தண்ண முதலி, கொங்கு எழுகரை நாட்டுச் செங்குந்த குலப்பட்டக்கார நல்லையமுதலி, திருச்செங்கோட்டில் அந்நாளில் வாழ்ந்த செங்குந்தர்கள், மல்லூர் குமரநகர் அர்த்தநாரிமுதலி, பழனியாண்டி முதலி ஆகியோராவர்.

இந்நூலாசிரியர் இந்நூலில் அங்கங்கே பல இடங்களில் தன்வாயிலாகவும், பாத்திரங்கள் வாயில்வைத்தும் கூறியுள்ள மனிதர்கள்: மேலே கூறப்பட்டவர்களில் மல்லூர் குமரநகர் அர்த்த நாரி முதலி, பழனியாண்டி முதலி போக மற்றவர்கள், திருச்செங் கோட்டில் அந்நாளிருந்த (உமையொருபாகர் கோவில்) குருக்கள் மார்களில் சிலர், வீரசைவமடாதிபதியாகிய வீரப்பஉடையார், வணிகர்களாகிய பச்சையப்பன், மாரப்பசெட்டி, அங்கப்பசெட்டி, குழந்தைசெட்டி, ரங்கப்பன், பூமலைசெட்டி, ராமசாமி, திருவேலன் செட்டி, சங்கமேசுரையன், வைத்தி, துறவிகுப்பணன், கோவில் மணியம்சுப்பையன், மந்திரிசாமையன், ராசலிங்கம் பிள்ளை, முத்தையன், சேஷையன், மண்டகப்பாளையம் நமசிவாயம்பிள்ளை

*"கவுணியேசன் ... பொன்னுச் செல்ல
பாரதியும் நின்றொரு பால் வடந்தொட்டாட்ட"
(மல்லூர் குமரநகர் படைவெட்டியம்மன் ஊஞ்சல்)

ஆத்ம ராமையன், பழனிமகிபன், மாலைகட்டியாகிய செங்கோடன் கோவில் ஊழியர்களாகிய நாகமலை, குப்பணன் முதலியோர் ஆவர். இவர்களில் கடைசியில்கூறப்பட்ட குப்பணன் என்பவனை சாதாரணமாகக் கூருமல், "வம்படிக் குப்பணன்" என்று பள்ளன் கூற்றில் வைத்து வேடிக்கையாகக் கூறுகிருர் ஆசிரியர். அக்குப்பணன் அந்நாளில் என்ன வம்பும் வழக்கும் செய்தானே தெரியவில்லை.

இப்புலவர் இந்நூலில் பாத்திரங்கள் வாயிலாய் (அபிமானத்தால்) கூறிய இடங்கள்: கஞ்சமலை, போதமலை, ஆட்டையாம்பட்டிச் சந்தை, தம்மை ஆதரித்த மணியக்காரர் முத்தண்ண முதலியின் வீட்டின் ஒருபகுதியாகிய (காவல் கூடம், பாட்டு - 613) தென்வாசற்சாவடி.

இவர்சமயம்: இவர் முருகவேளிடம் நீங்காத காதலுடைய சைவராயினும், "உருவம்பல - பொருள்ஒன்று" என்னும் சமரச நோக்க முடையவர். (பாட்டு 78)

இவர் இந்நூலை அரங்கேற்றியகாலம்: இந்நூல் 751ம் பாட்டில் சோதிடன் பொன்னேர் கட்டுதற்குத் தக்க காலம் கூறுமிடத்து, "இம்மாதம் ஏழாந்தேதி,குருவாரம்,சத்தமிதிதி,புனர்பூச நட்சத்திரம்,கன்னிலக்கினம் இவையனைத்தும் ஒன்றி வரும்நாளில் பொன்னேர் கட்டுதல் நலம்" என்கின்றனன், உழவர்கள் பொன்னேர் கட்டுவது சித்திரைமாதத்தில். மேற்கூறிய தேதி, வாரம்,திதி,நட்சத்திரம்,லக்கினம் அனைத்தும் சித்திரை மாதத்தில் ஒன்றிவருநாள் சென்ற 150 ஆண்டுகளுக்குள் இற்றைக்கு 117ம் ஆண்டாகிய சாதாரண வருடம் ஒன்றுதான்.*

அந்நாளில் திருச்செங்கோட்டில் இந்நூல், கொங்கு எழுகரை நாட்டுச் செங்குந்தர் தலைமைப்பட்டங் கட்டிய பெருவிழாவில் அரங்கேற்றப்பட்டதென வயது முதிர்ந்த பெரியவர்கள் பலர் சொல்லுவார்கள். இந்நூலில் (பா. 366) கூறப்படும். பட்டக்கார நல்லைய முதலியின் பேரனுகிய நல்லைய முதலிக்கு இற்றைக்கு 69-ம் ஆண்டாகிய விளம்பிவருடம், ஆவணிமாதம், 15 ம் தேதி. திங்கட்கிழமை திருச்செங்கோட்டில் பட்டங் கட்டி

---

*இந்திய வானசாத்திரப்பஞ்சாங்கம் (எல். டி சாமிக்கண்ணு பிள்ளை)

யுள்ளார்கள்.* அதற்குமுன் அவர்பாட்டனுருக்குப் பட்டங் கட்டியது சற்றேறத்தாழ 50 ஆண்டுகள் இருக்குமென்று பலர் சொல்லக்கேட்டுள்ளேன். மேற்படிப் பட்டக்காரர்குடும்பத்தில் விசாரித்ததிலும் வயது முதலியவற்றைக் கூறுவதைக்கணக்கிடு மிடத்தும், இந்நூலாசிரியர் மல்லூர் குமரநகர் படைவெட்டியம் மன்னூஞ்சலில் 'பட்டக்காரரையும், அவர் புதல்வரையும். பாடியுள்ளதையும் அவ்வூஞ்சல் பாடிய காலத்தைக்கவனிக்கு மிடத்தும் மேற்படிபட்டங்கட்டுவிழா நடந்தது இற்றைக்கு 115-16ஆண்டுகளுக்கு அதிகமிராதென்று தெரிகிறது.

ஆக இந்நூல் அரங்கேற்றப்பட்டது இற்றைக்கு 115 ஆண்டு களுக்கு முன்னுகவும், 117 ஆண்டுகளுக்குப் பின்னுகவுமுள்ள காலமெனல் பொருந்தும்,

இப்புலவர் வாழ்ந்த காலம்: மல்லூர்குமரநகர் பொன் மாரியம்மன் கோயில் குறிஞ்சிக் கல்தூண் ஒன்றில் ஒருசெய்தி செதுக்கப்பட்டுள்ளது. அவ்வூர் சின்னையமுதலி என்பவன் அக் குறிஞ்சி செய்து வைத்ததை அச்செய்தி கூறுகிறது. அது செய்தது இற்றைக்கு150ஆண்டுக்குமுன்பாகும் (சுக்கில ஆண்டு-பங்குனிமீ") அக்காலத்தையும் அச்சின்னைய முதலியின் புதல்வனுகிய அர்த்தநாரிமுதலி இப்புலவரைக்கொண்டு ஊஞ்சல் பாடுவித்த (குறிப்பால்தெரியும்) காலத்தையும் தொடர்பு படுத்திப் பார்க்குமிடத்து "இக்கவிஞர்பிரான் இற்றைக்கு நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முன்னும், நூற்று அறுபது ஆண்டு களுக்குள்ளும், ஆக 50 வயதுக்குக் குறையாமல் இந் நிலவுலகத்தில் பேரும் புகழுமாய் வாழ்ந்திருந்து, அழியாச் செல்வங்களாகிய அருந்தமிழ்க் காப்பியங்களை நமக்களித்து விட்டுத் தம் பூதவுடல்நீத்துப் புகழுடம்பு தாங்கியிருத்தல் வேண்டும்.

இவர் பாடிய நூல்கள்: *செங்கோட்டுப்பள்ளு, செங் கோட்டுவேலவர் சரிசைக்காதல்,* மல்லூர் குமரநகர் பொன் மாரியம்மன் ஊஞ்சல், அகவல் சில விருத்தங்கள், மேற்படி ஊர் படைவெட்டியம்மன் மீது இரண்டுஊஞ்சல்நூல், ஒரு அகவல், சில

---

*14.9.1898 திருச்செங்கோடு விவேகதிவாகரன் வார இதழ்ச்செய்தி

விருத்தங்கள். இவ்வளவே இப்பொழுது நமக்குக் கிடைத்தவை இந்நூலில் ஓரிடத்து (766) "சித்திரகவிஞன் பாரதியருள் பெற்றிடு பொன்னுச்செல்லையன் "என்று வருவதால் இவர் பல சித்திரகவிகளும் பாடியிருத்தல் வேண்டும். இப்பொழுது அவை களில் ஒன்றும் கிடைக்கவில்லை, இவர்யார்மீதோ சில கண்டனக் கவிகள் பாடியுள்ளனரென்றும் அக்கவிகளை புலவரேறு திரு. அ வரகுநஞ்சையபிள்ளை போன்றோர் தெரிந்து வைத் திருந்தனரென்றும் கேள்வி. அவையுங்கிடைக்கவில்லை.

இவர் இந்நூலில்(811) "பண்டுகலையுந் தெரிந்த பொன்னுச் செல்லு" என்று தன்னைக் கூறிக்கொள்வதாலும், மற்றோர் இடத் தில் (766) "வேதாந்தகருணாகரன்" என்று குறிப்பதாலும், இவர் பாடிய செங்கோட்டுவேலர் ஈரிசைக்காதலில் "தொண்ணூற்றறு வகைப்பிரபந்தம், காரிகைகள் கற்றுக் கல்விப்போராடுதல்" ஆகிய செய்திகள் கூறுவதாலும், இந்நூலில் தேவாரத்திருமுறை கள், ஆகமங்கள் ஆகியவற்றைக் குறிப்பதாலும், இப்புலவர் பல சமயசாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கண இலக்கியங்கள் அனைத்தையும் துறைபோகக் கற்றுத்தேர்ந்தவ ரென்று தெரியவருகிறது. செங்கோட்டு வேலவர் காதலை தம் மூரிலிருந்து 12-கல் தொலைவிலுள்ள திருச்செங்கோட்டுக்கு கால் நடையாக நடந்து கொண்டே சுவடி கழுத்தில் தொங்கக் கையில் பிடித்த வண்ணமாய் எழுதிக்கொண்டு சென்றதாய்ச் சொல்லப் படுவதால் இவர் விரைந்துகவிதை செய்யும் ஆற்றலுடையார் என்று விளங்குகிறது.*

இவர் கவிதைகளில் இனிய ஓசை நயமும் கம்பீரநடையும் பொருந்திக்கிடப்பதால், அவைகளை மதுரகவிகள் என்று கேட் டோர் அனைவரும் களிப்பொடு கழறுவர். ஆக இவர் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிக்கும் அதிபதியாய் இப்பக்கத்தே அக்காலத்தில் தனிச் செங்கோல் நடாத்தினரெனத்தயங்காது கூறலாம்.

ந. க.

---

*இவர் தூங்கும்பொழுதுகூட சுவடியை மார்பு மீது வைத்துக்கொணடே படுத்திருப்பாராம். திடீரென எழுந்து உட்கார்ந்து விளக்கைத் தூண்டி விட்டுக் கவிதைகளை எழுதுவாராம்.

ஓம்

உமையொருபாகர் துணை

# செங்கோட்டுப் பள்ளு

## காப்பு.

1 மலைமகளை யிடப்பாகம் வைத்த தேவர்
வாசுகிமே ரையர்மிசை வண்மையாக
நிலையெனவே பள்ளெனும்நா டகத்தை யானும்
நிதிபனகா சலமுருகர் அருளால் பாட
அலைமலியும் சடைமுடியார் மகிழ்ந்து கேட்க
அவர்தமிழுக் கவருமைமுன் நின்று காக்க
கலைமலிசண் முககுருதென் கோதை நாரி
கணபதியும் சிவமயமும் காப்ப தாமே

## அவையடக்கம்

2 ஓதுகலை காவியம்வே தாந்த மார்க்கம்
உணர்ந்தபெரி யோர்கள்இலக் கணங்கள் கற்ற
மாதவர்கள் கவிதைபொழி வாணர் முன்பு
மதலையும்நான் பாடியதெவ் வாறு வென்னில்
ஆதவன்முன் தீபம்நிகர்; அவையே தென்றல்
அறுமுகவன் அருள்வகையால் வாணர் தந்த
சீதனமாம் ஆகையினால் எனது பாடல்
செந்தமிழோர் மேன்மைசெய்து செயஞ்செய் வாரே

3 விண்ணவர்கோன் அரவகிரி அதனில் மேவும்
விமலருடை பண்ணையத்தின் பெருமை தானும்
பண்ணைவளர் பள்ளர்கள்பள் ளியர்தம் செய்கை
பண்ணையினார் நீதிநெறி முறையி தெல்லாம்
மண்ணுலகில் இதுவொரு பிரபந்த மாக
வகுத்துரைத்தேன்; புன்கவியீ தெனினும் கோதை
அண்ணல்பிர பந்தமது வாகை யாலே
அனைவருக்கும் செவிக்கமுர்தம் ஆகுந் தானே.

## துதி சிந்து

4 திருமேவிய தென்கயி லாசன்
அருள்சேர் அரவாசல வாசன்
தெண்டாயுத பாணி சந்திர
சேகர வேணி

கருணாநிதி யாகிய நிமலன்
குருதேசிக னாய்வளர் விமலன்
கதிராயிர மெனவளர் தேகன்
கனதவ யோகன்

5 சதுர் மாமறை மூவர்கள் முதல்வன்
வெதிராமெனும் வேயருள் புதல்வன்
சர்வசீவ தயாபர நேசன்
சபை நடராசன்

விதிமால்குலி சாயுதன் அனைவோர்
துதிமேவுவர் மோகமும் முனிவோர்
மெதுவான சரோருக பாதன்
விபூதி வினோதன்

6 பணி கூவிளை சூடிய சடையன்
தணியாவுரம் மேவிய விடையன்
பரிபாலன மான விசாலன்
பரவு சுசீலன்

அணிசேர்மழு மான்வளர் கையன்
மணிமேவு புயாசல மெய்யன்
அபயவர தாதி அனாதி
அலங்கிர்த சோதி

7 திரிலோக பராபர நாதன்
பரிபூரண மாகிய போதன்
தேவாள்முனி வோர்பணி தோத்ரன்
திருவொளி நேத்ரன்
வரிசேர்புலி யாடையி னிடையன்
கரிமேலுரி போர்வையு முடையன்
மறைமேல்முடி நடனவி லாசன்
வளர்புய கேசன்.

8 புவனேஸ்வரி யெனும்மக மாயி
கவுமாரிம னோன்மணி யாயி
புகழ்மேவிய ஞானகல் யாணி
புராதன வாணி
சிவகாமசு வுந்தர மெல்லி
தவமேவிய பரிமள வல்லி
சிவமோகினி சமயசஞ் சீவி
சிற்பரதேவி.

9 பாகம்பிரி யாதசர் வேசன்
நாகங்கிரி யாய்வள ரீசன்
பள்ளேசலை யான்மிகப் பாடப்
பவவினையோட
ஆகம் புகழ் கடவுளர் மீதில்
லோகம் புகழ் கவிதையு மோதி
ஆடம்பர யோகமும் மீற
யான் கடை தேறப்

10 பரிபூரண மாகஇந் நாட்டில்
அரிதாயடி யேனுரை பாட்டில்
பனகாசல ரருளது பெருக
பலனது வருக
அறிவாகர நாவலர் தாமும்
சிறியேனுரை பாடவிதா மென்
றணைவோர்புக ழவும்பதம் பணிந்தே
யான்சொலத் துணிந்தேன்.

## விருத்தம்.

11 ஆணுமாய்ப் பெண்ணு மாகி
அலியுமா யதுவல் லாத
தாணுவாய் நிறைந்த நாக
தற்பரா னந்த மூர்த்தி!
வேணுமா யடியேன் தன்னை
மெய்த்தொழும் பாக்கி யன்பு
தோணவே காட்சி தந்த
சுந்தரா னந்தா போற்றி.

12 வானுல கவர்வ ழுத்த
வசமிலா மகிமை தன்னை
யானுமே புகழ்ந்து பாட
அறிவனோ அறிவை நல்கி
தானது ப்ரபந்த மாகத்
தானுமுண் டாக்கிக் கொண்டு
மாநிலந் தனில்யான் சொன்ன
வகையெனச் செய்த கோவே!

13 ஒப்பிலா வடிவம் கொண்ட
உரகமே ரரசே யானும்
எப்பிழை செய்த போதும்
எனையி கழாது காத்து
இப்புவி தனிலே நீயும்
எண்ணிய வரங்கள் நல்கி
அப்பனே கிருபை கூர்ந்து
அஞ்சலென் றருள் செய்வாயே

## சிந்து

14 திருவளர் பழனியங் கிரிவாசர்
சிவனுமை யருளிய குமரேசர்
குருபரன் எனவளர் முருகேசர்
குகசர வணபவனார்
அருளிய மதுரித கவியாலே
அரவகி ரீஸ்வரர் செயலாலே
இருதயம் வளர்சரஸ் வதியாலே
இயலிசை நாடகமாய்

15 மதலையும் உலகுகொண் டாடவும்
வனிதமிகும் பள்ளேசல் பாடவும்
அதிகசெல் வம்புகழ் தேடவும்
அடியவர் அனுதினமும்
சதுர்மறை வளர்கடல் ஓடமாம்
சைவாக மகுரு பீடமாம்
துதிபெறும் இருநிதி மேடமாம்
தொழுகுல முனிவரென

16 இன்னிலந் தனில்அருள் பெறுசாமி
இம்முடிச்சிற் றம்பல குருசாமி
தன்னுட பதமும்இ லயசாமி
சரணம் துதிசெய்வேன்
பன்னக கிரிவளர் அந்தணர்
பதியினில் வளர்மறை அந்தணர்
நன்னெறி பெறுந்தில்லை அந்தனர்
ஞானமடாதிபர்கள்

17 மாதவர் சுப்ரமணி யக்குருக்கள்
மாநிலம் புகழ்சேனு பதிக் குருக்கள்
நாதர்எனும் வேதநா யகக் குருக்கள்
நாகீஸ்வரபண்டிதர்
நீதமிகும் சதாசி வக்குருக்கள்
நிலைமைபெறும் அர்த்தநா ரிக்குருக்கள்
பாதபங் கயமலர் தொழுமடியேன்
பைந்தமிழ் இதுவாமே.

## நூல்.

# கோலுக்காரன் வரவு

### கலிப்பா

18 மூலாதா ரப்பொருளாய் மூன்றின் முடிவெனவே
மேலான செங்கோட்டில் வீற்றிருக்குநேம் தேசிகனார்
பாலாறு செல்வமிகு பண்ணைவிசா ரித்திடவும்
கோலா கலமான கோல்க்காரன் தோன்றினனே

### சிந்து

19 காவிக்குல் லாவுந்திரு நீறதுமிட்டு - இரு
காதுகளில் நாகமணிக் குண்டலமிட்டு
வாவிலி முருகதுங் கடுக்கனணிந்து - சந்திர
வட்டமெனவே திலதப் பொட்டுமணிந்து
மேவிடுஞ் சந்தனஞ் சவ்வாதும் திமிர்ந்து - எங்கும்
விளங்கும் ருத்ராட்ச மணிமாலை புனைந்து
ஆவலுடன் முத்திரைமோ திரந் தரித்து - கையில்
அத்தகட கமும்காறைச் சத்து மணிந்து

20 அட்டவரிக் குத்தினிச் சல்லடந் தரித்து - சக
லாத்துக் கபாயணிந்து நேர்த்தியாகவே
சட்டமுடனே கறுப்புக் கச்சையும் கட்டி - சிறு
சங்குசர மிடையில் கிண்கிணி கட்டி
ஒட்டியாணம் குங்கும யேகாசந்தரித்து - வெகு
உச்சிதமுடனே காலில் கெச்சையுங் கட்டி
நட்டணை செங்கோல் பிடித்து நாகமலைவாழ் - அர்த்த
நாரீசர் பூந்துறைநன் னாடுதனிலே.

21 பாதிமதி யுந்தரித்த சடையழகர் - திருப்
பண்ணை தனிலே விளங்கும் பள்ளருக்கெல்லாம்
நீதிகள் மொழிந்து நேமநிஷ்டை மொழிந்து - நல்ல
நிலைமைமொழிந்து சிவநெறி யுரைத்து
ஆதியந்தமாய் விளங்கும் கடவுளர்க்குச் - செய்யும்
அறமே நமக்குறுதி யென இருங்கோ
ஓதியுணர்ந் தோர்க்கதிக பத்தி செய்யுங்கோ - தீமை
ஒழித்துலகத்தி லென்றும் செழித்திருங்கோ.

22 நடையிலும் ஏரிகள் கரை துறையிலும் - இந்த
நாட்டில் நஞ்சை வெள்ளாமைக் கதிபதியாய்
உடையவர் சொல்படிக்கு பண்ணையாண்டவர் - இதோ
ஒட்டுமணியங் களேற்றுத் திட்டமுடனே
அடைவுடன் வருகிறார் பள்ளர்களெல்லாம் - விளை
யாடியும் பாடியுமிங்கே கூடியிருங்கோ
விடுதி முஷ்தேதிகளும் செய்து வையுங்கோ - என்று
வீரன் செங்கோட்டுக் கோலுக்காரனும் வந்தான்.

# குடும்பன் வரவு

## விருத்தம்

23 திருவடியார் மகள்முடியின் கூந்தல் கொய்து
திருவிளையாட் டதுபுரிந்த தேவர் நாகப்
பருவதம்மே வியசிவனார் சரண மென்னும்
பங்கயத்தைத் தனதிதய பங்க யத்தில்
கருதும்நெறி மேவுசபா பதிக்கோல்க் காரன்
கண்ணுதலார் பண்ணையத்தில் பள்ள ருக்குத்
தருமநெறி உரைத்திடும்போ தினிலே பள்ளர்
தலைவனென வளர்குடும்பன் தான்வந் தானே.

## கலிப்பா

24 ஈடேற அன்பர் இனிதூழி வாழ்ந்துமுத்தி
வீடேறச் செய்யும் விமலன் அதிகபுகழ்
நாடோறும் பூந்துறைநன் னாட்டிலே வாழ்திருச்செங்
கோடேறும் ஐயர்பண்ணைக்குடும்பன்வந்து தோன்றினனே

## சிந்து

25 நெற்றியில் வெண் ணீறுமிட்டு
மற்றொருசந் தனப்பொட்டும்
நேர்த்தியாய் அணிந் தசைந்து
லாத்தி நடந்து

மெத்தவே குறும் சிரிப்பும்
முற்றிடுங் கிடாய் மருப்பின்
மீசை முறுக்கிக் கன்னப்ப
ரிசை நறுக்கி

பத்தரை மாற்றுத் துலங்கும்
சுத்தபூ ஷண மிலங்க
பட்டஞ்சிச் சோமன் துப்பட்டி
திட்டமாய்க் கட்டி

கர்த்தனைத் யானித் துகந்து
வெற்றிலை பாக்கு மருந்தி
கண்டை உருமாலை நீலக்
கொண்டைமேல் கட்டி

26 கீறுசந்த னந்தரித்து
நாறுமலர் மேல்முடித்து
கின்னரி மீட்டியுஞ்சற்றங்
குன்னிதம் காட்டி

வாருவஸ்து வென்றிரண்டு
சேருமது வும்உட்கொண்டு
வாய்ப்பரத்தி யடிக்கடி
ஏப்பமும்விட்டு

மீறும் வெறி மயக்கம்
கூறும் மொழி தியக்கம்
வேடிக்கையாகப் பேசி
நாடிக் கைவீசி

தாருக்குள் வளர் செங்குன்
றூருக்குள் வளரும்
சதாசிவக் குடும்பனும்
தோன்றினனே.

# குடும்பன் தன் பெருமை கூறல்

### சிந்து

27 உலகில்சி வமதத்தை விலகித் தூஷணித்தாரை
உழக்கோலால் விழத்தள்ளிக் கொழுப் பாச்சுவேன்
வலவன்த னைப்புகழ்ந்தம் பலவனை யிகழ்வாரை
வடக்கயிற் றுல்கட்டிக் கிடத் தள்ளுவேன்
சிலநூல்க ளதுகற்றும் புலனிதென்ற றியாத
செகத்தோரை நுகத்தாலே மிகப் போடுவேன்
வலம்வந் தரனையவர் தலம்வந்து மிதியாரை
மண்வெட்டி யால்காலை யும்வெட்டுவேன்

28 வம்புசெய் தடியார்க்குத் துன்பம் வர நினைக்கும்
மடையரை மடைவாயி லிடைத் துணிப்பேன்
அன்பர்சி வனடிகள் நம்புமடியவர்கள்
அடியார் அவர் அடியேன் முடியில் வைப்பேன்
தம்பிரான் மகிமையை இன்பமாய் னைவாத
சண்டிகளை யரிவாள் கொண்டறுப்பேன்
சம்புசே ஷகிரியின் நம்பரருள் மிகுந்து
தாரணி தன்னில்வந்து காரணமெனக்

29 கல்லானை யுங்கரும்பு எல்லோர்முன் தின்றதென்ன
கடவுள்முன் னுல்இடபம் கடலை தின்ன
வல்லாண்மை செய்துமண்ணில் நில்லாண் திசீசர்முன்னே
வாதாடும் எம்மையர்கே தார வுடையார்
புல்லேறிய சிவனை நல்லாவுடையாரெனப்
பூரணம தாய்உலகில் தாரணஞ் செய்வார்
அல்லார் குழலுமைதன் சொல்லார் அறுமுகவர்
அடிவ்ாரந் தனில்வாழக் குடிபதித்தோர்.

30 தவநிலை மையுஞ் சைவ சிவமகிமையும் பெற்ற
சச்சிதானந்தராகிய பச்சைக்கந்தையர்
கவனமடாதிபதி மௌனமெஞ்ஞானகுரு
கற்பகத்தருவெனும்வீ ரப்பவுடையார்
அவர்தம்அடிமையாகி அவர் ஆசீர்வாதம்பெற்று
அண்ணலார் தமதுதிருப் பண்ணையாளெனும்
குவலயந்தன்னில்நிகர் உவமையில்லாததிரு
கோதைசதாசிவக்குடும்பனும் நானே.

# மூத்த பள்ளி சிவகாமி வருதல்

**கலிப்பா**

31 விண்புலவ ஞர்சசிக்கு மேல்வடிவாய்த் தன்மகிணர்
நண்புவித மார்நெறியில் நன்னிலைமை கைப்பிடித்தே
வெண்புகழ்சேர் மெய்யுடையார் மெய்யடியாள் ஆனவஞ்சி
பண்புமிகு செங்கோட்டுப் பள்ளியும்வந் தெய்தினளே.

**சிந்து**

32 கார்குழல் கோதி வகிர்ந்த வகுப்பும்
சீர்நுதல் மையமணிந்த சிகப்பும்
கட்டிய பிறைக்கதிர் மணிகளிலங்க
சுட்டிதுலங்க
ஏர்வைய தாகவும் வேணியில் மதி
கோர்வைய தாய்மலர் சூடியுமதில்
இசைந்த உச்சிக் கொண்டையிற்குச்சும்
அசைந்திட, நச்சும்

பார்வையில்அஞ் சிவிகாரிகள் தொழுதிட
நேர்மையதாய் விழிக்கஞ்ச னமெழுதியும்
பகுந்தசரி கைத்துகில்நெ ரிந்துகொய்துடை
நெகிழ்ந்தயிடையும்

வார்பொருங்கொங்கை யிரண்ட தும் மாமத
ஞர்முடியும், குடமும்,மலர்ச் செண்டென
வள்ளல் திருச் செங்குன்றூரில் வாழ்மூத்த
பள்ளியுமே வந்தாள்.

## வேறு

33 சேலாடுங் கூர்விழிவ லையைவீசி - மையல்
சேராட வர்மனத்த ணையுலாசி
பாலான திலதிக வார்த்தைபேசி - உற்றுப்
பார்த்தவரைப் பாராமல் மெத்தக்கூசி
லீலாவ தியெனசு கந்தம் பூசி - சரி
நேரிழை மாருடன்கை நீட்டி வீசி
மேலாய செங்குன்றூரில் மேவுமரனுர் - பண்ணை
வேலை செய்யும் மூத்த பள்ளி தோன்றினுளே.

## பூடுகு

34 பைம்பொன்மணி யாபரணம் மெத்தப்பூட்டி - இரு
பங்கயக்கை மீதினில்தம் பூரும் மீட்டி
கும்பமுலைக் காந்தி கச்சை மீதிற் காட்டி - வால
கோகில மென நடந்தசைகண் ணூட்டி
ரம்பையுரு வசியில்அ திகமேட்டி - மிகு
நவநீத மாதழகு யர்கி ரீட்டி
இன்பமிகு கோதையரன் பூந்துறை நாட்டில் - பண்ணைக்
கேத்தரசி மூத்த பள்ளி தோன்றினுளே.

**தணிவு**

35 நம்பர் திரு நாகமலை மேவிவளரும் - அர்த்த
நாரீசருக்குகந்த நல்லடியவன்
அன்புள்ளசதாசிவப்பள்ளனுக் கிசைந்த - மனை
யாட்டி நான்அதிகசுக மேட்டிமையுள்ளாள்
இன்பமிகு சிவகாமிப் பள்ளியெனவே - எனக்
கிசைந்த பேர் தாய் தகப்பன் இட்டதெனவே
பண் பொடுமொழிந்தெனையுங் கொண்டகணவன் - நாட்டுப்
பள்ளருக் கெல்லாந்தலைமைப் பள்ளனெனவே.

36 செந்திரு மடந்தை ரதி தேவி போலவும் - நல்ல
செகமோகனப் பெண்ணயி ராணியெனவும்
சிந்தை மகிழ்ந் தனைவர் புகழ்ந் திடவுமே - நறுந்
தேனென மொழிந்துசிறு நகைபுரிந்து
சுந்தரச் செங்குன்றூரரன் பதாம்புயத்தை - இவள்
துதித்தும் ஆனந்தசிவ த்யான முடனே
விந்தைசெறி யும்தென்கோதை யாண்டவர் பண்ணை - வயல்
வேலைசெய்யும் மூத்தபள்ளி தோன்றினளே.

# இளையவள் அபிராமி வருதல்

**கலிப்பா**

37 அங்கசனுந் தன்திருவும் அல்லதுவுண் டோச்சியஞ்சொல்
இங்கிதஞ்சேர் ரூபமெனப் படைத்தவஞ்சி எனவும்,சீ
ரங்கரடி யாள்பணிமேர் நாதரடி யார்குடியில்
பைங்கொடியாம் என்னவந்த பள்ளியும்வந் தெய் தினளே.

## பாட்டு

38 மதிநுத லில்நீர்தி லதம்பொட்டும்
நிதிபசும் பொன்னுப ரண மிட்டும்
மருவுசிற் றிடைமீ தினிற் பட்டும்
உருவசிப் பகட்டும்

அதிவிச்சித் திரமான சரீரமும்
மதமுற்றுச் சிதஞ்சேர்த னபாரமும்
அலங்கிர்த பூஷணுதி முத்தாரமும்
இலங் கொய்யாரமும்

ரதியினுக் கியல்பான சல்லாபமும்
அதிகரஞ் சிதமோக ப்ரதாபமும்
நாடுங்கா முகர்மீதி னிற்கோபமும்
தேடும் ரூபமும்

விதியவர்க் கமைப்பா னதுகந்தார்
துதி பெறுஞ் செங்குவட் டிலமர்ந்தார்
விளை வயல் பண்ணை வே லைக்கிசைந்தாள்
இளைய பள்ளியும் வந்தாள்.

## வேறு

39 தேனூர்கு ழல்முடித்து மாலை சூட்டி - நல்ல
திருவும் பிறையும் சுட்டி சேரப் பூட்டி
மானுர்வி ழியினி லஞ்சன மூட்டி - முத்து
வாரணியும் கும்ப தனத்தைக் காட்டி
மேனாடு ரம்பையிலதிக மேட்டி - மிகு
வேடிக்கைக் காரியொயி லான கிரீட்டி
வானுடர் போற்றுதிருக் கோதை நாட்டில் - பண்ணை
வயல் வேலை செய்யிளைய வஞ்சியும் வந்தாள்.

## பூடுகு

40 சந்தனம் கதம்ப மிகு வாடைப் பூச்சும் - சிவ
சம்பு வைத் தொழுதிவள் தலையைச்சாய்ச்சும்
வந்தவரைக் கண்டுடல் நெளிந்த கூச்சும் - தங்க
வளையல் அலுங்கிட மலர்க்கை வீச்சும்
விந்தையும் பசப்புகள் விண்ணுணப் பேச்சும் - கண்ணில்
மிரட்டி இளை ஞர்மனம்இளக ஏய்ச்சும்
சிந்தைமகிழ்ந் தந்தி வண்ணர் தென்கோதைப் -
பள்ளியரில்
தெள்ளிமைய தாமிளைய பள்ளி வந்தாளே.

## தணிவு

41 காலிலிட்ட பாடகம் சதங்கை கொஞ்சவே - நல்ல
கனக மயமெனவும் காந்தி மின்னவே
வாலிபர்கள் கண்டுமயல் கொண்டலையவே - நல்ல
வாலகோ கிலமெனவும் வார்த்தை கூறியே
ஆலிங்கனவித சுரத ராணியெனவே - விளை
யாடியேமி குந்த மோடி யாக நடந்து
மேலிமையதாகவும் அரன்தன் விதியால் - திரு
விஷ்ணுவைத் துதித்தரன் பத்தர்க்குமனைவி

42 ஆகவந்த நேரிழை நானென்று மொழிந்து - மலை
அரைய னுதவும் அபி ராமிக்கிடது
பாகமது தந்த சிவன் பதம் பணிந்து - சிவ
பக்தரடி யான் அதிக பக்தி யுடையான்
நாகமணி வேணியர் நாகமலைவாழ் - அர்த்த
நாரீசருக் குகந்த நல்லறிவுள்ளான்
வாகுயர் சதாசிவப் பள்ளன் மனைவி - நானென்று
மங்கையபி ராமி ரங்கப் பள்ளி வந்தாளே

### விருத்தம்

43 வள்ளல் செங் கோட்டு நாதர்
மலரடிக் கடிமை யான
பள்ளியர் பள்ள ேனாடு
பரிவுடன் இதங்கள் பேசி
தெள்ளிமை யாக வாழ்ந்து
செருக்கும்நா ளிளை யாள் மூத்தாள்
மெள்ளவே அவர வர்க்கு
வேண்டிய துரைக்கின் றுரே!

## பள்ளியர் இருவரும் தம் கணவனை வேண்டுதல்

44 நாககிரி நாதர்திருச் சந்நிதியிலே - ரெண்டு
நந்தா தீபம் நடத்தி வாருங் கணவா!
ஏகமன தாகவும் நீ சொன்னபடியே - நானும்
இன்றுமுதல் என்றுமேந டத்தி வருவேன்

45 தையலே என்றிவன் நாகீச பண்டித - ருடன்
தானுரைத்து மேநிகுதி தானதும் செய்து
ஐயமா ரெல்லோருடனும் உரைத்திவனும் - மாதம்
ஐந்து சலகை நெல் அளந்து கொடுத்தான்

46 ஆதிகேசவர்க் கிரண்டு மாலை தினமும் — மடத்
தாருடன் சொல்லி நடத்தி வாருங் கணவா!
நீதியுடன் செங்கோடன் தன்னுடன் சொல்லி — மாலை
நித்ய கட்டளை நடக்க நேமகம் செய்தான்

47 ஆண்டவர் குமாரருக்கு மூன்று காலமும் — வில்வ
அர்ச்சனை தினம் நடத்தி வாருங் கணவா!
ஆண்டதற் கிவள வென்று நிகுதியும் செய்தே — சே
னாபதிக் குருக்களுடன் அறிக்கையிட்டான்

48 வைகாசித் திருவிழாச் செலவுக் கெனக்கு — சுத்த
மதுரை யீரைந்து பொன்னுத் தாரும் கணவா
செய்யாள் இளைய பள்ளி கேட்டவுடனே — உந்தன்
செலவுக் கீரைந்து பொன் இந்தா வென்று தந்தான்

49 ஆண்டவருக்கும் துரை ஆறுமுகர்க்கும் — நிரை
அபிஷேகத்திற் காறுபொன் தாரும் கணவா !
வேண்டும் பிரியமுடன் பையை அவிழ்த்தே — அவன்
மெய்யழகி மூத்த பள்ளி கையில் கொடுத்தேன்.

50 தீபாவளி நோன்பது தான் வருகுது — மனைச்
செலவுக் கோரைந்து பொன்னுத் தாரும் கணவா !
ஆவலுடன் பையவிழ்த்து கையை நீட்டியே — இவன்
அரிவை இளைய பள்ளி கையில் கொடுத்தான்.

51 சுப்பிரமண்ய குருக்கள் தேவியருக்கு — நல்ல
துய்ய பட்டொன்று வாங்கித் தாரும் கணவா !
அப்பொழுதே பச்சையப்பன் கடை தனிலே — வாங்கி
ஆரணங்கு மூத்த பள்ளி கையில் கொடுத்தான்.

52 எனதிளையாள் கோவிந்தப் பள்ளியும் வந்தாள் — ஒரு
எழுத்துச் சேலையெடுத்துக் கொடுத்திடென்றாள்
மனதிரங்கி மாரப்ப செட்டி கடையில் — சேலை
வாங்கி வந்தே யிளையாள் கையில் கொடுத்தான்.

53 சங்க மேஸ்வ ரையன் வைத்தி தமக்கு — ரெண்டு
சல்லா வெடுத்து வந்து தாரும் கணவா !
அங்கப்ப செட்டி கடையில் தானும் வாங்கியே — வந்து
அம்பு விழி மூத்த பள்ளி கையில் கொடுத்தான்.

54 தம்பி கஸ்தூரி ரங்கன் பார்க்கவே வந்தான் — ஒரு
சந்த்ர காந்தி ரேஞ்சு வாங்கித் தந்திடு மென்றாள்
இன்பமுடனே குழந்தை செட்டி கடையில் — வாங்கி
ஏத்திழை யிளைய பள்ளி கையில் கொடுத்தான்.

55 மாசப் படித்தரநெல் ஈசற்குத் தந்தேன் — ரெண்டு
வள்ளச் சர்க்கரை வாங்கித் தாருங் கணவா !
நேசத்து டன்இவன் ரங்கப்பன் கடையில் — வாங்கி
நேமமிகும் மூத்த பள்ளி கையில் கொடுத்தான்.

56 மாமன் மகள் வடிவழகி ஊருக்குப் போருள் — நாலு
வள்ளச் சர்க்கரை வாங்கித் தாருங் கணவா !
பூமலை செட்டிகடை தன்னில் வாங்கியே — இவன்
பூவை யிளைய பள்ளி கையில் கொடுத்தான்.

57 குகையினில் வாசமுற்ற குப்பண்ணனுக்குப் — பட்டுக்
குறிகட்டு சோமன் வாங்கித் தாருங்கணவா !
அகமகிழ்வாக ராமசாமி கடையில் — வாங்கி
அன்னநடை மூத்தபள்ளி கையில் கொடுத்தான்

58 அளகியென் தம்பி மனையாட்டியும் வந்தாள்—சகு
ளஞ்சுப் புடவை வாங்கித் தாருங் கணவா!
வளமையுடன் திருவேலன் செட்டி கடையிற்—சேலை
வாங்கிவந் தேஇளையாள் கையில்கொடுத்தான்

(முடுகு)

59 தன் கண வருக்கிசைந்து மூத்த பள்ளியும் — செய்யத்
தகு மென்றிடுஞ் செலவு தானதுஞ் செய்தாள்
மங்கை யிளையாள் மகிழ்நன் தன்னையலட்டி — யிவள்
மனதுக் கிசைந்தபடி செலவு செய்து

60 சந்தனங் கதம்பம் வாங்கித் தந்திடு மென்பாள் - கைக்குச்
சரிகை வளையல் வாங்கிப் பூட்டிடு மென்பாள்
இந்திர நீலப் பட்டொன்று வாங்கித்தா வென்பாள்-காலுக்
கேற்ற கொலுசு தண்டை எங்கனே என்பாள்

61 பச்சிலை பூலாங் கிழங்குங் கஸ்தூரி மஞ்சள் — வாங்கப்
பணமில்லை யென்றிவள் சிணுங்கியே நிற்பாள்
இச்சையான தெல்லாம் வாங்கித்தாரே மென்றீரோ-நனும்
இல்லையென்றபின்போ வாங்கித் தாரதுமென்பாள்

62 பிரியாமலே பள்ளனை யிருக்கச் சொல்வாள் — வயல்
பிழைப் பிருப் பொன்றுஞ் சற்றும் பார்க்கவே வொட்டாள்
அறிவுள்ள பள்ளனிவளாசையில் சிக்கிப் — பாடி
ஆடச்சொன்ன படிக்கி ஆடியிருந்தான்

### கலிப்பா

63 விண்ணவர்கள் போற்றரவ மேரில் வளர் வித்தகனுர்
பண்ணை தனி லேஇளைய பள்ளியவள் பள்ளனையும்
தின்ன நல்ல பாக்குக்கும் சேலைபணிக்கென்று கையில்
எண்ணமுடி யாதபொரு ளெல்லாம் பறித்தனளே

### விருத்தம்

64. மேலவர்போற் றரவகிரி நாதர் பண்ணை
மேவுசதா சிவக்குடும்பன் தனையு மோகத்
தால்இளையாள் மயக்கிஉள்ள பொருளை யெல்லாம்
தான்பறிக்க மூத்தபள்ளி தானும் பார்த்து
சாலவும்நம் பிழைப்பிருப்பென் றெண்ணுமல் தான்
தாசியைப்போல் பறித்தவள்ஊ தாரி வாழ்க்கை
போலெனவே செய்யிகிருள் என்று மூத்தாள்
பூவையிளை யாட்குமதி போதித் தாளே!

### பாட்டு

65. சங்கரனுர் கோதையரன் தன்செயலால் எனது
தங்கை யென வந்தருள்சீ ரங்க வல்லி யேகேள்!
பைங்கொடியே உலகுதனில் யாவர்களுஞ் செல்வ
பாக்கியமுங் கீர்த்திபுகழ் படைத்திருக்க வேணும்
இங்கிதஞ்சேர் செல்வர்களை எல்லவரும் புகழ் வார்
இல்லாரை யோஇகழ்வார் எவர்க்குறு திநிதியே
மங்கையரே மகிணர்கையில் உள்ள தனம் எல்லாம்
வாங்கி வாங்கி வீண் செலவு ஏன் செய்கிருய் மாதே!

66. சர்ப்பகிரி மேவரனார் தந்தபொருள் எல்லாம்
தானிதுஊ தாரியெனத் தான் செலவு செய்தாய்!
நற்பொருளு மேயிருந்தால் நாயக னு டனே
நாமும் பெருங்குடியெனவே நாட்டினில் வாழ்ந்திடலாம்
இப்படிநீ செலவழித்தால் இதனாலே உனக்கு
என்னபலன் தருமத்துக் கேதுபயம் எனவே
அப்படித்தான் செய்தாயே இனியென்ன தான் சொல்லி
ஆவதென்ன? இனிமேலா கினும்புத்தியா யிரு நீ!

67 புருஷரவர் என்செய் குவார் பூவை யரினாலே
புகழ்அறம்எல் லாம்குலவும் புகுந்திடமும் விளங்கும்
அரிவையர் தம் மோகமத னால்அவர் தம் சொல்லுக்
கனு கூல மாயிருப்பர் அது அழகுமல்ல
தெரிவையர்கள் புருஷரையே தெய்வமெனக் கருதி
சீர்பெறநல் லறஞ்செய்தெலாம்சிவன்செயல் என்றிருந்தால்
நறுமலராள் உலவுதிரு நாகமலை நாதர்
நல்லடிமை கொண்டுலகில் ரட்சிபுரி வாரே!

68. ரட்சிபுரி வார்எவர்க்கும் நன்மையென இருந்தால்
நல்லபதம் கிடைக்குமிந்த நாட்டினிலும் புகழாம்
பட்சமுடன் இருவர்களும் புருஷருடன் கூடிப்
பார்வதி மணாளர் தமக் கேர்வை யென நடந்து
அட்சயமாய் வாழ்வமடி என்துணையும் நீயே
யானு முனக் காதரவாம் அல்லதுவேறு ண்டோ?
நிச்சயமே இதுதவறேன் நீயுந்தவருதே
நீதியென வந்ததங்கை மாதர சியாரே!

## இளையவள் மூத்தவளை எதிர்த்துப் பேசல்

### சிந்து

69. வரிசையுடன் மூத்த பள்ளி வழியுடனே சொல்ல
மாவிளைய பள்ளிசின மாக வந்து சொல்வாள்
புருஷர்கள்மேல் வீங்கின வளான படியாலே
புருஷனையே பெரி செனவே பேசுகிருய் பள்ளி!
தருவுலகிம் மூன்றினையும் சத்தியல்லோ தந்தாள்
சத்தியது பெரிதுசிவன் தானடக்கம் போடி
ஒரு பங்கரன் சத்தியின்பங் கொரு நூறே யாகும்
உலகம்எம தாண்டவன் தன் உபயமய மாகும்

70 ஆகையினால் கொழுநர்மனை யாட் கடங்க வேணும்
அப்படியே எனக்கடக்கம் ஆனுரென் கணவர்
ஏகமன தாகக்கேட்ப தில்லையென் றிடாமல்
எனக்க வரும் தந்திடுவார் இன்ப மதுவாக
சேகரமதாகவும்யான் செலவழித்தேன் உனக்குத்
திரவியங்கள் அரிதெனக்குத் திரணமடி பெண்ணே!
தாக மலை யார்வடவர் ஆகையினு லவர்க்கு
நல் லடிமை நீயுனக்கு நவநிதியோ பஞ்சம்!

71 அருள்பெறுசீ ரங்க ரென தாண்டவ னென்னுட்சி
அதிகசெல்வம் தனக்கதிபர் ஆகையினால் எனக்கு
திருவருள் உண் டதிகசெல்வம் சேருமடி, யுனக்குச்
சிவன் கொடுத்தல் நீரொழிய செல்வமில்லை யவர்க்குத்
தருமநெறி கண்டவள் போல் தானுரைத் தாயுங்கள்
தலைமுறையில் தானதர்மம் தான்பு ரிந்த திலையோ?
பருவமதில் அதிகசுக பாக்யம் விரும்பாமல்
பரதேசி போலிருந்தால் பலனென்னடி புருஷர்

72 மங்கையர்கள் மனது மெலியாமலும் வைத்திருந்து
மனைவிதனைப் பூசைபண்ணி வாழ்ந்திருக்க வேணும்
பொங்கமிகும் உயர்ச்சிபுத்ர பாக்யம் புண்ணியமும்
புகழ் கொடுக்கும் தெய்வமனைப் பெண் தெய்வ மிவளே
இங்கிதம்வேண் டாம்பகவான் எனது துணையாமே
எனக்குத் தெரியாதோநீ எடுத்துரைக்க வந்தாய்!
எங்கும் பராபரவஸ்தாய் இருக்கும் சகநாதன்
இதயமதிலிருக்கு மதி எனக்குண்டு மாதே!

## விருத்தம்.

73 பாரெங்கும் புகழே பெற்ற
பணிமலை நாதர் பாதம்
ஆரங்கள் எனவே பூண்மூத்
தாள்சொன்ன வார்த்தை யெல்லாம்
ஓரங்கள் எனவே எண்ணி
ஒன்றுக்கி ரண்டு பேசும்
சீரங்கப் பள்ளி யோடே
செங்கோட்டுப் பள்ளி சொல்வாள்!

---

# மூத்தவள் இளையவளை சினந்து பேசல்.

## சிந்து

74 பண்புடன் இளையபள்ளி சொன்னவுடனே — மூத்த
பள்ளியுஞ் சினந்தவளைப் பார்த்து மொழிவாள்
அம்புவியிம் மூன்றினுக்கும் தேவர் களுக்கும் — உன
தாண்டவர்க்கும் ஆண்டவன் என் ஆண்டவன் அல்லால்
பின்புமொரு தெய்வமும் உலகில் உள்ளதோ — மத
பேதகர்க்குள் ளாகையில் இவ்வார்த்தை யுரைத்தாய்!
தம்பிரான் தனை யிகழ்ச்சி யாகஉரைத்தாய்! — அவர்
தன் பெருமை யாரறிவார் தான் அறிவிக்கார்!

75 சகலமும் கண்டுகளித்து மோகமுனிந்து - எங்கும்
தாணுவென நின்றவர் வைபோக சுகமும்
அகில புவ னங்களுக்கரசிது வெல்லாம் - எங்கள்
ஆண்டவர் உன்னுண்டவர்க்குத் தந்த தல்லாமல்
மிகு மகிமை யே தவரவர்க்குத் தெரியும் – சர்வம்
விஷ்ணுமயம் ஆகிலரன் தன்செயலதே
தகைமை பெரும் சக்தி பெரிதென்று மொழிந்தாய் – சிவன்
தானில்லாமல் சக்தியிருந்தாவதுமென்ன?

76 எங்கள் ஐயரை "வடவர்" என்று மொழித்தாய் - அவர்க்
கேது குறை விஷ்ணுமுதல் சிவமயமே
தங்கமலை வெள்ளிமலை தா முண்டவர்க்கே – என்ன
தாழ்ச்சி யடியார்க்குநிசி தன்னையுந் தந்தார்
செங்கையில் அள்ளி வீபூதி தானுங் கொடுத்தால் - வேண
சித்தி தரும் நானறி வேன் நீயறிவாயோ?
மங்கையர் மலர் பரிமளம் போர்வை – அன்ன
வஸ்திரம் பூஷணம் நல்ல வாகனமில்லை

77 நேசமொடு புல், தழை, பொடியுங் கரித்தோல், – நஞ்சும்
நீள் புலியுரி, பணி, சேவிடையோறு வார்
பேசரிய கர்த்த னென்று பேருமெடுத்தார் அந்தப்
பெருமை சொல்லவு முடியாதடி பள்ளி!
ஆசியஞ் செய் கிருய் மகத்து வம் அறியாய்! – அது
அறியவென்றால் நீ யறிவார்க்கார் பிரபு?
காசினி புகழ் கந்த சாமி அய்ய ரைக் — கேளும்
காரணமெல்லாம் உரைப்பார் கண்டறி பெண்ணே!

## விருத்தம்

78 பலவுருவம் ஓருரு வாய் எடுத்த நாதர்
பண்ணைவளர் செங்கோட்டுப் பள்ளி தானும்
நிலைமை அரி அரன் 'வேறு' சமய பேதம்
நித்தியமாய் நின்றபொருள் ஒன்ற லாமல்
உலகினில்வே றிலைஇவரைப் பிரித்தல் நிந்தை
உரைக்கவெகு தோஷமதுண்டென்று சொல்லச்
சலமிகுசீ ரங்கமட நிதையுஞ் சினந்து
சக்களத்தி நிந்தனையைத் தான் சொன்னாளே!

## இளையவள்-மூத்தவள் ஏசல்

### சிந்து

(இவ்வேசல் முழுவதும் இளையவள் மூத்தவள் மாறிமாறிக கூறுவது இரண்டு இரண்டு வரிகள்)

79 போதும் போதும் உன் கடையைக் கட்டடி பள்ளி - சுத்தப்
பொய்களும் புரட்டுருட்டும் எங்கடி கற்றாய்

80 பிரட்டுருட் டுங்கள்குலப் புத்தியல்லவோ — இந்தப்
பெருமையாகாதுபிலுக் காதடி சும்மா

81 பெருமையில்லாமலென்ன உந்தனைப்போலே - சுத்தப்
பித்தனுக் கடிமைப் பட்ட பித்தியோ போடி

82 பித்தரடி யான்றனக்கு பெண்டு மிருந்து - இகழ்ச்சி
பேசுவது நியாயமல்ல தாசச் சிறுக்கி

83 தாசச்சி யென்றென்னைச் சொன்னாய் ஆண்டிச்சிறுக்கி-பிச்சை
தானெடுக்கும் புத்தியல்லோ உன்னுடபுத்தி

84 புத்தி சொல்ல இத்தனை வளர்த்தினாய் பள்ளீ — வீட்டுப்
பிழைப்பை கெடுக்க வந்து தோன்றினாய் போடி

85 பிழைப்புக்கு அதிபதி யு நானுமல்லவோ — கொஞ்சப்
பேச்சு பேசாதடிபேய் மாலச் சிறுக்கி

86 கொஞ்சப்பேச் சேதடி பின் ஆரடி சொல்வார் — நானும்
கொள்ள வந்த சக்களத்தி அல்லவோ நீயும்

87 அல்லவோ பள்ளனுனை ஆ காதெனத்தள்ளி—வீட்டுக்(கு)
அதிபதி யென்றெனைவந் தன்புடன் கொண்டான்

88 அன்புடன்கொண் டாலுமென்ன சீரங்கப்பள்ளி—எனக்(கு)
அடக்கமில்லாமல் நீ அதிகமோ சொல்லாய்

89 சொல்லுவதும் பேசுவதும் ஏதடி பள்ளி — வீட்டுச்
சொந்தக்காரி நானுனக்குச் சொந்தம் என்னடி?

90 சொந்தமோ பாராட்ட வந்தாய் மூளிச் சிறுக்கி - இந்தச்
சுதந்திர மேதுனக்கு தோதகக் கள்ளி

91 கள்ளியென்றுநீலிக்கோலம்காட்டாதேபோடி- கொள்ளிக்
கண்ணுப்பட போவுது கருகாதே போடி

92 போடி வாடியென்று மிக வீம்பு பேசுருய் — அடி
பொடிமாயக் கள்ளிபோருக் காளல்லடி நான்

93 நான் செலவுசெய்கிறதை கட்டு செய்யவும் — உனக்கு
ஞாயமல்ல உன்தகப்பன் தேடி வைத்ததோ

94 தேடி வைத்தார் என் கணவர் கைப்பொருளெல்லாம் – நீ
தேவதாசி போல் பறித்து செலவு செய்தாய்

95 செய்வண்டி உனக்குச் சொல்லச் சம்பந்தமென்ன–வந்து
சீறுச்சீறு யென் றென் மேலே ஏருதே பள்ளி!

96 ஏறுற திறங்கிறதுன் கை மருந்தடி — உனக்கு
ஈனமில்லை மானமில்லை யெந்தன்னுக் கென்ன

97 எந்தனுடைய வாழ்வுப் பொறுக்காமலே நீயும் — சும்மா
ஏனடித்துக் கொள்கிருய் ஏங்காரிப் பள்ளி

98 எங்கள் குல உங்கள் வம்மிசாவளி யென்றே (டு)
எதிர்த்துப் பேசவுஞ் சமர்த்தாரடி தந்தார்

99 உன் சமர்த்தும் என் சமர்த்தும் பாரடி பள்ளி — இப்போ
ஊட்டை விட்டு ஓட்டி உன்னைத்தாட்டி விடுறேன்

100 தாட்டிவிடவோ உன்னையும் மேட்டிமை செய்து – எந்தன்
தங் கையென எண்ணிவந்த பங்கமல்லவோ

101 பங்கங்கெட்ட சக்களத்தி இந்தச் சணமே — எங்கள்
பள்ளனுடன் சொல்லி உன்னைத் தள்ளி வைக்கிறேன்

102 தள்ளி வைக்கவும் பெலன்கள் யாரடி தந்தார் - சண்டை
தான் பிடித்துப் பாருநீ உதைக்கிறேன் பள்ளி

103 உதைக்க வந்த காரியங்கள் ஏதடி பள்ளி — சச்சில்
உனை விடுகேனென முந்தாணிப் பிடித்தாள்

104 பிடித்திட மூத்தபள்ளி இளையபள்ளியை — மயிரைப்
பிடித்திழுத்தே உதைத்தடித்து விட்டாள்.

## விருத்தம்

105 பழமறைகள் போற்றரவ கிரியன் நாதர்
பண்ணைதனி லேவளர்செங் கோட்டுப் பள்ளி
இளையபள்ளிதனை இழுத்து அடித்த போது
இசைந்தசதா சிவக்குடும்பன் விலகி நின்று
வளமையென ஒருத்தியைச் சேர்த்தொருத்தி தன்னை
வைதடித்தால் வந்திடும் பொல்லாப் பதென்று
கழனி வயற்கேக இளையாள் பின் சென்று
கடுத்தவனைக்கண்டு சண்டை தொடுத்திட்டாளே!

# இளையவள் புலம்பல்

## சிந்து

106 நந்தி நாதர் திருப்பணி மாமலை
நண்பர் சீரங்க ராயர் அறிய
" சொந்தம் நான்உன் மீ ளிதங்கள் "என்று நீ
" சொன்னவார்த்தைக் குள்ளாகு வேன் "என்றும்
எந்தனூரில் வந்துஎன் தந்தைக்கு
இணக்கமாய்ச் சொன்ன வார்த்தைகளெல்லாம்
சிந்தையில்சற் றிரக்க மில்லாமல்
தெருவில்விட்டு மறந்தாயே பள்ளா!

107 பெருகி ஆசைகள் கொண்டு என்னோடே
பிரிய வார்த்தைகள் சொல்லி என் மோகத்தில்
மருகி யூருக் கடிக்கடி தானும்
வலிய வந்து வரிசைகள் செய்தே
உருகியே எனைப்பார்த்து நமக்கு
உரிமை யென்று விவாகமுஞ் செய்து
அருமையாய் உனை வைத் திருப்பேன் உன்
அடக்கம் வீட்டுக்கதிபதிநீயே

108 ஆகுமென்று பரவசஞ் சொல்லி
அழைத்து வந்தெனைக் கூடியிருந்து
மோகமானது தீர்த் தெனை யிப்படி
மோசஞ் செய்ய நினைத்தாயோ பள்ளா
சோகமாயன்று சர்க்கரைப் பேச்சுகள்
சொல்லி யேற விட்டேணியை வாங்கவும்
ஆகுமோ இட்ட ஆணையும் பாசையும்
அகன்றதா! சரியா யிதுபள்ளா?

109 மான மான தில்லாத சக்களத்தி
வலிய வந்தெனைச் சண்டை தொடுத்து
ஈனமே கெடப் பேசியடித்து
இழுத்த போது நீ பார்த்திருந்தாயது
ஏனென்றே யெனைச் சேர்ந்து அவளையும்
ஈங்கிஷஞ் செய்தடித்து விடாமலும்
போனையே உனை நம்பு வேணு இனி
போறேன் என்னூருக் கென்று நடந்தாள்.

## கலிப்பா

110 முனிவர் தவம் சேர்பணிமேர் மூர்த்திதிரு நாட்டிலிந்த
அநியாயம் வந்தபின்பிங் கரைநாழி கையிருக்கேன்
தனிவழியே போவனென்று தையலிளையாள் நடக்கக்
கனிவுடனே பள்ளன்வந்து கைப்பிடித்தங் கோதினனே

## பள்ளன் இளையவளை வேண்டுதல்

### சிந்து

111 மோக சமுத்திர மேமட மங்கையே சொர்ணமே-எந்தன்
மோகந்த ணியவை போகம தாய்வந்த அன்னமே
ஏகம னதுன் மையலொழிய மூத்த பள்ளிமேல் - ஆசை
எள்ள ளவும்சற்றும் இல்லையடிபசும் தங்கமே - எந்தன்

112 காம விகாரக்க ளையைத் தவிர்த்தசீ மாட்டி - உன்னைக்
கண்ட பொழுதென் கவலைத ணியும் கண்ணாட்டி- நாமன்
பூமணம் போலும் இருவ ரி ருப்பம்அல் லாமல் - அடி
பூங்குயி லேஉ னை விட்டுப்பி ரிவேனோ தங்கமே - அந்தப்

113 பேய்க்கோலவண்டியைநாய்க்கோலம்
செய்வேண்டி அன்னமே - மூத்த
பெண்டியுன் ஊழியத் தொண்டியைக்
கூட்டேண்டி சொர்ணமே — முன்பு
பாக்கியம் செய்த படியால் கடவுளர்
அன்னமே - அஷ்ட
பாக்கியமா யெந்தன்பாரியெனச்
செய்தார் உன்னையே

114 அடி - சீரங்க ராயர் திருவரு ளால் வந்த மங்கையே-திருச்
செங்கோட்டு நாதர் செயலும்ந மக்குண்டு தங்கமே
ஓரங்கள் பேசிவை தாலும் உனக்கென்ன அன்னமே—நீதான்
ஒன்றுக்கும் அஞ்சாதே உன்பங்கில் நிக்குறேன்—சொர்ணமே

115 நல்ல - புத்தியில் லாதபு ளுகச் சி யைநினை யாதே-அவள்
பொல்லாப்பு வந்துனை என்செய்யும் சொல்லடி மாதே—இனி
ஒத்துடன் வாழுவோம் சற்றும்உ னைப்பிரி யேண்டி மூத்த
ஊதாரி ஆசைக ளேதாம்ப றந்தது தாண்டி

116 எந்தன்-மாமனும் மாமியும் மனதுசலித்திடு வாரே—எங்கள்
மகளையும் இப்படி வஞ்சனை செய்தார்என் பாரே - எனது
ஆமிக்கை யோஅனை வோர் நகைப்பார்வெகு தூரே-நான்
அழைத்தும்வ ராட்டில்இ தோநான்ப ரதேசம் போறேன்

117 இனி - ஏற்கைய தாகந டந்து கொள்
வேன் இளங்குயிலே — நீயும்
இப்பிழை கொண்டு பொறுத்தெனை
ரட்சியும் மயிலே
எந்தன் - மூக்குச்சு ளையைவை
கோலங்கள் செய்யாதே மானே — உந்தன்
முத்தான வாய்திறந் துத்தாரம்
சொல்லடி தேனே

118 பள்ளா ! - நம்புவனு அன்பு வைத்து நடத்திடுவாயோ? — இனனம்
நட்டாற்றி லேகை நழுவவே விட்டிடு வாயோ? இனி
வம்புகள் இல்லைநீ வாடியென் றேகையைப் பிடித்துக் - கூட்டி
வந்துமனை யில்மகிழ்ந்திருந் தார் இரு வோரும்

### கலிப்பா

119 பனகமலே யாரடிமைப் பள்ளனினை யாட்கதிக
அனுசரணை செய்தே அழைத்துவந்து இன்பமுடன்
மனைதயதனில் வாழ்ந்திருக்க வஞ்சிசெங்குன் றூர்மயிலாள்
தனதெனவே தன்கணவன் தன்னுடனே கூறினளே!

## மூத்தவள் -குடும்பன் வாதம்

### நொண்டிச்சிந்து

### மூத்தவள்

120 எனதாசை நாயகனே — என்
இன்பவை போககு கங்களும் என்
மனமான துதெரிந் தும் — இந்த
மாய்மாலக் கள்ளியு டன்கூடி
அனைவோர்க்கி கழிதமாய் — என(து)
ஆசைம றந்துஅ வளுடனே
இனபேத கமெனவே — கொஞ்ச
மேசெய்ய நீதியி தாகணவா?

### குடும்பன்

121 அடி - ஏண்டி பைத்தியமே — உனக் (கு)
இத்தனை வீம்புகள் ஏதுசொல்லும்
வேண்டி விரும்பினதால் — வந்த
மெல்லியென் பிராண வல்லியவள்
தாண்டி யவளுடனே — நீ
சடுத்தங்கள் செய்யவும் காரியமேண்
தூண்டிவழக் குரையாதே — சீ
தொண்டியுன் பூருவம் கண்டேனடி

### மூத்தவள்

122 பள்ளா - சதிசெய்ய வோநினைந்தாய் — என்றும்
சாஸ்வத மாய்உனை நம்பி னேனே
மதியாம லேபேசி எனை
மந்தையில் வைத்து வழக்கு ரைத்தாய் !
அதிமோக மாலினையாள் — சொல்லை
ஆணிக்கை யாமென் று நம் பாதே !
துதிமேவு நாககிரி — வளர்
சுந்தர ருக்கும்இ யல்பாமோ?

### குடும்பன்

123 அடி - படிநீதி கண்டவளோ — அடி
பாசாங்குக் கள்ளி பழிகாரி
குடிகேடி நீபோடி — நீலிக்
கோலஞ் செய்யாதே குணகேடி
வடிவாம் இளையபள்ளி — சொல்லும்
வார்த்தைக்குள் ளாயிருந் தால்இருநீ
அடியோ இதுசம்மதம் — உனக் (கு)
ஆகாவிட் டால்தாட்டு அப்புறத்தே!

மூத்தவள்

124 பள்ளா - இதுகோலம் செய்ய வென்றே — நீ
எத்தனை நாள்கங்கு வைத்தனையோ ?
அதிதேவர் தாமறிய — சபை
அக்கினி சாட்சியாய் என்தகப்பன்
பதபாக மாய்மகளை — நீங்கள்
பட்சமு டன் வைத்து ரட்சியுமென் (று)
இதமாய்க் கொடுத்தாரோ? — எனை
இக்கோலம் செய்யக் கொடுத்தாரோ?

குடும்பன்

125 அடி-கொடுத்தார் அவர்களுமே — நானும்
கொண்டுனை வைத்து நடத்திவந்தேன்
துடித்தா யதிலேநீ — வெகு
சொந்தம்பா ராட்டியி னையவளை
அடித்தாய் மதத்தாலே — உன (து)
ஆமிக்கை கண்டேஅ றிந்திடுறேன்
முடித்தாய் சதியிதுவே — எந்தன்
முன்னிற்கா தேபோடி மூதேவி !

மூத்தவள்

126 பள்ளா - ஏழு வயதினிலே — உமக்
கேமனை யாட்டிய தாகவந்தேன்
ஆளும்ப டிகொடுங்கை — தனில்
ஆதரித் தீரிது நாள்வரைக்கும்
வாழும்பி ராயத்திலே — கசு
மாலச்சி றுக்கிமொ ழிகேட்டீர்
பாழுக்கு றைத்தநிலா — களர்
பாய்ந்திடும் நீரதும் ஆனேனே !

127 பரிவாய்ப் பேணிவளர்த்து — நல்ல
பக்குவம் ஆக்கிஅநுபவித்து
புரியாம லேயிருந்து — ஆசை
பூட்டியென் வீட்டினில் வாழ்ந்ததுவும்
கருதியி ருந்ததுவும் — எல்லாம்
கண்டக னவது போலாச்சு
சிறியார்உ டுத்தகலை — எனச்
செய்துவிட் டீர்அனே வோர்தமதாய்

128 கண்டுக ளிகூற — இளங்
கன்னி யதாய்மனை மீதிருந்து
சுண்டுவி ரல்கொடுத்தும் பின்
சுகங்கொடுத் தும்உங்கள் தோழியென
பண்டுப ழகினதும் — எல்லாம்
பாவனை யாகமு டிந்ததுவோ
கொண்டுகு லம்பழித்தீர் — ‘பின்பு
கொண்டவள்’ பங்கிலி ருங்கினிரோ?

129 குறியாம லைதையும் — வை
கோலங்கள் செய்தெனை யும்விடுத்தீர்!
அரவாசலப் பெருமான் — என (து)
ஆண்டவர் ஆயி அபிராமி
பரிபூர ணதயவும் — எந்தன்
பங்கிலி ருக்கக் குறையேது
வரிவேல் விழியாளும் — நீரும்
வாழ்ந்துசு கித்திருந் தால்போதும். (எனதாசை

## குடும்பன் கூறுவது

### கலிப்பா

130 அரவகிரி மேவும் அருளாளர் பண்ணைதனில்
இரவு பகலும் இசலாட்டம் ஆகாது
பரிவுடனே சீரங்கப் பள்ளியுட சொல்கேட்டு
வரிசையுடன் வேறையிரு மாதம் படியளப்பேன்!

## மூத்தவள்
### விருத்தம்

131 "படியளந் ததுவும் போதும்
பாரியாய்ப் பின்பு வந்த
குடியுடன் கூடி வாழும்
குறைநமக் கொன்று மில்லை
வடிவுசேர் நாக வெற்பார்
மகிமையுண் டென்தாய் வீட்டுக் (கு)
அடியவள் போறேன்" என்று
அகம்விட்டு வெளியே வந்தாள்

## மூத்தவள் புலம்பல்
### நொண்டிச்சிந்து

132 இனிநான் என்னசெய்வேன் — பள்ளன்எனை
ஏற்விட் டேணியை வாங்கினனே
மனமான துதொகுக்க — மருந்திட்டு
மயக்கின ளோஎன்ன தியக்கினளோ

133 மணமிகு மலரயனுர் — எழுதிய
வகைதா னோபழைய பகைதானோ?
குணநாய கருடனே — இனி உறவு
கூடேனோ விளையாடேனோ?

134 பிரியாவி டையெனவே — யிருந்தவர்
பிரிந்தா ரே மனம் முறிந்தாரே!
சரிமாதர் கள்நகைக்க — மனைவிட்டுத்
தாட்டிவிட் டாள்பழி மூட்டிவிட்டாள்

135 "எனதிலை யாள்எனவே — அனுதினம்
இருந்திடு வோ" மென வருந்தினனே
இனபேத கவிகடம் — செய்துபழி
எடுத்தா ளேசண் டை தொடுத்தாளே.

136 ஆசைகள் தனைபூட்டி — பள்ளனையும்
அடக்கினளே எனை முடுக்கினளே
மோசங்கள் நானறியேன் — ஒருவர்க்கும்
மோசம்செய் யேன்மனத் ரேசம்செய்யேன்

137 அரவாசல அரனுர் — அடியிணை
அடியாள்ம னமிசை குடியாக,
உரமா கஇருக்க — தாழ்ச்சியெனக் (கு)
ஒன்றுமில் லைமன தென்றும் சரி

138 எனவே மனமகிழ்வாய் — தாய் தந்தை
இல்லந்த னில்வந்து செல்லப் பெண்ணுள்
மனமது சலியாமல் — தகப்பனையும்
மாதாவை யும்சரண மேதான்செய்யப்

139 பிறந்தவர் தாய்தமரும் — இவள்தனைப்
பிரியமு டன்மனையில் வரவழைத்து
இருந்திடு மெனவுரைத்து — இவள் மனம்
இசைந்திடும் படியவர் பசுந்தெனவே

140 பாலும் பழமுடனே — போசனம்
பரிந்துப சாரமாய் விருந்திடவே
காலந் தவருமல் — வேளையில்
கனிவுடனே உண்டு இனிதெனவே

141 வரிசைய தாயிருந்து — சிவனடியார்
வந்தவர்க் கும்தான தர்மம் செய்து
பரிவுட னேசுகமாய் — செங்கோட்டுப்
பள்ளியு மேசுகித் திருந்தனளே !

142 பைங் கொடியாள்தென் கோதைப்
பள்ளியும் தாயார் வீட்டில்
இங்கித மெனவிருந்தாள்
இளையாளும் பள்ளனுந்தான்
வங்கண மாகக் கூடி
வாழ்ந்துதான் பண்ணை யங்கள்
எங்கும் வெள்ளாமை யிட்டு
இருந்தனர் மிகவுந் தானே!

# பண்ணைத் தலைவன் வருகை

## விருத்தம்

143 உள்ளவர் என்றும் தாழ்ச்சி
ஒன்றும்இல் லாமல் எங்கும்
மள்ளர்கள் செல்வ மாக
வாழ்ந்தவர் இருக்கும் போது
கள்ளம்ஏ தார்த்தம் எல்லாம்
கண்டதி காரம் செய்யும்
வெள்ளைமெய் உடையார் பண்ணை
விசாரிப்பான் தோன்றி னுரே!

## சிந்து

144 கூனல் முதுகும் பூனை மயிரும், கோணல் விரல்களும்-முசுக்
கோந்திபோல் முகமும், பொரட் டாந்தை போல் விழியும்,
தானதுஅஞ் சாறு பஞ்சை ஏன மயிர்போல் – மீசையும்,
சந்தைமாங் கொட்டைபோலேதாடி யழகும்,

145 ஏறுநெற்றியும், மாறுகண்ணும், கூறு புருவமும், – நாலாள்
ஏத்தச்சால்போல் வயிறும்,மானம் பார்த்த பார்வையும்,
'தாறுமாருய்' வீறுபேசியும்; ஊறு எளவாய் — பீளை
சாரஎந் நேரமும் எளி ஊறு வேசிந்தி

146 நெற்றியில்வெண் ணீறும், சந்தனப்
பொட்டு மணிந்து — நல்ல
நீலக்கொண்டை மேலேஉரு
மாலையும் கட்டி:
முத்து மாலையும் அஸ்தகடகம்
விசித்திர அரைநாண் - சிகாய்
முத்திரைமோதிரமும் காறைச்
சத்துமணிந்து;

147 பட்டுக்கம்பிச் சோமனியிடையில்
திட்டமாய்க்கட்டி;— வெண்துப்
பட்டியும் ஏகாசவல்ல
வட்டமும் இட்டு;
ஒட்டுக்கடுக் கன்சவுளி
வட்ட முருகும் இட்டு
ஒட்டுமணி யங்க ளேற்றுச்
சட்டமென வே,

148 கப்பல் மட்டத் தேசி மீதில் மெய்ப்புடன் ஏறி - கோலு
காரனும் சேவகரிரு பாலும் சூழவே,
செப்பமாய் மிரட்டுருட்டுகள் ஒப்பனையெனப் - பேசித்
தீரனுர் செங்கோட்டுப் பண்ணைக் காரனுர் வந்தார்

(யூடுகு)

149 நாகமாமலை மீதிலேவளர்
யோக தேசிகனுர் - திரு
நாடெனும் பொன்னுடு
பூந்துறை நாடுதனிலே
வேகமாக வுலாவியாண்டவர்
பண்ணையமெல்லாம் - எங்கும்
மேன்மையாய் விளங்கவேண்டி
விசாரணை செய்தே,

150 மேல்கரைகீழ் கரைவடகரை
தென்கரையிலும் — எங்கும்
மேவியே நஞ்சை வெள்ளாண்மை
வேந்தரெனவே
நால்கரை கரைத்துறைகள்
ஏரிஅணையும்—எங்கும்
நலமாய் வெள்ளாண்மை யேற்றிப்
பிலமதாகவே

151 ஒப்பனை யுடன்படிக்கை
அப்பணை செய்து - பள்ளர்
உள்ளவர்க்கெல் லாம்வரிசை
உடுகரை தந்து
தப்பிலா மலேமணியம்
செப்பமாய்ச் செய்து — கோதை
சந்திர சேகர நாயினுர்
வந்து தோன்றினுர்.

## கலிப்பா

152 காவலனும் என்னஅதி காரமும் செய்பண்ணையினுர்
சாவடியில் வந்திருந்து தண்டலனே யே பார்த்து
பாவகமாய்ச் சென்றுபள்ளர் பட்சேரி யில் புகுந்து
யாவரையும் இங்கே அழைத்துவா வென்றனரே!

## விருத்தம்

153 உடையவர் சொல்லைக் கேட்டு
ஓடியே கோலுக் காரன்
தடையதில் லாமல் சேரி
தனில் புகுந் ததம்பி நிற்க
மடமயி லுடனே பள்ளன்
வந்துசே திகள்ஏ தென்ன
அடவுடன் " பண்ணையாண்டார்
அழைத்தனர் வாவா " என்றான்

154 ஆண்டவர் வந்த போதே
அதிகசந் தோஷம் ஆச்சு
வேண்டுமுஸ் தேதி கட்காள்
விட்டுநா னல்லோ வாறேன்
மீண்டுபோ யாண்ட வர்க்கு
விளம்புமென் றனுப்பி விட்டுப்
பாண்டித மொழியாள் தன்னைப்
பார்த்துரை குடும்பன் சொல்வான்!

## கீர்த்தனை

### (பல்லவி)

155 வாடியென் பிறகே — இருவரும்
கூடிப்போய் வருவோம் (வாடி)

### அனுபல்லவி

ஆடிய திருவம் பலவர் கோதையென்
ஆண்டவன் தனை வேண்டியே இப்போ (வாடி)

### சரணங்கள்

மோகவா ரிதியே – வசீகர – மோகனத் திருவே
ஆகமெய்த் துணையே – உயிர்க்கினி–தான கற்பகமே

நாகமலையரன் சொல்படியாக யிந்
நாட்டிலேயுள்ள நஞ்சை மணியங்கள்
ஏகமாய் இங்கே ஏற்றுவந்தார் நம்மை
இப்போ வரச் சொல்லி அப்பணையாச்சுது (வாடி)

விந்தையா கவுமே-உல்லாசமாய்- வேடிக்கையாகவுமே
சிந்துபா டிக்கொண்டே-இருவரும்-சேர்ந்துபோ வோமடி

சந்திரசேகரப் பண்ணையினுர் வந்து
சாவடிதன்னில்இ ருந்தே யெல்லோரையும்
இந்தச்சணமே வருக வென்றுள் விட்டார்
ஏந்திழையே நீ எழுந்திரு இன்பமாய் (வாடி)

அங்கையும் தோள்மேலே - இருவர் ஒய்
யாரமாய்ப் போட்டுக் கொண்டு
செங்கையை வீசிக்கொண்டு - விநோதமாய்ச்
சிரித்துக் கொஞ்சிக் கொண்டு

இங்கெழுந்தருளி இருக்கும் பண்ணைய
எசமானைக் கண்டு இன்பமாய்க் கும்பிட்டு
வங்கனமாவே வருவோம், மூத்தவள்
மானம் வெட்கி நின்றே மாறியிருக்கட்டும் (வாடி)

### கலிப்பா

156 நந்திதனில் ஏறுகின்ற நாகா சலப்பெருமான்
விந்தைசெறி பண்ணை விசாரிக்க வந்தவரைச்
சந்தித்துத் தான்வருவோம் தையலே என்று பள்ளன்
சிந்தைமகிழ்ந் தேஇளைய தேவியுடன் தோன்றினனே.

### சிந்து

157 இன்பமுடனே சதாசிவக் குடும்பனும் - நல்ல
இளையபள்ளியும்கூடி ரதிமதன் போல்
பண்பொடு கூடையிலே தேங்காயும் இளநீர் - வெல்லம்
பச்சரிசியும் வாழைப் பழமும் அடுக்கி
அன்பொடும் இவள் தலையில் எடுத்து வைத்து - தட்டில்
அடைக்காய் வெள்ளிலை முடிப்பைந்து பொன்னதும்
நன் பெருமை யாகயிவன் தானும் எடுத்து — நல்ல
நாகரிக மாகயிவர் தாமும் நடந்து

158 சந்திர சேகரநாயினார் முன்பிலே வைத்து - இவர்
சாஷ்டாங்க மாய்விழுந்து தாமும் எழுந்து
அந்திவண்ணர் பண்ணையம் விசாரணை செய்ய - வந்த
ஆண்டவனை வலம் வந்து கும்பிடுகிறோம்
செந்திரு வுலாவுந்திரு நாகமலையார் - அடிமை
சேவுகம் சேவுகம வந்து தெண்டனிடுறோம்
"சிந்தை மகிழ்ந் தெம்மை யாதரித்து ரட்சியும்" - என்று
சீர்பாதம் தொழுதவர் முன்பிலே நின்றார்

## முடுகு

159 காத்திடும்என் றிவர்தொழுது வந்து நிற்கவும்-பண்ணைக்
காரனும் சினந்த கோரமாய் அவன்முகம்
பார்த்துநீ யிந்தத் தில்லுமல் லேதடா பள்ளா - மூத்த
பள்ளியெங்கே பாசாங்குக் கள்ளியெனவே
நேற்றுவந்த கச்சக்காச் சிறுக்கியுடனே - கூடி
நேமகம தாகவந்தாய் ஆமடா பள்ளா
மூத்தவள் விவேகியவள் தன்னையும் விட்டே-எந்தன்
முன்பிலே நில்லாதேபோ அழைத்துவா போடா!

## தணிவு

## பள்ளன் கூறல்

160 நல்லது புத்தியாகட்டும் அழைத்துவாறேன் - என்னை
நன்மைசெய்து ரட்சியும் விரோத மெனவே
சொல்லும் அவள் சாடிக்கி சைந் தென்னை விருதா - அவ
தூறுக்கிடஞ் செய்யாமல்என் னுளும் பரிவாய்
அல்லவர்க்கு மேன்மை செய்யும் ஏளிதம்வரா - மலும்
அன்புவையும் உங்கள்அப் பணைப்படிக்கு நான்
இல்லந்தனி லேயிருக்கும் மூத்த பள்ளியை - நானும்
இச்சணம் அழைத்துவாறேன் என்று நடந்தான்

## விருத்தம்

## குடும்பன் மாமன் வீடு வருதல்

161 பண்புமிகும் நாகமலைக் கடவுளூர் தம்
பண்ணைவிசா ரிக்கவந்தார் சொல்படிக்கு
அன்பொடுச தாசிவப்பள் ளனும்சீரங்க
அரிவைதனை மனையதனுக் கனுப்பிவிட்டு
வன்புசெய்த மூத்தபள்ளி தனையழைத்து
வருவமென்று மாமன்மனை தனக்கு வந்தான்
இன்பமுடன் மனைவிதனைக் கண்டுபள்ளன்
இதமுடனே பேசியவள் முன்னின்றனே

### விருத்தம்

## அவள் துக்கமும், அவன் வேண்டுதலும்.

162 வந்தவளின் முன்புநிற்க மாதுநல்லாள் தன்மகிழ்நன்
நிந்தனைகள் செய்தவெல்லாம் நினைந்துநெடு மூச்செறிந்து
பைந்தொடியும் தன்விரலைப் பார்த்துமொழி பேசாமல்
இந்திரை போல் நிற்கவும்முன் னேகுடும்பன் கூறினனே!

## பள்ளன் கூறல்

கலிப்பா

163 மப்பிட்டாள் லாகிரிபெண்
வஞ்சனையென் ஞளுமில்லை
துப்பிட்டேன் மால்இளையாள்
தோதகம்உண் டானதிது
செப்பிட்டேன் வாய்திறந்து
தேன்மொழிகூ றென்முகம்பார்
கொப்பிட்ட காதுக்கு நான்
கூப்பிட்டால் கேளாதோ?

### விருத்தம்

## மூத்த பள்ளி கூறல்

164 கணவன்ஈ துரைக்க மாது
கலகசிலைன் றலுக்கி நின்று
மணமிகும் மலர்வி ரிந்த
வாறுபோல் வாய்தி றந்து
குணமுளாள் பஞ்ச வர்ணக்
குயில்தொனி மொழிக ளாலே
மணியுதிர்ந் திடச்சிங் கார
வார்த்தைகள் பலுக்கின் றுளே.

## மூத்தவள் கூறல்

### சிந்து (முடுகு)

165 சுருதி சேர்பணி மாமலை மேவிய
சுந்த ரானந்தர் பண்ணை யந்தன்னிலே
அருமை யாய்அவர் திருவரு ளால்மெத்த
அதிக பாக்யவை போகம தாகவும்
பெருமை யாகவும் வாழ்ந்திருந் தோம்எந்தன்
பேச்சில் லாமல் தனிவழி யேகியே
மருவு சீரங்கப் பள்ளியைக் கொண்டென்னை
வஞ்சித் தாசைமறந்தாயே பள்ளா!

## குடும்பன் (தணிவு

166 அடி:- அன்ன மேயினி என்செய்கு வேன்நம
தாண்ட வர்செயல் தாரமி ரண்டெனக்
கென்ன வேசெய்த கற்பனை யாலே
இளைய பள்ளியைக் கொண்டது நானே
என்ன மோஒரு மாய்கையி னால்ருந்
தேநான்உன்னை விட்டுப்பிரிந் தேன்இனி
உன்னை யேசத மென்றெண்ணி னேன்வந்
துறவு கூடத் தயவுசெய் பெண்ணே!

## மூத்தவள் (முடுகு)

167 பள்ளா!:- நிற்கும் நேர்மையும் நிலைமையும் என்னுட
நீதி தானும் அறிந்திடு காமலும்
தக்க தெய்வ சபைதனி லேவிரல்
தந்தவள் என்று தானும்எண் ணாமலும்
நக்க னார்தமக் கேர்வையில் லாமலும்
நம்பி னாளென்று தான்மதி யாமலும்
பக்கு வந்தன்னில் என்னை முடுக்கி
பரத வித்திடச் செய்தாயே பள்ளா!

## குடும்பன்

### தணிவு

168 அடி!:- எந்த ஞருயி ரேமயி லேமதி
ஏழை போனேன்என் குற்றம் பொறுத்திடும்
சந்த்ர சேகரப் பண்ணையி ஞர்வந்து
தான ழைக்கிருர் போகாதே போஞல்
எந்தன் மீதினில் கோபஞ்செய் வார்மெத்த
ஏசு வார்சின்ன மேசெய் திடாதே
இந்த வேளைக் கிரங்கப கீர்த்திக்
கிடஞ்செய் யாதே ஈனமுனதே!

## மூத்தவள் கூறல்

### கலிப்பா

169 சித்திதருந் தென்கோதைத் தேவர்அருளே மிகுந்த
சத்யவதி யென்றெனையும் சற்றுமெண் ணிப் பாராமல்
மெத்தமனம் நோகவைத்து வேளைகண்டு சங்காத்தம்
இத்தனையேன் சொல்லுகிருய் இனியான் வருவதில்லை!

## குடும்பன் வணக்கமும் மூத்தவள் பிணக்கமும்

### சிந்து

170 அணங்கர சேவந்த அதிகாரி நயிஞரை
வணங்கியே சேவித்து வருகலாம் வாடி!

171 வாடியென்றென்கிட்ட வருகாதே யிளையவள்
சாடிக் கிசைந்து சதிசெய்த பள்ளா

172 செய்ததெல்லாம்பொறுத் தெந்தனை யாளுமுன்
கைவச மாயினேன் கடைத்தேறப் பாராய்

173 பாராமல் என்னையும் பாதகஞ் செய்திந்த
ஊரார் சிரிக்க உடம்பெடுத் தாயே

174 உடம்பெடுத் தேன்! அந்த ஊதாரி யால்உந்தன்
உடன்பகைத் தேன்! என் உயிர்த்துணை மாதே!

175 உயிர்த்துணை யாமென் றுகந்திருந் தேன்என்னை
அயல்க்கடை யாக்கி அவதி கொண்டாயே

176 கொண்டவ னையிந்தக் கோரணி செய்வது
உண்டோ சண்டைகள்வழக் குலகத்தில் இலையோ?

177 உலகத்தில் உண்டுநம்போல் ஒருவரை யுங்காணேன்
நலமுற்றும் சரியாய் நடத்துவா ரிலையா?

178 நடத்துவேன் உன்னையும் நலமாய்வைத் திருப்பேன் நீ
சடுத்தமாய்ப் பாய்ந்து தனித்தாயே பள்ளி

179 தனிக்காமல் எந்நேரம் சக்களத்திப் போராய்
இனத்தார் நகைக்க இருக்கவோ பள்ளா!

180 இருக்காமல் போய்விட்டு என்னையே தூஷித்து
நெருக்கமாய்ச் சொல்வது நீதியோ பள்ளி!

181 நீதியாய் வைத்தெனை நிர்வாகம் செய்ததும்
போதும்வீண் பேச்சையேன் போக்குறாய் பள்ளா!

182 போக்காதேஎன்முன் புத்திவந் ததுஉனக்
கேற்கையாய் நடக்குறேன் ஏதல்செய் யாதே!

183 ஏதுக்கு என்னையும் இன்னமும் கூட்டிப்போய்
வாதைக் கிடஞ்செய்து வைக்காதே பள்ளா!

184 வாதைக் கிடமில்லை வைகோலம் வேண்டாம்இப்
போதிரங் கினல்மெத்தப் புகழுனக் காமே!

185 கல்லாகி னுஞ்சற்றே கனியுமெ னைக்கண்டால்
வல்லிரும் புன்மனம் மாய்மாலப் பள்ளா!

186 இரும்பென்று சொல்லாதே இளகினேன் அனுதினம்
கரும்பென வேஉனைக் கருதுவேன் பள்ளி!

187 கருதுவோ மென்றாலும் காந்தாரியிளையவள்
அருகினில் சென்றமேல் அன்றைக் கேதேதோ

188 அன்றுபின் றும்வார்த்தை அழியேனுன் இதுமொழி
நின்று நிர்ணயமென நீநம்பி வாடி!

189 வருவேன்நான் உனைநம்பி வந்ததன் மேலின்னம்
சிறுமை செய் வாயோ செய்வாயோ பெருமை

190 பெருமைசெய் வேன்இனிப் பிசகில்லை வாடியுன்
அருமை யறிந்துன்னை யாளுவேன் பெண்ணே!

191 ஆண்டவன் செங்குன் றையர்க டாட்சங்கள்
பூண்டிரு வோரங்கே போவோம்வா பள்ளா!

192 போயவர் கருணையால் புகழ்நயி ஞரைக்கண்
டேயவர் செங்கோட்டில் இருக்கலாம் வாடி!

## விருத்தம்

193 மகிணனீ துரைக்க மாது
மனமகிழ்ந் திடத்தாய் தந்தை

அகமகிழ்ந் திடவு ரைத்து
அனுப்பிடக் கொழுநன் பின்னால்

சுகமென நடந்து வந்து
தோகையில் விடமும் சேர

வகையுட னிளையாள் வந்து
வணங்கிட மகிழ்ந்தாள் மாது

194 மாதுசீ ரங்க வல்லி
வன்மைசேர் குடும்பன் மூத்த

காதலி இவர்கள் மூவர்
கலந்துமே கூடிக் கொண்டு

நாதனுர் பண்ணை வேந்தர்
நலமிகு கொலுமுன் வந்து

நீதியாய்த் தொழுதி றைஞ்சி
நின்றுதான் கும்பிட் டாரே!

சிந்து

195 கும்பிடுகிறோம் ஆண்டே கும்பிடுகிறோம் - எங்கள்
குடும்பனும் நாங்களுமாய்க் கும்பிடுகிறோம்
அன்புள்ள தயாநிதியைக் கும்பிடுகிறோம் - பண்ணை
ஆண்டவனை வலம்வந்து கும்பிடுகிறோம்
சம்பிரமை யுள்ள வரைக் கும்பிடுகிறோம் — பள்ளர்
தங்களுக் கதிபதியைக் கும்பிடுகிறோம்
இன்பமுடன் மூவர்களும் கும்பிடுகிறோம் - எங்கள்
எசமான் அடிதொழுது கும்பிடுகிறோம்

196 தவமேன்மை யுள்ளவரைக் கும்பிடுகிறோம் — நல்ல
தர்மமிகு புண்ணியரைக் கும்பிடுகிறோம்
சிவநெறி யுள்ளவரைக் கும்பிடுகிறோம் — சைவ
சீலமி குந்தவரைக் கும்பிடுகிறோம்
நவநிதி பெற்றவரைக் கும்பிடுகிறோம் — இந்த
நாட்டுக் குடையவரைக் கும்பிடுகிறோம்
விவர குண நிதியைக் கும்பிடுகிறோம் - பண்ணை
வேந்தர் பதம் தொழுது கும்பிடுகிறோம்

## எண்சீர் விருத்தம்

197 பள்ளனும்பள் ளியருடனே வந்து போற்றப்
பண்ணையினூர் கோல்காரன் தனையும் பார்த்து
உள்ளமகிழ்ந் "திவ்வூரில் பள்ளர் பள்ளி
ஒருவரிலா மற்படியிங் கழையும்!" என்ன
வள்ளல்மொழி கேட்டவன்போய் அழைத்த பின்பு
வளமை செறி மோரூரில் வாழ்ந்திருக்கும்
மள்ளர்கள் பள்ளிய ருடனே கூடிவந்து
மன்னவரைத் தொழஅவரும் மகிழ்ந்து சொல்வார்

## சிந்து

198 அண்ணலார் அருளில்வந்த பண்ணையினரும் - கூடி
அங்கனே வந்திடும்பள்ளிப் பெண்களுடைய
வண்ணமுகம் பார்ப்பார்சற்றே எண்ணியோசிப்பார்-பெண்கள்
வளப்பம்யோசனைசெய்திடில் இளப்பமென்பார்

199 காத்தி மகள் மூர்த்திதன்னைத் தூற்றிவைகுவார்-அந்தக்
கன்னிமகள் பொன்னியுடனே சன்னைசெய்வராம்
நாற்றிசை யுலாத்தி முத்தியைப் பேர்த்தி யென்பராம் சின்ன
நல்லி மகள் செல்வியைக்கண்டு கல்லிசொல்வாராம்

200 குஞ்சிதங்கை நஞ்சியுடனே கொஞ்சிமொழிவாராம் - பள்ளக்
கோவிந்தன் பெண்சாதி மாரியை மாவிந்தை யென்பாராம்
வஞ்சி மூத்தபள்ளியைக் கண்டஞ்சி நிற்பாராம்-சொன்ன
வார்த்தையெல்லாம் பார்த்துவெகு நேர்த்தி யென்பாராம்

201 இளையபள்ளி பழையனூருள் என்று சொல்வராம் -பசப்
பெத்தியை முடுக ரென்று உற்றுப்பார்ப்பாராம்
வளமிகுந்த அழகியைக் கண்டுள மகிழ்ந்துதான் - கிட்ட
வாடியிங்கே புகைச்சுருட்டுத்தாடி யென்பாராம்

அறுசீர் விருத்தம்

202 மைப்பெரு மிடற்றூர் பண்ணை வள்ளலார் பண்ணைக் காரன்
இப்படிப் பள்ளிமாரோ டேசர சங்கள் பேசி
அப்புறம் இவர்கட் கெல்லாம் அதிபனும் குடும்பன் தன்னை
எப்படி வரலா றந்த இயல்பெல்லாம் கூறு மென்றூர்

கலிப்பா

203 நேர்விளங்க நீதி நிலைமைவிளங் கன்பரிடம்
சீர்விளங்க நாளும் செயல் விளங்க ஞானமிகுந்(து)
ஊர்விளங்கச் செய்துசெங்குன் றூர்விளங்கும் நாதர்திருப்
பேர்விளங்கும் பள்ளன் பிரதாபம் சொல்லுவனே

## பள்ளன் தன் குடிப்பெருமை கூறல். (சிந்து)

204 நன்னுக வேணியரன் பன்னக மேரில்வந்து
நதி கண்டிட உகந்து குடிகொண்டநாள்
பொன்னுடெனும் பூந்துறை நன்னுடுண்டான காலம்
புகழ் பெற்றின்னுட் டினில்வந் துகமையுற்று
இந்நாகமேரிறைவர் தன்னுளவர் பண்ணையில்
இருந்து பயிர் வெள்ளாமை திருந்தச் செய்து
முன்னுளிதுவரைக்கும் என்னுலவரடிமை
முயற்சியென யிருந்தங்தங் குயற்சி பெற்றூர்

205 நெஞ்சில் கவடில்லாமல் தஞ்சமெனவும் பண்ணை
நிலைபதியாய் மூவேழு தலை முறையாய்
நஞ்சுண்கறை மிடற்றர் தன் சேவடிக் கிதமாய்
நடந்திருந் தோமுன்னோர் பண் ணிடந்தனிலே
முன்சாலி முத்தெனநெல் லுஞ்சால வித்துண்டாக்கி
முளைக்கும்படிச் செய்தெங்கும் தழைக்கச் செய்தார்
வஞ்சிக்கிடங் கொடுத்தார் தன்செயலால் மென்மேலும்
வளரும்ச தாசிவக்கு டும்பனும் நானே!

**கலிப்பா**

206 பனக கிரி மேவரனூர் பண்ணை தனில் வாழ்குடும்பன்
தனதுபிர தாபம்விருத் தாந்தமெல்லாம் சொன்னபின்பு
மனதுமகிழ்ந் தேநயினூர் மங்கைசெங்குன் றூர்மயிலை
உனதுபிர தாபமிப்போ துரையென் றுரைத்தனரே

207 உடல்பே தகமகற்றி உள்புறம்பும் ஆனவர்தென்
கடல்கீழ் கடல்மருவும் கல்மிஷமில் லாதது போல்
அடைவாய் எனையடிமை யாக்கியடி யார்க்களித்த
அடைவதுகேள் என்றுசெங்கோட் டாள்நிலைமை கூறினளே

## மூத்தவள் கூறல். (சிந்து)

208 வித்தார மாகவொரு சித்தாகவே விளங்கி
மேகம்ப டிவடிவ நாகசயிலம்
உத்தர மாநதியும் முத்தநதியும் சங்கம்
ஓடும்பவானி யுடன் கூடும்போது
அத்தனை நாள்முதல்கொண் டித்தனை நாள்வரைக்கும்
அடியார் தமதடிமைக் குடியதாகி
எத்தேச காலமுந் தான் வற்றாத செல்வமும்பெற்
றிருந்து வளர்ந்தபுரந் தரன் குலம் நான்

209 குன்றிலுறை சிவனை யென்றும் பணிந்தெங்கட்குள்
கொள்ளக் கொடுக்கவந்த பள்ளரிவர்கள்
அன்றிது நாள்வரைக்கும் நன்றெனவும் சம்மந்தம்
ஆடியே நல்லுறவு கூடியிருப்பார்
அன்று யிவளுரிமை யென்றெனை மாலையிட்டார்
அத்தைமக னவர் "மாமன் பெற்றசுதை" நான்
கொன்றைச் சடை முடியார்க் கென்றும் அடிமையாம் தென்
கோதையின் மூத்தபள்ளி நானேயாண்டே

## முடுகு

210 புண்டரீக வேதனுயர் விண்டுவறியாத பரி
பூரணர் உலகில் வேணகாரண வுருக்
கொண்டுவிளை யாடியும்அகண்ட வடிவா யானந்த
கோலங்கொண்ட தேவர்திரு நீலகண்டனார்
அண்டர் முனி வோருடன்மும் மண்டலந்தொழுதிறைஞ்சும்
அரவ கிரியில்வளர் பரமசிவன்
பண்டடியருக்குகந்த தொண்டடிமை யாகவளர்
பள்ளன் கொண்ட சிவபக்திப்பள்ளி நானுண்டே

211 கல்லெறியும், கால், பிரம்பும், வில்லடியும்பட்டோன்மத
கரியும் உழுவையும் உரித்துத் தரித்தோன்
நல்லடியவர்க் குகந்து வல்லவன் தென் பாண்டியர்க்கு
நரிகளெல்லாம் அழைத்துப் பரிகள் செய்தோன்
எல்லைமிதித்தன்பருடன் வல்லடி வழக்குரைத்து
இடறிடும் காலையென்ற கடவுளனார்
பள்ளியஞ்சூழ் நாகமலை வல்லிபங்கனார் கமல
பதம்பணியும் சிவகாமிப்பள்ளி நானுண்டே

---

## கலிப்பா

212 அப்பார ணிந்தசெங்கோட் டையர்பண்ணை மூத்தபள்ளி
இப்பூரு வங்கள் எடுத்துரைக்கப் பண்ணையினார்
மெய்ப்பாய் மகிழ்ந்திளைய மெல்லிநற்சீ ரங்கவல்லி
வைப்பாய்நீ வந்த வரலாறுங் கூறுமென்றார்

213 ஆதியரங் கற்கடிமை யாகியும்செங் குன்றூர்க்குப்
பாதியடி மைப்பேர் படைத்திடுசீ ரங்கவஞ்சி
நீதியெனும் ஆண்டவர்முன் நின்று மலர் வாய்திறந்து
கோதில் வரலாறு குடித்தரங்கள் கூறினளே!

## சிந்து

214 சித்தாகவே உலகில் பத்தவ தாரங் கொண்ட
செங்கண்மால் வளர்சீரங்கம் எங்கள் ஊரே
தொத்திவந் தவளல்ல நத்தி வந்தவ ளல்ல
தொடர்ந்து தொடர்ந்து பள்ளன் நடந்ததனுல்
பெற்றூர்பிறந்தவரும் உற்றூர் அறிய அவன்
பெண்டனச்செய்தாரெனையும்கொண்டிவன்வந்தான்
கர்த்தாவுட பண்ணையில் உற்றநாள் முதலவன்
காலிலிட்ட வேலை கையில் கோலியே செய்வேன்

215 வந்த நான்முதற் கொண்டு எந்தன் சொல் மேலதாக
வைத்திருந்தான் நான் வைதாலும் குற்றமுங் கொள்ளான்
எந்தன்கால் பட்டமுள்ள தவன்க ணில்பட்டதென்ன
என்பேரிலேபிரியம் பரிவுமுண்டு
செந்திரு போல் மனைபு குந்தநாள் முதலவன்
செல்வ மும்வளர்ந்த தொரு வல் வினையில்லை
நந்தி நாதர்இருவர் சந்ததி யாகியும் என்
ஞல்விளங்கும் அபிராமி ப்பள்ளி நானுண்டே

## முடுகு

216 கல்லை யொரு மாதுசெய்த மெல்லடி வருடவஞ்சுங்
கன்னிகை மனோதரம்கண் டுன்னிதஞ் சொன்னேன்
வல்லவர் தமக்கு ஒரு புல்லும் ஆயுதங்களென்ற
வார்த்தையுமனைவி கண்முன் தோற்றிடச் செய்தோர்
கொல்லவந்த வஞ்சரையும் வல்லரக்கன் கஞ்சனையும்
கொன்று நிரைகாக்கவன்று குன்றெடுத்தவர்
பல்லவர் புகழ் சீரங்கர் நல்லடிமை யாகியவர்
பதம்பணியும் சீரங்கப்பள்ளி நானுண்டே

217 கங்கைபத சேகரர் செகங்களெங்கு மேவினவர்
கன்னிகை தனையுமுடி தன்னிலே வைத்தோர்
சங்கரநாரணர், ராமலிங்கர், பஞ்சாயுதபாணி
தாணுவென நின்றான் அந்த வேணுகோபாலன்
செங்குவடெனும் கோவிந்த ரங்கபதியின் மகேசர்
சேவக்கடிமையிந்த மூவர்களுள் நான்!
பங்கிடப் பாதியடிமை என்கணவர் சிவபக்திப்
பள்ளன் கொண்ட விஷ்ணுபக்தி பள்ளிநானுண்டே

## கலிப்பா

218 மூவர் தமிழுக்குகந்த மூர்த்திதிரு மெய்யடியார்
தேவர்பிர தாபமவர் செய்கையது தான் மொழிய
காவலனுமே மகிழ்ந்து கன்னியரைப்பார்த்துமது
பாவகஞ்சேர் நாட்டுவளப் பந்தனையும் கூறுமென்றார்

219 கோட்டுவளஞ் சேர்வடபால் குன்றுறை செங்கோட்டரனார்
காட்டுவளஞ் சேர்கலைகள் காட்டக் களி கூர்ந்து
பாட்டுவளஞ் சேர் வளவன் பனஞ்சேரலன் இருவர்
நாட்டுவளஞ் சொல்லமணி நாவசைத்தார் பள்ளியர்கள்

## மூத்தவள்

## சிந்து

220 வேதவோசையும் ஆகம ஓசையும்
விண்ணுளார் தொழும் தோத்திர ஓசையும்
நாத ஓசைசங் கீதத்தின் ஓசை
நடிக்கும் பஞ்சகருவியின் ஓசையும்
பாதவோசை பணிதியின் ஓசையும்
பண்ணு செந்தமிழ்ப் பாடலின் ஓசையும்
மாதரேழ் நடனம் புரிகோதை
மருவு பூந்துறை நாடெங்கள் நாடே!

### இளையவள்

221 மிஞ்சும் ஆறங்க வேத ஒலியும்
மிகுந்த நாட்டிய மாதர் ஒலியும்
பஞ்சவாத்திய நாத ஒலியும்
பகவருத்திர கீத ஒலியும்
விஞ்சைமாதவர் ஓதும் ஓலியும்
விளங்டும் வானவர் மேவும் ஒலியும்
அஞ்சலாசீர் வாதத்தின் ஒலியும்
அழகுசேர் சோழ நாடெங்கள் நாடே!

### மூத்தவள்

222 வீடுதோறும் பரிமள வாசம்
மிகுந்த வீதியிலே மலர்வாசம்
நீடுசோலையில் வேள்வியின் வாசம்
நிறைந்த காவில் முனிவர்கள் வாசம்
பாடுவார் தெருவுந் தமிழ்வாசம்
பரவு கோவிலில் தெய்வீக வாசம்
நாடுதோறும் திருமகள் வாசம்
நளின பூந்துறை நாடெங்கள் நாடே

### இளையவள்

223 அன்னதான விளக்கமு மூக்கமும்
ஆலயங்களும் பேட்டையும்கோட்டையும்
உன்னதம்பல சாதியின் நீதி
உசந்த மேடை குளுந்த நீரோடையும்
வன்ன வீதியில் ஆடலும் பாடலும்
மகுடதோரணம் பூரண கும்பமும்
சன்னதிகளும் தூபமும் தீபமும்
தழைக்கும் சீரங்கந் தானெங்கள் ஊரே

## நாட்டு வளம்

### மூத்தவள்

224 மனைகள் தோறும்மு ழுங்கும்ப்ர சங்கம்
மலிந்து மண்ணில் விளைந்திடும் தங்கம்
சுனைகள் தோறும் உதித்திடும் சங்கம்
சுயம்பு அம்மலை யும்சது ரங்கம்
வினைகள் அம்மலை காணவும் பங்கம்
விளங்கு மேசிலை யாவுமி லிங்கம்
பனைகள் சேரிதழ் தாரணி சேரன்
பவிசு பெற்றதென் கோதையென் னூரே!

### இளையவள்

225 காளை வாயும் கடலும் கரையும்
கனத்த கம்பம், மணல்கொப் பறையும்
சூழ வேகலந் தெங்கும் நிறைந்து
சுயம்ப்ர காசம தாக உறைந்து
நாளும் அன்பர்க்கு தவியும் லங்கை
நகர்க்க ரசனோர் மாமகம் இங்கே
தோழ ராம்பூசை யாமென் றுகந்த - கஸ்
தூரி ரங்கரென் தெய்வந் தானே

### மூத்தவள்

226 மங்கை யாள்முலை யும்சிலை மேலும்
வரைந்த யேடினும் மால்முழங் காலும்
எங்கு லாவிய அன்பர்க ளாலும்
இசைந்த செய்கை மறைபதம் நாலும்
தங்கி யேசக லாகங்க ளாலும்
தகைந்து காணப் படாதவர் மாலும்
கொங்கில் ஏழ்சிவ லிங்கமும் ஆன-தென்
கோதை யாரென் குலதெய்வ மாமே

## இளையவள்

227 குலைபட் டுள்ளது ஐந்தரு விம்பி
குழைபட் டுள்ளது நங்கையர் கொங்கை
கலைபட்டு ள்ளது வெண்மதி சந்தை
களைபட் டுள்ளது மேல்வயல் காடு
அலைபட் டுள்ளது நீர்மரம் பூடு
அடிபட் டுள்ள தரிவையர் பந்து
நிலைபட் டுள்ளது வளமைகள் நீதி
நிலைமை சேர்சோழ மண்டல மாமே

## மூத்தவள்

228 பரிபட் டுள்ள திலைமலர்க் கல்லை
பருங்கட் டுண்ட திவுளி யணிகள்
திரிபட் டுள்ளது தீபமும் தூபம்
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு
கரிபட் டுள்ளது சேரலன் மாலை
கடைபட் டுள்ளது தான்நவ நீதம்
மரிபட் டுள்ளது யோகியர் மனமில்
வளமை சேர்கொங்கு மண்டல மாமே

## இளையவள்

229 மறையக் கண்ட துடுவைப் பகலில்
வளையக் கண்ட தரசர் தனுவு
உரையக் கண்டது சந்தனம் என்றும்
உதிரக் கண்டது தேவர்பூ மாரி
குறையக் கண்டது தேய்பிறை யெங்கும்
குலையக் கண்டது தேனிடுங் கூடு
புரையக் கண்டது வாசி மெலிவு
புகழ்பெறும் சோழ மண்டலநாடே!

### மூத்தவள்

230 அழுகக் கண்டது பன்னக வல்லி
அமரைக் கண்டது ஆண்டலைக் கூட்டம்
முழுகக் கண்டதெல் லோர்பவந் தோயம்
முறையைக் கண்டதென் னுளுந்தே வாரம்
உழுகக் கண்டது மாலாயு தங்கள்
உறையக் கண்டது வேதமிழ்ச் சாரம்
தொழுகக் கண்டதிருகையும் மேரை
துதிக்குப் சேரலன் மண்டல நாடே!

### இளையவள்

231 நாடெல் லாம்அன்னச் சத்திரம் மாடம்
நகரெல் லாம்சொர்ண சித்திர கூடம்
ஊரெல் லாம்மட மாதர்கள் ஆடல்
உசித மாம்கவி வாணர்கள் பாடல்
காடெல் லாம்பூ நந்தனம் சோலை
கரைகள் தோறும்ப்ருந் தாவனம் சாலை
தேடெல் லாம்அறம் ஞானமும் ஈகை
செழித்த சீரங்க நாடெங்கள் நாடே!

### மூத்தவள்

232 வீடு தோறும் அறங்கள் தழைக்கும்
மிகுந்த பாவங்கள் அஞ்சி யிளைக்கும்
சூடு வேள்வியில் யாவும் பிழைக்கும்
தூமம் ஓடி மழையை அழைக்கும்
நாடு தோறும் விருந்தை யளிக்கும்
நகரந் தோறும்செல் வங்கள் கிளைக்கும்
ஆடு சேவடி யாளர் செழிக்கும்
அழகு பூந்துறை நாடெங்கள் நாடே!

## இளையவள்

233 அண்டர் தானவர் நூலேணி போலும்
அனந்த கோபுரம் உண்டதின் மேலும்
கொண்டல் வந்துற வாடுங் காவேரி
கொள்ளி டங்களி ரண்டதின் கூறில்
மண்டு கம்மழை கண்டதுங் கேவும்
மருவு பாணவர் ஆண்டலை கூவும்
மண்டல லம்புக ழும்சோழ மண்டல
மான சீரங்க நாடெங்கள் நாடே!

## மூத்தவள்

234 மஞ்சுலாவிய கோபுரம் மேடையும்
வாவி கூவந் தடாகம்நீ ரோடையும்
பஞ்ச வர்ணச்சி கரமும் மாடமும்
பகரும் மண்டபம் சித்திர கூடமும்
கஞ்ச மாமலர் போலும்இதழும்
கனகமான கலசம் மதிலும்
செஞ்சொல் வாணர் புகழும் நகரும்
சிறந்த பூந்துறை நாடெங்கள் நாடே!

## இளையவள்

235 செங்கண் மாலருள் எங்கு மிருக்கும்
திகிரி கண்டு பகைத்தை யறுக்கும்
சங்க நாதம் மிடறை நெருக்கும்
சமய பேதம் இல்லாம லிருக்கும்
பங்க யாசனி யின்பம் செருக்கும்
பரவு நீதி நமனை வெறுக்கும்
ரங்க ரங்கவை போகசா ரங்கசீ
ரங்க வைகுந்த நாடெங்கள் நாடே!

## முத்தவள்

236 உழுவை யுங்கரி ஐயருக்கு காடை
உதவும் மான்கரம் சேர்ம்; மயில் பேடைத்
தழுவு ருமல் குகன்றனைச் சாரும்
சர்ப்ப முஞ்செஞ் சடையினிற் சேரும்
அழகு சேவல் கொடியென நிற்கும்
அனங்கள் அம்மை நடைதனை கற்கும்
வளமை வேண மகத்துவம் நீதி
வளரும் பூந்துறை நாடெங்கள் நாடே!

### கலிப்பா

237 சேடன்முடி வெற்பாம் திருச்செங்கோட் டையருட
நாடது;சீ ரங்கவள நாட்டுப் பெருமையெலாம்
பாடலிசைப் பள்ளியர்கள் பண்பிசைக்கப் பண்ணையர்செங்
கோடர்வளர் சோலைக் குயில்மொழியைக் கூறுமென்றார்

## குயில் கூவக் கேட்டல்

### கலிப்பா

238 தேவா யிரம்விழியன் செயசெ யெனவழுத்தல்
மேவா யிரம்பேர் விளங்கும் திருநாட்டில்
பூவா யரும்புமுடல் பூங்குயிலார் பூங்குயிலைக்
கூவாய் நீயென்று குயில்மொழியைக் கூறினரே

### சிந்து

239 கார்மேவு திருநாக கிரியுமதில் வளர்தேவர்
கருணையது பெருகவே கூவாய்நீ குயிலே!
சீர்மேவும் அர்த்தநா ரீசர்முரு கேசருட
திருவனுக் கிரகம்விளங்க கூவாய்நீ குயிலே
ஆர்மேவு செஞ்சரணர் ஆதிகேசவர் ' பூமி '
அரிவை'திரு' அருள்தழையக் கூவாய்நீ குயிலே
தார்மேவு திருச்செங்குன் றூர்மேவு தேவதைகள்
சன்னிதிகள் விளங்கவே கூவாய்நீ குயிலே!

240 உம்பர்முனி வரர்பரவு சீரங்கநாதர்திரு
உபயமங்கை அருள்பெருகக் கூவாய்நீ குயிலே
அம்புயனும சரஸ்வதிதன் அருள்விளங்க நான்மறைகள்
ஆகமங்கள் கலைவிளங்கக் கூவாய்நீ குயிலே
தென்பழனி நாதர்பொதி காசலரும் நாதாக்கள்
தெய்வ நிலைதழையவே கூவாய்நீ குயிலே
அன்புமிகு பூந்துறைநன் னாட்டில்உள்ள தேவதைகள்
ஆலயங்கள் விளங்கவே கூவாய்நீ குயிலே!

241 தேவர்பணி மலையீசர்க் குகந்ததில்லை யந்தணர்கள்
திருமடங்கள் விளங்கவே கூவாய்நீ குயிலே
மேவியவர் ஆலயத்தில் ஊழியஞ்செய் பல்சனங்கள்
மேன்மேலும் வாழ்கவே கூவாய்நீ குயிலே
பூவுலகில் அரனடிமை யானசீர் கருணரும்வை
போகமென வாழ்கவே கூவாய்நீ குயிலே
நாவலன்இந் நாடகஞ்சொல் பொன்னுச்செல் லையனவர்
நற்றுணை நஞ் சையன் வாழ்கக் கூவாய்நீ குயிலே!

242 மாதமும் மன்மழபொழிய மனுநெறிகள் அறநெறிகள்
மாதர்கற் பதுவிளங்கக் கூவாய்நீ குயிலே
பூதலங்கள் செழிக்கமனு தழைக்களழு தோற்றவுயிர்
பூமிதனி லேவிளங்கக் கூவாய்நீ குயிலே
மாதவர்கள் கவிராசர் புவிராசர் தாம்விளங்க
வைபோக மேவிளையக் கூவாய்நீ குயிலே
நீதமிகு வேலையன்சொல் பொன்னுச்செல் லையகவிஞன்
நிலைமைபெருந் தமிழ்விளங்கக் கூவாய்நீ குயிலே!

## பண்ணைத் தலைவன் சொல்வது

### கலிப்பா

243 கட்டெவிமே ரையர்பண் ணைக் காரரிந்தப் பள்ளியர்சொல்
உச்சிதங்கள் தாங்கேட் டுளமகிழ்ந்து தானுரைப்பபார்
"இச்செகத்தி லேமழைகள் இல்லையெது காரணமோ
மெச்சுமுங்கள் தெய்வமதை வேண்டிவரச் செய்யு"மென்றார்.

244 வேண்டிவரச் செய்துபயிர் வெள்ளாண்மை களுமிட்டு
ஆண்டவருக்குக் கேற்கநடந் தல்லவரும் வாழ்ந்திருங்கோ!
மீண்டழைப்போம் வாருமென்று வேந்தர்விடை யேகொடுக்கப்
பாண்டிதஞ்சேர் பள்ளரவர் பாடியில்வந் துற்றனரே.

## தெய்வம் பராவல்

### சிந்து

245 வந்துமே திருக் கூட்டமதாகவும்
மள்ளரும் பள்ளி மார்களும் கூடியே
சிந்தை தானும் மகிழ்ந்நு அவரவர்
தெய்வங்கள் தமைப் போற்றியே கும்பிட்டு
மந்திர கிரி நாகப் பொருப்படி
வாரமே அலங்காரமும் செய்திவர்
முந்த வேணகனியும் படைத்ததி
முக்கியமாய்த் தூப தீபங் கொடுத்து,

246 "மலையின் மீதிலி ருக்கும் பராபர
வஸ்து வேவந் திரங்கிடு" மென்று
"நிலைசெய் மாரியில் லாமல் சனங்கள்
நிலையில் லாமல் தவிக்குது யெங்கும்
பலவெள் ளாமைப் பயிரிடுங் காலம்
பருவம் போகுது பட்சம தாய்வந்
துலவி யேமழை பெய்யக் கருணை
உதவு வீ"ரென்று போற்றி யிருந்தார்.

### கலிப்பா

247 பள்ளர்களும் பள்ளியரும் பாடிக் குலவையிட்டு
வள்ளல்தனைப் போற்றிநிற்க வாசுகிமேர் வஸ்துவருள்
என்'அளவை' ஏவிடவும் இங்கிருந்த மூத்தபள்ளி
உள்ளமகிழ் சன்னதங்கொண் டுண்மைமொழி கூறினளே

## மூத்தவள் சன்னதங் கொண்டு கூறல்

### சிந்து

248 நாதர் அருள் தழைய – பூந்துறை
நாடு தழைத் தோங்க
நீதம தாய்உலகந் – தனில்மனு
நீதி செழித் தோங்க
பூதலமே விளங்க – வெள்ளாமைவை
போகம தாய்விளைய
மாதவஞ் சேர்பனகா சலதேவனை
வாழ்த்தியே கும்பிடுங்கோ

249 நாகலிங் கேசுரர்க்கும் – குமரர்க்கும்
நாரிவி நாயர்க்கும்
சேகர மதாகவே – ருத்ராபிஷேகம்
செய்கிறோம் என்றையனே
ஆகம கிழ்வுடனே – கனகச
பாபதியார் தமக்கும்
நாக ரீகமாய்ப் – பிரதேசக்கட்டளை
நடத்துறோம் என்றையனே

250 முருகா வுடையார்க் கும் – அஷ்டலிங்க
மூர்த்தி ஐம்பூதருக் கும்
திரிகால சந்தியும் – பூசைநைவேத்தியம்
செய்கிறோம் என்றையனே
கெருடா சலத்துவசர் – எனும்ஆதி
கேசவனர் தமக்கும்
திருவிருபேர்க் கும் – ஏகாதசிக்கட்டளை
செய்கிறோம் என்றையனே

251 காரியென் துர்க்கையர்க்கும் – சுற்றுப்பிர
காரதெய் வங்களுக்கும்
வீரிவீரே சருக்கும் – வெவ்வேறே பால்பொங்கல்
வேண்டியே கொண்டையளே
பாரில் உலாவிவரும் – துவாரக
பாலர் வைரவர்க்கும்
சூரிய தேவருக்கும் – வாடாமாலை
சூட்டுறேம் என்றையளே

252 முன்புலவோர் மூவர்; – அறுபத்து
மூவர்; சத்தேழுகன்னி
இன்ப மகிழ்இளநீர் – நைவேத்தியம்
ஏற்றுறேம் என்றையளே
அன்பொடு நாகருக்கும் – செஞ்சேவல்
அறுத்துமே பொங்கலிட்டு
பண்பொடு நந்திக்கும் – வெல்லங்கடலை
படைக்கிறேம் என்றையளே

253 மேரின் அடிவாரம் – தனிலென்றும்
மேவும் அறுமுகர்க்கும்
சீருடனே கந்தர் – சஷ்டியலங்கிர்தம்
செய்கிறேம் என்றையளே
ஊரினில் நாட்டினிலும் – கிராமங்கள்
உள்ள தெய்வங்களுக்கும்
ஏரிகரை முனியப்ப – னுக்கும்பொங்கல்
இடுகிறேம் என்றையளே

254 வளர்கை லாசருக்கும் – பரிமள
வல்லியென் னுட்சியர்க்கும்
நளினம தாகவும் – கோடைத்திருநாள்
நடத்துறேம் என்றையளே
பழனியம் பதியார்க்கும் – வருஷமன்
பத்தொருவர்க் கன்னமும்
கழனி வயல்க்கொருகட் – டெடுத்துண்டிகை
கட்டுறேம் என்றையளே

255 இலகழ காயியர்க்கும் - நல்லபுள்ளி
ஈஸ்வரி யாள்தனக்கும்
வலுவுள்ள பூதமிரண் - டதுசெய்து
வைக்கிறோம் என்றையனே
மலைகாவ லையருக்கும் - துட்டுத்தடி
வல்லயம் செய்துவைத்து
நலமுட னேநீங்கள் - கொழுக்கட்டைப்பூசை
நடத்துறோம் என்றையனே

256 அப்பணி சேவடியார் - விளங்கும்
அரிரங்க நாதருக்கும்
செப்பின பூச்சக்கரக் - குடைகொண்டு
செலுத்தவுந் தானில்லையே
இப்படி வேண்டினது - அனேகம்
இருக்க இந்நாட்டினிலே
எப்படித்தான் மழைபெய்யும் - இவ்விடத்தில்
எல்லவரும்வணங்கி

257 அரவகி ரீசர்பதம் - தொழுது
அடிதெண்ட மாய்விழுந்து
பரவுமின் றுட்டிலுள்ள - தெய்வங்களைப்
பணிந்தின்னம் வேண்டிக்கொண்டால்
வரமது தந்திடுவார் - இப்போது
மழையும் பொழிந்துவிடும்
உரக கிரியீசரை - நம்பினபேர்க்கு
ஒருநாளும் தாழ்வில்லையே

## கலிப்பா

258 சன்னதங்கள் ஆடியிவள்
தானுரைத்த சொல்களெல்லாம்
உன்னதங்கள் மெய்யென்
றுளமகிழ்ந்து பள்ளரெல்லாம்
பின்னதுபி ரார்த்தனைகள்
பிரபலமாய்ச் செய்திடுவோம்
மின்னிமழை பெய்யமனு
வேணும்வரம் தாருமென்றார்.

259 தாருமென் றிப்பவும்நான்
தானுரைத்த சொல்படியே
சீருடனே செய்தால்
செணத்தில்மழை யேபொழியும்
பாருமெனப் பள்ளரெல்லாம்
பண்பொடுநாம் செய்யும்விதம்
கூறுமெனச் செங்கோட்டுக்
கோதையும்பின் கூறினளே

## சிந்து

260 பங்கய மாதுலவும் செங்குன் றரனார் – பண்ணைப்
பள்ளரெல் லோருங்கூடி உள்ள மகிழ்ந்தே
திங்கள்மும் மாரியுல கெங்கும்பொழிய – நல்ல
தெய்வத்தை வேண்டியுமே மெய்வருந் துங்கோ
அங்கங்கு மவர்கள் பண்ணை எங்கும் வெள்ளாமை – ஏற
ஆண்டவ ரைத்தொழுது வேண்டிக்கொள்ளுங் கோ
ஐங்கர தேவர்நாக லிங்கர் தமக் கு – நிறை
அபிஷேகம் செய்யும் விவ சாயம்விளை யும்

261 சரவண தேவரையும் பிரவணைசெய்து – அவர்
தன்னுபயம் நூறுபேருக் கன்ன மிடுங் கோ
திருவணை யாதிகேசர் அரண்மனை தனில் – நந்தா
தீபம்நடத்தி வந்தால் பாவம்பழி போம்
உரகமலையில் எங்கும்பரவு தேவர்க்குப் – பூசை
உள்ளமட்டும் செய்துவேண்டிக் கொள்ளுங்கோ எல்லாம்
சுரர்பர வும்நகரில் மருவுதேவர்க்கு – பூசை
தோற்றின மட்டும்செய்து போற்றிக் கொள்ளுங் கோ

வேறு

262 பூந்துறை மேவிவளர் புஷ்பவன நாதரையும்
போற்றிப்பூ மாலைதினம் சாற்றி வையுங்கோ
மாந்தர் புகழும்காள மங்கைகு லவிளக்காயி
வழக்கிட்டுக் கொள்ளாமலே விளக்குப் பாருங் கோ

263 இன்னங் கரைதுறையில் இருக்குந்தெய்வங் களைத்தொழு
தேற்றி யிறைஞ்சிநன்றாய்ப் போற்றிக்கொள்ளுங் கோ
பின்னுங்கீழ் கரையில் உள்ள நாட்டுத் தெய்வங்களுக்கும்
பெருமை வரஅனைவர் ஒருமனதாய்

264 பிரபல மாகப்பண்ணை வளர்மோரூர்த் தெய்வங்கட்குப்
பூசை நைத்தியம்வி சேஷமாய்ச் செய்யும்
அரனுட பண்ணைவளர் மோடமங்கலம்புகழ்
ஆனங்கூர் படை வீடும் ஆலத்தூரும்

265 தகடப்பாடியும் தேவனூங் குறிச்சிமணலி
தானது கூத்தம்பூண்டி சித்தளந்தூரும்
மகிமை பரவுந்திரு மங்கைவட் டூருங்கரு
மாபுரம் மாவிரட்டிமண்டபத்தூ ரும்

266 காட்டுச்சி ரைநல்லூர்உஞ் சனைலத்தி வாடியுடன்
களியனூர்பட்டு லூர்ஏமப் பள்ளியகரம்
நாட்டமெனவும் பண்ணைவளரும் மேழியப்பள்ளி
நற்சமய சங்கிலி நகரதனிலே

267 வளரும்ஈசுர ரம்மன்பெருமாள் பிடாரியர்க்கும்
வண்மைப் பிரார்த்தனை செய் துண்மை சொல்லுங்கோ
முளசிமுக் கண்ணீசுரர்க் கபிஷேக மதுசெய்து
மொழியுங் குறைகளெல் லாம்மழை பொழியுமே

268 வாகுடனே யிறையமங்கையம் மனுக்கொரு
வாகனஞ்செய் தவள்முன்னாக வையுங்கோ
ஏகமனதாக இருப்புலியமழ கேசருக்கு
ஏகாதசிக் கட்டளைவாகாய்ச் செய்யுங்கோ

269 வளமைசெறி குமரமங்கை பாண்டீசருக்கு
மது அபிஷேகஞ் செய்துதுதி செய்யுங்கோ
உளமகிழ்ந்தே பிரிதி யணிமூர்வளர் மாதாவுக்
குடுத்தச்செங் காவிப்பட் டொன்றெடுத்து வையுங்கோ

270 தோக்க வாடியில்வளர் காத்தலை யம்மனுக்குச்
சொன்ன பிரகாரஞ்செய்து முன்னே வையுங் கோ
கோக்கலைக் காளித்தாய்க் கேற்கையாய்ப் பொங்களங்கே
கொண்டுசென்று வைத்தவரை கண்டுதொழுங் கோ

271 காட்டுமல் லாண்டைமுனியப் பன்கறுப் பண்ணர்நிலை
கண்டுகொண்டு பூசைசெய்து தெண்டனிடுங் கோ
நாட்டுத் தெய்வமும்நடு வீட்டுத்தெய் வங்களையும்
நன்ருய்த்தொழுங் கோவாழ்வு குன்ருமலே

272 மனமகிழ்ந்தே காருமென் றனுதினம் போற்றியேதெய்
வங்களெல் லோருமெங் பங்கில்நில்லுங் கோ
எனஅவரவர்க் குபசாரமுஞ்செய் தே-பூசை
ஏத்தியுண் டானமட்டும் தோத்திரஞ் செய்தால்

273 தேடும் பொருள்எதிரே தோணும் வகையதுபோல்
தெய்வங்க ளெல்லாமிரங்கிச் செய்திடும் நன்மை
நாடுசெழிக்கும் எங்கும்நல்ல மழையே பொழியும்
நம்பரருள் கொண்டு வாழ்வீர் கம்பளத்தாரே!

## குடும்பன் கூற்று

### கலிப்பா

274 குன்னகத்தி மூத்தபள்ளி
கூறினதெல் லாமனதுக்
கென்னமோ தோற்றவில்லை
எப்படிநான் செய்வதுவும்
சன்னதமென் மேலிளையாள்
தன்னிடம்வந் தாலிதெல்லாம்
சொன்னபடி செய்வமென்று
சொற்குடும்பன் கூறினனே.

## மூத்தவள் தெய்வங்களை வேண்டுதல்

### கலிப்பா

275 தன்கணவன் சொன்னமொழி
தான்கேட்டு மூத்த பள்ளி
என் கணவர்க் கின்ன மருந்
தீடுதெளி யாவிதமோ ?
பொன்கருணைத் தெய்வமிதைப்
பொய் யெனவுந் தூறினனே
நன்கருணை யாகவுமுன்
ஞகவர வேண்டினனே

### சிந்து

276 செந்திருவு லாவுந்திரு நாக மலையார் - அருள்
சேருந்திரு நாட்டில் உள்ள தெய்வங்க ளெல்லாம்
வந்திறங் குங் கோ! இவன்மேல் வந்திறங் குங் கோ!! -நானும்
வாழ்த்தியே போற்றிசெய்தேன் வந்திறங் குங் கோ
செங்குன்றர ஞரெங்குல தெய்வ மாகில் - அவர்
திருவடி யார்க்கடிமை யானு மாகில்
பங்கமில் லாதபது மினியாகில் - எந்தன்
பங்கினிலே தெய்வங்கள் நிலையாகில்.

277 தானிருப்ப திதெல்லா மெய்யு மாகில் - பள்ளன்
தலைவிரித் தாடவந்து குதி கொள் ளுங்கோ
நானுச் சரிக்கும் தெய் வங்களை யெல்லாம் - சுற்றி
நாலு திசையும் நின்று தோத்திர செய்தேன் !

### மூடுகு

278 வையா புரித் துரையே வந்திறங் கிக்கோ - எங்கள்
வடமலை யாண்டவனே வந்திறங் கிக்கோ
பொய்யாத வாசகரே வந்திறங் கிக்கோ - எங்கள்
பூங்கா வனத்தாயி வந்திறங் கிக்கோ !

279 நல்ல புள்ளி நாயகியே வந்திறங் கிக்கோ - திரு
நாகமலைக் கன்னியர்கள் வந்திறங் கிக்கோ
வல்லிடும்ப சாமியே நீ வந்திறங் கிக்கோ! பணி
மலை காவ லையரே நீ வந்திறங் கிக்கோ !

280 கால பைரவனே வந்திறங் கிக்கோ - ஏரி
கரை முனி யப்பனே நீ வந்திறங் கிக்கோ
சோலைக் கருப்பணனே வந்திறங் கிக்கோ - எங்கும்
சுற்றியுள்ள தெய்வங்களே வந்திறங் கிக்கோ !

### தணிவு

281 இத்தனை தெய் வங்களெல்லாம் சித்தமிரங்கி - நீங்கள்
என்பங்கில் நின்றது யெல் லோரும் அறிய
சத்தியுள்ள தெய்வங்களும் நீங்களு மானால் – பள்ளன்
தலைமீதி லே யிறங்கித் தானுமாடுங்கோ !

### கலிப்பா

282 நாகமலை யார்க்குகந்த நல்லடிமை மூத்தபள்ளி
தாகமுடன் தெய்வந் தனைவேண்டப் பள்ளன்மிசை
வேகமுடன் வந்திறங்கி வீழ்த்திப் புரட்டியெடுத்
தாகமுட னுடியுமூத் தாளுடனே கூறினனே!

## குடும்பன் மூத்தவளை வேண்டுதல்

### கீர்த்தனை

### பல்லவி

283 இந்தக்கனம்பொறுக்க என்னால்முடியாது
இறக்கடி யோபாரம் இறக்கடியோ!

### அநுபல்லவி

விந்தை செறியுந்திரு நாக மலையில்வளர்
வித்தக னுர்க்குகந்த
மெல்லி! யென் பிராணவல்லி! (இந்தக்)

சரணங்கள்

முறுக்கு வளையனந்தன் முடியுந் தங்கக்கொடியும்
மூத்து வர்ணச்சேலையும்
மோகன மாலையும்பொன்

அறுப்புக் கடகமுஞ்சிந் தாக்கும் நாகபடமும்
ஆணி முத்துவடமும்
அழகு செப்புக்குடமும்

கறக்கப் பசுவிரண்டும் கச்சுக்கட்டலுந் திண்டும்
காங்கு மெத்தையுங் கைகால்
தாங்குஞ் சித்திர வில்லை

சிறக்க வரிசையின்னந் தாரேன்தினமும் வாரேன்
சித்தம் திரும்பியென்மேல்
சற்றுங் கிறங்கடியோ! (இந்தத்)

கட்டழகி சிந்தூரப் பொட்டழகி யென்னுசைக்
கண்ணுட்டி யேவின்னுனைக்
காரியெ னுஞ்சீமாட்டி

கிட்ட வாடியோர்முத்தந் தாடிவிளையாடி யென்னைக்
கெஞ்சப் பண்ணுதேஉந்தன்
தஞ்சம் நெஞ்சாரப்பெண்ணே!

விட்டுவிடாய் விகடம் இளையவளை வெறுத்தேன்
வீண்மொழி யல்ல; நீசெய்
வேலையெல் லாம்பொறுத்தேன்

மட்டுப் படவிபூதி போடுந்தெய்வத்தை வேண்டி
வாதுசெய் யாமல்பாரம்
வாங்க க்ருபைசெய்யேண்டி!
இந்தக்கனம் பொறுக்க மாட்டேன்!

## அறுசீர் விருத்தம்

284 முன்னிலே பள்ளன் கெஞ்ச மூத்தவள் இரங்கி யப்போ
தென்னிலை யறியா மல்தான் இப்படி யிகழ்தஞ் செய்தாய்
அன்னிலை தெரிந்த தோவென் றவனையஞ் சலியே செய்து
பின்னும்வி பூதி கையில் பிடித்தவள் தியானஞ் செய்தாள்

## விபூதி தியானம்

### சிந்து

285 சம்பு சிவ சம்பு சிவ-சிவ
சங்க ரசெங் காதரனே!
அம்பிகைபா கம்பிரியானே - தற்ப
ரானந்தனே எனதாண்டவனே
நம்புமடியார்க் கெளிய – லோக
நாயகனே அர்த்த நாரீசுரா
இன்பமகிழ்ந் துன்னடியார் - செய்த
இசகு பிசகு பொறுத் தேயாதரி!

286 மங்கையுமை பாலகனே - சுப்பிர
மண்ணிய னேயிவ்வேளை வந்துதவும்
சங்குசக்ர பாணியனே – எங்கள்
சத்தகன்னியே நல்லஉத்தமியே
உங்களடி யார்க்குகந்தே – வந்த
உத்தமர் உத்தமியள் சித்தமகிழ்ந்
தெங்கள் பிழையைச் சகித்து – மன
தேற்கையு டனிருந்து கார்க்க வேணும்

287 அறியாமல் பள்ளன்செய்த – குற்றம்
அபசா ரம்பெறத் தஞ்சலஞ் செய்யும்
பரிவாய் அடியவர்மேல் – அருள்
பார்த்தெங்க ளையும்காப் பாற்றவேணும்
திரிலோக நாயகனே – என்று
செங்கை விபூதியவன் மேற்போடவே
விரிவான தெய்வங்களும் - இவனை
விட்டகன் றேமலை யேறியதே

288 மலையேறிப் போனபின்பு - பள்ளன்
மனமகிழ்ந் ததிக சந்தோஷமாய்
'நிலையான சொல்லுடைய – தாகிய
நேரிழையே அழகுக் காரிகையே
புலையான துங்கடிந்தே – மெத்தப்
புகழ்தர வல்லநல்ல மகராசி
தலைநாளில் என்னுடைய – மனை
தான்விளங் கவும்வந்த மாமயிலே'

## அறுசீர் விருத்தம்

289 என்றுதான் புகழ்ந்தான் பள்ளன்; இன்பமாய்ப் பலருங் கூடிச்
சென்றவர் மனைக்கு வந்து செல்லுமுஸ் தேதி வாங்கி
நன்றென அனைவோர் கூடி நாட்டினில் உள்ள தெய்வம்
இன்றுநாம் செய்வோமென்று இசைந்துநே முகமும் செய்தார்

## சிந்து

290 நேமுகஞ் செய்து நாக மலையி லென்றும்
நித்யபூரண வஸ்துவாய் வளர்
சித்தனுயகர் கர்த்தனுர்

பூமலர்ப் பதம் போற்றித் தொழுதிறைஞ்சி
பொங்க மாகிய கங்கை சூடிய
ஐங்கரன் பணி லிங்கர்மால்

மாமயில்பரி யேறுங் கடவுளர்க்கும்
வாகுபெற மன தாக மகிழபி
ஷேகவித மத னேகமும்

சேமமாயவர் ஆலயந் தனில்வளர்
தேவருக்கரி தானபூசைய
தேநடத்தி விநோதமாய்

291 பாதமே பணிந் தன்பொடு போற்றியும்
பன்னககிரி தன்னிலுற்றவர்
சன்னதிக் கெதிர் முன்னமே

வேதபுராணிகர் ஆனமடாதிபர்
வேள்வி யதுசெய்து வேத மொழியவும்
வேண சபதபமுடனவர்
நீதமாக வில்வார்ச்சனை புரியவும்
நிதிகளுதவியும் அதிக வரிசைகள்
நிலமையருளியும் நலமதாய்
மாதமூன்று மழைகள் பொழிநதிது
மா நிலங்களும் வாழ்கநின்க்ருபை
வாழ்கவென்று வணங்கியே

292 அரவமேரடி வாரமருவுதே
வதைகள் மகிழ்வுறு விதமது செய்து
துதிகள் பெற நகரதினி லே
மிரவனை செய்து சம்பிரமையுடன்
மின்னுமாமணி சொர்ன்ன ஆடைகள்
அன்னதானமம துஞ் செய்தே
பரவு நாட்டினில் உள்ள தெய்வங் களும்
பட்சமாய் மன திச்சையேதர
நிட்சேபங்களெ டுத்துமே
விரவியே சென்று அங்கங்கே பூசையும்
மேலதாகந டத்தியே அதி
வேகமாய் மழை பொழியவே

293 இஷ்ட மாகவும் வேண்டித் துதிகள் செய்து
இருள கருப்பணை றொடு செகப்பன்
இவர்கள் அற்புத மாகவும்
துஷ்ட தேவர்க்கும் பொங்கலும் பூசையும்
சுள்ளுடன் கறி கள்ளும் வைத்தவர்
தூப தீபம் நடத்தி யே
சிஷ்டர் தாம்பரி பாலன மாகவும்
சிந்தை தானு மகிழ்ந்து வந்தனை
செய்துவந்திவர் மனையிலே

அஷ்ட பாக்கியஞ் சேர்பன காசலர்
அம்புயப்பத மேபணிந்திவர்
இன்ப முற்று யிருந்தனர்

## அறுசீர் விருத்தம்

294 பாட்டியல் புகழுந் தெய்வம்
பருப்பத நாக வெற்பில்
ஆட்டிமைத் தெய்வம் உள்ளூர்
அணிமலை சூழுந் தெய்வம்
நாட்டினில் தெய்வ மெல்லாம்
நலமுடன் தொழுதி றைஞ்சி
வீட்டினில் தெய்வஞ் செய்ய
வேண்டிநே முகமுஞ் செய்தார்.

## கன்னிமார் பூசை

### சிந்து

295 பொங்க மாகவுங் கோவில் வீடது
பூசி யேஅவர் மெழுகி,
குங்கு மங்களி ஞலே அவர்
கோலங்களும் எழுதி,
மங்க லஞ்செயும் போலவே மண
வறைக ளும்உண் டாக்கி,
இங்கி தங்கள தெனவே ரதம்
இணை சோடணை செய்தே.

296 பட்டுமேல்கட்டு கட்டியே தென்னம்
பாளையும் பழ வகையும்,
திட்டமாய் மலர்ச் சர மதானது
சேரவே தொங்கல் அணிந்து,
சட்ட மாகிய வாழைக் கம்பமும்
தலைவாசலில் நாட்டி,
நட்டணையெனக் கன்னிமார் கொலு
நன்றாய் அலங்கரித்து.

297 பச்சிளங் கொங்கை மங்கைமார் வந்து
பரிவாக நீராடி,
கொச்சி மஞ்சளும் பூசி யேஇவர்
குளித்தே குழல் முடித்து
நிச்சயங்களி லேசெய்திடும்
நிறை பூஷணம் அணிந்து
உச்சிதங் களிதெனவே துகில்
உடுத்தே மனைபுகுந்து.

298 நிலவாம் பிறை நுதல்மீதில் வெண்
ணீறுதானிவர் அணிந்து,
நலமாம் புருவமையமேல் பொட்டும்
நறுமா மலர்சூடி,
சலமாம் விழி நிமைக்கீட்புறந்
தனிலஞ்சனம் ஊட்டி,
பலவாடைகள் திமிர்ந்தேபரி
மளம், மாதர்கள் கூடி,

299 சத்திதேவியை நாட்டியே கும்ப
தாபிதங்களும் செய்தே,
சித்ரமானபொன் பணியாடைகள்
சேர அலங்கரித்து,
வைத்துநீர்பரி மளம்பூசியும்
வாலகன்னியர் தமக்கு
முத்தினல்க்கிரீடம் புஷ்பமாலையும்
முடிமீதினி லணிந்து.

300 சரியாகவும் பால்பொங்கலும்
சர்க்கரைப் பொங்கல் வைத்துச்
பரிவாகவும் படைத்தேழ் வகைப்
பலகாரமும் படைத்தே
அரிதாம்சல புஷ்பமும் சர
வணையும் சடையணையும்
கரிகய்களும் வளர்ஞானியின்
கறியாண்டமும் படைத்து.

301 இளநீர்பழந் தேங்காய்கரும்
பினிதாகிய கனியும்
வளமாகிய வஸ்தும் சுத்தி
வகையாகவும் படைத்து
அழகான வெள் ளிலைநீள்பிள
வதுவேணது படைத்து
இளமாமயில் சிவகாமிப்பள்
ளியுமே எதிர் நின்று

302 தூபதீபங்கள் பரிமாறியும்
தோத்ரங்கள் உரைத்தும்
மாபயன்களி தெனவே வழி
யுடன்பூசைகள் நடத்தி
சோபனஞ் சோட சுபசாரமும்
சோதியாட் குபசரித்து
சாபம்யாவும் நிவர்த்தியே செய்து
தானற் பிதம் செய்தார்.

## அறுசீர் விருத்தம்

303 அற்பிதம் செய்துதேவி
ஆனந்த மாக வாழ்த்தி
தற்புரா னந்த சேடம்
தான்பிர சாதங் கொண்டு
அப்புறம் அனைவர்க் கீந்து
ஆனந்த லகரி கொண்டு
கற்பினை அஷ்ட மாதர்
கரகம தெடுக்கின் றுரே !

## சிந்து

304 கரகமெடுங்கோ நல்ல கரகமெடுங்கோ – வால
கன்னியர் தமக்குகந்த கரகமெடுங் கோ
உரககிரி மீதினி லமர்ந்ததேவி – வளர்
உத்தமி, கும் பேஸ்வரிபொற் கரகமெடுங் கோ!

305 ஏற்றி நில்லுங்கோ தொழு தேற்றிநில்லுங்கோ – உல
கீன்ற மாதாவைப்பணிந் தேற்றி நில்லுங் கோ
போற்றி சேய்யுங்கோ யாரும் போற்றி செய்யுங்கோ-வால
பூரண, கும் பேஸ்வரியைப் போற்றி செய்யுங்கோ.

306 வறுமை தவிர்த்தே வந்த சிறுமை தொலைத்தே- நன்றாய்
வாழ்ந்திடுக வேணசெல்வம் ஈந்திடுகுவாள்
பொறுமையுடையாள் இவள் பெருமை கூறினால் - வேண
புத்திரபாக் கியஞ்செய வெற்றிதருவாள்.

307 மருள் விலக்குவாள் நம திருள்விலக்குவாள் – கேட்ட
வரங் கொடுப்பாள் நெஞ்சி லறங்கொடுப்பாள்
அருள் பெருகவே நல்ல திருவருகவே - அனைவர்
அன்புடன்கை கூப்பிநின்று கும்பிட்டிருங்கோ

### முடுகு

308 ஆகமகிழ்ந் துன்னித மாய்
நாகமலைக் கன்னியர்கள்
வேகமுடன் ஆடியும் அ
கோர மெனவே

309 மூத்தபள்ளி மீதிலருள்
பார்த்துமெள்ள ஓதிமருள்
சாத்திடுவாள் இனிநாம்
காத்திடுகுவோம்

310 நாடுகள் செழிக்குதெங்கும்
வீடுகள் தழைக்குதென்றும்
மாடுகள்பெ ருகுதாடு
கள் பலுருகுது.

311. நல்லமழை பெய்யுதெங்கும்
செல்வம் நிறைவேறுதென்றும்
இல்லம் அறம் மீறுதெல்
லாம் விளங்குவீர் !

312. உள்ளாண்மை தழையுது
கள்ளான்மை கலையுது
வெள்ளாண்மை விளையுது
பள்ளோர்களே !

313 பொன்னுட்டில் உள்ளபொருள்
தன்னுட்டில் வள்ளலருள்
இன்னுட்டில் ஆகுதுநம்
மன்னுட்டிதே !

314 வேதாகமத் திறைவர்
கோதாபுரிக்கிறைவ
ரேதான் அருள் தருவர்
ஆதாரமே !

315 அரவகிரி நண்பரையும்
இரவுபகல் இன்பமொடு
பரவசமாய் நம்புமவர்க்
கருள் புரிவரே !

## அறுசீர் விருத்தம்

316 சன்னதம் வந்து தேவி
தான்மனுக் கொடுத்துப் போக
உனத மெனவே பள்ளர்
உளமகிழ்ந் திருந்தா ரப்போ
கன்னியர் கலச நீரைக்
கங்கையில் சொரிந்து, மாதர்
பின்னுமுஸ் தேதி யெல்லாம்
பேழையிட் டிருந்தா ரன்றே!

## கலிப்பா

### மழைக்குறி

317 வேதமுடி வாகிநின்ற
வேணிச்செங்கோட் டையர்திரு
பாதமற வாத பண்ணைப்
பட்சேரிப் பள்ளரெல்லாம்
போதரவாய்த் தெய்வநிலை
போற்றியபின் விண்ணுலகில்
மாதவத்தி னாலே
மழைக்குறியுண் டாகியதே!

## குடும்பன் தன் தோழர்களை எச்சரிகை பண்ணல்

### சிந்து

318 கருமுகில் படிந்துகனிந் துருகிவழிந்தே - வாடைக்
காற்றில்மழைக் காலிறங்கி ஆற்றுவெள்ளமும்
இருகரையும் பெருகிவரக் குறிகள்காணுதே - மேகம்
இறங்கி யங்கங்கேநின்றங் குரங்கொள்ளுதே
பருவதங்கள் எங்கும்நீல இருள்முயங்குது - மலைப்
பருந்தும் பறந்திறங்கி யிருந்தாடுது
நிருதி யீசானியத்தில் சிறுமின்னலும் - கீழ்பால்
நீளமின்னல் சூழமலை யாளமின்னது

319 குஞ்சுதின்னிக் காற்றஞ்சுநா ளில்லை, நேற்றின்றும் - சிறு
கொம்புசுற்றிக் காற்றடித்துத் தும்பிபாடுது
கஞ்சமலை போதமலை மஞ்செடுக்குது - நல்ல
கன்னிப்புற்றில் மண்கரையான் பின்னிவைக்குது
பஞ்சுபோல் மேகம்பரந்து பிஞ்சுகூடுது - குடகு
பாலமலை கொடியக்கால் மூலைமின்னது
செஞ்சொறித் தவளைகூப்பிட் டஞ்சலென்குது-வயல்
சேற்றில்நண்டு ஊற்றுக்குழி பேர்த்தடைக்குது

320 இத்தனை குறிகண்டமேல் சற்றுநேரத்தில் - மழை
ஏகமாய் வருதுமன வேகமாகவே
கொத்துகள் மண்வெட்டிகூடை மெத்தவெடுங்கோ-பள்ளர்
கூட்டம்மோரூர் ஏரிமேலே நாட்டமிடுங் கோ
பத்திரமாய்க் குடுசுகட்டி சுற்றியிருங்கோ - நூறு
பந்தமும் விளக்கெண்ணையும் இந்தச்சண மே
மெத்தவே சம்பாதிச்சிங்கேவைத்து யிருங் கோ -கட்டை
வெட்டியே குருவிக்கோலும் தட்டிவையுங் கோ!

321 தென்னைமட்டைக் கொங்கடையும் பின்னிவையுங்கோ தெப்பம்
சீக்கிரமாய்ச் சம்பாரியும் சாக்கிரதை யாய்
மின்னலினி லேமுஸ்தேதி உன்னிதமெனா - எல்லாம்
மேட்டினிலே கொண்டுவந்து போட்டுவையுங் கோ
பின்னும் அன்பதாள்களிங்கு தன்னில்நில்லுங் கோ -கரை
பிறமாம லேகிராய்தி ரளாய்ப்போடுங் கோ
என்னமோவென் றுவிசங்கொண் டுன்னிடாம லே -பள்ளர்
இந்தச்சணமே அங்கங்கே வந்துகூடுங் கோ

322 அந்திவண்ணர் கோதையை உகந்தபெருமான் - எம
தண்ணலுட நாட்டிலுள்ள பண்ணையமெல்லாம்
சிந்தைமகிழ்ந் தென்வசமாய்ச் சந்தேகமில்லா மலும்
செப்பமாய்ப் பயிரிடென ஒப்பித்தத னால்
இந்தநாட்டில் ஏரிநீர்கள் வந்திடுமுன் னே -பத்தாள்
இப்பவே ஓடியங்கங்கே அப்பணைசொல் லும்
அந்தந்த ஏரியில்அச மந்தமாகாமல் - ஆள்கள்
அத்தனையுஞ் சேர்ந்திருக்கச் சொஸ்திசொல்லுங் கோ

323 சிற்றுறில் உள்ள அணை முற்றுங்கொல்லிபா யினில்
தென்புடனே ஆள்கள்சேர்த்து கும்பல்கும்ப லாய்
வித்தார மாயிருக்க உத்தரமா நதியில்
மேவியே வாய்க்கால்வரப்ப ளாவிவெள்ளமும்

குத்திடாமலும் கரைகள் பொத்திடாமலும் - சிறு
கொம்பணை குளங்கரைகள் சம்புமடையும்
எத்தேச காலமும்நீர் வற்றுதிருக்க - வகை
எப்படியுண் டோபணிக்கு அப்படிச்செய்யும் !

அறுசீர் விருத்தம்

324 இப்படி யுரைக்கப் பள்ளர்
ஏகமாய்க் கூடிக் கொண்டு
அப்பணைப் படிக்கங் கங்கே
ஆள்களும் அனுப்பி வைத்து
செப்பமாய் நாட்டி லெங்கும்
சேகர மாயி ருக்க
ஒப்பணை சொல்லி விட்டு
உகந்துவீற் றிருந்தா ரன்றே !

குடும்பன் காவேரியின் மறுகரைக்குச் செல்லுதல்

**கலிப்பா**

325 வீற்றிருந்தார் அப்போது வேணியர்பண் ணைக்குடும்பன்
ஆற்றுக்கால் வாய்க்கால் அதுமுகடு பாயுமென்றே
பார்த்ததனைப் பத்திரப் படுத்திவர வேண்டியேசங்
காத்திக் குரைத்துநதி கடந்தப்பால் ஏகினனே

326 தாட்டியப்பா லேகியங்கே தானிருக்கும் பள்ளரையும்
கூட்டிவந்து வாய்க்கால் குறுவரைப்பு மேல்கரையும்
நீட்டிமடை யைத்திருத்தி நின்றுட்கு வேலையிட்டு
மேட்டிமையாய்ப் பள்ளன்விசா ரித்திருக்கும் வேளையிலே

327 காலால் முகில்படிந்து கார்புணரித் தோயமுங் கொண் (டு)
ஆலோல மாக அடர்ந்துபெருஞ் சூலாகி
மேலாக வேபரவி மிக்கசெங்குன் றார்க்கு விண்ணோர்
நூலா லிறங்குதல்போல் நுண்மழைக்கால் ஊன்றியதே !

## மழை பொழிதல்

### சிந்து

328 பாகசாதனன் ஏவல்கொண்டொரு
மேகமானது படிந்துமே
பாய்ந்துவாரியில் சூலதாகியும்
மேய்ந்து வாரியும் ஏகியே
வேகமாகவும் பரந்து விண்டெனும்
சதேகமாகவு முறைந்துமே
விரைந்துகமலத் தயனுமாய் - நதி
நிறைந்தசடிலச் சிவனுமாய்
நாகமாமலை மீதிலே - வளர்
தியாகநாயகர் குடையைப்போல்
நளினஞ்செறிந்து லாவியே - வரை
வழிகொண் டிழிந்து மேவியே
ஏகநாயகர் அருளின்பார்வை
போகமாகிய வாறுபோல்
இந்திரவானம் பொழிந்துமே - புவி
சந்ததியாகித் தழைந்ததே

## வெள்ளப் பெருக்கு

### சிந்து

329 கூறிக்குடகைத் தேடி யே - முகில்
வாரிப்படரச் சாடி யே
குளிருகின்ற தனேகமானது
வெளிறுகின்றது வானதும்
மாறிக்குரிசில் வள்ளலாய் - வளர்
மேரில் பரிசு கொள்ளவாய்

வழிந்து நீரும் திறப்பட்டே - புனல்
விழுந்து ஆறும் புறப்பட்டே
சீறித்திரிந்து வனத்திலே - புகுந்
தேறிக் குறிஞ்சிப்புனத்திலே
திரையை மோதிப் பெருகியே - இரு
கரையைமோதித் திருகியே
வீறிட்டே விலங்காடவே - குவ
டேறிக் கானவர் ஓடவே
வேலைத்தரித்த குகனைத்துதித்துப்
பாலைநிலத்தில் எதிர்ந்ததே

## கலிப்பா

குறிஞ்சிக் கிழவனெனும் கொற்றவனைப் பெற்றவனூர்
குறிஞ்சி நிலத்துறைசெங் கோட்டிறையை நாட்டியபண்
குறிஞ்சி யென நால்வருமிங் கோதுந் தமிழ்ப்பா
குறிஞ்சி ரசத்தேன் குடிக்கத் தெவிட்டாதே! 330

## சிந்து

நுரை யைச்சிதறி விரவி யே - தட
வரை யைச் சருவிப்பரவியே
நொடியில் பாலை நிலத்தி லே - புகுந்
தடியில் சோலை மரத்தையே
தரையில் கிடத்தித் தள்ளி யே - யிரு
கரையில் ஒதுக்கிக் கள்ளியே
தானக் களிறுஞ்சடி ந் திட - கொலை
யேனக் களிறு மடிந்திட
துறையில் படிபுள் கூட்டையும் - புலி
மறைமுட் செறிவன் காட்டையும்
தூக்கித் திடரை வாரி யே - சம
ணுக்கிக் குறவர் சேரியே
நிறையக் குடிலைய ழுத்தி யே - ஒலி
உறையப் பாலைக்கி ழுத்தியை
நீதியாவும் பணிந்து முல்லையில்
வாதியாகவும் புகுந்ததே 331

### கலிப்பா

பாலைக் கிழத்தியுடன் பாங்காய் நடம்புரிந்தோர்
பாலைப் பகிர்ந்துமைக்குப் பாகங் கொடுத்தபிரான்
பாலைக் குறித்தடியார் பண்பாடும் செந்தமிழ்ப்பா
பாலைப் பழித்தருட்பால் பண்பால் நிலைத்திடுமே 332

### சிந்து

முல்லைச் செடியைச் சிறுத்துமே - வளர்
கொல்லைக் கொடியை அறுத்துமே
முன்னாகத்தையும் அடித்துமே - நிறை
புன்னாகத்தையும் ஒடித்துமே
எல்லைக் கோவலர் பாடியில் - புகுந்
தில்லைத் தாவிவந்தோடியும்
எதிரிறங்கிய மதலையும் - அளி
ததியுறங்கிய பதலையும்
தொல்லைப் பாடு பண்ணியும் - தொறு
குல்லைப் பாடு நண்ணியும்
தொடுத்து மலரை முடித்துமே - யிசை
படுத்துங் குழலைக் கடித்துமே
கல்லைப் பெண்செய்த பதத் தையும் - புகழ்
சொல்லைச் சேர்பஞ்சா யுதத்தை யும்
கருதிச் சலமுந்தோய்ந்து மே - நதி
மருத நிலத்தில் பாய்ந்ததே 333

### கலிப்பா

முல்லைப்பூ நாணிலிட்ட மோகன் தனைமுனிந்த
முல்லைப்பூ மேனி முருகா வுடையாரும்
முல்லைப்பூ நாதர் முறைதான் நறுவல்செய்து
முல்லைப்பூ விட்டு முதகம் மருதம்புகுமே 334

## சிந்து

மேவும் மருதஞ் செழிக்கவே - முகில்
தாவும் மருதஞ் சுழிக்கவே
வீழும் சம்பினையறுத்துமே - கரை
தாழும் கொம்பினை முறித்துமே
காவுங் கொல்லையுந் தூர்த்துமே - செடி
யாவும் புல்லையும் பேர்த்துமே
கானக் குளவி யலையவே - மது
பானக் குளவி கலையவே
ஏவுஞ் செந்துளிராம் பலூர் - முன்பு
லாவும் கொம்பரக் காம்பலும்
இஞ்சி கன்னலும் வாழையும் - கனை
மஞ்சள் செந்நெலும் தாழையும்
பூவும் புனலில் மிதக்க - மீன்க
ராவும் போகியைத் துதிக்கவே
புண்ணி யஞ்செறி கவந்தம் நல்வழி
எண்ணி நெய்தலில் புகுந்ததே 335

## கலிப்பா

மருதூர்ந் திடத்தகர்த்த மால்பிரமன் தேட நின்று
மருதூர் படைத்து வளர்செங்குவட் டிறை யே
மருதூர் இறைவிண் மருத்துவன் சொல் தோத்திரமும்
மருதூர் மருதநில வஞ்சியரால் தோற்றிடுமே 336

## சிந்து

புரிந்த நெய்தலை மயக்கி யே - தளிர்
பிரிந்த நெய்தலைக் கயக்கியே
புள்ளினங்குளஞ் சேரவே - பெரும்
வள்ளி யின்கிழங் கேறவே

சொரிந்த வண்டலை நீக்கி யே - மலர்
விரிந்த தண்டலை நோக்கி யே
சுரும் பினம் பறந்தாடவே - கப
டுறும்ப மண்டுகம் பாடவே
குருந் தென் கமுகம் தோப் பையும் - புகழ்
பொருந்தும் நுளையர் கோப் பையும்
குலைத்துச் சிறையுந் தூக்கியே - நிலை
கலைத்துக் கரையில் தேக்கியே
உரைந்து வருணன் காலையே - பணிந்
தரன் தன் கருணை போலவே
உத்திர மா நிதி பெருகி வாறவிச்
சித்திரம் பாரும் பள்ளீரே ! 337

## கலிப்பா

நெய்தலுடன் ஆம்பல் கொட்டி நேசமெனும்பாவனை போல்
நெய்த நிலத்துச் சுகந்தம் நீளும் பரிவெனவும்
நெய்த நிலத்துக் கெசமா னேறும்படியெனமுன்
நெய்தலகற் றிக்ககருணை நேர்செங்குவட்டரசே ! 338

## சிந்து

கடலில் நீரை யெடுத்து மேகம்
குடகுமலையில் பொழியவே
கணையிலுங் கடி தென நட ந்துவிண்
கவந்த வெள்ளமும் பரந்துமே
அடவ தெனுஞ்சிற் ருறு முற்ருறும்
தடமதில் வந்து கூடியே
ஐந்து நிலமுங் கட ந்து விரைவில்
உதைந்து வந்து பவானியும்
இடமும் வலமு மாகிச் சங்கமத்
திடையும் வெஞ்சமாக் கூட லாம்
எனவுரைக்க வொன்ருகிக் குணக்கில்
அணைவருக் கமுதாகியே

நடனசிற்பர நாக மலையின்
கடவுள் பொற்பதந் தேடியே
நாரியெனுங் காவேரி வருகும்
நளினம் பாரும் பள்ளியரே! 339

### கலிப்பா

காவேரி மோகக் கடலில் அழுந்தாமல்
காவேரித் தீவழியைக் காட்டாமல் அன்பருளம்
காவேரி டாமல் கடைத்தேறச் செய்பவரார்
காவேரி நேரெனும்பெண் கங்கைபங்கள் என்கோவே! 340

### சிந்து

மேகம்பொழிந்து நதியும்பெருகி
விளங்கும்பூந்துறை நாட்டிலே
மேவுங்குளங்கள் நிரம்பியேகடை
தாவிவெள்ளமும் போகவே
நாகமும்படுஞ் சாரைகபட
நேகம்வல்லகார வதும்
நைத்திலி பசலிவாளை கெளிறு
நெய்த்திலிமணலி சாளையும்
ஏகமாகவும் பறவை குறவை
ஏற்றதுதிக்கை திருக்கையும்
இழுவையுழுவை மகரைபடலி
இந்திபந்தி அயிரையும்
வேகமாகவும் வருணன்சேனைகள்
நாகசயிலக் கடவுளை
வேண்டிமீனினந் தாண்டவருகும்
விந்தைபாரடி பள்ளியரே! 341

### எண்சீர் விருத்தம்

மூவுருவ ராகமெனக் கொண்ட மால்தன்
முறைமையது வாகவும்அவ் வுருவங் கொண்டும்
ஆவுருவாய் வீதிவிடங் கனைச்சோ தித்த
அண்ணல்செங்கோட் டையர்திரு நாட்டி லேதான்
மேவுறுகா வேரிநதி பெருகி வாய்க்கால்
மேவிடவும் கரைதுறையில் வெள்ளம் பாயத்
தேய்வுறுவாய்க் காலணைகள் முகமெட டாமல்
செய்யவென்றவ் வேலைபள்ளன் செய்வித் தானே! 342

## குடும்பன் அக்கரையில், இளையவளை நினைந்து ஓடக்காரனிடம் கூறல்

### பொய்க்கால் சிந்து

ஓடம்விடுநீ ஓடம்விடுமண்ணே-நதியைக்கடந்து
உன்தயவிலென் னூருசேர வே
மாடமயில் சாயல்மங்கை யை-விட்டுப்பிரிந்து
வந்து ரெண்டுநா ளாச்சுதிங்க ளே
தேடக்கிடை யாதசெல்வத் தைத்-தணித்துப்பிரிந்து
செணம்விட்டுயிருந் தறியேன் நானு மே
பாடகந் தண்டை புலம்பப் புலம்பியே-நான்வந்தவழியைப்
பார்த்துக் கண்களும் பூத்துநிற்பா ளே (ஓடம்விடுநீ) 343

ஏதென்றறிவேன் என்னசெய்வேன் நான்-எண்ணுதெல்லாம்
எண்ணியேமன தேங்கியிருப்பா ளே
நாதனுரின்னம் வல்லையென்றுமே-தனித்தொருத்தியும்
நடந்தங்கேவந்து யிருந்துதவிப்பா ளே
சீதளமதி முகமும் சோம்பியே-திகைத்தங்கேயிருந்தால்
செங்கோட்டுப்பள்ளி நகைத்துச்சிரிப்பா ளே
மாதரசியை நான்காணுமலே-இனம்பிரிந்திடும்
மான்போலேமனம்பதறுதென்செய் வேன் (ஓடம்விடுநீ) 344

விதனம்பெருகி யுருகி வாடி யே-நினைந்து நினைந்து
மெலிந்து துயரம் மிகுந்து அதிக மாய்
மதன லாகிரியீறு தென்செய் வேன்-இளையபள்ளி தன்
மதிமுகங் காணத் தயவுசெய்கு வாய்
ரதிமதனென இருவர்கூடி யே-காமபூசைகள்
நடத்தி யிருக்க வழியில்லாம லே
நதியின் றிங்கெனைத் தடுத்துக்கொண்ட தே-ஓடந்தனையும்
நடத்திமெள்ளப் போறேன்நான் அண்ணே!
(ஓடம்விடுநீ) 345

அந்தியில்எனைப் பிரிந்தபோதி லும்-பாலும் அன்னமும்
அருந்திடாள்மயிர் கோதிமுடிந்திடாள்
விந்தையாய்மலர்க் களபம்அணிந்தி டாள்-பாக்குவெற்றிலை
விரும்பிடாளவள் துரும்ப தாகியே
சிந்தைநொந்து பொய்க் கூட தாகியே-பிராணநாயகி
தேடியென்னமாய் வாடியிருப்பாளோ?
எந்தன்ப்ராணனும் அங்கிருக்குது-கூடதிங்கிளோ
இருக்குதுஓடம் ஏற்றிவிடுமண்ணே! 346

## இக்கரையில் இளையவள்

### கலிப்பா

சக்கிரிமே ரையர் தமதடிமைப் பள்ளனும்வந்
தக்கரையில் ஓடமது தாட்டுமென்று நிற்கையிலே
மைக்கண்விழி யாள் இளையாள் மாமோகங் கொண்டுவந் (து)
இக்கரையில் நின்றோடம் ஏற்றிவிடும் என்றனளே! 347

### கப்பல் தரு

ஏலேலோஏலேலோ-தாத்தெய்தா
ஏலேலோ ஏலேலோ

தென்கோதை தனில்விளங்கும்
சிவனுமையாள் திருவடியான்
என்கணவர் கரைதுறையில்
இருக்கும்வயல் தோப்புகளும்

பங்கயநீ ரோடைகளும்-சுற்றிப்
பார்த்துவர வேணுமென்று
பொங்குமிகு நதிகடந்து-பள்ளன்
போயிரண்டு நாளாச்சு

முடுகு

பூமனூர் போனவழி நாடியே சென்று
பொன்முகங் கண்டுவிளை யாடியே யின்று
காமனூர் தனையும்அவ ராலேதான் வென்று
களைதீர வேஓடம் விடுமெனவே தின்று
(ஏலேலோ-ஏலேலோ) 348

அரியயனூர் துதிபரவும்-செங்குன்
றையர்திரு நன்னாட்டில்
வரிசையுள்ள நாயகனை-நானும்
மாலையிட்ட நாள்முதலாய்
ஒருபொழுதும் பிரிந்தறியேன்-என
துறவுமறந் திருந்துவிட்டார்
மருவவரா ததினாலே-மெத்த
மனமெலிந்து தேடிவந்தேன்

முடுகு

மதனலா கிரிமீறி வருகுதே பாவி
மாருதம் புலிபோலே பாயுதே தாவி
விதனமே பெருகிமன துருகுதே காவி
விழிமகிணர் தனையறிய விடும்ஓடம் மேவி
(ஏலேலோ-ஏலேலோ) 349

பூதலஞ்சேர் பணிமலையார்-திருப்
புகழ்வளர்பூந் துறைநாட்டில்
காதலுடன் என்னுடனே-கூடிக்
கலந்திருந்த காதலனூர்
"மாதரசே ஒருநிமிஷம்-போய்
வாறேன்"என்று சொன்னவர்தான்
ஏதெதினால் வரவில்லையோ-இனி
என்செய்குவேன் ஓடம்விடீர்

### முடுகு

இதுசோலை மேவுகுயில் அன்னமே நீங்கள்
என்சோபம் என்கணவ ரோடுசொலப் போங்கள்
மதனுவ தாரன்மொழி பதில்கொண்டு வாங்கள்
வரிசைதரு வேனெனக்கு மண்ணுட்டு தாங்கள்!
(ஏலேலோஏலேலோ) 350

குருந்தமரத் தடியிருந்தார்-திருக்
கோதையர்தன் வளநாட்டில்
பிரிந்தறியாப் பேதைதன்னை-பள்ளன்
பிரிந்துவிட்டு வழிபார்த்து
வருந்தியென்னைத் தவிக்கவைத்தார்-குடும்பன்
வல்லையினி யானிவ்விடம்
இருந்துமென்ன கரையேற-ஓடம்
விட்டுவிட வேண்டுமண்ணே!

### முடுகு

விட்டுவிடு மதனன்என் னேடுசமர் செய்யுறன்
மெய்யெல்லாம் புண்ணுக வேமலரி லெய்யுறன்
கட்டழகி மூத்தவள்நகைத்தெனையும்வைய்யுறள்
கணவன்வர வேதயவு செய்செங்கோட் டையனே!
[ஏலேலோ-
ஏலேலோ] 351

### அறுசீர் விருத்தம்

பக்குவ மடந்தை யிந்தப்
படியுரைத் திருக்கும் போது
அக்கரை ஓடக் காரன்
அவளுட கணவன் தன்னை
சிக்கென ஓட மேற்றி
செணத்திலே நடத்தி வந்து
இக்கரை விடவே தன்பெண்
டீருடன் குடும்பன் சொல்வான் 352

**கலிப்பா**

பன்னகமே ரையர் பரிபூ ரணர்தயவால்
என்னுடைய தேவி எனவந்த பெண்ணரசே
வன்னமயில் போலொருத்தி வரலாமா என்றுமிவள்
தன்னையழைத் துக்குடும்பன் தன்பதியில் சேர்த்தனனே! 353

**அறுசீர் விருத்தம்.**

மள்ளனும் இளைய பள்ளி
மனையினில் வந்தி ருந்து
கள்ளிமோ கத்தால் காமக்
கடலினில் அழுந்திக் கொண்டான்
பள்ளன்செய் கொடுமை மூத்த
பள்ளியும் மனம்பொ ருமல்
வெள்ளியங் கிரியார் பண்ணை
வேந்தர்முன் வந்து சொல்வாள் 354

## அறையில் நடப்பது அம்பலம் ஏறுகிறது

**(பண்ணைத்தலைவனிடம் மூத்தவள் சாடி...)**

சிந்து

முற்ப கைப்பள்ளன் சற்பனை சற்றும்
மொழியு றேன்நீரும் வழியுடன் கேளும்
வைப்ப தாய்வந்த மப்புச் சிறுக்கி–தன்
மாயத் தாலெந்தன் நேயத்தை விட்டு
சற்ப மேரரன் உற்பனஞ் செய்த
தனங்கள் யாவு மனங்களி கூரத்
துற்ப லஞ்செய்து நற்புகழ் யாவும்
தொலைத்து வீட்டில்நி லைத்தான்கா ணுண்டே 355

மட்டைக் கொம்பனை நெட்டை மறையனை-விற்று
மாரி நோம்புக்குச் சேரிப் புடவையும்
திட்ட மாயொரு பட்டஞ்சிச் சோமனும்
சேர்த்து வாங்கியே பார்த்திட வேவந்த

சட்ட கன்அவன் தாரத்துக் கிட்டமாய்
    தந்த னுப்பினான் சொந்தம தாகவே
சிட்டிக் காளைவிற் றெட்டரைப் பொன்னை
    திருவி ழாவதில் செலவது செய்தான் 356

ஆட்டை யாம்பட்டிச் சந்தைக்கி யெட்டெரு
    தோட்டிப் போய்விற்று வந்துயென் மீதினில்
போட்டி யாகயி ளையாளுக் குப்பணி
    பூட்டி னான்பொன்னு வெள்ளியி னாலே
சீட்டிக் கொம்பணி ரண்டதைவிற் றவைப்
    பாட்டி மார்க்குச்செ லவுக்குத் தந்தான்
ஆட்டி லேபத் துருப்படி நங்கைவெள்
    ளாட்டிக் காச்சியா டென்று கொடுத்தான் 357

மூட்ட விட்டுக்கை கொட்டிச் சிரித்தவள்
    முன்பி லேஎனை வம்புகள் சொல்வான்
மட்டி லாநிதி கொட்டி யிரைத் தான்
    மணத்துக் காகப் பணத்தைக் கரைத்தான்
பட்டிக் கேநடந் தெட்டியும் பாரான்
    பாட்டை யும்வயல் காட்டையும் பாரான்
சுட்டி செய்யவும் அட்டிகை செய்யவும்
    தொழிலில் லாமல் பொழிவில்லை யாண்டே! 358

நாற்றுக் கால்பயிர் சாற்றுமெ டுக்கான் - முன்
    னாலே போயொரு வேலையுஞ் செய்யான்
சோற்றுக் காளுக்குப் பார்த்துக்கொ டுக்கான்
    தொட்டு வேலையொன் றிட்டு மறியான்
போத்து மேல்மழைத் தூற்றல்ஒப் பாகப்
    பொழப்பைப் போட்டு நெருப்பித் திரிவான்
கூத்தி யார்வீட்டைக் காத்துக்கொண் டென்னைக்
    கோரணி காட்டிப் புரளிகள் சொல்வான். 359

நஞ்சை புஞ்சை விளைந்த தறியான்
நாட்ட மாய்ச்சென்று தோட்டமும் பாரான்
மஞ்ச ளிஞ்சி தழைந்ததுங் காணான்
வைத்த நந்த வனத்தையும் பாரான்
அஞ்ச லால்வேலை யுஞ்சரி கேளான்
ஆலை யுங்கொடிக் காலையும் பாரான்
செஞ்சொல் பள்ளன் வஞ்சனை கொஞ்சம்
திருந்தச் சொல்லுவேன் அறிந்திடு மாண்டே! 360

வேறு

தன்னை யேபுகழ்ந் துன்னிதம் பேசிடும்
தாசி மாருக்கும் வேசியர் வீட்டுக்கும்
நன்ன யங்கள தென்னவி ருந்துக்கும்
நங்கை மார்வீட்டுப் பொங்கலுக் கென்றும்
கன்னி மார்பூசை யென்னுஞ்செ லவுக்கும்
காமபூசையி லேமண வாடைக்கும்
சன்னச் சம்பாவில் முன்னூறு கோட்டைநெல்
தான்பா ழாகவே வீணுக்க ழித்தான் 361

வேசி யாம்வறத் தோஷியி னையாளென்
வீட்டி லேவரப் போட்டிவி ளைந்ததும்
நேச மென்விசு வாசம் மறநதெதிர்
நேரிட் டாலும்கண் ணேறிட்டுப் பாரான்
ஆசை யாய்வந்து பேசியென் வீட்டில்
அடுத்தி ருந்து படுத்தும் அறியான்
மோசக் காரன்பெண் தோஷமும் பாரான்
முந்தி னாளென்று சிந்தையில் எண்ணான் 362

வாட்டுக் காரிசொல் கேட்டுத்தி ரிந்தெனை
வாக்கு வாதம்உண் டாக்கி னான்தெருப்
பாட்டுக் கும்வெறுஞ் சூட்டுக்குள் ளாகினான்
பட்ட பாடது முட்டவு ரைக்கிலேன்
ஏட்டுக் குள்அடங் காதவன் வஞ்சனை
எட்டி லோர்பங்கு விட்டேன் வெளியிலே
நாட்டுக் காதிசெங் கோட்டுத்து ரைக்கிவள்
நல்லவ ளென்றும் பொல்லாத வளென்றும் 363

சித்தத் துக்குத் தெரிந்து மிருக்கும்
தேவ ரீர்க்கினி மேலும் தெரியும்
பத்துப் பத்தாய்வி சாரித்துப் பார்த்து
பாவ புண்ணியம் மனதினி லெண்ணி
அர்த்த பாகருக் கேர்வைய தாக
அடிமை மீதில் அனுக்ரகம் வைத்து
பெற்ற பிள்ளையொப் பாகவும் என்னை
பெருமை செய்தருள் வீர்பண்ணை யாண்டே 364

## கேட்டுப்பாருங்கோ!

### கலிப்பா

மையார் திருமிடற்று
வள்ளல்பண்ணை யாண்டவரே
ஐயா இவ் வூரில்உள்ள
ஆண்டவமார் தங்களையும்
மெய்யாகக் கேள்குடும்பன்
மேட்டிமையைச் சொல்லுவதோ?
கையார் தழும்பறியக்
கண்ணாடி வேண்டிடுமோ? 365

### சிந்து

அரவ கிரியரன்தன் அடியர் செங்குந்தகுல
அதிபன் பட் டம்பெறும்நல் லையதுரை யும்
சரச குணன்மங்கல நகர்சேர் ஊமையநகர்
தனில்விளங் கியபெரி யாமுதலி தன்
வரசுத ஞனபெரு மாள்முகி லுமுத்தண்ண
மகிபனுங் கோதைநகர் வாசமென வாழ்
நரபதி யானமுத்துக் குமரமுதலி சுத
ஞனபச்சை முத்தைய ராயநிதி யும் 366

அன்ன தரு வாகிய கருப்பமுதலி நா
ராயண முதலியும்நஞ் சப்பமுதலி
சின்னைய முகில்நமசி வாயமுதலி நல்ல
சின்னக்குட்டி ராயனும் துலுக்கமுதலி

மன்னவர் புகழ்குழந்தை வேலுமுதலி நல்ல
வண்மைமிகும் வெங்கடா சலமுதலியும்
பன்னுதமிழ் வாணர்புகழ் குள்ளமுதலி வீர
பத்திரமுதலி முத்துக் குமரமுதலி 367

அம்புவி புகழ்பழனி யாண்டிமுதலி அரு
ணாசல முதலி சின்னத் தம்பிமுதலி
சம்பிரமை யுடன்திருச் செங்கோடுதன்னிலின்னம்
தானிருக்கும் செங்குந்த ஆண்டவமாரும்
இன்பமுடன் பெற்றபிள்ளை யாகவளர்த்தார் நானும்
எல்லவர்க்கும் நல்லபிள்ளை யாகஇருந்தேன்
கும்பிடு கள்ளன்பள்ளன் ஊதாரிசெலவுமெங்கள்
குடும்பன் செய்யும்கொடுமை யிடும்பதெல்லாம் 368

ஆண்டவ மாரிதெல்லாம் அறிந்திருப்பார் என்னை
அழைத்துப் புத்திமதிகள் வேணதுரைத்தார்
வேண்டுங் குடும்பனுக்க னேகமுரைத்தார் சொல்லை
விழலுக் கிறைத்தநீர தெனவிடுத் தான்
பாண்டித மல்லவிது உள்ளபடிதான் கோதைப்
பதியென் ஆண்டவமாரைக் கேட்டுப்பாருங் கோ
நீண்ட புவியில்அவர் நெறியுடனே யிப்போ
நீங்கள் விசாரணைகள் செய்யுமாண் டே! 369

### கலிப்பா

கள்ளுறையும் பூவனஞ்சூழ்
கட்செவிமே ரையர்பண்ணை
பள்ளன்மனக் கள்ளமெல்லாம்
பண்ணையினூர் தாம்வினவி
விள்ளிடவே நாளை வி சா
ரித்திடுவோம் போம்எனவே
நள்ளிரவில் மூத்தபள்ளி
நன்மனையில் வந்தனளே! 370

மாதருக்கு மோகனமாம் மூத்த பள்ளி
வந்தபின்பு மனுபதியாம் பண்ணை வேந்தர்
போதுவிடிந் ததும்எழுந்து கோல்கா ரா நீ
போய்க்குடும்பன் தனையழைத்து வாடா! என்ன
ஆதவன்போ யழைக்க ''அவனில்லை'' என்ன
அவ்வசனம் கேட்டரசர்க் கவனு ரைக்க
காதலினை யாளை 'அழை' எனவுங் கோலுக்
காரன்அழைத் திட இளையாள் வந்து சொல்வாள் 371

## இளையவள்

### சிந்து

தென்பன காசலர் அன்புமிகும் பண்ணையாண்டே-உம்மைக்
கும்பிடுறேன் என்னை இன்பமாய்க் காருமென்னுண்டே 372

என் கணவன் பள்ளன் எங்கே போனுனே என்னுண்டே-நானும்
கண்களில் காணேனுங்கள் கிட்டவல்லையோ ஆண்டே 373

இன்ன இடத்துக்குப் போறேனென் றென்னிடம் தானே-பள்ளன்
சொன்னதுமில்லை நான் உன்னிதம் என் சொல்வேனுண்டே 374

அக்கரைப் பண்ணையில் மிக்க செந்நெல் பயிர் தோப்பும்-விளை
பக்குவம் பார்க்கவும் சிக்கெனப் போனுனே ஆண்டே 375

நற்பெரியாற்றினில் அப்புறம் போகையில் ஆண்டே-வெள்ளம்
உப்பலாய் வந்ததோ எப்படியோ பண்ணையாண்டே 376

மேவும் நதியிலோர் பாவதோஷங்களுமானுல்-எந்தன்
சீவன்நில்லா துயிர்போவது நிச்சயம் ஆண்டே 377

விடிகாலை மூத்தவள் துடியாய் எழுப்பினுளாண்டே-அந்தப்
படி மாறியாளென்ன பொடிமாயம் செய்தாளோ ஆண்டே 378

பன்னுருள் என்று நீர் சொன்னுலும் சொல்லுமென்னுண்டே- ஏனோ
இன்னும் வரவில்லை என்ன நான்செய்குவேன் ஆண்டே 379

கோதாபுரியரன் பாதமதே துணையாக-நம(து)
ஆதரவாய்நம்பி னேன்வர மாதய வாக 380
ஆதீனப்பள்ளனை நீதியதாயிப்பத் தானே - வரச்
சோதனை செய்தாலோர் வேதனையுமில்லை ஆண்டே 381

**கலிப்பா**

மங்கையிவை யாள் மொழியை
மன்னவருந் தாங்கேட்டு
உன்கணவன் தன்னை
ஒளித்துவந்தாய் என்றுசொல்லி
வெங்கோபம் கொண்டிவர் தான்.
மீசை துடிதுடித்து
கண்கள் சிவந்துபண்ணைக்
காரனெழுந் தேசினனே! 382

## பண்ணைத்தலைவன் இளையவளைச் சினந்து பேசல்

குச்சினில் பள்ளனை
வைச்சுக்கொண் டேஅடிகள்ளி-நீலிக்
கோலஞ்செய் யாதேபார்
காலால்உ தைக்கிறேன்பள்ளி!
அச்சமில் லாமல்வந்
துச்சிதம் பேசுருய்கள்ளி-இந்த
ஆராடிப் புத்தியால்
போராடாதே போடிபள்ளி 383

பள்ளனை மாய்கையில்
உள்ளாக்கி வைத்துநீபள்ளி-இந்தப்
பாசாங்கு வித்தை படிக்கிருய்
மூசாம்புக் கள்ளி!
துள்ளாதே உன்னுட
துள்ளை யடக்குறேன் பள்ளி-உந்தன்
சூதும் வாதும் மெத்த
வேதனை யாமடி கள்ளி! 384

தொண்டியுன் பூருவங்
        கண்டனடி சகசண்டி-உந்தன்
சொக்குப் பொடியினில்
        சிக்கினுண்டி பள்ளன் வண்டி
குண்டினி பேசாதே
        உண்டான தைச்சொல்லு தொண்டி-உந்தன்
குன்னக மெல்லாம் நான்
        முன்னமே கண்டனன் கொண்டி! 385

சன்னையுஞ் சாடையும்
        என்னமோ என்றிருந்தேண்டி-உந்தன்
தப்பிலிப் புத்திகள்
        இப்போ தெரிந்தது பள்ளி
பன்னக மேரரன்
        தன்னடி யாருக்குப் பள்ளி-இந்த
பாதக வித்தைகள்
        ஏதடி தோதகக் கள்ளி! 386

## வேறு

பொன்கோதை மேவிவளர்
        தென்கோதைப் பள்ளியைப்போல்
நன்கோதை யல்லநீபோ
        ஐங்காலிப் பள்ளி! 387

குடிசினில் பள்ளனை வைத்து
        கடினமாய் நின்றதட் டாதே
நொடியினில் அழைத்துவா டி
        படிமாறிக் கள்ளி! 388

கச்சக் காரியாக நீவந்
        திச்சகம் பேசாதே வாயைத்
தச்சுப் போடுவேன் சீரங்க
        வச்சாரிப் பள்ளி! 389

குச்சிற்பள் ளனையொளிய
    வச்சுக்கொண் டிங்கனேவந்து
பச்சைப்பாம் பாடாதே போடி
    கச்சக்காப் பள்ளி! 390

வழியுடன் பண்ணை யாண்டார்
    சுழிவு கண் டேசினந்து
விழியை உருட்டி மொழி
    யினில் மிரட்ட 391

கடும்பகை யாக யிப்போ
    இடும்பு செய்தோ மெனவும்
திடும்பாய்ச் சதாசிவக்கு
    டும்பன் எழுந்து, 392

இழிவு யினி யிருந்தால்
    பழிபாத கம்வருமென்
றொளிவில் இருந்த பள்ளன்
    வெளியில் வந்து, 393

தெம்புடன் வந்துநின் றவன்
    அன்புடன் பண்ணையாண் டாரை
கும்பிட வுமேசினந்த
    தம்பி யவரும், 394

இத்தனை நேரம் ஒளிந்து
    எத்தனை கிறுவஞ் செய்தாய்
சற்றுநேரம் பொறுன்'சொரு
    பத்தை' யறிவாய்! 395

ஆண்டவர்க் கடிமை யென்று
    தீண்டா திருந்த திறல்
காண்டுமீறித் தோவுனக்கு
    ஏண்டா குடும்பா! 396

நல்லதாகட் டுன்பூருவம்
எல்லாமறி கிறேன்தானும்
நில்லாதே பண்ணையச் சேதி
சொல்லடா பள்ளா! 397

## குடும்பன் வேண்டுதல்

பணகாசலந் தனில்மேவிய
பகவான் பண்ணை யாண்டே
மனசாரவும் யான்செய்பிழை
மனதில் வையா தாண்டே
எனையோர் பொருள்என எண்ணிடும்
எளியேன் அபசாரம்
எதுசெய்யினும் பரிபூரணம்
எனவே பொறுத் தாளும்! 398

மாபாதகன் இடுபூசலில்
மயலாகியும் அடியேன்
ஏகோபிதம் எனலீலையில்
இளையாளுடன் இருந்தேன்
தீபாவிய தொருக்காம லும்
தில்லா யமும் முடித்தாள்
நீகோபம் ஒருத்தென் பங்கில்
நின்றுதரி யாண்டே 399

எசமா னிடும் பணியைமறந்
திருக்கே ளிது தினத்தில்
அசமந்தம தெனவே யிருந்
தபசாரமுண் டாண்டே
இசையா தவள் சமயங்களி
தெனவே பழி யெடுத்தாள்
குசலங்கள்செய் தடியேன்மிசை
கோபஞ் செய்யா தாண்டே! 400

நதியின்கரை விவசாயமும்
நான்பார்த்திட நடந்து
பதிவந்திளையவள் வீட்டினில்
படுத்தேன் விழியசந்தேன்
அதில்ஆள்வர விடுத்தீர்என
தாயாசங்கண் டிவளும்
சதியாளெனை யிகழ்யென்றனள்
தயைசெய் திடும் ஆண்டே! 401

## மூத்தவள்

வீட்டி னிற்பள்ளன் தன்னைய டக்கி
வெறும்ப ழிகள்என் மீதிற்சு மத்தி
நாட்டுப் பண்ணையக் காரர்க்கு றைத்திட
ஞாய மாநீயில் லாதும்பொல் லாதின்னம்
கூட்டிச் சொல்லுப யள்எனைக் கென்னடி
கோதை சீரங்கப் பள்ளிநீ என்னுடன்
வாட்டுக் குவார தேதினி வந்தாலுன்
மார்க லங்கஉ தைப்பேண்டி பள்ளி! 402

## இளையவள்

உதைக்க நீவந்த காரிய மேது
உனக்குத் தாழ்ச்சியோ நின்றுஎன் முன்வாய்
பதைத்துப் பாரடி மூத்தவள் என்றும்
பாரா மல்உள்ளங் கலங்கஉ தைப்பேன்
கதித்து என்னையும் பள்ளனை யோட்டிமுன்
காசு கையி லிருக்கு மதமோ?
எதிர்த்தெ திர்த்துஅ தட்டிநீ பேசுறாய்
என்செய் வாய்திருச் செங்கோட்டுப் பள்ளி! 403

### கலிப்பா

ஞானகுரு சாமிதிரு நாகவெற்பார் பண்ணையினூர்
தானவரும் கேட்கமனத் தால்கபட தாய்க்குடும்பன்
ஆனபயிர் நெல்லுவகை ஆதாய முஞ்செலவும்
போனது போக்காகப் புதுமையெனக் கூறினனே 404

### சிந்து

வள்ள லார்திருப் பண்ணையந் தன்னிலே
வஞ்ச னைகளில் லாமலென் றுளும்நான்
உள்ள மட்டிலும் பாடுபட் டாலுமீ
துள்ள தென்றெண்ணி டார்மனங் கொள்ளார்
எள்ள தாமள வாகினும் வஞ்சம்
இலாதி ருக்கில்எ தார்த்தமென் றெண்ணூர்
பள்ள னுனவன் கள்ளனென் றெங்கினும்
பாணிப் பார்மனம் பூணிக்கை யாகவே 405

நிசம தென்றெண்ணி லும்என் றன் மீதினில்
நேரஞ் சோடிக்கி னும்சரி யுள்ளதைக்
குசல மில்லாமல் கேளும்சம் பாயினம்
கொள்ளை யாய்ப்பயிர் கொள்ளைய தாச்சு
பசலை யோடும் பயிரைக் கவின்நாரி
பாரில் சூல்முலை மீதில் பதித்தார்
அசைவி லாச்செந் நெலின்முளை வெண்மைய
தாகை யால்ஐயம் எண்ணி விடுத்தேன் 406

அங்கு ராமர் தனைமயில் ராவணன்
ஆட ரங்கில் ஒளித்திட மீட்டவர்
வங்கி நாரா யணன்கனைப் பூமியில்
வைத்தி டாதந் திறங்கொண்டு போகுது
மங்கை மார்குங்கு மங்களைக் கொண்டார்
வனச மீது மடந்தையி ருந்தாள்
சங்க ரவண்ணன் காளிங்க ராயன்
தலங்கள் மேவிச் சிலநெல்லை யுண்டார் 407

புகழு லாவுந் திருவரங் கன். பூசைப்
பொட்டி யும்பள்ளி கொண்டான் இவர்கள்
உகமை யாகஎன் மாமன்ப தியும்அவ்
வூரி லேவளர் தேவனும் ஆனூர்
அகிலஞ் சேர்ஆனைக் கொம்பனை யெங்கும்
அன்ன தானக் குருவைநம் ஆண்டவர்
மகிமை சேர்சுத னுகப் படைத்தார்
மணக்கத் தைப்புவி மூலியும் ஆச்சு. 408

மருவு காரிகை தாசியு மாகி
வரிசை யாகவும் முத்துவி ளங்கி
குருவை யும்விலை தீர்த்துக்கொ டுத்துக்
குளுந்த சீதர போகஞ்செய் திருந்தாள்
இரவி வானத்தில் ஏகினன் சோலைகள்
எங்கும் பூம்பானை யாகநி றைந்தது
சுரண வாலன் சலகண்ட னுகினும்
சுரண வாரியில் எங்கும்உ லாவுது. 409

முன்ன மேமணல் வாரி யதனை
முனிவ ருண்ண லவணம தாகியும்
அந்நெல் தானும் இடிந்துசம் பாயினம்
அழிந்து பக்கிரி யும்அல்லா என்ருன்
பன்னும் ராமரைத் தேடிக்கொண் டேராம
பாண மேகிற் றனுமந்தன் பாணத்தின்
பின்னு மேகினன் நல்விடைக் காட்டான்
பெரிய போகியு மாய்வெற் படைந்தான் 410

மலிவ தாகவுங் கந்தர மீதினில்
மாதர் கோதும்பை முத்தைய ணிந்தார்
வலுவு சேர்அரன் அன்பர்க்கன் பில்லார்
மனையில் மாசப் புழுதிய டைந்தது
பலவெள் ளாண்மையிட் டேன்செம்ம ழகியும்
பச்சை வண்ண னுங் கூடியே சென்று
உலக முகும ண வாளன் என்று
உறுதி பாற்கடல் தன்னில் ஒளிந்தார் 411

## வேறு

இந்தவித மாய்ச்சிறிது நெல்விட் டேகவே
இருந்தவிதை போகாம லேபயி ரிட்டு
அந்திவண்ண ரைத்தொழுது பாவகஞ் செய்து-பயிர்
அந்திபக லுங்கண்ணுண் டாய் யானும் பார்த்து
சந்ததிய தாய்விளைந்த நெல்களை யெல்லாம்-அறுத்
தடித்த ளந்து ரெண்டு லட்சஞ் சலகை
சிந்தைமகிழ்ந் தேகளஞ்சி யங்கள் தன்னிலும்-மச்சு
செருக்கள் தன்னிலும்போட்டு வைத்திருக்கிறேன் 412

அன்புடனே கேளின்னம் விளைந்தநெல்லிலே-செல
வானதும் வகைதொகையு டனுரைக்கிறேன்
தென்பனக மேரரன்உ பயமெனவே-திருச்
செங்குன்ற மலையின்அடி வாரந்தன்னிலே
இன்பமிகுங் கார்த்திகையில் கார்த்திகையின்நாள்
இரவில் ஆயிரம்பேருக் கன்னதானமும்
நன்பெருமை யாய்க்கொடுத்தேன் ஆகையினாலே
நாற்பது சலகைநெல் செலவதாச்சு 413

பன்னக கிரியில் வளர் தேவர்களுக்கு-நித்தம்
படித்தரத் திற்கும்விசே ஷக்கட் டளைக் கும்
சன்னச்சம்பா நெல்லில்ஓ ராயிரஞ்சலகை-நல்ல
சம்பங்கிப்பூச் சம்பாவோர்ஆ யிரஞ்சலகை-நல்ல
மன்னவர் கோயில்மணியம் செய்யும்சுப்பையர்-மதி
மந்திரி சாமையர்வச மாகஅளந்து
தன்னமைய தாகியரா சலிங்கம்பிள்ளை
தன்கையில் ரசீதுவாங்கித் தானிருக்கி றேன் 414

தெண்டிரை புகழ்பூந்துறை நாடுதனிலே-வளர்
தெய்வங்கள் தமக்கங்கங் களந்தநெல்கள் தாம்
வண்டுறையும் மல்லிகைப்பூ சம்பாமுதலாய்-பத்து
வகைநெல்லா யிரஞ்சல கையுமளந் தேன்
அண்டர்பணி யுஞ்சீரங்க ராயர்தனக் கும்-பூசைக்
காகவென்று நூர்சலகை அல்லிப்பூச்சம்பா
பண்டசிகை வள்ளமது தன்னில்அளந்து—நானும்
பத்துவண்டி மீதினிலே வைத்தனுப்பி னேன் 415

மாதவமி குந்தசதா சிவக்குருக் கள்-சுப்ர
மணியக் குருக்கள்சேனு பதிக்குருக் கள்
வேதநாய கர்நாகீச பண்டிதருடன்-நேமம்
மிகுந்த அர்த்தநாரிக் குருக்களிவர் கள்
நீதமிகு மடத்துக்கும் பதுசல கை-ஆக
நெல்லுமுன்னூ றுசலகை தானும்அளந் தேன்!
நாதர்திருக் கோயில்பரி சாரகஞ்செய் யும்-நல்ல 416
நான்மறை யாளருக்கைந் நூறுசல கை

முரகரி ஆதிகேசர் பூசைபுரி யும்-நல்ல
முத்தையன்சே ஷய்யனுக்கோர் பத்துச்சலகை
பரவுதிருச் சந்நிதியில் ஊழியஞ்செய் யும்-சிவ
பத்தருக்கோ ரம்பதுச லகைநெல்ல தும்
அரவகிரி அடிவாரந் தன்னில் விளங்கும்-நல்ல
அன்னச்சத்திரத்திற்கோ ரைநூறுசல கை
இரவலர்கள் தாசியர்சங் கீதக்காரர்க் கும்-நல்ல
இன்பமிகுஞ் செந்தமிழின் வாணர்தமக் கும் 417

சிந்தை மகிழ்ந் தம்பதுச லகைநெல்லதும்-இன்னும்
செலவிலோர் ரைம்பதுச லகைநெல்லதும்
இந்தவித மாகவும் அளந்து கொடுத்தேன்-போக
இன்னமுஞ் சிறிதுநெல் லிருக்குதாண் டே!

சந்தேக மில்லையிதற்குச் சாட்சியமுண் டு-பண்ணைத்
 தன்கணக்கெல் லாம்நமசி வாயபிள்ளைக் கு
அந்திபக லாகவந்து எழுதிவைத் து-நானும்
 அவர்கை ரசீதுவாங்கி வைத்திருக்கி றேன் 418

அங்கங்கே ஆண்ட வர்திருச் சோலை தனி லே-விளை
 வாகியர சவர்க்கவ கைகளையெல் லாம்
மங்கையுமை பாகர்கோயில் ஊழியஞ்செய் யும்-நல்ல
 வம்படிக் குப்பணன் நாக மலையிவர் கள்
தம்கைவச மாக்கியுக்கி ரானஞ்சேர்த் து-சிவ
 சம்புவின் பூசைக்காக வேதானுஞ்செய் தேன்
இங்கென்மீ தினில்கள வெள்ளளவில் லை-இனி
 எப்படிச் செய்தாலுஞ்சித்த மெங்களாண் டே! 419

## கலிப்பா

பாட்டுவளங் கண்ட திருப் பன்னகமே ரையருட
நாட்டுவளங் கண்டபண்ணை நாயகனே நஞ்சைவயல்
காட்டுவகை நெல்வகையுங் காதினிற்கேட் டீரினிநான்
மாட்டுவகை ஏர்க்கால் வகைவிபரஞ் சொல்லுவனே! 420

## சிந்து

வாகு சேர்செங்குன் றையர்தன் பண்ணையின்
 மாட்டு வர்க்கச் செலவது சொல்லு வேன்
நாக மாமலை நாதர்க்கு கந்தொரு
 நல்ல காளையும் நந்திய தாகமுன்
னாக வேகுதி கொண்டங் கிருக்குதன்
 னே கருப்புக் கனேகங்கள் ஏகிற்று
மேக மேவியு மேவிரி கொம்பனும்
 விளங்கி யேகூடு கொம்பன தாகியும், 421

காரி மோழையு மாகியே மூவருக்
காட்டி யேபுலி போலுமி ருக்குது
சூரி யன்தனக் கேஉப ராகென
சுற்றி யேவரு தேநெட்டை வாலனும்
மேரின் சார்பினி லேமணைப் போத்தென
மேவி யேஉச்சிக்கொம்பனு லாவுது
பாரி லேஉயர் நெடுமறை யான்மனைப்
பார்ப்பா ரென்றேஎல் லோர்களும் பார்ப்பாரே! 422

என்னு தென்றும யிலையுஞ் செட்டிகொண்
டேகி னுன்பெட்டை யேருன்காண் ஆண்டே
முன்ன மேபசு காத்தான்கெருட
முகவன் மேற்கொண் டுலவுதென் னுளும்
வன்ன மாகிய செம்மறை யான்ரெண்டும
மாடல் லமுனி மானென ஏகிற்று
கன்னி பாகன்,வரிக்கழுத் தான் எரிக்
கண்ண ஞகினர் காண்கிலன் யானும் 423

ஒற்றைக் கொம்பனுஞ் சள்ளை வ யிறனும்
உகமை யானக ரிவண்ணன் மூவரும்
வஸ்து வாகவும் கோபுர வாயிலில்
வாச மாகினர் பாசகக ழுத்தனும்
நெற்றிக் கண்ணன், சடை யெழுந் தான்,வெள்ளை,
நெட்டை வாலன்,ஆ ணிக்காலன் ஐவரும்
சித்து லிங்கம தாகவும் மேல்புறம்
சேர்ந்து வாழ்ந்தனர் யாவர் அறிவார்? 424

சிறிது தான்இப் படிச்செல வாக
சிறிது கொண்டிய தாகத் திரியுது
மறலி வந்தவர் வாகனம் வேண்டியே
டவணக்கி ஈஅஞ்சு வாங்கியே போனர்

பிறகு மாதங்கி மேதியோர் அஞ்சு
பிடித்து வாகனம் ஆக்கியே கொண்டாள்!
பரவும் அக்கினி தேவனும் ஏறப்
பருங்கிடா அஞ்சு தான்கொண்டு போனான்! 425

இப்படிச் செலவானது போக
இருக்குதின்னம் எழுநூறு கால்நடை
மைப்ப ருங்கிடா ஐம்பதுநப்படி
மாடு நூறெருடி ருநூறு கால்நடை
சர்ப்ப மேரரன் பண்ணையந் தன்னிலே
தானங் கங்கே இருக்குது சாமி!
செப்பு றேனின்னம் ஏர்க்கால் முஸ்தேதி
செலவ தான விபரமென் றண்டே 426

வாசுதேவன்புதல்வன், வராகியும்,
வந்துதான்எங்கள் ஆயுதமென்றே
பேசிநூறுகலப்பையைக்கையில்
பிடித்துஆயுதமாய்க்கொண்டுபோனார்
ஆசையாகமதனுஞ்சிறிதையும்
ஆண்பெண்ணர்வசம்ஆக்கிஉலகினில்
நேசமாகவிளைவதுசெய்து
நிலைமையாக இருந்தனர்மேழியை 427

விந்தையாகியவேளாளர்எங்கள்
விருதென்றேகொண்டுபோனார். நுகங்கள்,
அந்தரந்தனிலேமகமாச்சுமுன்
ஆரத்தால்அனந்தங்கயிர்போச்சுது
சந்த்ரசேகரப்பண்ணைவிபரங்கள்
தானிது,சொல்லுஞ்சாடிகள்கேட்டு
எந்தன்மீதினில்கோபஞ்செய்யாமலே
என்னையாதரித்தாளும்என்றண்டே! 428

## பண்ணைத்தலைவன்

### கலிப்பா

ஞாயமுடன் சொல்லவந்தாய் நல்லதுபின் னுலறிவோம்
ஆயர்பதிக் கேசென் றவர்களையுங் கூட்டிவந்து
வேயருளும் முத்தர்பண்ணை மேவும்வயல் காடதனில்
போயவர்கள் ஆடுகிடை போட்டுவரச்சொல்லுமென்றார் 429

## குடும்பன்

### சிந்து

அரவகிரி மேவுமென தையர்பண்ணை யுரமேற்ற
மறவாமல் ஆடுகொண்டு வருவேன்நா னுண்டே! 430

ஆண்டவர்தன் சொல்படிக்கே யான்நடந்து ராத்திரிக்கே
நீண்டவய லினில்ஆடு நிறுத்துவேன் ஆண்டே! 431

ஆரமிகு குட்டிகளா டுடன்குடில்கள் உடனிடையர்
சேரஅழைத் தோடியும்நான் செணம் வருவேன் ஆண்டே 432

அண்ணலார் கிருபைவர ஆண்டவர்தன் மனமகிழ
பண்ணைவயல் முழுதும்உரம் படுத்திவைப்பேன் ஆண்டே 433

### எண்சீர் விருத்தம்

வள்ளல்பண்ணைக் காரருடன் சொல்லிக் கொண்டே
வாய்வேக மாய்நடந்து மருதம் மேவும்
பள்ளனவன் முல்லைநிலத் தினில்வாழ் ஆயர்
பாடியினில் வந்துடன்கோ னரையுங் கண்டு
வெள்ளைவிடை வாகனனூர் பண்ணை தன்னில்
மேவும்வய லிடையாட்டுக் கிடையைப் போட
உள்ளமுஸ்தே திகளுடனே வாரும் என்ன
உறுதிகொண்டா டுகளிடையர் ஓட்டி வந்தார்! 434

## ஆயர் வருகை

### சிந்து

பாலணை யுறும்அளை போல்
மேலணை பெறுங்கிளைகள்
பண்டுநா மம்பனி
ரெண்டுநா மம்பெற 435

கோலணை கரப் நுரைகள்
போலணை நரைதிரைகள்
கொச்சையாம் மொழிதம்ப
லச்சள வாய்ஒழுக 436

மாலணை யுறுசயிலர்
தோலணை யெனஅணியும்
வள்ளலார் வயலில்ஏரு
விள்ளநய மாகவே 437

காலணை குறுநடைகள்
சூலணைப் போல்உதரம்
கதிக்கக்கோ ஞர்கோதையம்
பதிக்கு வந்தார். 438

### வேறு

வாதக்கோன் பொதுவாட்டை
யேதக்கோன் உறைபாம்பை
மரைபார்த்தி ருக்கமுயல்
இரைகண்டாய் குடும்பா! 439

பூதக்கோன் விளையாட்டை
மீதுக்கே ஒருபாம்பு
புகலாய்வைத் திருக்குது
செகமறியும் குடும்பா! 440

வேதக்கோன் நதியுறை
பாதக்கோன் அறியாத
விந்தைக்கோன் நாட்டைவந்து
நந்தக்கோ ஞர்களும். 441

ஆதிக்கோன் பணிமலை
நாதிக்கோன் வயலிலே
ஆட்டுக்கிடை கொண்டுவந்து
போட்டுவைத்தார் இடையர். 442

### எண்சீர் விருத்தம்

அரவகிரி வாசர்பண்ணை வயல தன்னில்
ஆயருட னேஆட்டுக் கிடையைப் போட்டு
சரசமுட னேகுடும்பன் இளைய பள்ளி
தன்மனையை நாடியிவன் வருகும் போது
பரவசமாய் மூத்தபள்ளி எதிரே கண்டு
பரிவுடனே இன்றெனது மனைக்கு வந்து
வரிசையுடன் இருந்து மையல்தீரு மென்று
மகிணரையும் பணிந்துமெத்த வணங்கிச் சொல்வாள். 443

## மூத்தவள் குடும்பன் வாதம்

### சிந்து

காமனும் ரதியும்போல் கலந்திருவர் கூடி
மாமயல் தீரவே மருவுவோம் பள்ளா 444

மருவவெட்கமில்லாமல் வலியவந்தழைப்பது
அரிவையர்க்கழகிது ஆகுமோபள்ளி! 445

ஆகுந்தன் மகிணரைஅழைக்கலாம்எனதுட
மோகந்தணியவொருமுத்தந்தந்தாள்வாய்! 446

முத்தந்தர இளையமோகனப்பெண்ணுட
உத்தரமில்லாமல்உன்கிட்டேவாரேன்! 447

வருகேன்என்றிவ்வேளை வைகோலஞ்செய்யாதே
உருவிலிதனை வென்றென்னுடலைத்தீராய்! 448

தீராமையல்கொண்ட சீர்கேடிஎன்னுடன்
போராடாதேபோடிபொடிமாயக்கள்ளி! 449

பொடிமாயம்போட்டந்தப்புரத்தினில்மயக்கிய
குடிகேடிபோலும்நீகொடுமைசெய்யாதே! 450

கொடுமைசெய்வாள்சரிகுடியிராதவளுடன்
அடிமைசெய்திருபோடிஅநுநீதப்பள்ளி! 451

அநுநீதம்நீசொன்னதாகுமிப்படிச்செய்ய
மனுநீதமோசொல்லும்மாய்மாலப்பள்ளா! 452

மாய்மாலப் பள்ளிநீ வலியவந் தடிக்கடி
ஏமாறி யேநின்று ஏதில்செய் யாதே! 453

ஏதில்செய் யாதேநீ ஏகசம் போகமாய்
காதலாய் என்னுடன் கலவவா பள்ளா! 454

வாவென்று சொல்லாதே வலுவுள்ள இளையவள்
கோபங்கள செய்வாள் குணகேடி போடி! 455

போடியென் றுரையாதே பூவணை மேல்விளை
யாடியே இருவரும் அணைவம்வா! பள்ளா! 456

அணைவம்வா என்றெனை அலட்டாதே என்றாலும்
சுணையில்லை யோபோடி தோதகக் கள்ளி! 457

கள்ளியென் றுரையாதே காமன்என் கலையெல்லாம்
கொள்ளையிட் டான்வந்து கொஞ்சிமுத் தாடும் 458

கொஞ்சிநீ வந்தாலும் கூடேண்டி யுன்னுடன்,
கெஞ்சாதே போஅப கீர்த்திசெய் வேண்டி 459

கீர்த்தி அதிகபுண்யம் கிடைக்கும் இவ்வேளையில்
கார்த்தணைந் தெனைமதன் கலக்கத்தைத் தீராய்! 460

கலகஞ்செய் தெந்நேரம் காமவெ றிகொண்டால்
உலகஞ் சிரிக்காதோ ஊதாரிப் பள்ளி 461

ஊதாரி யென்றென்னை உரைக்கவும் மனம்வந்த
தா? தாரந் தனைத்தள்ளத் தர்மமோ பள்ளா! 462

தர்மத்துக் கிந்நேரந் தான்பொறுத் தேன்முன்போல்
வர்மம்பா ராட்டியென் மனையைவிட் டேகாய் 463

ஏகுமென் றுரையாதே எனைமரு வியும்மதன்
சோகந் தணியும் மெத்தச் சுகந்தரு வேன்நான்! 464

சுகந்தர யிளையாள்என் சொந்தக்கா ரியமுண்டு
அகந்தைகள் பேசாதே அப்பாலே போடி! 465

அப்பாலே போஎன அதட்டாதே தயவுகந்
திப்போதென் னுடன்கூடி இருக்கவா பள்ளா! 466

இருக்காமல் போவேனோ இளையபள் ளியைக்கூடி
மறக்கேண்டி! உனைவிட்டேன் வஞ்சகப் பள்ளி! 467

வஞ்சகி யானாலும் மனதுச கித்திப்போ
பஞ்சணை மீதிலே படுக்கவா பள்ளா! 468

படுக்காமல் போவேனோ பாரியி ளையாள்கிட்ட
முடுக்காய்ச்சொல் வதுமென்ன மூசாம்புக் கள்ளி! 469

மூசாம்புக் கள்ளிதன் மோகத்தில் விழுந்திந்த
பாசாங்கு வித்தைப டித்தாயோ பள்ளா! 470

படித்துப் படித்துப்பேசிப் பசப்பவந் தாயிப்போ
இடித்தடித் தேஉன்னை இழுத்துதைப் பேண்டி 471

இழுத்திழுத் துதைக்கநான் இப்படி யலையவும்
எழுத்தோ சிவன் செயலோ ஏதென்ற றியேன் 47

அறியேன் அறியேனென் றழுகாதே என்முன்னே
மரியாதை யுடன்தாண்டு வச்சாரிப் பள்ளி! 473

## மூத்தவள் சீற்றம்

### எண்சீர் விருத்தம்

தென்பனக நாதரடி யாளென் றென்னைச்
சிந்தையிலெண் ணுமலும்வை கோலஞ் செய்தும்
வம்புகளால் ஏசியுப்வச் சாரி யென்றன்
மரியாதை சேதமது செய்தாய் பாவி
என்பெருமை யால் பொறுத்தேன் இதுவ ரைக்கும்
எத்தனை நாள் சகித்திடுவேன் இனிமேல் பாரேன்
உன்பிழைப்பைக் கெடுத்துனது காலில் குட்டை
உறுதியெனப் பூட்டிவைப்பேன் உணர்வாய் என்றுள் 474

## குடும்பன்

### அறுசீர் விருத்தம்

புருஷரை யடக்கி யாளப் பூவையா லாவ துண்டோ?
துரிசது மாறி போடி சொல்லடி வேண சாடி
வருவது வருக நாக மலையரன் அருள்உண் டென்று
தெரிவைநல் லிளையாள் வீட்டில் சேர்ந்தவன் சுகித்தி ருந்தான் 475

## மூத்தவள்

### கலிப்பா

பெண்ணையா றென்னவைத்த பெம்மான் திருவடியார்
எண்ணையார் பூந்தைலம் ஏற்றகுழல் மூத்தபள்ளி
தண்மையார் தன்கணவன் தன்களவெல் லாம்விரித்து
பண்ணையார் தன்னுடனே பகரவென்று தான்நடந்தாள் 476

### சிந்து

ஆவ லாய்மதன் ஏவல்புரியும்
அழகு யர்ந்தவி நோத மடந்தை
பூவை யாம்திருச் செங்கோட்டுப் பள்ளி-வை
போக மாய்அன்னம் போலும் நடந்து

காவ லார்பணி மாமலை மேவும்
கடவு லார்பண்ணைக் காரர்முன் வந்து
தேவ ரீர்பதம் நாயடி யேன்தினம்
திக்குநோக்கித்தெண் டனிட்டேன்சாமி! 477

வேண்டும் நாயடி யாள்உன் னடிமை-ஓர்
விண்ணப் பஞ்சொல்ல வந்தேன்நா னுண்டே!
ஆண்ட வர்அது கேட்டுநான் கேட்டிடும்
அப்ப ணைசெய்ய வேணுங்காண் ஆண்டே!
நீண்ட பார்மிசை எங்கள்பி ழைப்பையும்
நீதி யாக விசாரியும் ஆண்டே!
மீண்டும் வந்தேன்உன் பாதங்கெ தியல்லால்
வேறே யாதர வில்லையென் னுண்டே ! 478

என்க ணவன்கொ டுமைக ளெல்லாம்
இதுவ ரைக்கும் பொறுத்திருந் தேன்நான்
வங்க ணஞ்செய் நடத்தைகள் எல்லாம்
வறிவ சமாய்உ ரைப்பேன்கேள் ஆண்டே
மங்கை யாளிளை யாளுடன் கூடியென்
வாழ்வெ லாங்கெடுத் தூதாரி செய்தான்
உங்க ளோடுமுன் னுமு ரைத்தேன்-அதை
உறுதி யாய்விசா ரிக்காமல் போனீர் 479

தன்மம் தப்பிந டப்பவள் அல்லவென்
தந்தை நீரென்று தான்முறை யிட்டேன்
வன்மம் பாராட்ட வில்லை,அ வன்செயும்
வாதை யால்மெத்த வேதனை யானேன்
நன்மை செய்தென்னை ரட்சியும் இன்னம்
நழுக விட்டிடு காதேஎன் சாமி!
செம்மை யில்லாத பள்ளன் களவது
செப்ப வேஒரு அப்பணை சொல்லும்! 480

## பண்ணைத்தலைவன்

### கலிப்பா

பனகா சலர்க்குகந்த பைங்கொடிசெங் கோட்டுப்பள்ளி
அனுசார மாகவுன்னை ஆதரிப்பேன் பள்ளனவன்
தனதான பண்ணையத்தில் தான்களவு செய்தவெல்லாம்
மனதாரச் "சொல்லுமென" வஞ்சிநல்லாள் கூறினளே! 481

### மூத்தவள் முறையீடு

மங்கையினை யாளுடைய தங்கைவந்தா ளென்று மூத்து
மாலையும் நிறையெழுத்துச் சேலையுந்தந் தான்
குங்குமச்சம் பாநெல்லன்ப தின்கலம்விற் றிளையவள்
கொண்டைக்குக்கொப் பியும்சிறு தண்டையும்செய் தான். 482

மங்கலச் சம்பாவிலொரு ஐங்கல நெல்லெடுத்து
வட்டிக்குப் பழனிவேல செட்டிக்களந் தான்
நங்கையாள் மகள் சாரங்கி தன்கலியா ணங்களென்று
நாள்விருந்துக் கேழ்சலகை லாவனம்விற் றான் 483

பின்பருமை யும்கலைய தன்பெருமையுங் குலையப்
பேய்த்தண் ணிக் களந்தநெல்லிம் மாத்திரமில் லை
கும்பமுலை யாள் இளையாள் தம்பிவந்தா ளென்றுநல்ல
குரும்பைப்பூ ரேஞ்சுவாங்கு விசும்பாய்த்தந் தான். 484

இன்பமுட னேயிளை யாள்க் கம்பதுபொன் னுக்குநல்ல
இங்கிதமாய்ச் சிவதாரச் சங்கிலிசெய் தான்
அம்புவிழி யாள்க்கிருபத் தொன்பதுசா ணுரக்காசில்
அட்டிகை சிந் தாக்குநெற்றிச் சுட்டியும்செய் தான். 485

நூதனஉ றவாய்வந்த மாதரசி தங்கைக்காடி
நோன்புக்குச் சேலைவாங்கி வீம்பாய்க்கொடுத் தான்
கோதையர்க்கு நாளுவீடு போதரவாய்க் கட்டிவைத்து
குடிபதித் தான்எனையிப் படிசதித் தான். 486

தோதகியுடனேமாதமாதமதுவாய்ப்படுக்கத்
    தூங்குமஞ்சம்காங்குமெத்தைவாங்கிக்கொடுத்தான்
வாதுசெய் யிளையாளுட சோதரி வடிவழகி
    மச்சானை யக்காளைப் பார்க்க பச்சமாய் வந்தாள் 487

சட்டமுடனேஅவளோடெட்டுநாள்கலந்தணைந்து
    சந்த்ரகாவிச்சேலையொன்றுதந்தனுப்பினான்
திட்டமிகுமணல்வாரிஎட்டுபொதிநெல்லைவிற்றுச்
    சித்திரகாளாஞ்சியொரு குத்துவிளக்கும். 488

வட்டக்கிண்ணிரண்டும் மொருதட்டமும் செப்புக்குடமும்
    வாங்கிக்கொடுத்தான் என்னேரம் தூங்கிக் கெடுத்தான்
வட்டிக்கும் கடனுக்கென்னும் மட்டில்லா நெல்லையளந்து
    மானமும் கெட்டான் எவர்க்கும் ஈனமும் பட்டான் 489

சித்திரைக்கா ரெண்கலநெல் முத்தனுசாரிக்களந்து
    தெய்வத்துக்குடைமையென்றுசெய்வித்தானவன்
பத்து சலகைநெல்விற்றுமுத்திக்குடைமைசெய்வித்து
    பட்டப்பகலிலவள்கிட்டப்படுத் தான் 490

அத்தைமகளுக்குக்காரைசத்துச்செய்வித்துக்கொடுத்து
    அஞ்சுநாள்அவளைக்கூடிகொஞ்சியிருந்தான்
சித்திரக்காலில்செந்தாழைமுத்துச்சம்பாநூறுகோட்டை
    சேதாரமாவீண்செலவுஊதாரிசெய் தான். 491

மல்லிகைசம்பாவெண்கலம்நல்லய்யசெட்டிக்களந்து
    மாமனுக்குப்பட்டுக்கம்பிச்சோமனெடுத்தான்
முல்லைப்பூச்சம்பாஎண்கலம்இல்லத்தில்மாதச்செலவு
    முழக்கம் பழயநெல் உழக்கில்லை காண்! 492

சில்லரைச்செலவுவாங்கிநல்லய்யசெட்டிக்களந்த
    செஞ்சாலி யும்சலகை அஞ்சா றுண்டு
நல்லகள்ளுக் கேயளந்த நெல்லதுக ணக்குமில்லை
    நாட றியும் இவன்காற் கோடகன் ஆண் டே! 493

## வேறு

ஒத்துடன் வாழான் - அடியவள்
புத்தியுங் கேளான் - வரவர
ஊரையும் பகைத்தான் - அவன்அவ
வோரையும் நகைத்தான்
சற்றவளைப் பிரியான் - பிரிந்தும்வி
டுத்துமிருந் தறியான் - இளையவள்
தன்னைத் தான்மகிழ்ந் தான் - புறத்தியில்
என்னைத் தான்இகழ்ந் தான்
மெத்தவும் ஏசிடு வான் - படுவான்
குத்திரம் பேசிடு வான் - எனதுட
வீட்டினி லும்படுக் கான் - பட்டிவயல்
காட்டினி லும்படுக் கான்
உற்றதென் றேதுரை யான் - இளையாள்உ
தைத்திடி னும்பதை யான் - அவன்எனக்
குடுத்த வுந்தா ரான் - என்னைக்கண்
எடுத்த வன்பா ரான். 494

பேரா கப்பிழைத் தான் - வீணாக
ஊரா ருக்குழைத் தான் - பணத்தையும்
பேய்த்தண் ணிக்கிரைத் தான் - கனம்பெறும்
வார்த்தை யைக் கரைத் தான்
மீறு மலிருந்தா லும்என்மொழி
ஏறு மல்பிரிந் தான் - இளையவள்
விழுமென் றுல்விழு வான் - பிறகவள்
எழுமென் றுல்எழு வான்
ஆரா டிப்படு வான் - எந்நேரமும்
போரா டிக்கெடு வான் - எனதுட
அருமை யைக்குறைத் தான் - அவனுட
பெருமை யைமறைத் தான்
சாரா யக்காரி - மகள்சின்ன
வீராள் ஒப்பாரி - இரண்டது
தனக்க ளந்தநெல்லோ - மிதங்களும்
கணக்கில் லையாண்டே! 495

வேலைக்கி இவளாம் - தனதுட
லீலைக்கி அவளாம் - மேல்வெறும்
வீம்புக ளடிப் பான் - அவள்தொடை
நாம்பி யும்பிடிப் பான்
மாலைக் கம்பது பொன் - ஒசந்திடும்
சேலைக் கம்பது பொன் - அவளிங்கே
வந்த தும்பை யை - அவிழ்த்திவன்
தந்த தும்மெய் யே!
தாலி கட்டின நாள் - முதலின்றும்
வேலை யிடட றி யான் - அவளிவன்
சாமியாமென வே - என்னேரமும்
காம பூசைசெய் வான்
வாலி பத்தினி லே - சிறைக்கிடம்
கோலி வைத்தெனை யே - எனதபி
மானத் தைகெடுத் தான் - அவன்வெகு
ஈனத் துக்கடுத் தான் (495)

உல்லா சத்தினி லும் - மிகுந்திடும்
சல்லா பத்தினி லும் - புடவையும்
ஊண்க லவியிலும் - பணங்களை
வீண்செ லவுசெய்தான்
தில்லா யம்முடிப் பான் - வெறுங்கல்வி
இல்லா தும்படிப் பான் - செல்வங்களைச்
சிந்தி யேகெட் டான் - எனைத்தெரு
மந்தை யில்விட் டான்
மல்லா ரிச்சிறுக்கி - நயகுணம்
இல்லா ளைச்செறுக்கி - பணங்களை
வாட்டுக் கேஒழித் தான் - கோவலன்தன்
பாட்டுக் கேஅழித் தான்
கல்லாம் நெஞ்சனை யும் - பழிசெய்யும்
பொல்லா வஞ்சனை யும் - பிடித்திரு
காலில் குட்டையு மே - சடிதியில்
கோலு வீராண் டே!

பங்க முற்றவ ளாம் - அதிகப்ர
சங்கங் கற்றவ ளாம்
    பாசாங் குப்பள்ளி தான் - மிகுந்திடும்
    மூசாம் புக்கள்ளி யாம்
வங்க னக்காரி - சவுத்திசீ
ரங்க வச்சாரி - புருஷனை
    மருந்தி னில்மயக் கி - அருகினில்
    இருந்தி டத்தியக் கி
தன்கை வசமாக் கி – எனது ஆ
லிங்கனம் வேம்பாக் கிப் - பிழைப்புத்
    தன்னைமு முகவிட் டான் - துரத்தி
    என்னை ந முகவிட் டான்
மங்கை வந்ததுவும் - கலந்துசு
கங்கள் தந்ததுவும் - வருங்கன
    வருத்தை யுந்துறந் தான் - சிவநிலைக்
    கருத்தை யும்மறந் தான்! 496

விரிகொம் பன்தனை யும் - பெரிய
சொரிவம் பன்தனை யும் - பதினெட்டு
    வெள்ளைக் குக்கொடுத் தான் - கொழுந்தியாள்
    பிள்ளைக் கிட்டெடுத் தான்
வரிகண் டங்கெணி யான் - எவரையும்
குறிகண் டும்பணி யான் - எனையவன்
    மனதி லுங்குறி யான் - அவள்தனை
    கனவி லும்பிரி யான்
சரியென எவரும் - மொழிந்தனன்
அறியும் இன்றிவனை - கடுஞ்சிறை
    சாலையில் போட்டால் - வளைவான்
    வேலையி லிவனும்!
பிரியவும் வினையால் - இளையவள்
பரிவையும் நினையா - மல்அவனைப்
    பிடித்தது பிடியாய் - குட்டையில்
    அடித்திடும் ஆண்டே! 497

வேறு

விந்தையுட னேகிளியை
வேடிக்கை யாய்வளர்த்து
சந்தோஷ மாகவைத்துத்
தாபரிப்பவர்
சந்ததித ன்னையும்ரா
சாளிகையில் ஒப்பிவைத்து
கந்தவர் பார்த்திருந்த
கதைபோலும் 498

மானினத்தை யேவளர்த்து
மாட்டினுட னேஅடைத்தும்
கானமயி லுங்கோழி
கட்டி விட்டதும்
ஈனவித்தை யென்றெண் ணுமல்
ஏற்கசெய் தவர்போலும்
தான் இதம தாகஎந்தன்
தாய்த கப்பனும் 499

அருமையுட னேமெத்தவும்
அபிலாஷை யாய்வளர்த்துப்
பெருமையுட னிவர்க்குப்
பெண்டெனச் செய்தார்
மருவுமலர் மாலையது
வானரங் கையினிற்படும்
சிறுமைபோல் நானுஞ்சிக்கிச்
சீரழிந்தேன்! 500

மட்டார்கு ழலியர்கள்
மதன்சம ரேபுரிவார்
முட்டாளுச் சண்டை விட
முடிவா மோ?
ஒட்டாரஞ் செய்வதுநான்
பட்டபா டதுஞ்செங்கு
வட்டார்க்கெல் லாந்தெரியும்
வகை யறிவீர்! 501

வேறு

நம்முடைய சேதியின்னம் சொல்ல வென்றால் - ரெண்டு
நாள்செல்லு மவன்கொடுமை பாதியின் பக்கம்
செம்மைக ளில்லாதுவிட்டு மற்றவை யெல்லாம் - இப்போ
தேவரீர் பாதத்தில்வந் தறிக்கை யிட்டேன்
உம்முடனே சொல்லிக்குறை யாறிக் கொண் டேன் - இனி
உங்கள் சித்தம் என்பாக்கியம் உத்தமனே!
அம்மைபரி மளவல்லி பாகம்பிரியா தவர்
ஆகமகிழ்ந் திடும்பண் ணை யாண்டவனே! 502

வேறு

கொடுமையை நான்சாமி சொல்வதில்லை - உள்ள
கொள்கையிது நிசங்கண்ட றியும்!
அடிமையும் நான்பொய் சொல்வதில்லை - ஊரில்
அனைவர்க ளும்நன்றாய் அறிந்திருப் பார்
கெடுமதி யாம்பள்ளன் தனையழைத்து - மெத்த
கேவலஞ்செய் துறுக்கி மிரட்டியுமே
தொடுமர மேகாலில் பூட்டிடுவீர் - பரஞ்
சுடர்மலை யார்பண் ணை யாண்டவரே! 503

வேறு

போட்டு மேநெடு நாள்வைத் திருந்து
பொல்லாங் கதுசெய் யாமலே
கூட்டி, வந்துபின் பிணைமுறிகளும்
கொடுக்கச் சொல்லிமுன் னதட்டியே
போட்டி யுங்கொடு மைகளும் விட்டவன்
போலு மெந்தனை நடத்தியே
வாட்ட துசெய்தி டாம லென்மொழி
கேட்டி ருந்திட வேசொல்லிக்
கூட்டி யேஅனுப் பிடும்பின் தூறு
கொண்டு வந்திடு காமலே!
தேட்ட மாயிது கேட்டதி னாலே
தேவ ரீருக்குக் கோபமோ?
நாட்டுத் துரையென் தந்தை யைநிகர்
நாத ராகையால் மெத்தவும்
கேட்டுக் கொண்டனன் நாட்ட மாய்ச்செங்
கோட்டுப் பண்ணையக் காரரே! 504

## கீர்த்தனை

### பல்லவி

வாட்ட மில்லாமல் குட்டையில்
போட்டிடும் ஆண்டே! (வாட்டமில்லாமல்)

### அனுபல்லவி

நாட்டினி லேவெகு மேட்டிமை பெற்றுள
தாட்டிகளும்ப லாட்டியனேயிப்போ (வாட்ட)

### சரணம்

செல்லமதாக இருந்தனன் சீரங்க
வல்லியைச் சேரவும் வந்தது இவ்விதி
தில்லாயக் காரிம ருந்திலகப்பட்டு
நல்லறி வாளனும் புல்லறி வாகினன் (வாட்டமில்லா)

திருட்டுப் புரட்டுக் காளல்ல பள்ளனும்
முரட்டுச் சிறுக்கிபொ ருட்டினால் வந்தது
மிரட்டு ருட்டினில் அடக்கும் பின்னொரு
தொரட்டில் லாமல்மேல் அடித்திடா மலும் (வாட்ட)

கோதை யிளையவள் கொட்டம டங்கவும்
போதமுறும் பள்ளன் புத்திவ ருகவும்
நாதர் பணிமலை நண்பர டிமைகள்
வாதைகள் பட்டுவ ருந்திடு காமலும்
போட்டிடு மாண்டே - குட்டையில்
போட்டிடு மாண்டே! 505

வேறு

பயமு றுத்தினல் மிரண்டு மெத்தவும்
பயந்து போவான் என்கணவன்
வயிர மரத்தில் குட்டையில் போட்டால்
வருத்தப் படுவான் என்கணவன் 506

கடுமை யாகிய காவல்செய்தால் - மனங்
கலங்கிப் போவான் என்கணவன்
அடிய தொன்றவன் மேல்விழுந்தால் - மெத்த
அதிர்ந்து போவான் என்கணவன் 507

நலமி லாநாளில் குட்டையில் போட்டால்
நாட்செலு மென தாண்ட வனே!
புலனறிந்துநல் வேளையில் குட்டையில்
போட்டிடும் பண்ணை யாண்டவனே! 508

வெண்டுமரத்தில் குட்டைகள் சேர்த்து
மெதுவ தாகவே ஆப்பறைந்து
அண்டர் பிரான்அர வாசலர்க் கேற்க
அடித்திடும் பண்ணை யாண்டவனே! 509

## பண்ணைத்தலைவன்

### அறுசீர் விருத்தம்

கட்செவி மலையார் பண்ணைக்
காரரும் இவள்சொல் கேட்டு
மெச்சியே மகிணன் மீது
விகடமும் வினைய மோர்பால்
பட்சம தோர்பால் வைத்துப்
பாங்குடன் மொழிந்தாய் உன்சொல்
நிச்சயப் படியே செய்வேன்
நீமனைக் கேகு மென்றார் 510

## மூத்தவள் துயரம்

### அறுசீர் விருத்தம்

துதிபெறும் நாக வெற்பார்
துணையென எண்ணி வாடி
மதிமுக வனிதை தானும்
மனைதனில் வந்தி ருந்து
சதிசெய்தோம் மகிணர்க் கென்று
தான்நெடுந் துயர மாகி
விதியினை நொந்து கோதை
வேணியைப் பணிந்து சொல்வாள் 511

### சிந்து

#### பல்லவி

என்னசெய்வேன் நான்ஐயோ விதியே - நல்ல
பன்னகமேர் மேவுஞ்சூல பாணியேபார் வதியே! (என்ன...)

#### சரணங்கள்

புருஷருக்குச் சாடிசொல்ல லாச்சே - கொண்ட
புருஷர்குல தெய்வமென்னும் புகழதும்வீ ணாச்சே
கருமம்அநி யாயம்வந்து போச்சே - இவள்
கன்னகையென் றென்குலத்துக் கன்னியர்க்கு மேச்சே
பெருமைகெட்டிப் படியலை வேனோ-என்னைப்
பெண்ணெனவே மண்ணெடுத்துப் பிரமனேன்செய் தானோ?
பருவிதனங் கொண்டு தவிப் பேனோ - எங்கள்
பன்னகமே ரையரென்மேல் பட்சமில்லை யேனோ? (என்ன) 512

குற்றம்பாரா ட்டலாதென் றுலும் - பாவி
கொடுமைசெய்த வளுடனே கூடினதி னாலும்,
சிற்றறிவ தானமனத் தாலும்,-துரோகி
சித்தசன்உ பாதையாலும், சென்றவர்முன் னாலும்

பற்றவைத்து வந்தேன்பழி போமோ?-இனி
　　பாடிப்பாடிக் குத்திடினும் 'பதர்அரிசி' ஆமோ?
கர்த்தருட தன்செயலெ தாமோ - எங்கள்
　　கட்செவிமே ரையருக்குப் பட்சமென்றைக்காமோ (என்ன)

மகிணரெது செய்யினும்பெண் மாது - கொஞ்ச
　　வார்த்தைசொல்லி யம்பலத்தில் வைத்திடலா காது
தகுமிவளை வைதடிப்ப தீதும் - பின்பு
　　தானம்பண்ண வீசல்விற்கத் தாளுகுமெப் போதும்
மிகுவளநளாயினிமுன் னாலே - கூடை
　　மீதினிற்சு மந்துபதம் மேவினளிப் பாலே
வெகுபிழைகள் செய்தனெருக் காலே - கோதை
　　வேணியர்க டாட்சமென்று மேவுமோஎன் மேலே (என்ன) 513

காதலனார் அதிபிரிய மாக, -அதி
　　காரஞ்செய்வோ ருடன்சொல்லிக் கணவன்மனம் நோக
வேதனைசெய் வித்துஉற வாகப் - பின்பு
　　வினையமுன் னிருக்க இன்பமேவருகா தாகா
ஆதலினால் இவர்பிரியம் வேணும் - நம(து)
　　ஆசையிலொன் றில்லைசெல்கா லங்கள்வர வேணும்
மாதவர்செங் கோடர்செயல் வேணும் — பேதை
　　மதியிலிது செய்தோமையர் மன்னித்திட வேணும் (என்ன)

## அறுசீர் விருத்தம்

மங்கையுங் கலங்கிக் கண்ணீர்
　　வாள்விழி யருவி சோரக்
கொங்கையுந் துகிலந னைந்து
　　குங்குமச் சேற தாடச்
சங்கரன் துணையே என்று
　　தானவள் இருக்கும் போது
கங்குலும் விடியப் பண்ணைக்
　　காரரும் எழுந்தி ருந்தார். 515

## பண்ணைத்தலைவன்

### சிந்து

காவலனை யழைத்துகோலுக் காரன்தனை யே - மெத்தக்
கடுக அழைத்தவனைப் பார்த்துமொழி வார்
கோவலர் வயலில்கிடை போட்டு இருக்க - பள்ளன்
கூட இருந்துகோளாறு சொல்லாமல வன்
ஆவலுட னேஇளைய பள்ளிமனை யில் - வந்து
அந்தரங்க மாயிருக்கி றானவனை யும்
தீவிரம தாகவோடிக் "கூட்டி வா"என் ன-அவன்
சீக்கிரமாய் வந்து' பள்ளா பள்ளா" என்ன வே 516

அந்தமொழி கேட்டிளைய வஞ்சியெழுந் து - மெத்த
அன்புடைய கோலுக்காரன் அருகில்வந் து
மந்தைகொண்டு வந்திடையர் வயலிலிருக் கப் - பள்ளன்
வந்தவனிங் கிருந்திட மனம்வரு மோ?
முந்தாநாள்போ னவன்இன்னந் தான்வரவில் லைசோறு
மூத்தபள்ளி கொண்டுபோயி வார்த்துவாரு ளாம்!
எந்தவேளை யும்பள்ளனிங் கிருப்பது போல் - நீயும்
இங்கேயிங்கே வாறதென்ன கோலுக்காரண் ணே? 517

### முடுகு

ஆமடி! தகடி!! யானை மாருடிதி னம் - செய்வ
தடைவல்ல வென்றாலும்நீ விடுவதில்லை யோ?
ஊமைபோலே பள்ளனுள்ள றையிலிருக் க - நீவந்
தோதுறாய்நான் உன்மனையின் உள்ளேபுகுந் து
தாமவன்த னைப்பிடித்தி ழுத்துவரு றேன் - என்று
தான்சொலவும் பள்ளன்மோசந் தான்வந்ததென் று
காமன்போல வேகுடும்பன் வெளியில்வந் து - கோலுக்
காரனைக்கண் டன்புடன்க னிவுபே சி 518

ஆயர்கிடை தன்னிலிருந் திப்பத்தான்வந் தேன் - மெத்த
ஆயாசம தாயிங்கேஅ சந்துபடுத் தேன்
நீயதுக்குள் ளாகவந்தாய் பெண்மதியா லே - இந்த
நீலியும்பொய் சொன்னாள்திட் டூரஞ்செய்யாதே!
தாயகமல் லாமல்நம்முள் பேதகமுண் டோ? — இது
தானோர்காரி யம்போலாண்ட வர்க்குச்சொல்லா தே!
நேயமுடன் போவோம்வாரு மென்றுநடந் து - பண்ணை
திருபர்முன் வந்துபள்ளன் நின்றுபணிந் தான். 519

## குடும்பன் கூறுதல்

### அகவல்

அண்ணலார் கோதை ஆண்டவர் தமது
பண்ணையத் ததிபர் பட்சமும் பரிவும்
நயகுணம் ஈகை நல்லற நெறியும்
தயவதும் மிகுந்த தர்மகு ணாளா!
காந்திசேர் திருவென் கமலநா யகியும்
சேர்ந்துவாழ்ந் துலவுந் தெய்வநா டென்று
புவனமே பணியும் பூந்துறை நாட்டில்
சிவனுட பண்ணைச் செங்கோல் செலுத்தும்
ஐயனே உமது அப்பணைப் படிக்கு
செய்யும்நா யடியேன் சென்றுகோ வலர்தம்
மந்தையும் ஓட்டி வந்துமே வயலில்
முந்தநாட் கிடைதான் முதலெனப் போட்டு
ஒழுங்கெனக் கிடைபோட் டூரமது வயலில்
விழும்படி யவர்க்கு விபரமும் உரைத்து
இந்தவிர்த் தாந்தம் எசமா னுடனே
வந்துநாம் சொல்லி வருவோ மெனவே
கூட்டியே வந்த கோவலர்க் குரைத்து
வீட்டினில் வந்து மெய்யிளைப் பாறி
வருவமென் றெழுந்தேன் வந்துதண் டலனார்
வருகவென் றழைத்தார் வந்தனன் சாமி!

ஆதர வாக அடியவர்க் கினி மேல்
ஏதுஊ ழியங்கள் இயம் பிடும் சாமி!
சொன்னசொல் தவருத் தொழும்பன்நான் அறிவீர்!
மன்னவா உனது மலரடி சரணம்! 520

அறுசீர் விருத்தம்

சடை யனுர் அடிமைப் பள்ளன்
தானிது மொழியப் பண்ணை
உடையவர் கேட்டுக் கண்ணை
உருட்டிடிய மிரட்டி உந்தன்
கடைதனை விரிக்க வேண்டாம்
கண்டறி வோம்அத் தாட்சி
இடையரும் வயலில் மந்தை
எங்கெங்கே போட்டார் சொல்வாய்! 521

*கலிப்பா*

கர்த்தர்செங்கோட் டையர்பண்ணைக் காரரிவன் சூதறிந்து
அத்தாட்சி பார்க்கமந்தை ஆகியதெங் கெங்கேயென்ன
குற்றம்வந்த தென்றுபள்ளன் குறிப்பதறி யாமல்நின்று
உற்றபூர் வீகநிலை உண்மையது கூறினனே! 522

## ஆட்டுக்கிடைவிபரம்

சிந்து

ஆலடியிலுங் குருந்தடியிலும் ஆத்தியடியிலும்
ஆதிக் கோன்கிடை போட்டிருந்தனன் அதற்குச் சாட்சிதான்
பாலினைப்புலிக் காலன்செல்லாப் பணத்தைச் செலுத்திஞேன்
பாலனைக் கறியாக்கி ஞரிவர் பார்த்திருந்தனர். 523

வட்டமூலை வயலிலுந்திரு நட்டநிலத்திலும்
வளருமன்ப ரிடத்திலும் புகழ்மாரன் பதியிலும்
அட்டகோணமும் அளவிலா விளையாட்டை நிறுத்தியே
அம்பலப்பட்டி யாகினர் திருவம்பலக் கோனுர் 524

கொடிமுல்லையிலும் மருதநிலமும் குறிஞ்சி நிலத்திலும்
குளிர் நெய்தலில் பாலைநிலத்தில் கோவிந்தக்கோனார்
வடிவினில் சகத்திரவிழி யுறுமருத்துவக் கோனார்
மலையெலாம் நமதெனவுலவியே வாழ்ந்திடு முருகோன் 525

ஆதிக்கோன் கிடை பாலைக் கிழத்தியாள் சிற்றிடைச்சியும்
அங்கங்கேகிடை போட்டிருந்திடு மாயங்களறிவேன்
சோதனையிதுமெய் பொய் யறியச்சுருதி யாரமாய்ச்
சூட்டிடு முத்துக் காளிஐயரைக் கேட்டிடும் ஆண்டே! 526

## பண்ணைத்தலைவன்

### கலிப்பா

கோட்டிறைவர் பண்ணையத்தின்
கொள்கையைநான் கேட்குமுன்னால்
மாட்டுவகை நெல்வகையும்
மார்க்கமெனவே உரைத்தான்
தேட்டமுடன் கேட்டதெல்லாந்
தில்லுமல்லே சொல்லுகிறான்
கூட்டமெலாங் கேட்டீர்களோ
குடும்பனுட சொல்புரட்டை! 527

### எண்சீர் விருத்தம்

சுந்தரர்செங் கோட்டரனார் அடிமை மின்னாள்
சொல்தவருச் சுந்தரப்பெண் மூத்த பள்ளி
வந்தவள்சொல் வதுங்கொடுமை யென்றிருந்தேன்
வரவரத்தான் தெரிந்ததிவன் வர்த்த மானம்
சிந்தையொளிந் திட இவனைக் கொண்டுசென்று
சிறைக்கூடந் தனிலடைத்து வாருமென்ன
சந்திரசேகரநயினார் பாதம் போற்றித்
தன்பிரதா பங்கள்பள்ளன் சாற்று வானே! 528

## குடும்பன் கெஞ்சுதல்

சிந்து

கொடிமுடிந்து வழக்கிடுவாள் படிமாறி யென்மூத்தாள்
அடியன்மிசை யதுகொண்டுநீ பிடிவாதஞ் செய்யாதே ஆண்டே !

முட்டவுமென் குடியைக்கெடுத் திட்ட முழுநீலி
தட்டவட்டக் காரிசொல்லை விட்டுவிடும் ஆண்டே! 530

மெத்தஅப சாரஞ்செய்தேன் உத்தமனே உமது
சித்தமகிழ்ந் தடிமைசெய்த குற்றம்பொறுத் தருளும்! 531

ஏறுமாற தேஉரைத்து சீறுகின்ற மூத்தாள்
தூறுசொன்ன போதும்என்மேல் காறுபார்செய் யாதே. 532

என்னையவள் தூறியும்மோ டென்னசொன்ன போதும்
பின்னபேத கஞ்செய்தெனைச் சின்னஞ்செய்தி டாதே! 533

காத்தருளும் மூத்தகுடி கூத்துவனாய் எனக்கு
வாய்த்திருக்கி ருள்முடியப் பார்த்தருளும் சாமி! 534

சொல்லுவதெல் லாம்பொய்யவள் தில்லுமல்லுக் காரி
பொல்லாப்புகள் சொல்வாளது எல்லாம்வரத் தெரியும்! 535

நிருத்தர்பணி மலையரனின் பெருத்தபண்ணை யாண்டே!
வெறுத்தவள்எ ன்மேல்சொ ன்னதும் பொருத்தருளவேணும் 536

## தலைவன் உத்தரவு

### அறுசீர் விருத்தம்

முன்னமே பசப்புப் பள்ளன்
முகத்தினில் முழிக்கொ ணாது
என்னதான் சொன்ன போதும்
இவன்சொலை நம்பொ ணாது
பின்னுமுன் பாரா மல்தான்
பிடனியைப் பிடித்துத் தள்ளி
சொன்னதோர் சிறைக்கூ டத்தில்
துரிதமாய் அடையு மென்றார். 537

### எண்சீர் விருத்தம்

காவலனுர் சொன்னபின்பு கோலுக்காரன்
கடிந்துபள்ளன் தனையிழுத்துக் கொண்டுபோயி
மேவுசிறை தனிலடைத்து வந்தான் பண்ணை
வேந்தனுமே தச்சனையும் அழையு மென்றுர்
சேவகரும் வந்துபண்ணைக் காரர் உன்னைச்
"சீக்கிரமாய் வருக" என்றுர் "வாவா" என்ன
ஆவலுட னேயெழுந்தா சாரி பண்ணை
யாண்டவர் முன் பாகஇவன் வருகின் றுனே! 538

## ஆசாரி வருதல்

### சிந்து

நெற்றியி லேதிரு நீறது மிட்டு
மற்றதின் மேலொரு திலதப் பொட்டும்
நேர்ந்தி டுங்குழை யிரண்டி டீரிலே - இணை
சேர்ந்த குண்டல முமு
பற்றிய திருப்பொற் காப்புங் கையில்
வெற்றிலை யும்வா யிலொ துக்கியே
பருத்தி டுந்திரு மார்பினி லே - சந்தனம்
தரித்த பூனூ லும்
சிற்றுளி யுந்தகட் டுளியும் வாச்சியும்
வைத்தொரு தோளில் கொட்டாப் புளியும்
திட்டமி குந்தலைப் பாகுடன் துப் - பட்டி
பட்டஞ்சிச்சோ மனும்
சத்துடன் மோதிரம் பூண்ட வன் - சிவ
பத்தியு டன் பண்ணை யாண்ட வன் - முன்பு
தச்சன் பழனி யாசா ரியுந் தான் - வெகு
உச்சித மாய்வந் தான் 539

### அறுசீர் விருத்தம்

பழனியா சாரி வந்து பண்ணையாண் டாரைக் கண்டு
வளமையாய்த் தெண்டனிட்டு வரவழைத் திட்ட சேதி
உளமகிழ்ந் துரையு மென்று உரைத்திடப் பண்ணை யாண்டார்
விழியது சிவந்து கோப மென்னவே கூறு வாரே! 540

பளகஞ்சேர் நாக வெற்பார் பண்ணையி லிருந்து பள்ளன்
களவது மெத்தச் செய்தான் கணக்கில்லை மிதமு மில்லை
அளவுடன் குட்டை சேர்த்தி அவனுட காலில் பூட்டி
நளினமாய் வாடா! என்றார் நல்லதென் றேகி னானே 541

ஏகியோர் குட்டை சேர்த்தி இடும்பைசெய் குடும்பன் காலில்
வாகுடன் போட்டு விட்டு வந்து மன் னவர்க்குச் சொன்னான்
போகென விடைகொ டுக்கப் போயினான் தச்சன், பின்பு
ஏகநா யகரைப் பள்ளன் இறைஞ்சியே புலம்பி னானே. 542

## குடும்பன் கடவுளை நினைந்து கசிதல்

### சிந்து

நாகப்பொ ருப்பில்வளர் நாதனே - திரி
லோகர்க்கி ரங்கியபொற் பாதனே
மோகத்தை யேமுனிந்த யோகியே - உமை
தேகத்தி லேநிறைந்த போகியே 543

புனலும்பி றையணிந்த வேணியே - அன்பர்க்
கனவர தம்உகந்த பாணியே
அனங்கன்த னையெரித்த சோதியே - மூவர்
யாவர்த மக்குமுத லாதியே! 544

இன்பமெ னஇருந்தென் மீதிலே - ஐயா
அன்பகன் றதென்னஇப் போதிலே
முன்புதான் செய்தபிழை நேரமோ - எனை
வம்புசெய் திடுங்கிரக சாரமோ? 245

ஏதென் றறிவேனிந்தமாயமே - எவர்க்
கெதுவருவதும்உன்உபாயமே
வாதைசெய்யாமலென்னைமெய்யனே - குட்டை
யேதவிர்த்திடுஞ்செங்செங்கோட்டையனே! 546

அறுசீர் விருத்தம்

பள்ளனிப்படிப்புலம்பிப்பரதவித்திருக்கும்போது
கள்ளவேல் விழியாள் வாலகன்னியாமிளையபள்ளி
துள்ளவேகணவன் தன்னைத்தொழுவிலேபோட்டசேதி
மெள்ளவேகேட்டுவந்துவிம்மியேபுலம்பினாளே 547

## இளையவள்

சிந்து

படிமாறி செங்கோட்டுப் பள்ளி
தலைநாளில் - கைகொடுத்த
பர்த்தாவென் றெண்ணாமல் கள்ளி

துடியாகத் தான்குதித்து ஓடி
இல்லாதும் - பொல்லாதும்
சொன்னாளே ஆகாசச் சாடி

குடிகேடி நீலியிவள் கண்டாய்!
உரிமையென்று - சீராடிக்
குடிகெடுக்க வோஅவளைக் கொண்டாய்!

அடியாளுக் கெப்படிசொல் விள்ளாய்
அரவகிரி - மலையில்வளர்
ஐயரடி யாரடிமைப் பள்ளா! 548

## குடும்பன்

பழிகாரி மூத்தபள்ளி தூறித்
தில்லாயம் - அதுமுடித்துப்
பண்ணையாண் டாருடனே கூறி

வழியிலே போறகளை வெல்லாம்
என்மீதில் - சுமத்தியவள்
வைத்தாளே இனியென்ன சொல்லாய்

எழுதியவா றதுதவறி டாது
என்செய்வோம் - வாறவிதி
யேவருமல் லாதுவிடு காது

விழிகலங்க வேண்டாமென் முன்னே
என்மனது - பதறுதுதான்
விட்டதெல்லாங் காண்பமடி பின்னே 549

## இளையவள்

மதனரதி போலிருவர் இருந்து
சந்தோஷ - மாய்க்கூடி
வாழும்பி ராயமதில் பிரிந்து
விதனமது பெறஅவகி ஆச்சே
நாமும் நினைந்-திருந்ததெல்லாம்
வீணலோ சனையேனவும் போச்சே
எதுவும்முடி யவும்விசாரி யாமே
நினைத்ததுங்குட் டையில்போட்டால்
என்னவென்று காண்பதறி யோமே
சதுர்த்திசை புகழ்தவள மெய்யா!
அடியார்கள் - சஞ்சலங்கள்
தான்தீர இரங்குசெங்கோட் டையா! 550

## குடும்பன்

மருவுசீ ரங்கரருள் கண்ணே!
எனதுடைய - அதிவிரக
மதனலா கிரிதீர்த்த பெண்ணே!
ஒருவரையும் நீநொந்தி டாதே!
வாறவிதி - வந்ததினி
உள்ளபடி யாகுதடி கண்ணே!

வருகிரக சாரபல னாலே
நயினார்க்குச் - செவிகண்ணும்
வாச்சுதறி யாதவனைப் போலே
அரிவைமூத் தாளிருக்கி றாளே
விடுவிப்ப - தார்பண்ணை
ஆண்டாரை யாகிலும்நீ கேளே! 551

## இளையவள்

பொடிமாறிக் கள்ளியவள் தானும்
தான் போயி - நயினார்க்குப்
பூமலேற் றியிருக்க நானும்
கடிதாக அவர்பக்கல் நடந்து
கணவனையும் – விடுமென்று
காலில்விழுந் தாலவரும் மகிழ்ந்து
பிடிவாதம் விட்டுவிடு வாரோ?
விடுவதில்லை - என்றெனையும்
பிடனிபுடித் தேதள்ளு வாரே!
அடியாள்தன் ஆசைஉயிர்த் துணைவா
மூன் நடக்க - வழிஎன்ன
அதிமோக மேகொடுத்த கணவா! 552

## குடும்பன்

கண்டதர மேதந்த தேனே!
மாயாவி - காரமெனும்
கனைதீர்க்க வேவந்த மானே!
தொண்டியவ ளிட்டநெருப் பாலே
நீபண்ணை - யாண்டவர்க்குச்
சொன்னாலுங் கேளாரிப் பாலே
விண்டுதினம் வந்தனைசெய் கோதை
மலையரசர் - நமக்கின்னம்
விட்ட வழி காண்பமடி மாதே!
வண்டுலவு சோலையிளங் குயிலே!
உந்தனுட - மனைக்கேகி
மனங்கலங்கா திரு!போடி மாயிலே! 553

# இளையவள் புலம்பல்

## அகவல்

திருமகள் மகிணன் சீஹரி வரதன்
மருமலர் துளப மாலிகை மார்பன்
புசபல வீரன் புவிவளர் நாபன்
தசஅவ தாரன் சாமள ரூபன்
சுருதியின் இடமாய் சோமுகன் முதலாய்
வருசிசு பாலன் வக்கிரகன் ஈறாய் 554

காரண மெனவும் கபடம தெனவும்
மாரண மதுசெய் மாயவி நோதன்
யோனிகள் நாலில் உலவெழு ரூபன்
மாநில மதனில் மனுமர பினிலே
காவல னெனவும் கருணையின் வடிவாய்
கோவலன் எனவும் கோலம் உகந்தான் 555

தேவகி பாலன் செனஅனு கூலன்
பாவவி நாசன் பார்மகள் நேசன்
துரியவி லாசன் துவாரகா வாசன்
கருடவி லாசன் கனரிஷி கேசன்
சோதைகு மாரன் சுப்ரச ரீரன்
ராதையின் மோகன் நவநீத சோரன் 556

அளைகள வதுவும் அரிவையர் களவும்
எளிதெனச் செய்தோர் இரவிலோர் மனையில்
ஒளியஅவ் வாயன் உரைப்பனென் றெழுக
விழியதும் பதவி மேன்மையுங் கொடுத்தோன்
பழமது தந்த பாவையி னிடமே
வளமிகு கனியே மணியது செய்தோன் 557

சொலமுடி யாத சூட்சவி நோதம்
உலகினி லேசெய் துளமகிழ் தூயன்
அற்புத வேசிக் கவள்மனைக் கிரவில்
நட்பெனத் தூது நடந்திடு பாதன்
ரங்கமென் றொருக்கால் நாவினில் துதிப்போர்
தங்கள்தீ வினையைத் தகனமே செய்வோன் 558

பள்ளிகொண் டருளும் பதுமத ளாட்சன்
வள்ளலார் தனது மலரடி. தனையே
சிந்தையில் வைப்போர் தெரிசனஞ் செய்வோர்க் (கு)
அந்தகன் இடரை அகற்று சாரங்கன்
நளினவீ டணனும் நாள்தொறும் பூசை
வளமையாய்ச் செய்து வருகுநா ளினிலே 559

"நரர்மிகும் படியால் நாதனீ யினிமேல்
வரவுநில் லாண்டு மாமகத் தொருநாள்
வந்தெனைப் பூசி மன்னவா" எனவும்
அந்தவீ டணனும் அவ்வுரைப் படியே
மாமகத் தொருநாள் வந்துபூ சிக்கத்
தாமது மகனும் சங்குசக் கரமால் 560

தன்னுட பதியில் தான்அவர்க் கடிமை
என்னவே யிருந்து எம்பிரானுடைய
தனதுபண் ணையிலே தலைமையா யிருந்து
மனமகிழ்ந் ததிக வாழ்வது படைத்து
மேன்மையாய் வாழ்கோ விந்தநா ராயணன்
தானவன் பெற்ற தையலார் நால்வர் 561

புத்திரர் மூவர் பூரண மெனவே
பெற்று வளர்த்தே பேரது மிட்டு
அன்னையென் தந்தை அறுவர்ஓர் கண்ணாய்
என்னையோர் கண்ணாய் இனிதுடன் வளர்த்தார்
பொன்னா பரணம் பூட்டியே அழகாய்
மின்னா ருடனே விச்சித் திரமாய் 562

கன்னியார் மதனன் காதலி யெனவே
விளையா டியும்நான் வீற்றிருந் தளவில் — நீர்அங்கே
வந்தெனைக் கண்டு மாமயல் கொண்டு
சிந்தைநொந் துருகிச் சென்றுசீ ரங்கர்
பாதமே பணிந்து "பாரியாய் இவளென்
காதல்தீர்த் திடவே கருணைதா" என்று 563

வேணபி ரார்த்தனே வேண்டியே வந்து
நாணய மெனவே நட்புற் றிருந்து
என்பிதா மனதுக் கேற்றது முரைத்து
அன்புடன் சிலநாள் அனுசரித் திருந்து
"பரவுமக் கெமக்கும் பழையசம் பந்தம்
வரவுபோக் கில்லாவண் மையினுலும் 564

ஊரது தூரம் உற்றதால் உறவுந்
தூரம்ஆச்" சென்று சொந்தமே பேசிச்
சட்டமாய் எனது தாய்மனம் மகிழப்
பட்டுடன் பணிகள் பலவரி சைகளும்
தந்தனுப் பியும்உந் தன்மகள் தன்னே
எந்தனக் கருளும் எனச்சிறி துரைத்து 565

தானுபதியால் தந்தையர்க்கு ரைத்து
நானு விதமாய் நணுகியெந் தனேயும்
பெற்றதாய் தமரும் பிறந்தவர் பலரும்
உற்றபே ரன்போ டுறமுறை யறிய
அக்கினி சாட்சி யாகஎன் கழுத்தில்
தக்கமங் கிலியம் தரித்துஎந் தனுக்குச் 566

சிறுவிரல் கொடுத்து சிநேகித முடனே
மருவுசம் போக வைபவங் கொடுத்துப்
பின்னுமே சிலநாள் பிரியமா யிருந்து
அன்னேயென் தந்தை யர்க்குரை செய்து
"எந்தனூர் விடுத்து இந்தவூர் தனக்கு
வந்துநான் ரெண்டு மாதமும் ஆச்சு 567

இன்பமாய் எம்மூர்க் கேகஉம் மகனே
அன்புடன் கூட்டி அனுப்புவீர்" என்ன
அருமையால் வளர்த்த தாகையால் எனேயும்
பிரியவே மனது பேதலித் தேதான்
மெத்தவே கலங்கி மிகவும்எந் தனுக்குப்
புத்தியு மதியும் போதவே சொல்லி 568

வளமையாய் உமக்கும் வரிசையெந் தனுக்கும்
அளவிலாச் சீரும் அன்புடன் கொடுக்கக்
கொடுத்தசீ தனமும் குறைவற வாங்கி
எடுத்துஓர் வண்டி ஏற்றிவைத் தனுப்பி
மாமன்மா மியரை வந்தடி வணங்கத்
தாமவ ரெனது தன்கையைப் பிடித்து 569

"உமதுட கையில் ஒப்பிவித் தேதான்
நமதுட பிள்ளை நலங்கிடு காமல்
ஆதரித் திடும்"என் றனேகம் உரைத்துச்
சாதுவாய் மொழிந்து தானனுப் பிடவும்
உயிர்த்துணை யெனநான் உறுதியாய் உனையும்
செயற்கையாய் நம்பி சேர்ந்துடன் நடந்து 570

கோதா புரிசெங் குன்றூர் அணுகி
யேதான் அரனார் இணையடி தொழுது
மாமனை புகுந்து மருவுமுன் சனங்கள்
ஆமவர் பதமே யான்பணிந் திறைஞ்சிக்
கருத்திலென் னுளும் கடவுளர் பதமே
இருத்தியே நீங்கள் இட்டவூ ழியமும் 571

பரிவுடன் செய்து பணிமலை யரனார்
விரவுபண் ணையத்தின் வேலையுஞ் செய்து
காமனும் ரதிபோல் கலந்திரு வருந்தான்
பூமண மெனவை போகமா யிருந்தோம்
இப்படிச் சுகித்து இருக்கும்நா ளினிலே
மைப்பெறு விழிநன் மாதுதென் கோதைப் 572

பள்ளியுஞ் சினந்து பலருடன் தூறிக்
கள்ளமாய் மனதில் கபடமே வைத்து
ஒத்துடன் வாழ்வ தோமலே யாகிச்
சத்துரு நீலி தான்மிக வெறுத்துப்
பணிமலை யரனார் பண்ணையாண் டவர்முன்
துணிவென நின்று தோதகக் கள்ளி 573

பகடியும் பழுதை பாம்பெனும் போலே
விகடமா யுந்தன் மீதினில் இல்லாக்
களவது சுமத்திக் காவலர் தமக்கு
அளவிலாக் கோபம் அதனையுண் டாக்கி
அரிவைஏ கிடவும் ஆண்டவர் உனையும்
வருகஎன் றழைத்து வார்த்தைகேளாமல் 574

கோவிய சிறையில் கூட்டிவந் துனது
காலிலே குட்டை கனக்கவே போட்டார்
மன்னனே கவலை வளர்சிறைக் கூடந்
தன்னிலே இருந்து தவித்திட விதியோ?
மச்சுவீ டதுநம் மாளிகை யதனில்
அச்சமற் றிருந்து 'அவதிபெற் றிவ்விடம்' 575

பள்ளருக் கிகழ்தம் பட்டுவெஞ் சிறையில்
கள்ளனைப் போலே கலங்கிட விதியோ?
அழகுசப் பிரமஞ் சத்தினில் படுப்போன்
புழுதியில் படுக்கப் பூருவ வினையோ?
பால்வடிந் திடுமுன் பங்கய முகமே
சேல்வழிந் திடநாம் செய்தபா வமிதோ? 765

என்செய்வேன் ஐயோ எனதுநா யகனே
நெஞ்சிலே மூளா நெருப்பையே மூட்டிப்
பாவியிட் டாளே பட்சமா யெனது
ஆவியிற் குறுதி யாரைநம் பிடுவேன்!
தட்சணந் தனிலே தான்விடு வாரோ?
அச்சமாய் நெடுநா ளாகவைப் பாரோ? 577

ஏதுமொன் றறியேன் இவ்விடம் விட்டெப்
போதுஎன் மனையில் புகுந்திடு வீரோ?
அன்றுஎன் கூட்டுக் காருயிர் வருகும்
குன்றிஅவ் வரைபொய்க் கூடதாய் இருப்பேன்
இதுசிறை தனிலே எண்ணமே விட்டென் 578
பதிஉயிர்க் கேதுஆ பத்துகள் வருமோ?

அப்படி ஏதா கிலும்உமக் காளுல்
அப்பொழு தென்பிரா ணன்அதம் செய்வேன்!
இப்பஎன் 'தாலி யின்' பலன் ஏதோ?
சர்ப்பமே ரரஞர்தன்செய லேதோ?
பரிவுள அடிமை படுந்துய ரறிந்து
அறிகிலார் போலே அரவமால் வரையென் 579

ஐயரும் ஏதோ அசங்கித மெனவே
ஐயமா யிருந்தால் அடியர்என் செய்வோம்
எப்படி எனக்கு என்னபுத் திகள்தாம்
செப்பிடீர் உமது திருவடி சரணம்! 580

## குடும்பன் கூறுதல்

### அறுசீர் விருத்தம்

அன்னமே மயங்க வேண்டாம்
அரவமேர் வளர்என் ஐயன்
தன்னுட தயவுண் டென்றும்
தாழ்ச்சிகள் வருவ தில்லை
உன்னுட மனையில் போய்நீ
உகந்திரு கலங்க வேண்டாம்
பன்னக மலையார் பட்சம்
வரவரப் பார்ப்போம் என்றுன் 581

## இளையவள்

### சிந்து

என்னுடைய நாயகனே மன்னவர்பண் ணையாண்டவர்
இருக்குமி டத்தில் சென் றுமே-நான்வெகு
உருக்கத்து டன்மொ ழிந்துமே
பொன்னடிவி ழுந்துசற்றும் மன்னியுமென் றேவணங்கிப்
பொறுத்தருள் எங்கள் குற்றமே-என் றுமனத்
திருத்தமு டன்உ ரைத்துமே

சொன்னபடி கேட்போ முங்கள் தன்னையன்றி வேறிலேன்
துயரத்தைத் தீர்த்திடுமென்றே - பள்ளன்குட்டை
தனையிப்போ மாற்றிடுமென்றே
அன்னவருக் கேற்கவெகு நன்னயங்க ளோடிகட்டி
அப்பனைகள் வாங்கிவருவேன் - நான்போக
ஒப்பனைகள் தாருங்கணவா! 582

## குடும்பன்

அன்ன நடை மாதரசி என்னுமயி லேஉனக்கு
அப்பனைகள் நான்கொடுக்கிறேன் - பிசகில்லை
ஒப்பனையென் றேஉரைக்கிறேன்
குன்னகத்தி மூத்தபள்ளி கன்னகைசா டிக்கிசைந்த
கோளனடி பண்ணையாண்டார் – நீசொன்னாலும்
கோளானடி பின்னுந்தாண்டார்
உன்னையுஞ்சி னப்பாரின்னம் பின்னபேத கங்கள்வரும்
உப்புச்சிந்தி ரட்டிக்குமடி! - குட்டுமார்க்கம்
தப்பிச்சண்டை முட்டிக்குமடி!
இன்னமும் அவள்வருவாள் என்னமோநான் சொன்னபுத்தி
யேகேள்ச வுந்தரிகமே – உன்மனைக்கி
நீபோய்இ ருந்திடன்னமே! 583

## இளையவள்
### அறுசீர் விருத்தம்

கனவனே எதுவா னாலும்
கண்டறிந் தினிநான் வாறேன்
'சென மெனை அனுப்பும்' என்று
தேன்மொழி வருந்தும் போது
பணிமலை யரனார் பண்ணைப்
பள்ளனும் மனது கந்து
வனிதம தாகப் 'போய்நீ
வா' என உரைத்திட் டானே. 584

உரைத்திட இளையபள்ளி
உளமகிழ்வாய்நடந்து
துரைத்தனம் செய்யும் ஆண்டார்
துதிபெறும் கொலுவில் வந்து
அரற்றியே அழுது தேம்பி
அடியறு மரம்போல் வீழ்ந்து
பொறுத்தர சாளும் வேந்தே
போற்றிஎன் றெழுந்து சொல்வாள். 585

## சிந்து

சரணம்ச ரணம்பண்ணை யாண்டே! உங்கள்
சரணம்கெ தி! இனிபொய் தான்களவும் வேண்டேன்
தருணம்இது தயவு பாரும் - செய்த
தப்பிதமெல் லாம்பொறுத்தென் சஞ்சலத்தைத் தீரும்
(சரணம்) 586

சனியன்கொ டுமையத னாலும் - பள்ளன்
தானும் அடிமைபொய் யான்சொன்ன தாலும்
தனியேபி ரிந்திடச்செய் தென்னை - பள்ளன்
தனைப்பிடி த்துக்குட்டையில் தானடித்தீர் முன்னே
(சரணம்) 587

பள்ளன் படுதுயர்கண் டாலே - சற்றும்
பார்க்கமுடி யாதுகண் பாரும்என் மேலே
உள்ளங் கலங்குதொருக் காலே - வேறே
உதவியில் லையிவ்வேளைக் குதவுமிப் பாலே
(சரணம்) 588

பழிகாரி யானமூத்த பள்ளி - கொடும்
பாவிபகை முடித்தா ளேமருந்துக் கள்ளி
இழிவான பொய்களவு சொல்லி - இந்த
இடங்கேடு செய்துபழி யேஎடுத்தாள் மல்லி
(சரணஞ்சரணம் பண்ணையாண்டே) 589

## நொண்டிச் சிந்து

மனுநீதி யாகவு மே – எம்மை
வாழ்விக்க வந்தம கரா சே
அனுநீதஞ் செய்யா தே! – கோதை
ஆண்டவர்க் கேற்கந டந்துகொள் ளும்
தனியேஓ ருவர்சொத் தோ – இது
தான்தூரு பாரியெ னச்செய்ய வும்
கனவிலும் புமொய்க்கு மோ! - நல்ல
கர்த்தர்து ரோகங்கள் தானு மோ? (மனுநீதி) 590

உலகில்பி றர்பொரு ளை – இச்சித்து
ஊதாரி செய்திடி லோ தோஷம்
சொலவேணு மோஇது வும் – சிவ
சொத்துக்குத் துரோகங்கள் செய்வா ரோ?
பலமேவுங் கோதையரன் - அஷ்ட
பாக்கியம் வேணது தந்திருக்க
நலமாய் அவரருளால் – என்றும்
நாங்கள்பி ழைப்பது மல்லா மல் (மனுநீதி) 591

அவர்பண் ணைத் தானிய மும் – மாடும்
ஆடும்விற் றெங்கள்செ லவுசெய் தால்
சிவனுர்த மக்கது வும் – தெரி
யாதோதெ ரிந்திடில் எங்களை யும்
பவநாசஞ் செய்திடு வார் – சொல்
படிதவ ருதிப் படிசெய் தால்
நவமாகப் பண்ணையி லே – வெகு
நாள்முதல் தொட்டெமை நாட்டுவ ரோ? 592
(மனுநீதி)

முகமாய வார்த்தையல் ல – நிச
முண்டான செய்தியிது சாமி!
சகலமுந் தெரிந்தவர்க் கு – அடிமை
தான்சொல்ல வேண்டிய தென்னசொல் லும்?

தகுமென்க ணவனை யும் – குட்டை
தன்னைவி டுத்து விட்டு விடும்!
மகராச னோஎனக் கு – இந்த
மன்னிப்புத் தந்திட வேணுமென் ருள். (மனுநீதி) 593

## பண்ணைத்தலைவன் சீற்றம்

சிந்து

படுத்தடிவார்த்தைபடிக்கவந்தாயடிபள்ளி – நீயும்
பச்சைப்பாம்பாட்டிப்பசப்பாதேமூசாம்புக்கள்ளி!
அடுத்துன் கணவர்க்குநீவைத்ததல்லவோகொள்ளி – மெத்த
ஆமிக்கையாக அதட்டிவராதடி தள்ளி. 594

லட்சைவண்டத்தனஞ்செய்யாதடிபடிமாறி – இந்த
டங்குடுங்கென்கிட்டத்தான் நடக்காதுவச்சாரி
அச்சமில்லாமல் என்முன்வந்ததேதவுசாரி – மெத்த
ஆணவள்போலுரையாதடிகுண்டுமல்லாரி 595

மாயமருந்தில்மயக்குஞ்சதிகாரத்தொண்டி – மெத்த
வார்த்தைபடித்தவள்போல்உரையாதேகொண்டி
ஆயத்துறைப்பித்தலாட்டமாகாதடிசண்டி – உனக்(கு)
ஆணவமெத்தஅறிகிறேன்போ! லட்சைவண்டி! 596

காரியக்காரிசிவகாமியேஅனுகூலி – மெத்த
காயக்கங்கற்றகழிசிறைநீகசுமாலி
வீரியம்பேசிஎன்முன்நிற்கவேண்டாம்போநீடீ பள்ளன்
வேணுமென்றபோதுவிடுவித்துக்கொள்வேன்போவாலி!

### கலிப்பா

நாட்டின்அரசேகேள் நன்வயிற்றைப் பீறியுமுன்
காட்டினுங்கண் கட்டியென்று கட்டுரைத்தால் என்னசெய்வேன்
மூட்டிவைத்தாள் வந்தெதிரே மூதலித்தாள் பள்ளனையும்
கூட்டிவிடு வீரோ கொடுமையர சர்க்கறமோ? 598

### எண்சீர் விருத்தம்

பொதுவிசன மாயிளைய பள்ளி தானும்
புகலவுமே கேட்டதிக கோப மாகி
அதிபதிய தானபண்ணை யாண்டார் தாமும்
அட்சணமே கோல்காரன் தனையழைத்து
புதுமையுரைத் திடும்நீலி தனையிப் போது
புடணிபிடித் தப்பாலே தள்ளு மென்ன
முதுமையெனுங் கோல்காரன் போபோ வென்று
முகங்கடுத்தப் பால்வெளியே முடுக்கி ளுனே! 599

### கலிப்பா

முடுக்கிட மாது தானும் முதுமைசேர் நயினுர் தம்மைத்
துடுக்கெனச் சினந்து வார்த்தை சொல்லியே வந்து பள்ளன்
அடுக்கநின் றரிவை பண்ணை யான்டவர் ஆண்மை மெத்தக்
கடுக்கநின் றதுபொ றுக்கேன் கதையதென் றுரைசெய் தாளே!

## இளையவள் அழுகை

### சிந்து

வித்தகர்கோதைவிஞுதனுர் - பண்ணைக்
குற்றவரேஎந்தன்காதலா! - நானும்
வீணிலேநடந்தாணவம்பெரு
கேனெனப்பண்ணையார்பதந்தனில்
மெத்தவும்ஓடிவிழுந்துமே - அழு
துற்றுவணங்கியெழுந்துமே - மெத்த
வேண்டியேபண்ணையாண்டவர்அகி
லாண்டவர் பொருள்தீண்டிடோம்செய்த
குற்றங்கள்யாவும்ஒறுத்திடும் - பள்ளன்
பெற்றிடும்பிள்ளைபொறுத்திடும் - முன்பு
கோலிலிட்டவன்காலில்குட்டையும்
மேவிடுத்திடவேஉரைத்திடும்

உத்தமனேயென்றுபோற்றியே - அன்பு
வைத்திடுமென்றழுதேற்றியே - முன்பு
உலாந்தக்காரிஏகாந்தத்தால்சொல்ப
டாந்த்ரச்சாடியெலம்தப்பென்றிட, 601

மல்லிநீயென்றுதுடித்துமே - வெறும்
பல்லைநேர்றென்றுகடித்துமே - படி
மாறியென்றவுசாரியென்றெனைத்
தூற்றியேசினஞ்சீறிநின்றவர்
சொல்லுக்குயர்ந்திடுஞ்சண்டியே - முழுக்
கல்விக்கிசைந்திடும்வண்டியே - எனத்
தூத்தியும்பள்ளன்கூத்திநீயென
வார்த்தைதமுன்பின்பார்த்திடாமலும்
வல்லமைபேசியுந்துள்ளியே - என்னைப்
பொல்லியென்ருள்வீட்டுத்தள்ளியே - கெடு
வார்த்தைபேசினர் மூத்தபள்ளிசொல்க்
கேற்றபண்ணையார், காத்தகானவர்
செல்லப்பெண்மாலைமுன்சுட்டினூர் - மலை
வல்லிக்கிசைந்தசெங்கோட்டினூர் - வெகு
தேட்டமாய்ச்சிறைமீட்டென்வீட்டினில்
கூட்டிவந்துவிட்டாட்டிவைப்பரோ?
ஏதென்றறிவேன்சிவன்செயல் - நான்
என்னென்றறிவேன்சிவன்செயல்! 602

### அறுசீர் விருத்தம்

பூண்டிடுங் கபடி மூத்தாள் பூமலேற் றினதால் பண்ணை
யாண்டவன் சடுதி தன்னில் அப்பனை செய்வ தில்லை
தாண்டவம் புரிந்தநாதர் தன்செய லேதோ வென்று
வேண்டியே பள்ளன் முன்பு மெத்தவே புலம்பி ஞளே! 603

## குடும்பன் ஆறுதல் கூறல்.

### சிந்து

நாகாச லத்தில் வளர்
நாதர் பண்ணைக் குகந்த வஞ்சி-முன்பு
வாகான மூத்தபள்ளி
வார்த்தைக்கிசைந்து கோபமிஞ்சி

வேகமு டனிருப்பார்
ஏதுசொல்லினுங் கேளாறென்றேனே-நானும்
போகாதே யென்று சொன்னேன்
புத்தி கேளாயல் போளுய் மானே! 604

வேண்டாமென்றேனே மொழி
மீறிப்போய் பலனென்ன கூறும்-அடி!
தீண்டும் விஷம் இறக்கு
வாரிறக்கி ளுலல்லோ தீரும்!
ஆண்டவரைத் தொழுதுன்
அகத்திலிரு நீ போடிகண்ணே!-மனம்
பூண்டிற்றென்னேர மெண்ணிப்
புலம்பித் தவித்திடாதே பெண்ணே! 605

கன்னியர் காவல்கூடம்
தன்னி லிருந்திடலாகாதே-நானும்
சொன்னசொல் மீறவேண்டாம்
உன்னகத்தே போயிருமாதே!
அன்னநடை பெண் மூத்தாள்
என்னைப் பின்னபேதஞ் சொல்லி-எந்தன்
முன்னே வருவாளிப்போ
உன்னைக்கண்டால் முழுதுங் கல்வி 606

மெத்தவுஞ்சொல்வாளதைப்
பற்றிச்சண்டைவிளையுமின்னே - மெல்ல
எத்திப்பசப்பியன்பு
வைத்திடு மென்றவளின் முன்னே - சொல்லி
பத்தவைத்தி டுந்தீஅ
வித்திடும் எந்தன்மேல்கண் பாரே! - என்று
உத்தமர்க் கோதிடச்செய்
துற்றிடுங் காவல்விட்டு வாறேன்! 607

## அறுசீர் விருத்தம்

உற்றவள் பண்ணை யாண்டார்க்
கோதிடில் கேட்பார் பின்னும்,
மற்றுரை கேளார் கார்ய
மாவதைக் கெடுக்க வேண்டாம்

சித்திர மயிலே என்று
செங்கையைப் பிடித்து வேண்ட
நற்திரு இளைய பள்ளி
நல்லதென் றெழுந்திட் டாளே 608

தையலும் எழுந்தென் வீட்டில்
தனித்துநான் இருக்கத் தெய்வம்
செய்யும்வா றறிகி லேனே
சேரும்நா யகனை விட்டு
பொய்யெனுங் கூடு கொண்டு
புலம்பியே தவிக்க வைத்தாய்
ஐயனே என்று மாது
அலறியே வருகின் றாளே! 609

## மூத்தவள்

### அறுசீர் விருத்தம்

அந்தவே ளையிலே மூத்த
அரிவையுங் கணவன் தன்னை
சிந்தையில் நினைந்து கண்ணீர்
சிந்திநொந் துருகி வாடி
வந்துபண் ணையினுர் தன்னை
வணங்கியே மகிணன் பக்கம்
அந்தமாய்ப் "போய்நான் வாறேன்
அப்பனே அருள்" என் றாளே! 610

### சிந்து

எங்கேயி ருக்கிறான்பள்ளனுஞ் சொல்லுவீ ராண்டே! - அந்த
ஏங்காரி யாலல்லோ இவ்விதிவந்ததென் றாண்டே - என்
தங்கைசவுந்தரி சாமிசெய் தாளென்று ஆண்டே - பொங்கல்
சாதமும் காய்கறி யும்பல காரமும் ஆண்டே - அவள்
நங்கையாள் கையில்கொ டுத்து அனுப்பின ளாண்டே - பிராண
நாதனை விட்டுத்த னித்துயா னும்உண் ணு வேனோ
அங்கஉ யிர்த்துணை யாகிய நாயக ராடே - நானும்
அன்புட னேபடைத் துண்டமே லுண்பதல் லாமல்! 611

சிந்தைமெ லிந்துசி றைச்சாலை தன்னிலி ருந்து - காலைச்
சேரவும் நீட்டித்தொ ழுவினில் மாட்டி, ஏமாறி - மெத்த
நோந்துப சித்தங்கி ருந்திட நான்ருசி யாக - உண்டு
நோகாம லேயிருந் தால்அரர்க் கொப்பனை யாமோ?
எந்தன்ம னதுக லங்குது நான்போன தாலும் - கண்ணை
ஏறிட்டுப் பார்த்துநீ சோறிட்டுப் போடியென் பாரோ - நல்ல
சந்தோஷ மாகவும் பேசுவா ரோ சலிப் பாரோ - இன்னம்
தான்கப டாய்ச்சோறுண் ணுமல்வி டுவாரோ ஆண்டே!

அறுசீர் விருத்தம்

உண்ணுமல் போனு லுந்தான்
உபசரித்திடுவேன் எந்தன்
கண்ணாலே காணு துள்ளம்
கலங்குதே ஐயா என்ன.
மண்ணாளும் வேந்த ஞர்தென்
வாசல்சா வடியில் உந்தன்
கண்ணாளன் இருக்கி ருன் போ
என்றிடக் காண்க வந்தாள். 613

வந்தவள் மகிணன் மேவும்
வன்சிறைக் கூடங் கண்டு
தன்திருக் கண வ ஞர்க்கு
சமையல்முஸ் தேதி கொண்டு
சந்திக்க வேணு மென்று
தான்அடை யாளம் பார்த்து
செந்திரு வனையாள் பின்னும்
திரும்பிவீ டேகி ஞளே! 614

## கணவனுக்கு மூத்தவள் சோறு கொண்டுவருதல்

சிந்து

கட்டழகி யுஞ்செங்காவிப் பட்டுமுடுத் தி-நல்ல
கந்தம்ப ரிமளங்கள்சு கந்தம்புனைந்து
இட்டமுடன் மட்டில்லாப ரணந்தரித்து - வெகு
இன்பமாய்ம கிணர்மீதி லன்புமிகுந்து

திட்டமாய்ச்சம் பாஅரிசி தீட்டிவடித்து - நல்ல
சீனிச்சர்க்க ரையும் ஆவின் பாலும்பழ மும்
மொட்டுங்கோழி யும்சமைத்துச் சட்டியிலிட் டு - நல்ல
முந்திரிச்சா ராயங்கறி ஐந்துவகை யும். 615

மெத்தவும்ப லகாரஞ்சீர் பெற்றகரி காய் - மனம்
வேண்டியமுஸ் தேதியுடன் பாண்டிக்கலமும்
சித்திரக்கூடையிலித்த னையும்அடுக் கி - வட்டச்
சீமாடு கோலிகூடை சிரசினில்வைத் து
வெற்றிலைபாக் குமடியில் மெத்தவுங்கட்டி - கையை
வீசிவீசிக் கொண்டுஒயி லாகநடந் து
எத்திசைபு கழ்குடும்பன் முன்பிலேவந் து - இவள்
இறக்கிவைத் துக்கூடையைச் சிறக்கநின் று 616

சாதமுங்க றிவகைகள் கொண்டுவந்தேன் நான் - நீங்கள்
தானுண்டிளைப் பாறுமென்று தையலுரைக்க
மாதினைக்கண் டுசினந்த கோரமெழும்பி - பள்ளன்
மதிமுகம் பாராமல்பின் திரும்பிக்கொண் டான்
பாதகஞ்செய் தேன்செய்தபி ழைகள்பொறுத் தால் - இனிப்
பயப்பட வேண்டாமுங்கள் பங்கிலிருப் பேன்
ஏதுகாரி யத்துக்கேனும் சிந்தையதி லே - உன
தெண்ணம்விட் டென்னைநம்பும் நிண்ணயஞ்செய் வேன்!

மோகனப்பெண் ணும்வந்தேன் ஆகமகிழ் வாய் - எந்தன்
முகப்பார்த்த சனஞ்செய்ய வேணுங்கண வா!
சோகமிதா காதெனவுந் திட்டிகழித் து - வால
சுந்தரப் பெண்ணுளிவள்ப தங்கள்பிடிக்க
வேகமுடன் இவள்கையைப்பிடித் திழுத் தே - கண்ணில்
மிரட்டிநி லத்தில்விழ வீம்புடன் தள் ளி
ஆகடியம் பேசவேண்டாம் அப்பாலேபோடி - இந்த
அலுக்குப்பி லுக்காருக்குக் காட்டவந்தாய் போ! 618

தனிவு

இப்படிக்குடும்பன் செய்யத்தானுஞ்சினந்து - இவன்
எழுந்துஏசியும்பேசிஎதிரே நின்று
மைப்பெறுமி டற்றூர் திருநாகமலையார்க் - கேற்க
வந்ததல்லாமலுன்முகம்பார்ப்பேனோபள்ளா! 619

என்னையிப்படித்தூஷணஞ்சொல்லியிடித்தாய் - உனக்
கென்னபழிசெய்தேனிதுதர்மமோபள்ளா
இன்னமுமுனைப்பிடித்தசின்னச்சனியன் - போக
இல்லையென்வாதையுன்னையிடிக்குதுபள்ளா! 620

ஆகாதுகொண்டவனிந்தஅவதிப்பட்டால் - கர்மம்
ஆகுமென்றுதர்மத்துக்காய்யானிங்கேவந்தேன்
போகாதேபோச்சேபழையகொஞ்சப்புத்தியும் - இந்தப்
பூர்வவினைபோனலல்லோபோகுஞ்சனியன் 621

## முடுகு

அக்ரவண்டிவந்தாளோகுடும்பனரே - உனக்
காசைமெத்தச்சொன்னுளோகுடும்பனரே
சக்களத்திவந்தாளோகுடும்பனரே - மெத்தச்
சதிசொல்லிப்போனளோகுடும்பனரே! 622

ஓடியோடிவந்தாளோகுடும்பனரே - உனக்
ஓதினதுமெத்தவுண்டோகுடும்பனரே
சாடிசொல்லிப்போனளோகுடும்பனரே - இன்னம்
தான்கெடுக்கத்திரிகிருள்குடும்பனரே 623

கெட்டதும்போதாமலேகுடும்பனரே - இன்னம்
கெடுக்கத்திரியுருள்குடும்பனரே!
தட்டவட்டக்காரிசொல்குடும்பனரே - உனக்குச்
சர்க்கரைபோலாச்சுதேகுடும்பனரே! 624

என்னுடனேபேசவேண்டாமென்றுசொன்னளோ - அவள்
ஏற்றினமயக்கமின்னந்தான்விடலையோ? -
தன்னமையதாகவொன்றுசொன்னலாகாதோ - அவள்
தாரமல்லால் நான்சொந்தத்தாரமல்லவோ? 625

முட்டவும்விட்டாயிலை நீகெட்டவிகடம் - தொண்டி
மீட்கிறதைப்பார்க்கிறேன்நான்சேர்க்கையெனவே
குட்டையிலேகெட்டலைந்துபட்டலைகிருய் - உந்தன்
கொடுமையுனைச்சுடுதுகெடுதிபள்ளா! 626

## குடும்பன் வெறுப்பு

### கீர்த்தனை

பல்லவி

எதிரே நில்லாதே! - பருவங்கள்
எனக்குச் சொல்லாதே! (எதிரே)

அநுபல்லவி

சதிமுடித்து சர்ப்பனை செய்தவள்
மதியில் லாமலே வந்துமி னுக்குறாய்! (எதிரே)

சரணங்கள்

கொண்டவ னுக்கிந்தத் துரோகஞ்செய் தாள்முகம்
கண்டாலும் பார்ப்பாரோ கழிசரைத் தொண்டி
அண்டையில் நீநின் றதட்டாதே இன்னமும்
குண்டுணி பேசிக் குலாவித் திரிபோடி! (எதிரே)

விண்ணுன மாகவும் மேனும்பு பேசுறாய்
பெண்நீலி நீயும்பெ ரும்பிழை யாகவும்
பண்ணையி ஞர்முன்பு கொண்டவ ஞர்என்று
எண்ணுமல் சாடிஎ டுத்துரைத் தாய்போடி! (எதிரே)

காலம்போம் வார்த்தைநி லைநிற்கும் என்பது
தாலங்கள் சொல்வதுந் தான்கண்டி ருந்திது
கோலங்கள் செய்தாய் இப்பாவம் அனுபவி
ஞாலம்பு கழ்கோதை நாதர்அ ருளுண்டு
எதிரே நில்லாதே - பருவங்கள்
எனக்குச் சொல்லாதே! 627

## மூத்தவள் இடித்துரை

### நொண்டிச் சிந்து

நற்புத்திக் கிசையா மல் - இளையவள்
கற்பித்தி டுங்கொடுமை துற்புத்தி யால்
சற்பனை தான்வளர்த் தே - எனைச்செய்த
சதியால் உனக்குமிந்த விதியாச் சே 628

சுகப்பட்டு இருந்தனை யே - என்னுடைய
சொற்கேளா மல்நீயும் இக்கோல மாய்
அகப்பட்டுக் கொண்டனை யே - உன்னுட
அட்டாதுட் டியுங்கால் குட்டையாச் சு 629

கால்காட்டி உதைத்தா யே - சற்றும்என்னைக்
கண்ணெடுத்துப் பாராமல் புண்செய்தா யே
மால்காட்டிக் கெடுத்தா ளே - வந்துதுயர்
வடிவிப்பா ளோசொல்லி விடுவிப்பா ளோ? 630

தெரியுதெல் லாம்பொறு நீ - அவளுடைய
சீராட்டெங் கேஉனது போராட்டெங் கே?
பிரியவும் மனம்வந் த தா? - அந்தப்
பேய்மாலக் கள்ளியின் மாய்மாலத் தால் 631

அடிக்கடி ஓடிவந் து - ஒண்டநான்,
அடிப்ப தெங்கேசண்டை பிடிப்பதெங் கே
முடுக்கிய வீம்பு மெங் கே - உனது
முறுக்கு மெங்கே அவளின் செறுக்குமெங் கே? 632

ஆங்காரக் கோபமெங் கே - இளையவட்(கு)
அடிமைசெய் யென்றுசொன்ன கொடுமையெங் கே
பாங்கான கின்னரியெங் கே - சங்கீதப்
பாட்டுமெங் கேவிளை யாட்டுமெங் கே? 633

சல்லாப லீலையெங் கே - வலுவுடைய
தாட்டிக மெங்கேஉனது மேட்டிமையெங் கே
உல்லாச வேடிக்கை யெங் கே - கட்டுவர்க்க
உடையுமெங் கேஒயில் நடையுமெங் கே? 634

விண்ணானம் பேசுவதெங் கே - தம்பூரெடுத்து
மீட்டுவதெங் கேசுதி கூட்டுவதெங் கே
பெண்ணோரம் செய்தனை யே - கடுகடுத்துப்
பேசுவதெங் கேபுனுகு பூசுவதெங் கே? 635

பசுவுடன் பன்றிசேர்ந்து - ஈனவித்தை
படித்தது போல்சதி முடித்தன ளே
அசல்வீ டறியா மல் - இருந்தவனை
அம்பல மேற்றியிந்தத் தும்படைசெய் தாள்! 636

எல்லோர்க்கும் இழிவாச் சே - முடிச்சுமாறி
யேவர உனக்கெனக்கும் பழியாச்சே
சல்லாப வாழ்வுபோச் சே - மாயக்கள்ளி
சக்களத்தி யாலிந்தத் தாழ்வாச் சே!

(தனனத் - தன - தனன) 637

## குடும்பனின் தந்திரம்

### அறுசீர் விருத்தம்

பள்ளிகட் டுரைகள் யாவும்
பள்ளனும் வினவி யெல்லாம்
உள்ளதென் றுறுதி கொண்டு
உபாயத்தால் இவனைக் கெஞ்சி
மெள்ளவே தாட்டிப் போவோம்
மெல்லியல் லாமல் வேறு
வள்ளலார்க் குரைப்பா ரில்லை
மறுமொழி கேளார் மன்னர் 638

என்றுதான் மனதில் எண்ணி
இவனை நாம் அதிக மாக
தன்றுப சாரஞ் செய்தால்
'நமக்குப்பின் நானை' யென்று
குன்றெனும் முலையி னுளே
கொடுமையென் பிழைபொ றுப்பாய்
இன்றுஉன் மனது வைத்து
இறங்கிடு! தயவு!! பாராய்!!! 639

பாரிது அவதி யென்றால்
படமுடி யாது வேணா
சீரது தவறி யிந்தச்
சிறுமைகட் காளா னேன்
சோறது தேட்டை யில்லை
தூக்கமும் சுகமும் இல்லை
ஆரடி யுனையல் லாலென்
அருமைகண் டவர்என் மாதே! 640

## மூத்தவள் கேள்வி

### சிந்து

கச்சுக் கட் டில் மெத்தை யெங்கே
காளாஞ்சி தானுமெங்கே பள்ளா?
உச்சிதவே டிக்கை யெங்கே
உல்லாசந டையுமெங்கே பள்ளா?
மச்சுக் கட்டில் லறமெங்கே
வாழ்வுன் வவுசு மெங்கே குடும்பா?
விச்சித்திரப் பேச்சு மெங்கே
விருப்புன் மேனும்பெங்கே பள்ளா? 641

வடிவுங் கெலிவு மெங்கே
வாசக்க ளபமெங்கே பள்ளா?
துடியிடை யிளையா ளோடே
சொந்தம் பாராட்ட தெங்கே குடும்பா!
குடிலம் வஞ்சனைப் பேச்சுன்
குல்லாச் சொகுசு மெங்கே பள்ளா!
தடியடி வார்த்தை சொல்லிச்
சக்காரந் தஞ் செய்வதெங்கே குடும்பா? 642

ஈனஞ்செய் இளையவள்
இணைபிரி யாததெங்கே குடும்பா!
மானங் கெடவும் பேசி
வந்து அடிப்பதெங்கே பள்ளா!
ஆணகை வீச்சு மெங்கே
அலுக்குப் பிலுக்கு மெங்கே குடும்பா?
தேனும் பால் போலிருந்த
சீர்கேடி நேசமெங்கே பள்ளா? 643

பொன்னாப ரணமெங்கே
பூமாலைத் தொங்கலெங்கே பள்ளா!
என்னைப்ப ழித்தவளோ
டேகாந்தஞ் செய்வதெங்கே பள்ளா!
உன்னிச்சை யல்லநீசெய்
ஊதாரி வாழ்க்கையினால் பள்ளா! - வளர்
பன்னக மேரென் னையர்
பண்ணுஞ் சோதனையிது குடும்பா!! 644

### கலிப்பா

## குடும்பன்

சாதியார் தான்நகைப்பார் சஞ்சலத்தி னால்மெலிந்தேன்
நீதியோ இன்னும்என்மேல் நெட்டூரஞ் செய்குவதும்
ஆதியான் அறியஉன்னோ டென்புடனே வாழ்ந்திருப்பேன்
காதல்தணித் தால்போல்என் கவலைதணிப் பாய்மாதே! 645

### சிந்து

மனதறிந்த குயிலே! - ஒரு
மனுவது ரையேமயிலே - அடி
உனையும் நொந்து - மன
துருகி நொந்து - விதி
தனையும் நொந்து - சிறை
தனிலே நொந்திடவோ?
(மனதறிந்த குயிலே) 646

வடிவுயர்ந்த ரதியே - நிலைமையும்
வளமையு டையபதியே - மதிமுகம்
    வாடி நின்ற தென்ன
    வாடி! யுன்னுறவு
    வாடி யங்கணே போய்
    வாடி யென்றனது
(மனதறிந்த குயிலே) 647

குணமிகுந்த கண்ணே! - உனதுட
குடிலம்வி டடி பெண்ணே - மயலது
    கொண்டு நன்பவிசு
    கொண்டு என்பரிவு
    கொண்டு உன் தயவு
    கொண்டு காரடியென்
(மனதறிந்த குயிலே) 648

திருவிளங் கும்பணிமேர் - தனில்வளர்
சிவன்நமது துணையாம் - அரன்தன்
    செயலு முண்டு - அதி
    செயமு முண்டு - உனது
    தயவு முண்டு - எனது
    சலிகை யுண்டடியென்
(மனதறிந்த குயிலே) 649

## கலிப்பா

மிஞ்சியே போனதெல்லாம் விட்டுவிடு நான்தினமும்
கொஞ்சிவிளை யாடியுனைக் கூடியே வாழ்ந்திருப்பேன்
கெஞ்சியாண் டாரைமனுக் கேட்டுளனை மீட்டுநல்ல
பஞ்சணையில் சேரமுகம் பாரடிஎன் கண்மணியே! 650

## மூத்தவள்

### சிந்து

விந்தைக் காரியை கூட்டியே வந்துஎன்
வீட்டி லேவிட்டுப் போட்டிஉண் டாக்கியும்
சொந்தக் காரிஅ வளென்று பட்டமும்
சூட்டியுந் தாளம் போட்டுத் திரிந்தும்
எந்த ஊமதி யாமலதி னஞ்சண் டை
இட்டு மேஎன்னை விட்டுத் துறத்தி
இந்த வார்த்தைக்கி டஞ்செய்து கொண்டால்
என்செய் வேன்முழு வஞ்சகா பள்ளா! 651

## குடும்பன்

### தணிவு

எழுதி யவிதி போமோ இளையவள்
என்ன செய்குருள் உன்னை? நீ என்னையும்
உழுத மாட்டை நுகத்திலி டிக்கும்
உகமை போல்நொடிக் காதே எந்நேரம்
பழுது பேசித்திரிந் தொருக் காலே
பழம்ப கையைவி ளம்பியே நீயும்
முழுதும் மூட்டிவே டிக்கைபா ராதே!
மூட்டுக் கோபிகக் கேட்டுக்கொண் டேனடி! 652

## மூத்தவள்

### முடுகு

வம்புக் காரியி ளையவள் சீரங்க
மாத கரம்விட் டுவந்த பிறகு
அன்ப தாகவும் பேசிய றியீர்நான்
ஆண்டிக் கென்றுல்நீ தாசனுக் கென்பாய்!

கும்ப மாமதங் கொப்பத்தில் வீழ்ந்திடும்
கொள்கை போல் அகப்பட்டாய்இம்ம ரத்தில்
தன்பெ ரும்வினை தன்னையே சுற்றும்
தவறு மோதிருச் செங்கோட்டுப் பள்ளா? 653

## குடும்பன்

### தணிவு

புரம்பு பேசிடு காதேமுன் னுல்மிஞ்சிப்
போன தெல்லாம்எ டுத்துரை யாதே!
வரம்பு தானுந் தவறிட லாமோ?
வணங்கி னபின்பு வாதுகள் உண்டோ?
ஓரம்பு தப்பிடில் சேவகம் போமோ?
உரைத்த பின்பு கனந்தெரி யாதோ?
உரும்பி டாதே சகித்திடு! மீட்பது
உனது பாரம டிகோதைப் பள்ளி! 654

## மூத்தவள்

### முடுகு

பள்ளா! சிக்கிக் கொண்டுமு ழித்தமே லல்லோ
தெரியு மென்பதுன் பாவினிற் கண்டேன்
கைக்குள் மோதிரம் உண்டோஅ ரண்மனை
காரி யங்கண்டு பேசிடப் போமோ?
தொக்கு நாக்குள்ள சக்களத் திவந்து
சொல்லி மீட்பாள்; என் னுலில்லை; வட்டியில்
வைக்கும் வாய்நிலை யுண்டோ? அன் னோருள்ள
வார்த்தை நம்பிட லாமோஎன் பள்ளா! 655

## குடும்பன்

### தணிவு

அடி :— பலவி தங்கள்ப ருவஞ்சொல் லாதே - நான்
பட்ட பாவி யினிஅறி யேனே
தலைமை நீஇனி யாள்உன் மீளிதம்
சரிசொன் னால்அவள் தன்னைஉ தைப்பேன்
வலது கைப்பிடி சத்தியஞ் செய்வேன் - நீ
வளர்ந்த கஞ்சிகு டித்துஇ ருப்பேன்
கலக மினஞ்செய் யாதே நயினாரைக்
கண்டு கால்குட்டைக் கட்டழிப் பாயே! 656

## மூத்தவள்

### முடுகு

நல்ல தாகட்டும் என்றுந யினாரை
நாடி யேசென்று காலில் விழுந்து
சொல்ல வேண்டிய வார்த்தைகள் சொல்லி
தொழுவை நீக்கிவி டுவித்த போது
கல்வி செய்தோடங் கழிந்தால் ஓடக்
காரர்க் குச்சொட்டு வைப்பது போலும்
மெல்லி யோடுற வாடிக் கவுத்துவ
மென்ன செய்வாயோ குன்னுகப் பள்ளா! 657

## குடும்பன்

### தணிவு

முட்டுப் பட்டுங்கு னியாமல் போனால்
முழுதும் போக வரயிடி யாதோ?
கெட்ட பின்புத்தி தான்வரு காதா
கெஞ்சி யும்பின்பு வஞ்சனை செய்தால்
கட்டு மோஅரர்க் கொப்பனை யாமோ?
கருமஞ் சூழ்ந்துவி ருமைகொள் ளாதோ?
குட்டு மார்க்கந் தவறிடேன் இன்னம்
கோலஞ் செய்துகொ டுமைசெய் யாதே! 658

கலிப்பா

பண்ணீலி யானகொடும் பாவியென்னை ஆட்டிவைத்தாள்
விண்ணுனக் காரியும் மென்மருந்தால் உன்னை மறந்தேன்
கண்ணுன்னை உன்சொல் கடக்கேன் பெருமைசெய்வேன்
புண்ணியம்பார் செங்கோட்டுப் பூவையெனும் பெண்ணரசே! 659

## மூத்தவள்

சிந்து

ஆயமறைப்பொருள் அண்ணல்தன் பண்ணையில் பள்ளா - உன்னை
அந்தரங் கத்தில்அ டக்கிவைத் தாள்வந்து சொல்வாள்
மாய்மாலங் கற்ற மடந்தைதென் சீரங்க வல்லி - இட்ட
மாயம ருந்தின்ம யக்கந்தெ ளிந்ததோ கள்ளா!
வாய்கொள்ளா தேசியும் மந்தையில் வைத்தென்னைத் தூற்றிப் - படி
மாறிச்சி றுக்கிதன் வார்த்தைகேட் டென்னைய டித்து - நீயும்
தாய்வீட் டுக்கேசென்று தானுந்து றத்திவிட் டாயே - இப்பத்
தானுஞ்ச பைமெய்க்கத் தக்கது பேசுறாய் பள்ளா! 660

## குடும்பன்

தணிவு

பள்ளி!

புண்ணைக்கி ளறுவார் போலே மனம்புண்செய் யாதே - முன்னே
போனதெல் லாமெடுத் தாறுவர்க் கங்கள்சொல் லாதே! - அடி
எண்ணுதும் எண்ணியே ஏங்கித் த விக்கிறேன் பள்ளி - என்னை
எப்படி யாகிலும் ஈடேறச் செய்யடி பள்ளி - கடைக்
கண்ணாலே பார்த்துக்க டைத் தேறச் செய்யடி பள்ளி - அந்தக்
காயக்கத் தொண்டித னையினி மூதலி யாதே!
விண்ணுணம் பேசிட வேளையி தல்லடிக் கண்ணே - மெத்த
வேண்டிக்கொண் டேன்என்னை மீட்டுக்கொண் டாளடி பெண்ணே!
661

## மூத்தவள்

### முடுகு

பள்ளா!

இந்தவ ணக்கமி ரக்கமுன் ஞுலெங்கே போச்சு - உந்தன்
எத்துமுன் காயக்க வித்தையும் நானறி யேஞே - மெள்ள
தந்திரம் பேசிப்ப சப்பியே ஏய்க்கிருய் பள்ளா - மெத்தச்
சர்ப்பனை நானறி வேனுன்னை நம்பலா காது
மந்திரங் கற்றபொ டிமாயக் கள்ளனீ யன்ரே - உந்தன்
மார்க்கமும் நான்சற் ற றிந்திருப் பேன் மாயக் கள்ளா
சொந்தமாய் வந்தவள் உந்தனுக் கேற்ற வைப் பாட்டி - காலில்
தொட்டிடுங் குட்டையை வெட்டிவி டுவிப்பாள் பள்ளா! 662

## குடும்பன்

### தணிவு

ஐயோ!

குற்றம்பா ராட்டாதே கோரணி செய்யாதே பள்ளி-உந்தன்
கோபத்தைப் பாராதென் ஆபத்தைப் பாரடி பள்ளி
சித்தமி ரங்குமென் சிந்தைக லங்குது பள்ளி - இனிச்
செய்யுமு பகாரம் தன்னைம றப்பேஞே பள்ளி!
மெத்தவ லிக்குது கால்களும்; தூக்கமு மில்லை - இந்த
வேதனை கண்டுமென் மீதில்த யவது மில்லை -
உற்றது இணயுணை யல்லாமல் வேறில்லை தேனே — நானும்
உன்னையல் லால்மறு மின்ஞுரைச் சேரேண்டி மானே! 663

## மூத்தவள்

### முடுகு

பள்ளா!

வாழும்பி ராயத்தில் வஞ்சனை செய்தாயே சொல்லாய் — சொன்ன
வார்த்தைக்குள் ளாய்உனக் காகநான் பட்டபா டெல்லாம்
பாழுக்கு றைத்தநிலாவது போலவு மாச்சே - இனிப்
பட்டும்ப லனென்ன கெட்டுமுட் டைச்சாம்ப லாச்சே - நிதி

ஆளுக்கும் பாழுக்கும் வீணாக வேகரைத் தாச்சே - எச
லாட்டத்தி னால்நம்ம வீட்டுப்பி ழைப்பதும் போச்சே
வேளைகள் கண்டுசங் காத்தம தாகுமுன் நேசம் - இந்த
வேடிக்கைப் பேச்சினில் ஆவதுண் டோசொல்லுங் கணவா! 664

## குடும்பன்

### தணிவு

பள்ளி!
போனது போகட்டும் நீயும் நானுஞ்சுக மாகப் - பரி
பூரணர் தம்மரு ளாலிருந் தால்இனி நாமும்
வேணது தேடலாம் விட்டுவி டாய் பிடி வாதம் - உனை
மேன்மைய தாகவும் வைத்துந டத்துவேன் மாதே
தானிது சொல்தவ றுதடி ஆண்டவர் சாட்சி - இது
சத்தியம் சத்தியம் பொய்யென்றி ராதேநன் மானே
ஊனுறக் கங்களு மில்லை மனத்துய ராலே - மெத்த
உள்ளங்க லங்கினேன் கள்ளங்க ளில்லையென் மாதே! 665

## மூத்தவள்

### தணிவு

பள்ளா!
பஞ்சணை மீதில்தி னமும்ப டுத்தச ரீரம் - இந்தப்
பாழும்பு ழுதித னிலும்ப டுக்கவும் ஆச்சே - ஐயோ
நெஞ்சங்க லங்கிநீர் நேசம்வே றுகினீர் கணவா - என்ன
நிந்தனை இன்னம்வி ளையஇ ருக்குதோ கணவா!
அஞ்சலென் பாரிலை ஆண்டவர்க் கார்உரைப் பார்கள் - நாம்
ஆரைப்ப ழித்திட்ட தோஷமை யோஅறி யோமே! - நாமள்
சஞ்சலப் பட்டதி னாலென்ன நம்மாலொன் றில்லை - சிவன்
தன்செய லேதோஅ றிகிலேன் நான்என் கணவா! 666

## குடும்பன்

### தணிவு

வஸ்துக்குஞ் சுத்துக்குஞ் சோற்றுக்கும் ஏக்கற்றுப் போனேன் - நீ
மனதுவை யாவிட்டால் வைத்திருக் கேனுயிர் நானே - மெத்தப்
பற்றவைத் தாய்முன்பு பற்றுவைத் திப்பொழு தேநீ - முகம்
பார்த்தெனைக் காத்திடுங் கீர்த்தியு னக்குண்டு மானே

மெத்த இனிச் சொல்ல வேண் டிய தில்லையென் தங்கமே-பிராணன்
விட்டிடு வேனுனும் வேண்டுமென் றுவிப்போ மங்கையே
கர்த்தன் பண்ணையக் காரர்க்குச் சொல்லியென் அன்னமே-எந்தன்
காவலை நீக்கியென் கால்குட்டை வாங்கடி சொர்னமே! 667

## மூத்தவள்

துணிவு

கணவா!

வஞ்சனை யில்லைம னதுகந் தேன்பிராண நாதா - அந்த
மாய்மாலக் கள்ளியால் வந்தபொல் லாப்பிது கணவா!
வெஞ்சின மானதை விட்டுவிட் டேன்சிந்த வேண்டாம் - இனி
மேவித னங்களை விட்டிடுங் கண்கலங் காதே
தஞ்சமென் றேபண்ணைக் காரர்தன் காலினில் விழுந்தே -குட்டை
தன்னையிப் போதுத ரிப்பித் திளைத்தச ரீரம்
அஞ்சாறு நாளையில் தேற்றிவி டுகிறேன் கணவா - ஒன்றும்
ஆலோ சிக்காதேநீ அஞ்சாதே யென்னுட கணவா! 668

### அறுசீர் விருத்தம்

அஞ்சவே வேண்டாம் பண்ணை
ஆண்டவர் பால்நான் சென்று
வன்சிறை யதனை நீக்க
மனுவது வாங்கி வாறேன்
சஞ்சலம் அகற்றிச் சாதம்
சாப்பிடும் என்றே வஞ்சி
பஞ்சரித் திடவே உண்டு
பள்ளனுங் கூறி னானே 669

## குடும்பன் கூறுவது

அறுசீர் விருத்தம்

என்னுட பிராண வல்லி
எப்படி யாகி லுந்தான்
மன்னவர்க் குரைத்து என்னை
வருகஎன் றழைத்துக் கொள்ளும்

என்னவே மெல்லி நல்ல
தென்றவள் தான்நடந்து
பன்னகா சலமே ரையர்
பதம்பணிந் திறைஞ்சி வந்தாள். 670

## மூத்தவள் அரவகிரி

### ஆண்டவரை வேண்டல்

#### சிந்து

அரகர சிவசிவ சாம்பச தாசிவா
அரவபூ ஷணமகா தேவா!
வரநதி மதியணி வேணிய னேயிடப
வாகனு ருடவி லாசா!
பரமசுந் தரிசிவ காமித னையும் வாம
பாகந்த னிலேவைத்த நாதா!
சுரர்மக வானயன் மால்முனி வர்தினம்
துதிபெறும் நாககிரி வாசா! 671

உனது மகிமையெவர் அறிவார்எ னைப்பயின்று
உனதுஅ டிமைக்கடி யானைத்
தனது மனைவிசெய்து பின்னும வருக்கொரு
தாரம்வி வாகமது செய்து
மனதுகு ரோதமது வளர்த்தும னம்வேருக்கி
மாய்கையுண் டாக்கிப்பகை யாக்கி
இனம்பிரிந் திடுங்கலை போலுமெ னைப்பிரித்து
இளையவ ளைவாழ்கச் செய்து. 672

இந்தப்பு துமைகளும் போதாம லேஎனையும்
எடுத்துவிட் டேகூத்துப் பார்க்கச்
சந்த்ரசே கரநயி னருடன் சாடிசொல்லத்
தான்செய்த வர்க்குக்கோபந் தந்து

அந்தச்சணம்அடிமை தனையுங்குட் டையில்போட
அப்பணை தந் தப்படிச் செய்து
சிந்தைமெலிந்துமூவர் திக்காலொருவர்நொந்து
சிவனோஎன் றுணைநோக வைத்து. 673

அப்பனே இதுவெல்லாம் உமக்கொரு திருவிளை
யாடலென் றேவேடிக்கை பார்த்தீர்!
இப்படி யெளியரைச் சோதனை செய்யில் நாங்கள்
ஏதறிந் துநிர்வாகஞ் செய்வோம்
கற்பனை செய்துலகம் மூன்றினி லுமனேக
காரணங் கண் டநீல கண்டா!
உற்பனம்வினைரெண்டும் வருவதுன் செயலன்றி
ஒருவரால் வந்தணுகி டாது. 674

பேதையென் றேஅறிந்தும் அடிமையென் றெண்ணிடாமல்
பிரியவைத் தேன்விகடஞ் செய்தீர்!
போதுமிந் தஅவதி இனிநிர்வா கஞ்செய்யப்
போகாதுன் சித்தமிரங் கையா!
வாதைக்கி டஞ்செய் தின்னந் திருக்கூத்தெங் கலையாட்டி
வைக்காதே சித்தமிர ங்கையா!
நீதிமி குமகிணர் தமக்கடி யாளுஞ்செய்த
நிந்தைநீர் பொறுத்தாள வேணும். 675

படியில்என் மேல்பழிகள் போட்டென்ம கிணனையும்
பருங்குட்டை யிலேபோட்டு விட்டீர்
அடியவன் படுந்துயர் பார்க்கமு டியிலையென்
அங்கம்ப தறுதேஎன் சாமி!
அடியவர் திரனிலி தேதோப ராமுகமாய்
அசங்கிதஞ் செய்திடாமல் ஸ்வாமி
துடிமிகும் பண்ணையிஞர் மனதிருந் தென்கணவன்
தொழுவைத் தரித்துவிடும் ஸ்வாமி. 676

## மூத்தவள் பண்ணைத்தலைவரை வேண்டல்

அறுசீர் விருத்தம்

இப்படிச் சிவனைத் தியானித் திறைஞ்சியே துதித்து நல்ல
மைப்பெறு மிடற்றுர் பண்ணை மன்னவர் அருகில் வந்து
அப்பனே சரணம் உங்கள் அடியவள் ஒருவின் ணப்பம்
செப்புவேன் மனது கந்தென் செய்கையும் முடிப்பீர் என்றாள் 677

சிந்து

தேவரீர் சீர்பாதந் தெண்டனிட் டேன்பண்ணை யாண்டே-உங்கள்
சித்தமி ரங்கியென் குற்றம்பொ றுத்திடும் ஆண்டே
ஏவல டிமைதன் மீதுத யவுவை யாண்டே-இந்த
ஏழைக்கு கந்துயிவ் வேளைக்கு தவும்என் றாண்டே! 678

பெண்புத்தி பேய்மதி யென்பதெல் லாமெய்யென் றாண்டே-நானும்
பின்வருங் காரிய மெண்ணுமல் தூறினே றாண்டே
தண்மைக்கு ண முந்த யவுமி கும்பண்ணை யாண்டே - எந்தன்
தாயுந்த கப்பனும் நீயல்ல வோபண்ணை யாண்டே! 679

பள்ளனும் நாங்களும் பிள்ளைக ளல்லவோ ஆண்டே - நானும்
பரியாச மாய்மதி யறியாம லேசொன்னேன் ஆண்டே
கொள்ளிகொண் டென்தலை யைச்சொரிந் துகொண்டே றாண்டே-எல்லாம்
கொண்டுபொ றுத்துஉன் தொண்டரை ஆளுமென் றாண்டே!

அழுதுகி டக்கிறான் பள்ளன்தொ ழுவினி லாண்டே - கண்டு
அங்கமு ருகியென் றுவிபத றுதே ஆண்டே
தொழுதுங்கள் பாதத்தில் வந்துவி ழுந்தேனென் றாண்டே - என்
துக்கத்தை யாருடன் சொல்லிநான் ஆறுவேன் ஆண்டே! 681

தூருகப் பொய்சொன்னேன் தொண்டிமேல் குற்றமல் லாமல் - உங்கள்
தொண்டன்மே லேஒரு தோஷமு மில்லையென் றாண்டே
சாராயங் கள்ளுக்கு டித்தவெ றியாலே ஆண்டே - வாய்த்
தப்பித மாகவே தாறுமா றாய்ச்சொன்னேன் ஆண்டே! 682

தில்லுமல் லல்லாம லுள்ளபடியல்ல ஆண்டே - உங்கள்
சித்தமென் பாக்கியஞ் செய்ததெல் லாம்பொறும் ஆண்டே
சொல்லுக்க டங்கா இ ளையவ ளால்வினை மீண்டு - வெறுந்
தொல்லக முமிந்தப் பொல்லாப்பும் வந்ததென் ஞண்டே! 683

மல்லாந்து மிழ்ந்தால்மார் மேல்விழு மென்றறி யாமல் - பள்ள
மட்டிப்புத் தியால்தேள் கொட்டாதென் றெண்ணினே ஞண்டே
கல்லார்ந்து கரடிகை வேல்வாங்கி னகதை யாண்டே - சிகைக்
கதலியுங் காற்றில டிபட்டுவாரதென் ஞண்டே! 684

தன்விளக் கென்றுநான் முத்தமிட் டேன்பண்ணை யாண்டே - அது
தான்சுடு மென்றறி கமைய றிகிலே ஞண்டே
என்பிழைப் புக்குயி டங்கேடு வந்ததென் ஆண்டே - இப்போ
ஏசுவார் பேசுவார்க் கெல்லாந்த லைசாய்ந்தேன் ஆண்டே 685

கொண்டவன் தன்மனம் நோகத்துரோ கஞ்செய்தே ஞண்டே - இந்தக்
கொடுமையுந் தோஷம்உம் மால்தீர வேணுங்கா ஞண்டே
பண்டொரு நாளினு மெத்தவ ருத்தங்க ளறியான் - பள்ளன்
படுகிற அவதிநான் பார்க்கமு டியாது ஆண்டே! 686

ஏங்கிமெ லிந்துயி ளைத்துத்து ரும்பானே ஞண்டே - கஞ்சி
இத்தனை யாகிலுஞ் சற்றுமி றங்கிலை யாண்டே
தீங்குவ ருமென்ற றியாமல் போனேனே ஞண்டே - பாவி
சீரங்கத் தாளெங்க ளுக்குச்ச னியானே ளாண்டே! 687

சாடிமெய் யென்றின்னங் கேபாம்பா ராட்டாதென் ஞண்டே - மார்
சரிந்தால்வ யிறல்லோ தாங்கவே ணும்பண்ணை யாண்டே
ஆடிபி றந்துகா லாவதி நாளாச்சு தாண்டே - பள்ளன்
அல்லாம லேபயி ராரிடு வார்பண்ணை யாண்டே! 688

பட்டுப்ப டாதசொல் பாரத மாக்கினேன் ஆண்டே - தீரப்
பத்துப்பத் தாகவி சாரித்துப் பாருமென் ஞண்டே
சிட்டுக்கு ருவிமேல் பாணந்தொ டுப்பாரோ ஆண்டே - மறு
திக்காரு மையல்லால் வேறேகெ தியுண்டோ ஆண்டே! 689

கொம்பனை யேரிக ளந்தண்ணீர் வந்ததென் ஞண்டே - ஏரிக்
கோடிக்க லிங்கில்நீ ரோடிமேல் போகுதென் ஞண்டே
சம்பாநெல் போகத்துப் பட்டமிது நல்ல தாண்டே - பெற்ற
தன்பிள்ளை தன்குற்றந் தான்பொறுக் கவேணுமாண்டே! 690

கள்ளனைப் போலேக லங்கித்த விக்கிரு ஞண்டே - அவன்
கால்மரம் வெட்டிவ ரவழை யும்பண்ணை யாண்டே
உள்ளப டியேநான் சொல்லியே வைக்குறே ஞண்டே - பள்ளன்
ஓடியே போனாலும் நானும்பி ளையல்லோ ஆண்டே! 691

கும்பிட்ட கையோடே வாழ்த்திவிட் டாற்போலே ஆண்டே - பள்ளன்
குட்டைம ரம்வெட்டி விட்டுவி டவேணும் ஆண்டே
அன்பென யாருடன் சொல்லிவி டுவிக்கப் போறேன் - பள்ளன்
அறிந்தறி யாமல்செய் குற்றம்பொ றுத்திடு மாண்டே! 692

மள்ளர்கு லத்துக்குப் புத்திகள் வந்தது ஆண்டே - உங்கள்
மனதறிந் துநாங்கள் நடக்கமு டியுமோ ஆண்டே
கள்ளிதன் சொல்படி யோ? என் றெண் ணுதேஎன் ஞண்டே-உன்
கடாட்சத்தி ஞலேக டைத்தேற வேணுங்கா ணுண்டே! 693

## மூத்தவள் பண்ணைத்தலைவனைக் கெஞ்சுதல்

### அகவல்

மெய்யருக்குரிய விக்தகன் செங்கோட்
டையனூர் பண்ணை யாண்டவா சரணம்
குசலமுங் கபடுங் கொடுமைசற் றறியா
பசுபதி யெனப்பேர் படைத்துநான் உலகில்
நல்லவ ளெனவே நடந்திடும் அடிமை
சொல்லும்வி ண்ணப்பம் சுவாமியே கேளும்! 694

வம்பறி யாத மகிணருக் கிளைய
கொம்பனை வந்தே குடிலமுண் டாக்கி
எனக்கவ னுக்கும் ஏதில செய்து
மனக்கவ டங்கள் வளர்த்திஞள் கள்ளி
வம்பிதன் மருந்தால் மயங்கியே தலைநாள்
நம்பிஞள் தனையும் நழுகவே விட்டான்! 695

விட்டுமே யிளையாள் வீடதே கெதியாய்
இட்டமாய்க் கணவர் இருந்ததி ஞலே
சினம்பெருத் தேநான் சேயிழை மதியால்
மனம்பொறுக் காமல் வந்துதான் உமது
காலிலேவிழுந்து கணவன் மேல்தூறு
கோவின தல்லால் கொடுமையொன் றில்லை 696

பெருமையொன் றில்லாப் பேரிளம் பெண்ணும்
பருவமே படைத்த பாரியென் றாலும்
கொழுநனூர் பின்னோர் குடிமக ளுடனே
தழுவினுல் மனது சகித்திடு வாரோ?
அக்கிர வண்டிபோல் அல்லநான் மடந்தை
பக்குவந் தனிலே பரதவிப் பேனோ? 697

குஞ்சரந் தனக்குக் கோவணங் கொடுத்தால்
அஞ்சுமோ அதுபோல் அரிவைமார் கணவன்
தனையடக் கிடவுந் தான்முடிந் திடுமோ
நினைவெனக் கிலையோ நேரிலை யாளோ
அப்படிக் குத்தான் ஆண்பிளை மறுபெண்
செப்பமென் றவளைச் சேர்ந்தபோ தைக்கும் 698

ஆதியில் வந்த அரிவைதன் மனது
வேதனைப் படகா விதமது செய்து
தப்பற மறுபெண் தன்னுடன் கூடி
எப்படி யிருந்தா லும்பிச கில்லை!
அவ்வழி யிலையே! அறுதியாய் எனையும்
கவ்வும்நாய் போலே கடக்கவைத் தாரே! 699

அதுவுஞ் சகித்து ஆண்டவர் செயலா
மிதுவுமஎன் றடிமை மெலிந்து 'நா யகர்க்கு
வருபுது மோக மல்லவோ மகிணர்
இருதய மறிந்த ஏந்திழை யாளைப்
பரதவித் தலையப் பண்ணிடார் இதுவும்
வரவரக் காண்போம்' எனமன தொறுத்து 700

இத்தனை நாளும் இருந்தனன் அவர்க்குச்
சித்தமே இறங்காச் செய்கையி னாலே
வந்தது வரட்டும் மகிணருக் காக
நிந்தையே சொல்லி நீலியென் றுலகோர்
ஏசினு மேசட் டென்றுமென் மனது
கூசிடா மலும்நின் கொலுவினில் வந்து 701

களவு எள்ளளவும் கபடுவஞ் சனையும்
பழுதுசற் றறியாப் பள்ளன்மேல் நானும்
பொய்யெனும் சொல்லைப் பொருத்தியே களவு
மெய்யெனச் சாடி விளம்பினே னுண்டே
கோபமாய் உரைத்த கொள்கையல் லாமல்
பாபமொன் றறியான் பள்ளனும் ஐயா! 702

தேவரீர்க் கதுவுந் தெரிந்துமே யிருக்கும்
ஆவலாய் என்சொல் அவத்தம்வ ராமல்
பேதையாள் பெற்ற பிள்ளைநேர் இவளும்
வாதையே படுருள் மகிணனோடிவளை
சேர்த்துநல் லுறவு செய்திட வேண்டிப்
பார்த்துமே அவனைப் பயமுறுத்தி யும்பின் 703

தொழுவினில் போட்டுத் தொண்டனைக் கண்டித் (து)
அழும்படி செய்தீர் ஐயனே நானும்
உங்கள்அப் பணைமேல் உண்ணவே சோர்கொண் (டு)
அங்கனே மகிணன் அண்டையில் போனேன்
கண்டுமே அவனுங் கலங்கியே விதனங்
கொண்டுமே எல்லாக் கொடுமையுந் தீர்ந்து 704

மெத்தவும் எனையே வேண்டியே "எனது
குற்றமும் பொறுத்தென் கொடுமையுஞ் சகித்தாள்!
வகையறி யாமல் வண்டியைக் கொண்டேன்
பகையெனக் குனக்கும் பாவியே செய்தாள்
அப்பவுந் தெரியா தகந்தையே செய்தேன்
செப்பமா யிப்பத் தெரியுதெந் தனுக்கு 705

உன்னைவே றன்றி உறுதியொன் றில்லை
பின்னுமா தர்கள்பால் பேசிடேன் எதுவும்
சத்யமா யெண்ணும் தையலே உனது
சித்தமே மகிழ்ந்தென் சிந்தையைத் தீரும்
வன்மமே யின்னம் வைத்திட வேண்டாம்
தன்மமே பாராய் தானுமிச் சணமே 706

பண்ணையாண் டவர்தன் பாலினிற் சென்று
வண்ணமா மயிலே வாஞ்சையாய் உரைத்து
எப்படி யெனிலும் எந்தைநம் எசமான்
அப்பணை வாங்கி அரைநொடி தனிலே
வந்துயென் சிறையை மாற்றிஞல் வாழ்வேன்
நிந்தைசெய் தின்னம் நிறுத்திஞல் பிராணன் 707

விடுவதே நிசமிவ் வேதனைப் படவும்
முடிவுரு'' தென்றே மொழிந்தனன் ஐயா!
இப்படி யெல்லாம் எடுத்துரைத் ததஞல்
அப்பணை கேள்க்க அடிமைநான் வந்தேன்
என்மனம் போல இரங்கியே இதுவோர்
தன்மமே வேண்டித் தயவுபா ரையா! 708

இன்பவேள் போலே இருந்திடும் பள்ளன்
தென்பது குலைந்து திகைக்குருன் ஐயா!
பண்டுநே சங்கள் பற்றுவி டாமல்
தொண்டருக் குறுதி சொல்லியா தரியும்
அண்ணலே இந்த அரும்பிழை பொறுத்தால்
புண்ணியங் கீர்த்தி புகழுமக் கலவோ? 709

"போட்டுவைப் பவளும் பொய்கள் சொல் பவளும்
மீட்டுவைப் பவளும் மெய்கள்சொல் பவளும்
இவள்தா ஞே?''என் றென்னையுஞ் சீறி
அவமா னஞ்செய் யாமலே காரும்
அப்பணை தருக அட்டியே செய்தால்
இப்பஎன் புருஷன் இறந்திடு வான்காண்! 710

அந்தமட் டுக்கும் அவதூறு பழிகள்
வந்திடா மலுமுன் மனதெனக் கிரங்கிச்
சங்கரன் அருளால் சபையினில் தரித்த
மங்கில்யப் பிச்சை மாப்பிச்சை தாரும்
கார்த்த சிறியரைக் கடைபோகக் காரும்
ஏற்றென் குலத்துக் கிழுக்குவ ராமல் 711

கண்கெடச் செய்த கடவுளார் திரும்பக்
கண்வரந் தந்த காரணம் போலே
கோவமாய்ப் போட்ட குட்டையின் மரத்தை
ஆவலாய்த் தரிக்க அப்பணை செய்து
கூட்டியே வந்து கொடுமைகள் தீர்த்து
மேட்டிமை யுடனே விரகுடன் வாழ்க 712

புத்தியு மதியும் போதகம் செய்து
பெற்றதாய் தமரும் பிரபல மாக
"முன்புசெய் மணமோ முறையல வென்று
பின்புநீர் செய்யும் பெருமைய தெனவே
அன்றுமாப் பிளைபெண் ஆனபா வனைபோல்
இன்றுமாப் பிளைபெண்" எனஅ னுப்பியுமே 713

மண்ணிலே நாங்கள் வாழ்ந்திடும் மாட்சி
கண்ணிலே கண்டு கர்த்தனே நீரும்
நாங்கள் உள் ளளவும் ரட்சனை புரியும்
பாங்கித னாலே பலன்உமக் குண்டு
கோபித்த கண்ணைக் குளிரவே பார்த்து
ஆபத்து குதவும் ஐயனே சரணம் 714

## அறுசீர் விருத்தம்

அழகிய வனிதை யிவ்வா
றருளவும் ஆண்டார் கொஞ்சம்
இளகிய தயவுண் டாகி
யேதச்சன் தனைய ழைத்து
வளமைசேர் "பள்ளன் குட்டை
வாங்கிநீ அழைத்து வா" என் (று)
உளமகிழ்ந் துரைக்கத் தச்சன்
ஓடினான் சிறைச்சா லைக்குள் 715

## குட்டை நீங்குகிறது

### அறுசீர் விருத்தம்

சாலைக்குள் ளிருக்கும் பள்ளன்
தன்னையா சாரி பார்த்து
மாலிமை மூத்தா ளாலே
வன்சிறை மீண்டா யென்று
காலினி லிருக்குங் குட்டை
கழற்றியே கூட்டிக் கொண்டு
சீலர்முன் வந்தான், பள்ளன்
தெண்டனிட் டிறைஞ்சி நின்றான். 716

## பண்ணைத்தலைவன் சொல்வது

தெண்டஞ் செய்த பள்ளன்முகந் தன்னை நோக் கி-திருச்
செங்குன்றமே வியசிவன் பண்ணை யாண்டார்
பண்டுதலை நாளினில்கொண் டவள் தனை யும் - சட்டை
பண்ணுமை லேமுடுக்கிப் பாதகஞ் செய் து
வண்டத்தனஞ் செய்யிளைய பள்ளியுட னே - கூடி
வாழ்ந்திருந்தா தாயமிஞ்சுஞ் செலவுசெய் து
விண்டுவிறைஞ் சுஞ்சிவனார் பண்ணைதனி லே - வந்து
வேலைகள்ந மஞ்சுசெய்யா தாகையா லும், 717

நெல்லுவகை மாடுவகை ஏர்முஸ் தேதி யும் – பின்னும்
நிலவர மாகவும்நான் கேட்டது வெல் லாம்
தில்லுமல்லு பொய்கள்சொன்ன தாகையால்உன்னை – நானும்
சிறையிலே போட்டுக்குட்டை சேர்த்தடக்கி னேன்
நல்லதாகட் டுமுன்செய்த தெல்லாம்பொறுத் தேன் – இனி
நன்மையாக வேநடந்துக் கொள்ளடாபள் ளா
மெல்லிமூத்த பள்ளிசொல்ப டிநடந்துக் கோ - மொழி
மீறினால்இவ் வழியாம்தெ ரிந்துக்கோபள் ளா! 718

### அறுசீர் விருத்தம்

ஐயனே அடிமை யுங்கள் அப்பணைப் பிரகா ரந்தான்
மெய்யென நடந்து கொள்வேன் என்றிடப் பண்ணை வேந்தர்
பொய்யது புரட்டில் லாமல் பிணைமுறி வாங்கி மூத்தாள்
கையினில் ஒப்பி வித்துக் காவல னுரைக்கின் றுனே 719

### கலிப்பா

மான்மருவுஞ் செங்கரத்தார் வள்ளல்திருப் பண்ணைவயல்
தான்விளைந்த நெல்வகையுந் தானிருப்புஞ் சொல்லுமெனத்
தேன்மொழியும் உள்ளபடி செப்புமென வேகுடும்பன்
தான்விளைந்த நெல்விவரந் தானிருப்புங் கூறினனே! 720

## குடும்பன் நெல் வகையும் இருப்பும் கூறல்

வங்கிநா ராயணன்கா லிங்கராயன் - வெள்ளை
மச்சுமுறித் தான்வாலான் பச்சைவண்ண னும்
குங்குமச்சம் பாசெஞ்சாலி மங்கலச்சம் பா - வாடை
குத்தாரிமா சப்புழுதி சித்திரக்காலி
பெங்களூர்ச்சம் பாசெந்தாழை சங்கரவண் ணன் - சிறு
பேரா வண்ணன் லாவனமென் சீராமபா ணம்
செங்குறுவை யீர்க்குச்சம்பா மங்கலப்பிச் சை - நல்லி
சித்ரவண்ணன் தோட்டச்சம்பா முத்துவிளங் கி 721

வெள்ளைச்சம்பா மணல்வாரி முள்ளுக்குறு வை - நல்ல
மேகந்திரை கொண்டான்சிறு நாகராசன்
பள்ளிகொண் டான் பூசைப்பொட்டி வெள்ளைக்குறு வை - செழும்
பணைமுகரி மட்டைக்காரு குட்டைச்செகப் பன்
தெள்ளுமணி யாஞ்சிவப்பி பிள்ளையென வாழ் - நெல்லும்
சின்னவங்கி சீதாபோகம் சன்னச்சம்பா வும்
கள்ளமில்லை யிவ்வகையில் உள்ளபடி தான் - மூன்று
களஞ்சியத்தில் நெல்லாயிரங் கலமிருக்கு து 722

மல்லிகைச்சம் பாகோடாளம் முல்லைப்பூச்சம் பா - சிறு
மலைமுண்டன் பூம்பாளையுஞ் சலகண்ட னும்
சொல்லும்அலங் காரப்பொன்னன் கல்லுண்டைச்சம் பா - முக்கண்
சுருணைவாரி செம்மழகி சுருணைவால னும்

அல்லிப்பூச்சம் பாசெம்பாளை நெல்லன்னச்சம் பா – நல்ல
அழகுசம்பா ஆனைக்கொம்பன் புழுகுசம்பா வும்
வல்லாளரா யனும்பத்துச் சில்லரைநெல் லும் – மெட்டு
மச்சினில்முன் னூறுகலம் வைத்திருக்கி றேன். 723

பக்கிரிச்சம்பாகுறுவைசர்க்கரைவண்ணன் – நல்ல
பண்ணுடிக்காத்தன்விளங்கும்கண்ணுடிக்கூத்தன்
கொக்குநிறத்துய்யசம்பாதெக்கலூர்ச்சம்பா – நல்ல
கோடைச்சம்பாகஸ்தூரிநெல்காடைக்கழுத்தன்
கைக்கொறிகையும்பொற்சாலிசொக்கநாதனும் – பூங்
காரிகைமணக்கத்தைநெல்சூரியச்சம்பா
தக்கநெல்லிரண்டுகளஞ்சியந்தனிலே – இது
தானிரண்டாயிரங்கலந்தானிருக்குது 724

## வேறு

பன்னகாசலம் மேவும்பராபரர்
பண்ணையந்தனில் தானும்விளைந்திடும்
சென்னெலானது இன்னவகைதொகை
செப்புறேன்மனதொப்பனையாகவும்
என்வசத்திலிருப்பதை இன்னமும்
இன்பமாயினிக்கேளுங்களாண்டே
அன்னதானகுருவைகளரஞ்சம்
பாவும்கோதும்பைஅனுமந்தச்சம்பா 725

புகழதான அடுக்குச்சம்பாவுடன்
புன்னைப்பூச்சம்பாவும்கம்மஞ்சம்பா
மகிழம்பூச்சம்பா அல்லிஅழகிய
மணவாளன்சிறுகுறுவையிடைக்காட்டான்
தகமையாம்மிளகுசம்பாவனச
சம்பாவுஞ்சீரகச்சம்பாநெல்லதும்
மிகுதியாகியகார்த்திகைச்சம்பா
விலுப்பைப்பூச்சம்பாவுஞ்சிறைமீட்டான். 726

வளைந்து சாய்ந்திடும்திருவரங்கன், கட்டை
வாலன், தேவன்சம்பா, ராமலட்சுமன்
களஞ்சியந்தனில்வகைக்குமுன்னூறு
கலமிருக்குதளவற்றநெல்களும்
துளைஞ்சுபார்க்கினும்என்மீதில்கள்ளங்கள்
தோற்றிடாதுள்ளவகையிதுஸ்வாமி!
விளைஞ்சநெல்லின்கணக்குவகைதொகை
விவரமாகவும்மண்டகப்பாளையம் 727

தன்னிலேவளர் நமசிவாயம்பிள்ளை
தன்கணக்கெழுதிவைத்தேநான்
அன்னெல்தானறுவானதுங்கோதைவாழ்
ஆத்மராமையர்பழனிமகிபன்
முன்னமேநெல்லளந்தகணக்கு
மொழிந்துமேபத்திரங்களுஞ்செய்தேன்
இன்னம்ஆயிரங்கோட்டைவிதைநெல்
இருக்குதுகணக்கிவ்வளவாண்டே! 728

### கலிப்பா

கோட்டுக் கதிபதியார் கோதா புரித்தலைவர்
பாட்டுக் கிசைந்தவயல் பண்ணை வளர் பள்ளனிவன்
நாட்டுத் துரைத்தனஞ்செய் நண்பர்பண்ணைக் காரர்முன்பு
மாட்டுப் பிரபலமும் வகையுடனே கூறினனே. 729

### சிந்து

தெந்தினதிநாதிநன்ன - தெந்தின தினன - தென்ன
தெந்தினதிநாதிநன்ன - தெந்தின தினன

விரிகொம்பன் சொரிவம்பன் நரிமிரட்டி - மட்டை
வீணிக்கொம்பன் நாணிக்காளை ஆணிக்கழுத்தன்
கரிவண்ணன் எரிகண்ணன் வரிக்கழுத்தன் - கருங்
கட்டைக்காளை வட்டப்புல்லைமட்டக்காளையும் 730

மட்டைக்கொம்பன் நெட்டைக்காளை குட்டைச்செவியன் - காரி
மடைவிழுந்தான் நடையழுந்தான் சடையெழுந்தானும்
குட்டைக்கொம்பன் நெட்டைவாலன் சட்டைமயிலை - நல்ல
கூடுகொம்பன் பாடுரஞ்சி வீடுபீடுங்கி 731

முட்டிக்காலன் சுட்டிக்காளை சட்டித்தலையன் - ரெண்டு
மோதுகாலன் சாதுவெள்ளை ஊதுமூஞ்சி
சுட்டிவெள்ளை நெட்டிக்காலன் பட்டி நுழையான்- வந்து
சுவரைக்குத்திக் கவலைக்காளை செவலைமறையன் 732

வெள்ளைக்காளை வள்ளக்காலன் துள்ளுகுட்டியும் - ஆளின்
மேலேறிகண் ணுலாம்பாடி கீலாறுக்காளை
கள்ளக்கடையான் குள்ளக்காளை வெள்ளையெருதும் - நௌவி
கருமறையன் சிறுநிறவன் கருடமுகவன் 733

அச்சுதன்ராமலட்சுமன் செச்சையழகன் - மத
யானைக்குட்டி, பூனைக்கண்ணன், சேனைத்தலைவன்
உச்சிக்கொம்பன் நச்சுக்கொட்டி மெச்சுநடையன் - சிறு
ஊசிக்கொம்பன் வீசியெறிவான் பாசக்கழுத்தன் 734

நெற்றிக்கண்ணன் சித்துலிங்கம் சுத்தவெள்ளையும் - நல்ல
நெடுமறையன் கடுநடையன் கொடுமுடியானும்
கற்றுக்குட்டி வற்றக்காளை ஒற்றைக்கொம்பனும் - மறைக்
காரிமோழை மாறுகண்ணன் நேருவாலனும் 735

செம்புலிங்கம்பைம் பொன்னனும் தும்பிநிறத்தான் - சிறு
செஞ்சாரையன் மஞ்சுவாலன் பஞ்சவன்னனும்
கும்பனும்நி கும்பனும்க சம்பன்கறுக்கா - மயிலை
கொண்டனும்ப்ர சண்டனுங்கோ தண்டராமனும் 736

சொக்கநாதன் அக்ரவண்டன் உக்ரபார்வையன் - பருஞ்
சூடுகொண்டான் காடுசுற்றி கூடுகுளம்பன்
செக்கைதிறன் வக்ரதந்தன் சுக்ரமணியன் - பருஞ்
செங்கண்ணன்ப ளிங்குதிறன் சங்கரவண்ணன் 737

சர்ப்பகிரி மேவிவளர் சம்புசிவனுர் - உட
தன்பண்ணையந் தன்னில்நி றைந்தேபெருகியே
இப்படிப்பேர் பெற்றகாளை எருதுவர்க்கமும் - இங்கே
எழுநூறு கால்நடையிருக்குது யின்னம் 738

சொற்பெரிய மாடெருதிரு பதும்உண்டு - நல்ல
சூலக்காளை லிங்கமுத்திரை சூட்டிவிட்டதும்
அற்புதம தாகியதம் பட்டஎருதும் - பிடித்
தாட்டிவைக்கும் பொலியெரு தைம் பதுமுண்டு 739

கட்டுக்காளை யெட்டிருபத் தெட்டுச்செங்கண்ணும் - பருங்
காடியெரு தீரெட்டிளங் கன்றறுபதும்
கட்டளைக்க முதந்தரும் பசுவெண்பதும் - நல்ல
கவலைப்பசு முப்பதுகா ரம்பசுவிஞ்சு 740

மட்டில்லாத வகையிது வர்க்கங்களெல்லாம் - நாக
மலையிலே மேயவிட்டு வளைத்துவந்து
வட்டமிகும் பொன்மலைக்குங் காளிமலைக்கும் - நடு
மையந்தனில் கிடைபோட்டு ஐயன்காவலாம் 741

என்றுசொல்லி யெப்பவும்பத் தாளுங்காவலாய்த் - தினம்
இருந்துகொண்டு மேய்க்கிறுர்கள் இன்னஞ்சிலதாம்
குன்றுபோலு ங்கருமுகில் கொண்டலைப்போலும் - மத
குஞ்சரத்தைப் போலுஞ்சிங்கக் குட்டியைப்போலும் 742

தென்றிசை நமன்வாகனந்த ன்னைப்போலும் - அட்ட
திக்கினில்உ லவிவருஞ் சிங்கத்தைப்போலும்
என்றும்பல பத்திரர்ஆ யுதத்துக்கிணையாய் - கிடா
எண்பதுஉண் டெருமையோர் ஐம்பதுஉண்டு 743

வெள்ளாடுசெம் புளியாடைந் நூறுகால்நடை - விடு
விருதுமாடு டன்கத்துக்கி டாரியெண்பதும்
உள்ளுருவ யல்பட்டியில் தானடைகுது - முற்றும்
உள்ளபடி சொல்லிவிட்டேன் உண்டானதிது 744

கள்ளமில்லை தேவரீர்க்கு வஞ்சகமில்லை - வேணிக்
கர்த்தர்துரோக மில்லையிது சத்யவசனம்
வள்ளல்செங்கு ன்றூரரசர்க் கெள்ளளவுமே - சூது
மனதில்எண் ணோன்தயவு வைத்தருளாண்டே! 745

## அறுசீர் விருத்தம்

கறைமிடற் றண்ணல் எங்கோன் கனபணப் பொருப்பில் மேவும்
இறைவர்தன் பண்ணை யத்தின் ஏருமுஸ் தேதி சொல்வேன்
பிறைகொளுங் கலப்பை மேழி பிரிகயிர் தடிநூகங்கள்
முறையினத் துடன்முந் நூறேர் முஸ்தேதி யிருக்கு தாண்டே!

## எண்சீர் விருத்தம்

பள்ளனிவ்வா றுரைத்தபின்பு பண்ணை யாண்டார்
பரிவுடனே மகிழ்ந்துபச்சை வடம தொன்று
பள்ளியர்க்கு நிறையெழுத்துச் சேலை யொன்று
பாங்குடனே வரிசைதந்து அனுப்பி வைத்தார்
உள்ளமகிழ்ந் திவர்மனைக்கு வந்து கூடி
உகந்திருந்தார் இளையவட்கு பாயஞ் சொன்னான்
கள்ளமனக் கபடமும்வாய் உறவு மாகக்
கலந்திவர்மூ வருமனையில் களித்தி ருந்தார் 747

மகிழ்ந்துபள்ளன் தனைநயினூர் வரவ ழைத்து
வயல்உழுக வேணுமிது தருண மென்று
சுகந்தரும்வே ளையும்நாளும் கேட்போம் என்று
கருதிமறை யோர்வருக ஆள்வி டுத்தார்
புகழ்ந்துதண்டல் காரன்மறை யவர்முன் சென்று
பொன்னேருக் கட்டவும்பண் ணையினூர் நாளும்
பகர்ந்திடவே வருகஎன்றூர் என்ற போது
பஞ்சாங்க வேதியருந் தோன்றி னரே 748

## சோதிடன் வருதல்

### சிந்து

ஏகபுடம் விபூதி ஏர்வையு டன்அணிந்து
இன்பமுடன் ருத்ராட்ச மாலேபு னைந்து
வாகாய்க்குல் லாவும்வைத்து மார்பில்பூ ணூல்தரித்து
மந்திராட்ச தைபஞ்சாங்கம் கையி லெடுத்து
மாகன குண்டலமும் அணிந்தும டியுடுத்து
வல்லவட்டே காசமிட்டு மறையோ தி
நாகம லேயரன்தன் நடனப தம்தியானித்து
நல்லேய குருக்கள்வந்து தோன்றி ஞரே 749

### அறுசீர் விருத்தம்

வேதியர் வந்த போது விமலனுர் பண்ணேக் காரர்
நீதியாய் எழுந்து போற்றி "நீங்கள்பஞ் சாங்கம் பார்த்து
ஆதியாய்ப் பொன்னேர் கட்ட ஆனநாள் உரையும்" என்ன
சோதிடம் தெரிந்தவேதர் சுபமுகூர்த் தங்கள் சொல்வார் 750

### தக்கை

"மன்ன வாசொல்லக் கேளுமிது
மாதந் தன்னிலே மூரந்தேதி
தன்னி லேகுரு வாரதினம்
சத்த மிபுனர் பூசமதில்
கன்னி லக்கினந் தன்னிலுமேர்
கட்ட லாஞ்சுப நாளிதுவே"
என்ன வே "முதல் நெல்விதைக்க
எந்த நாளாகும்" என்றனரே 751

வித்து மேமுத லேவிதைக்க
விபரஞ் சொல்லுவேன் மன்னவனே
பத்தின் மேலொன்ற தாந்தேதி
பண்பு சேர்திங்கள் வாரமதில்
சித்த யோகந் தான்தசமி
சேரும் உத்திர மும்இடபம்
மெத்த வேசுப நாளிதுவாம்
விதைக்க லாம்நன்ருய் விளேயு" மென்ருர் 752

அந்தமொ ழிசொல்ல வேநயினார்
　　அதிக சந்தோஷந் தானாகி
சிந்தைம கிழ்ந்துசு யம்பாகம்
　　தெட்சணை வெள்ளி இலையடைக்காய்
தந்துவே தியர்த லையனுப்பி
　　சம்ப்ரம மாயிருந் தார்குருநாள்
வந்தபின் பள்ளர்த லையழைத்து
　　வரிசை யாகஏர் கட்டுமென்றார் 753

### எண்சீர் விருத்தம்

அந்தணர்சொல் படிநயினார் வயலில் வந்து
　　அன்புடன்ஏர் கட்டுமென பள்ளர் வந்து
முந்தவும்ஏர்க் கட்டமணி யோசை சங்கு
　　முறுதொனியார்ப் பவுங்கருடன் இடத்தே போக
நந்தியிட வனும்நீர்வார்த் தாக்கஞ் செய்ய
　　நல்லசகு னங்களென்றன் றோர்ம கிழ்ந்தார்
சந்திரசே கரநயினார் மனைத னக்கு
　　தானடந்தார் பள்ளரும்பின் தான்வந் தாரே 754

### அறுசீர் விருத்தம்

வந்தவர் மறுநாள் தன்னில் மள்ளரெல் லோருங் கூடி
இந்தணி சடை யார் கோதைஈசுரர்வயலேர் கட்ட
முந்தவே மாட்டு வர்க்கம் முறையொழுங் காய்நி றுத்தி
விந்தைவே டிக்கை யாக விரைந்தவை தமைப்பி டித்தார் 555

## மாடுபிடித்தல்

### சிந்து

*தின தினைத் - தின தினைத் - தினதினைத்தினதினை*

குவலயந்தனில் விளங்கு திருச்செங்
　　குன்ற ரன்பதம் பணிந்துமே
குதித்துக் குதித்துக் கேக்கை போட்டுக்
　　குடும்ப ரெல்லோருங் கூடியே
சிவமகிமையைப் புகழ்ந்து சந்திர
　　சேக ரப்பள்ள னோடிப்போய்

செவலை மறையைச் சேர்த்துப் பிடித்து
கவலைக் காளையைப் பிடிக்கவே
சவரணையுடன் பழனிக் குடும்பன்
சள்ளைக் கொம்பனைத் துரத்தியே
தழுவித் தழுவிக் குதிக்க வேஅது
நழுவிக் குதித்திட் டோடவே
இவனை மாரிடத் தோணிக் குடும்பன்
அவச ரத்துடன் ஓடிப்போய்
இந்த எருதைப் பிடித்து நிறுத்தும்
விந்தையைப் பாரும் பள்ளியரே! 756

நந்தி வாகன ருடனார் – புவி
யிந்தி ருப்படை வீடனார்
நாக முற்பொரு ளேபடைத்தபன்
னாக வெற்பரன் வயலிலே
சிந்தை மகிழ்ந்து யிருளக் குடும்பன்
வந்து மயிலைக் காளையைச்
சீக்கி ரத்தினில் பிடிக்க வேஅது
ஆக்கி ரமித்து முடுக்கவே
அந்தி வண்ணருக் கபய மென்றொரு
சந்தி னில்புகுந் தோடவே
அடுத்துப் போகவும் மருதக் குடும்பன்
தடுத்துக் காளையை அதட்டியே
கந்தர் துணையென் றோடிக் கொம்பினை
முந்த வேபிடித் திருத்தவே
கட்செவி தடைக்குள் அடங்கல் போல்நின்ற
உச்சிதம் பாரும் பள்ளியரே! 757

தேச மெங்கினும் அடியர் பங்கினில்
வாச மாகிய ஈசனார்
சிற்ப ரன்கவு ணியன்தி னம்பணி
வெற்ப ரன் திரு வயலிலே
ராசக் குடும்பன் திருமங்கை கயி
லாசக் குடும்ப னிருவரும்
நாச்சி தங்கையும் சேர்க்கை யாந்திரு
வாச்சி மங்கையும் பார்க்குமுன்

னேச டைவிழுந் தாளைப் பிடிக்கப்
பாசை கூறியும் வளைந்திவர்
நெருக்கிப் பிடிக்கப் போக வேஅது
செருக்குப் போட்டுக்கொண் டோடவே
பாசக் கழுத்தனும் இவரை முடுக்க
ஊசிக் கொம்பனும் எதிர்த்துமண்
பறிக்கப் பள்ளியர் நின்றுகை கொட்டியே
சிரிக்கி றார்பாரும் பள்ளீரே! 758

உரைந்து மால்காணு அடியினார் அயன்
பறந்த றியாத முடியினார்
உருச்செங் கோட்டுரந் தயிலி னார்வளர்
திருச்செங் கோட்டரன் வயலிலே
அறந்த ழையுமுஞ் சனையின் வடமன்
விரிந்த கொம்பனைத் துரத்தவே
அருண்டங் கேதிரை கூட்டங்க ளெல்லாம்
மிரண்டிங் கேகலந் தோட்டமாய்
முறைந்து வரவோர் நாணிக் காளையை
கருந்தி ருவனுஞ் சீறிப்போய்
மூக்க ணுங்கயிர் பிடிக்க வேஅது
தூக்கி நிலத்தோ டடிக்கவே
இருந்தி வன்முழங் காலைப் பிடித்து
வருந்திக் குனிந்திட் டோடவே
இளையா னும்பட்டி நுழையா னைப்பிடித்
திழுத்கி றான்பாரும் பள்ளீரே! 759

கடவுள் சிற்சபை நடன தற்பரன்
கமல பொற்பத நிமலனார்
கட்செவிக் குவட் டுச்சி யிறைவர்
கயலினம் செறி வயலிலே
திட மிகும் வெள்ளை யிடவனைக் கருஞ்
செல்லி தன்மகன் நல்லியும்
சேர்த்துப் பிடிக்கப் பார்த்துத் திமிர
சேரவி ருந்தோர் ஓர மாய்
படலைக் கொம்பனும் வடமப் பள்ளனைப்
பாய வேதூரம் போய வன்

பதறி யேவிழுந் துதறி யோடவும்
பாண்டிப் பள்ளனும் தாண்டிப் போய்
படமிகும் கடிதட அழகியர்
பள்ளி மார்மயல் கொள்ளவே
பாடிக் கொண்டவன் ஓடிப்பி டிக்கிறான்
பயலைப் பாரும் பள்ளீரே! 760

துரும்பி னும்பரும் தூணில் உண்டென
விரும்பு வார்முகம் திரும்பு வார்
சோதி யார்பன காசலச் சதுர்
வேதி யன்திரு வயலிலே!
கரும்ப யனும்விண் ணுனம் பேசி
உறும்பிக் கொண்டொரு காளையைக்
கட்டிப் பிடிக்கப் போன வுடனே
எட்டிக் குதித்துப் பாயவே
வரும்ப ணிக்குதன் மகள்சின் னாள் நின்று
வெறும்ப ணிக்குகள் பேசவே
மாரிக் குடும்பன் ஓடிப் போயொரு
காரிச் சேங்கன்றைப் பிடிக்க வே
திரும்ப முடுக்க ஓடிப் போயொரு
குரும்பை முலைப்பெண் ணுளுட
சித்திடை யைக்கட்டிப் பிடிக்க வேஅவள்
மொத்துத லைப்பாரும் பள்ளீரே! 761

சங்கரர் வெம்புலி யுடையினர் பிறை
கங்கை வளர்திருச் சடையினர்
தாண்ட வம்புரி கடவுள் கோதையென்
ஆண்ட வன்திரு வயலிலே
மங்கையில் மேவும்பொன் காளிப் பள்ளனும்
அங்கொரு காளையைப் பிடிக்கவே
வாலைக் குலைத்து வட்டம் போட்டது
காலைத் தூக்கிக்கொண் டாடவே
நங்கையா ரைக்கட்டிப் பிடிப்பான் போலவள்
கொங்கை களைக்கையில் நெருக்கவே

நாணிக் கொண்டவள் நகைக்க வேதடி
யூணிக் கொண்டுபின் உதைக்கவே
இங்கிவள் ஏசவும் பயந்தாற் போலிவன்
வங்கணம் பேசிவந் தழகிதன்
இடையைக் கட்டிமுன் னுடையுள் கையிட
அடியுதைபாரும் பள்ளீரே! 762

காட்சி சேர்விரு பாட்சன் தூலமும்
சூட்ச காரண மானவர்
கர்த்த ராகிய சித்தர் கோதையென்
அர்த்த நாரீசர் வயலிலே
மாச்சி யும்பரு வாச்சிக் கொம்பனைப்
பாய்ச்சல் காட்டி முடுக்கவே
வழுந்தி யிவன்பின் எழுந்து ஓடியே
கொழுந்தி யைக்கட்டிப் பிடிக்கவே
நாச்சி யும்பிள்ளை தாய்ச்சி நானென
கூச்ச மாய்க்குனிந் கொடுங்கவே
தச்சுக் கொட்டிக்கிச்சுக் கிச்சுப்ப டுத்தவே,
கொச்சை மொழியிலெச் சாகவே
பேச்சில் வாய்கொள்ளா தேச்சை யேசியும்
சீச்சீ யென்றிவ ளுதைக்கவே
பெருமை கெட்டிவன் சிறுமைப் பட்டிங்கே
வருவ தைப்பாரும் பள்ளீரே! 763

கூத்தா டும்வெறி மருளி ளூர்புவி
யாத்தா ளுக்கிட மருளு ளூர்
கோட்டானைத்தரு சைலர் பூந்துரை
நாட்டார் அற்புத வயலிலே
காத்தா னும்நுகம் போடவே பசுக்
காத்தா னுஞ்சினந் தேடவே
கையில் கோலைவீசி யேவர
மையில் கொண்டொரு தாசி போல்
சாத்தா ளுஞ்சன்னை பேசிச் சாடையாய்ப்
பார்த்தாள் பின்னிவள் வாடை யால்

சந்தோ ஷத்துடன் வந்திட் டான் அவள்
இந்தா வென்றிலை தந்திட் டாள்
சேத்தா ளிசெல்லி கண்டு மேமனம்
ஆத்தா மல்சண் டை கொண்டு மே
சீராட் டங்கவர் பாராட் டிங்கிவர்
போராட் டம்பாரும் பள்ளீரே! 764

செஞ்ச டையினர் நஞ்ச ணிந்தவர்
பஞ்ச முகவர் வஞ்சிக் குத்
தேகம் வாம பாகம் நீடும்
நாக தேவர் வயலிலே
மஞ்ச வாலனை அஞ்சு பள்ளர்வ
ளைஞ்சு பிடித்துக் குஞ்சவே
வல்லி நல்லியும் எல்லி யும்பரும்
பல்லி செம்புகச் செல்லியும்
மிஞ்சு மயல்கொண் டஞ்சு பள்ளரைப்
பஞ்ச ரித்தவர் கெஞ்சவே
விரும்பிப் பள்ளரும்திரும்பிக் கன்னியர்
குரும்பைத் தனங்கள் தழுவியே
ரஞ்சித மொடு கொஞ்சு வோமென
வஞ்சி மார்மனை யுஞ்செல
நாட்ட மும்பெருங் கூட்டம்பள் ளர்கொண்
டாட்ட மும்பாரும் பள்ளீரே! 765

## குடும்பன்மேல் மாடு பாய்தல்

எத்தி சைபுகழ் கவுணி யன் சிவ
பத்த னாகிய தமனி யன்
ஏகாந் தபரி பூர ணர்க்கிசை
வேதாந் தகரு ணைகரன்
சித்திர கவியன் பாரதியருள்
பெற்றிடு பொன்னுச் செல்லையன்
சிந்தை யில்குடி கொண்டு மேவளர்
சுந்த ரானந்தர் வயலிலே

மெத்த ஆண்மைகள் கூறி யேவலு
வுற்ற வீரனைப் போல வே
மிரட்டி யேபொ லியெருதைப் போயவன்
முரட்டுத்-தனமாய்ப் பிடிக்கவே
குத்திப் பாய மயங்கிப் பெரிய
உத்தி யில்ச தாசிவக்
குடும்பன் விழுந்து கிடக்கி றுனந்த
இடும்பை பாரடி பள்ளீ ரே! 766

**கலிப்பா**

மதம்பெரிய காளையுந்தான் வந்துதள்ளிப் போகவும்உன்
னிதம்பெரிய பள்ளனவன் நினைவழிந்து தான்கிடந்தான்
இதம்பெரிய பள்ளியர்கள் இவ்வார்த்தை கேட்டலறி
விதம்பெரிய பள்ளனுட மேல்விழுந்து கூறினரே. 767

## மனைவியர் புலம்பல்

**சிந்து**

மூத்தவள்:

புலியதனைப் பிடித்திழுக்க வல்லாய் - பொலியெருதைப்
புடிக்கமாட் டாததென்ன சொல்லாய்
வலுவிழந்து தான்விழுந்து கிடந்தாய் - அடங்காத
வசவனையும் ஏன்பிடிக்கத் தொடர்ந்தாய்
மலரயன்முன் னுள்விதித்த விதியோ? - இளையபள்ளி
மருந்தினிட லாகிரியின் வெறியோ?
கெலிவாக எழுந்துமொழி விள்ளாய் - இதுவென்ன
கிரகசா ரப்பலனோ பள்ளா? 768

இளையவள்:

எந்தத் தெய்வங்களை நீ பழித்தாய் - மனம்பதறு
தின்றுநீ யார்முகத்தில் விழித்தாய்!
மந்திரியோ சனையென்று கெடுமோ - எளையாளும்
வல்லாளன் சமர்த்துகள்போய் விடுமோ?
சந்திரசே கரஐயர் குறையோ - மூத்தபள்ளி
சக்களத்தி யாளிட்ட முறையோ?
இந்தவினை யார்விளைத்த இடும்போ - இனியானும்
என்னசெய்வேன் எனதாசைக் குடும்பா? 769

மூத்தவள் :

தடுத்தெனையுங் கொண்டுபழி யெடுத்தாய் - தினசரிக்குத்
தப்பாமல் அவள்வீட்டில் படுத்தாய்
அடுத்தவள்தன் ஆசைகரும் பாச்சே - பழிகாரி
யாலெனதா சையுங்கசந்து போச்சே
சடுத்தம்வரு காமலிரு வரையும் - சரியாகத்
தான்நடத்திக் கொள்ளமனங் குறியும்
படுத்தகிடை யெழுந்திருந்து கொள்ளாய் - செங்கோடர்
பாதமற வாதபண்ணைப் பள்ளா! 770

இளையவள் :

நன்மொழிகள் தனையுமுன்பு தட்டாய் - அதுமீறி
நட்டாற்றில் எந்தனைக்கை விட்டாய்
வன்மமே பாராட்டும் வஞ்சி - யாளெனவும்
மனதிலெண் ணமலும்நீ அஞ்சி
கன்மவினை யாலழைத்துக் கொண்டாய் - மகராசி
காவிடவும் இந்தப்பலன் கண்டாய்!
தன்மவான் தனக்கிதென்ன இடும்போ - என்கவலை
தான்தீர எழுந்திரும்என் குடும்பா! 771

## குடும்பன் கனை தெளிந்து எழுதல்

சிந்து

பாங்குட னேஇரு மாது - வந்து
பக்கத்தி ருந்திடும் போது
தூங்கியெ ழுந்தவன் போலே - விழும்
சோபந்த ணிந்ததின் மேலே 772

பள்ளனெ ழுந்துகண் விழித்தான் - மூத்த
பள்ளித னைக்கண்டு பழித்தான்
கள்ளியி ளையாளைக் குறித்தான் - கடைக்
கண்ணாலே பார்த்தவன் சிரித்தான் 773

மன்மதன் போலவன் எழுந்து - பள்ளி
மாருடன் கூடியே நடந்து
தன்மனைக் கேகியே நுழைந்து - மெத்தச்
சந்தோஷ மாகவே யிருந்து 774

காதல்கொண் டேமனந் துடித்து - மெத்தக்
கள்ளுச்சா ராயமுங் குடித்து
சாதமும் உண்டிலைப் பாறி - வெறி
தள்ளிட லாகிரி மீறி 775

வஞ்சியி ருவரும் வாடி! என்று
வந்தபின் மூவருங் கூடி
கொஞ்சியே முத்துமுத் தாடி - மையல்
கொண்டிட வேவிளை யாடி 776
தையல ரேஇரு மென்றே - பள்ளன்
தான்வயல் காட்டுக்குச் சென்றே
எய்யு மதன்தனை வெல்வான் - வயல்
ஏர்கட்டப் பள்ளர்க்குச் சொல்வான் 777

## குடும்பர் சேரடித்து நெல் விதைத்தல்

### கலிப்பா

வாளேறுஞ் செங்கரத்தார் வாசுகிமே ரையர்வயல்
தாளேறுஞ் செய்கையெனத் தானேரு கட்டிமள்ளர்
காளேறு பாட்டுவெகு கற்பனையாய்ப் பாடியவர்
கோளாருய்த் தானுழுது கொத்தித் திருத்தினரே! 778

### சிந்து

முந்தத்த ரிசடித்து முச்சாரி யாய்ம றித்து
நைந்திடச் சேர்கலக்கி நயமாக நாலுழவு
பிந்தியுழுதுகட்டிப் பேர்த்து மிதித்த முத்திப்
பந்தி யாக வரம்பு படுத்திக் கொத்தித் திருத்தித் 779

திரைகொண் டங் கங்கு தண் ணீர்தேங்கவ டித்துவிட
நிறைநிறை யாய்மடைகள் நீக்கிப் பரம்படித்து
குறைவில் லாமல் குண்டினில் கொளுஞ்சி போட்டு மிதித்து
விரைநெல்லின் கோட்டை யெல்லா மெடுத்துவந் தேசலத்தில் 780

போட்டுச் சனிதங் காமல்புகல்உத்தி ரம்தசமி
நாட்டுத் திங்கட் கிழமைநல்வேளை யில்எடுத்து
கோட்டையெல் லாம்வயலில் கொண்டுவந் தேவைத்தவர்
நாட்டுக் கதிபதியார் நாரிவி நாயகர்க்கும் 781

தளபதி யானதுரை சண்முகா னந்தருக் கும்
பழமுந்தேங் காய்கரும்பும் பாக்குவெற்றி லையும்வைத் து
வளமாய்த்தூ பதீபங்கள் வரிசை யுடன்கொடுத்து
அழகுயர் நாகமலை ஆண் டவ ரைப்பணிந்து 782

குணவான் சதாசிவக் குடும்பன் மனமகிழ்ந் து
இணைசேர் முளைநெல் வாரி எடுத்துமுன் னேவிதைத்தான்
மணல்வாரி யோரடைம்பது வகைநெல் விதைக ளெல்லாம்
தணிவாய் வகைக்கொருவர் தானு மடியில் கட்டி 783

சாத்தன் திருமலையும் சங்கன் சங்கரன் ரங்கன்
கூத்தன் வடமன் பொம்மன் கோவிந்தன் தாண்டவ னும்
போத்தன் கரும்பயனும் புங்கன் இருளன் பொன்னன்
பார்த்தன், காத் தான். பழனி பலவன், மங்காம்பழனி 784

நல்லான் இ ளையான்மாரன் நஞ்சன் சிலம்பன் வீரன்
எல்லோருங் கூடிநெல்லை எடுத்தணி யாகவீசி
வல்லமை யாய்விதைத்து மாதே வரைத்தொழுது
இல்லந்த னில்வந்தவர் இருந்துசு கித்தன ரே 785

## நெல் நாற்று விடுதல்

### கலிப்பா

கன்னல்வில்லி யைச்செயித்த கட்ட முகர் பண்ணைவயல்
செந்நெல்தனை யேவிதைத்துச் சேர்ந்திருந்து பள்ளரெல்லாம்
நன்னய மாய்ச்சிறிது நாற்றுவிட வேணுமென்று
உன்னத மாய்நிலத்தை உண்மையுடன் பார்த்து வந்தார் 786

### சிந்து

பூமருவுங் கலைமகளும் பூமடந்தை வளர் நாடு
வளர்நாடு பரமசிவன் மனமகிழ்ந்த திருநாடு
திருநாடு சேரன்செங்கோல் செலுத்துபவர் வளநாடு
வளநாடு மலைமகள்மா தவங்கள்புரிந் திடும்நாடு
புரிநாடு பொன்னுலகோர் புகழ்ந்திடுபூந் துறைநாடு
நாடுதனில் கைலைநிகர் நாகவெற்பெ னும்வரையில்
வரையதனில் நிசருப மாய்வளர்ந்த பரமசிவன்
பரமசிவன் தனதுவயல் பள்ளருடன் பள்ளியர்கள் 787

பள்ளியர்பள் ளர்கள்கூடிப் பாடியேகொண் டாடியவர்
ஆடியவர் தெய்வங்களை யன்புடனே போற்றிசெய்து
போற்றிசெய்து நாகவெற்பர் பொன்னடியைத் தான்தொழுது
தான்தொழுது வயலுழுது தண்ணீர்விட்டுச் சேறுழப்பிச்
சேறுநஞ்சு போனபின்பு திரும்பஅஞ்சா றுழவடித்து
உழவடித்துக் கரைதிருத்தி ஒப்புரவாய்ப் பரம்படித்துப்
பரம்படித்து நல்முகூர்த்தம் பார்த்துநல்ல வேளையிலே
வேளையிலே நாற்றுவிட வேணுமென்று கூடியவர் 788

கூடியவர் சம்பாநெல் கோட்டையெல்லாந் தானெடுத்து
தானெடுத்துச் சலந்தனிலே தானூறப் போட்டெடுத்து
எடுத்துவந்து மூன்றும்நாள் எங்கள்பெரு மான்வயலில்
வயலினிலே தெளித்தநெல்லின் வகையதுநான் என்னசொல்வேன்
என்னசொல்வேன் லாவாணம் ஈர்க்கிச்சம்பா பெரியவங்கி
வங்கிசிறு முல்லைச்சம்பா மணக்கத்தைநெல் மகிழஞ்சம்பா
சம்பாவெண் மிளகுசம்பா சன்னச்சம்பா சின்னவங்கி
சின்னவங்கி செண்பகப்பூ சீரகச்சம் பாநெல்லது 789

நெல்லுமிவை நூறுவகை நேர்மையுட னேஎடுத்து
எடுத்திவர்முன் னூறுகல மேவயலில் தான்தெளித்துத்
தெளித்துமிவர் நாற்றுவிட்டுச் சிவனையடி தொழுதிறைஞ்சித்
தொழுதுமவ ரவர்மனையில் சுகமுடனே வந்திருந்து
வந்துமறு நாள்வயிலில் மருவுதண்ணீர் தான்வடித்து
வடித்துமுளைத் தண்ணீர்கட்டி வடித்தபின்நீர் தேங்கக்கட்டி
கட்டியிவர் கனிவுடனே கண்ணிமைபோல் காத்திருந்தார்
இருந்தளவில் மயிர்முளைபோ லேமுளைகள் தானெழுந்து 790

எழுந்ததுவும் பசலைநிறம் எனவாகி யேவளர்ந்து
வளர்ந்துமடந் தையர்முலைமேல் மருவுபசு நரம்பெனவே
நரம்பெனவும் இளமுலையின் னுரைவர்கள் குளித்தமஞ்சள்
மஞ்சள்பசு மஞ்சள்நிற மாகியுஞ்சா மளமாகி
ஆகியுமே பணிமலைமேல் ஆனந்த மாகிநின்ற
ஆகிநின்ற கடவுளர்என் ஐயரிடப் பாகமதில்
பாகமதி லேவிளங்கும் பார்வதிபூங் கிளிமொழியாள்
கிளிமொழிபைங் கொடியருள்போல் கிளைத்துமவள் நிறமாகி
791

நிறமாகி நாட்கதுநாள் நேர்த்தியுடன் வளர்ந்திடவே
வளர்ந்திடவே நாற்றதுவும் மாதமிரண் டானதுவே!
ஆனபின்பு பண்ணையினார்க் கறிக்கையிட வேணுமென்று
வேணுமென்றே தான்நடந்து மேவுசதா சிவக்குடும்பன்
குடும்பனும்வந் தாண்டவரைக் கும்பிட்டுப் பக்கம்நின்று
பக்கம்நின்று "நாற்றுவிட்ட பயிர்பருவம் வந்ததையா!
வந்ததையா நாற்றுநட மனுவுரையு" மென்றனனே
என்றுசொல்லப் பண்ணையினார் இன்பமொடு தான்மகிழ்ந்து

மகிழ்ந்துனக்குப் பலவிதமாய் வார்த்தைசொல்ல வேணுமோதான்
வேணுமோதான் சடுதியிலே விமலர்பண்ணை வயல்உழுது
வயல்உழுது நாற்றுநட்டு வாருமென்று தானுரைத்தார்
உரைத்தபின்பு பள்ளனும்வந் துளமகிழ்ந்து மனைபுகுந்து
மனைபுகுந்து மனைவியரை மகிழ்ந்துவிளை யாடியவன்
விளையாடிச் சுகித்திருந்து மேன்மையுடன் வீற்றிருந்தான் 793

கலிப்பா

சீரொழுகு முப்புரத்தைத் தீயெரித்த செம்மலனார்
நாரொழுகு நெற்பயிரின் நாற்றுநட வேணுமென்று
தாரொழுகு பள்ளர்தமைத் தானழைத்து மேகுடும்பன்
ஏருழுகச் சொல்லியும்நாற் றேநடுகக் கூறினனே 794

## நாற்று நடுதல்

### சிந்து

முந்தித் தரிசை யடித்துமறித்து நைந்திடச் சேற்றைக் கலக்கி யே
முச்சாரிநா லுழவு செய்துமி திச்சே றிக்கட்டி யழுத்தியே
சந்தும் வரம்பும் திருத்தி மடைவிட் டுந்திப் பரம்பை யடித்துமே
தைரியங் கொண்டு பள்ளர் செந்நெலின் பயிரின் நாற்றைப் பிடுங்கி யே
வந்து கலசம் ஆடி முடியை குந்த வைத்தவர் மிகுத்து மே
மள்ள ருந்துதித் தாடி னார்பின்பு பள்ளி மார்களுங் கூடி னார்
விந்தை நாரிவி நாய கர்துரை கந்த ருக்கிள நீர்பழம்
மிகவும் படைத்துத் தூபதீபம் வகையுடன்எடுத் தார்க ளே! 795

இப்படிப் பூசை செய்து கோதையென் னப்பனை வேண்டிப் பணிந்து மே
எடுத்து வாரி நாற்று முடியை அடுத்து வயலில் வீசி யே
குப்பல தான பயிரை மறைத்து நற்பரி வாய்ச்ச தாசிவக்
குடும்பன் வந்து நாற்று முடியைக் கடம்பன் துணையென் றெடுத்து மே
சர்ப்ப வரைதனைப் பார்த்துக் கும்பிட்டு மெய்ப்புடன் நாற்றிசை வணங்கியே
தனது நெற்றிவைத் திறக்கி யூணித்தன் மனைவி மார்கையில் கொடுத்து மே
தப்புவ ராமலும் நெருங்கி யீற்றும றுப்புவ ராலும் வரிசை யாய்த்
தானணி யாகவும் நடுங்க ளென்றிவன் கோனென நின்றனன் பள்ளீ ரே!

## கும்மி

பன்னக மேர்வளர் வித்தக னார் – திருப்
பண்ணை வயலினில் நாற்றுநட
நன்னய மானசெங் கோட்டுப் பள்ளி – சீ
ரங்கப்பள் ளியிரு வோரும் வந்து
பொன்னுறை நாககி ரித்துரை யை – இவர்
போற்றியும் நாற்றிசை யுந்தொழு து
உன்னித மாகயிருகையில்நாற்றை
உகந்தெ டுத்தெதிர் ஊணின ரே 797

மங்கைய ரெல்லோருங் கூடுங்க டி–பணி
மாமலை நாதரை வாழ்த்துங்க டி!
பொங்கமி கும்வயல் நாற்றுந டுகவே
பூவைய ரெல்லோரும் வாருங்க டி!
அங்கமுத் தேபசுந் தங்கமுத் தே – திரு
வாயிமீ னாட்சிவி சாலாட்சி
கொங்கை யழகி பழனி சவுந்தரி
கோதண்டி யானந்தி கோவிந்தி யே 798

நாச்சிவ சந்திகோ லாகல மாணிக்கி
நாரணியேஅல்லி நாயகி யே
பேச்சி சின்னக்குட்டி யேஅலமேலு
பேரிச்சி கரிச்சி தெய்வா னை!
மாச்சி கலச்சி யபிராமி – சுக
வல்லிய ரேமட்டு வார்குழ லி
ஆச்சி பிரமி வடிவி திருமி – நல்
ஆரணங் கேஅம ராவதி யே! 799

சின்னப்பொன் னேகறுப் பாயிமுத் தே – அடி
சீரங்கி சாரங்கியே தங்கமே
கன்னிமுத் தேரங்க நாயகி யே – அடி
காவேரி யேபத்ர காளியம் மே!
வன்னமு லேச்சிய ரெல்லோ ருங்கூடி
வரிசை யாகவுங் கைச்சுருக் காய்
நன்னய மாகதிரை நிரையாய் நின்று
நாற்று நடுங்கடி பள்ளிய ரே! 800

## கலிப்பா

மாற்றுக்கால் சேடன்முடி வைக்கநிலை கொண்டவர்தன்
சேற்றுக்கால் நஞ்சையினில் சேயிழையார் தாங்கூடி
நேற்றிக்கால் வைத்தவர்கள் நிற்கும்நிலை கண்டவர்கள்
நாற்றுக்கால் விட்டு நடுகக்கால் ஏருதே! 801

# நடவு நட்டிடும் நங்கையர் ஒயில்

## சிந்து

பங்கயன்மால்சுரர் பணிந்தவர்
செங்கையி லேகெதை யணிந்தவர்
பன்னக மேரரன் வயலி லே – இளங்
கன்னியர் நாற்றுகள் நடுகச் சே
மங்கையர் கார்குழல் சொருக்கி லும் – அவர்
இங்கித வேல்விழி நெருக்கி லும்
வண்ணக்க லசமென் முலையி லும் – நுதல்
உன்னித வதனச் சிலையி லும்
திங்களி னைமுகக் கலையி லும் – பசுந்
தங்கம்நி றைவளைக் குழையி லும்
சின்னஞ்சிற் றிடைப்பட் டுடையி லும் – துகில்
மன்னியு லாவன்ன நடையி லும்
செங்கனி வாய்ச்சுவைப் பேச்சி லும் – நல்ல
குங்குமக் களபப் பூச்சி லும்
சின்னஞ்சி றுக்கியர் வலையி லே - மனம்
பின்னித்த விக்குதே பள்ளிய ரே! 802

பிறைபு னல்வளர் வேணியன் - புவி
யிறைவன் பினாக பாணியன்
    பேதைக் கிடது பாக முகந்த
    கோதைப் பதியர் வயலி லே
முறையொ ழுங்கென வனிதை யர் - நிறை
நிறையெ னநின்று வரிசை யாய்
    முன்பா கப்பயி ரெடுத்து மே - வளர்
    சம்பா நாற்றுகள் நடுகச் சே
நறைமலி குழல் மாலை யும் - கும்ப
வரையுஞ் சிற்றிடைச் சேலை யும்
    நளின ரத்தின மணிக ளும் - மிகு
    அழகு றைத்திடு பணிக ளும்
விரைவுற் றிதுகள் அசைய வே - பிற
குரையுத் தரியம் ஒசிய வே
    விச்சித் திரமாக நாற்றுந டுகிற
    உச்சிதம் பாரும் பள்ளிய ரே! 803

அண்டர் முடிவடுப் பாத னார் — திருத்
தொண்டருக் கானவி னோதனார்
    அற்புத மானதென் கைலை யான்பணி
    வெற்பரன் தன்திரு வயலி லே
செண்டு முலைகளுங் குலுங்க வே — கரம்
ரெண்டிலும் பொன்வளை யலுங்க வே
    சித்திரம் போல்வயல் நாற்று மேநட
    உத்தியி லேகையில் பார்த்து மே
கெண்டையைக் கெண்டைகண் டோட வே — மலர்க்
கொண்டையை வண்டுகொண் டாட வே
    கிஞ்சுகம் நன்மொழி கேட்க வே — குயில்
    குஞ்சுக ளுந்தொனி பார்க்க வே
அண்டையி லேமயில் கூட்ட மாய் இணை
உண்டென நின்றுகொண் டாட்ட மாய்
    அங்குறைந் தேகுதுவனிதை மார்கள
    லங்கிர் தம் பாரடி பள்ளிய ரே! 804

உருக்கொண் டெங்கினும் நிறைந்த வர் – அடி
யருக்கு ளன்பென உறைந்தவர்
உரக கிரியர் வயலில் பெண்களும்
பரவி யேபயிர் நடுகை யில்
கருக் கொண் டங்கனே பார்க்கை யில் – அவர்
செருக்கும் வங்கணச் சேர்க்கை யும்
கண்டேன் இங்கிதப் புதுமை யே – மனங்
கொண்டால் தங்கிலை பதுமை யே
சொருக் கென் றுல்மேகப் படத்தைப் போல் – முலை
நெருக்கென் றுளிணைக் குடத்தைப் போல்
தொடையென் றுல்வாழைத் தண்டைப் போல் - விழிக்
கடையென் றுல்கணை ரெண்டைப் போல்
மெருக்கென் றுல்மின்னல் வடிவைப் போல் – இடைச்
சுருக்கென் றுல்வஞ்சிக் கொடியைப் போல்
விபரி தங்கண்டு காம லாகிரி
உபரி யாகுது பள்ளிய ரே! 805

## விளையாட்டு

*நந்தியே றும்நந்தி நாத ஞர் — சிவ*
*சுந்தரன் சுந்தரன் தூத ஞர்*
*நாரணன் ஆரணன் பணிகு வார் — பரி*
*பூரணன் பூரணம் பணியு மேர்*
*வந்துவந் தம்பிகை வாழ்த்த வும் — இடம்*
*தந்துதந் தும்பர்கள் போற்ற நீள்*
*மாசுணன் மாசுணன் கைலை மேவுமு*
*லாசன்வி லாசன்மென் வயலிலே*
*மந்திகள் மந்திபலாக்கனிச் சுளை*
*சிந்திடச் சிந்துகண் டாக்க மாய்*
*மாவடு மாவடு வெடுத்து மே சுளை*
*தாவிய தாவில்வந் தடுத்து மே*
*பந்தி பந்தியெனக் குவித்து மே — அரன்*
*கந்தருக் கென்றுகை குவித்து மே*
*பாடிக்கொண் டாடியே பள்ளியர் தாம்செயும்*
*வேடிக்கை பாரும் பள்ளிய ரே!* 806

ஐந்து கரக்கய முகனை யுந் - திருச்
செந்தியி லுற்றிடு குகனை யும்
அக்கா லத்தினில் பயிலி ஞர்பணி
சொற்கா ராதனர் வயிலி லே
வந்துபெண் ணோர்களும் தோணி யே பயிர்
சந்துவி டாமலும் ஊணி யே
வச்சாரிக் கள்ளியாம் வீரி யும் அந்தக்
குச்சேறிப் பள்ளியாள் மாரி யும்
சந்தன மென்றுளைச் சேற்றையும் வீசிக் கோ
விந்தன் முதுகினில் பூசி யே
சக்காந் தங்களைப் பேசி யே - வெகு
எக்கா ளங்களில் ஏசி யே
பந்தயஞ் சொல்லியும் நடவு மே - நட்டு
முந்தின வள்தொல்லி யிடவு மே
பாசாங் குக்கள்ளி மூசாம்பும் - அவர்
பசம்பும் பாரடி பள்ளிய ரே! 807

## மதுமயக்கம்

படித்த லந்தனில் நடித்த வர் - உமை
பங்க ஞர்சிவ லிங்க ஞர்
பணிப் பொருப்புறை தனித்திருப்பதி
படுகை நாற்று நடுகச் சே
வடித்த மதுவைக் குடித்துப் பள்ளியர்
மயக்க மும்பெருந் தியக்க மும்
வரைப்பில் காலைப் பரப்பிச் சோர்ந்து
வாடி யுங்களை மூடி யும்
துடித்த யிதழை மடித்துக் கடித்துச்
சோக்கை யும்பெருங் கேக்கை யும்
தூக்க மும்வெறி மூர்க்க மும் - வெகு
சோப மும்பிர தாப மும்
வெடித்த சொல்களும் தடித்த மல்களும்
வீம்ப திகமே ளும்ப தும்
வீராப் புங்கொங்கை மாராப் பும் - கவர்
வீசம்பும் பாரடி பள்ளிய ரே! 808

நாடித் தேடி யிருவர் அறியா
ஞானத் தலைவர் ஆன வர்
நாகா திக்கிரி போகா திப்பரர்
நவினஞ் செறியுங் கழனி யில்

ஆடிப் பாடி நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடுகச் சே
ஆழூ ருப்பள்ளி சடைச்சியும் - பொன்னி
சேழூ ருக்குள்ளி யிடைச்சி யும்

கூடிக் கூடிப் பேசி யே - மது
குடித்து மேசண்டை பிடித்து மே
கொள்ளா மல்வெறி தள்ளாடி - மருள்
கொண்டா டிச்சடைச் சியும் விழச்

சாடிச் சாடி யோடித் தாண்டவன்
சடைச்சி மேல்மண்ணைத் துடைச்சு மே
தலையைத் தாங்குருன் போலவள் குத்து
முலையைத் தாங்குருன் பள்ளிய ரே; 809

தொண்டருக்கருள்செய்தவர்சிறுத்
தொண்டர் மகவைக் கொய்தவர்
தோற்றுக்கால்துயர்விடுத்தவர் — பண்ணை
நாற்றுக்கால்வயல்நடுகச்சே

துண்டுக்கட்டையன்மகள்சாராயத்தை
மண்டிக்கொட்டையன்மகளுடன்
துள்ளாணைவம்புகூறியே — நிலை
கொள்ளாமல்தடுமாறியே

ரண்டுகாலையுங்கிளப்பியே — விழுந்
துண்டுசேற்றினில்உழப்பவே
நங்காஞேடியெடுத்துமே — புதைச்
சங்கோரத்தினில்கிடத்தவே

கண்டெழுந்தவள்துடித்தபோதிவன்
ரெண்டுகையையும்பிடித்துமே
கண்ணுல்உருகமிகவுங்கெஞ்சிடும்
விண்ணுனம்பாரும்பள்ளியரே! 810

மண்டலம்புகழ்நாககிரியார்
தொண்டர் தம்திருத் தொழும்பனுர்
மாதவ மிகுந்திடு மெஞ்ஞானியர்
பாதமே **சிரம் புனைந்தவன்**
பண்டுகலையுந்தெரிந்தபொன்னுச்செல்
லண்ணடையில்குடிகொண்டுமே
பட்சமாகநின்றுடல்புரியும்
சச்சிதானந்தர்வயலிலே
கண்டுநன்மொழிமாதர்மதுவை
உண்டுமயக்கந்தெளிந்தல்லோ
கடவுளார்நிலமுழுதும்நெற்பயிர்
நடவுநட்டதுமுடியவே
அண்டர்நாயகரெனுஞ்செங்கோடரை
தெண்டஞ்செய்துபள்ளியர்பள்ளர்
ஆடிப்பாடியவரவர்மனை
நாடிச்சேர்ந்திருந்தார்களே! 811

**கலிப்பா**

நாற்றுநட்ட பின்பவர்முன் ஞல்விதைத்த நெற்பயிர்கள்
சாத்துநட வுங்களைகள் தான்பறிக்க வேணுமென்று
நீற்றவர்பண் ணைக்குடும்பன் நேரிழைமார் தன்முகங்கள்
பார்த்துமிது வேலையெல்லாம் பண்புடனே செய்யுமென்ருன் 812

பனகமலை யாண்டவர்தன் பண்ணைவயல் களைபறிக்க
அனநடையாள் மூத்தபள்ளி அரிவையர்சீ ரங்கவல்லி
மனமகிழ்ந்து வயலருகில் வந்துபொங்கல் தானுமிட்டு
வனிதைகன்னி மார்க்கதிக வரிசையுடன் கனிபடைத்து 813

அத்தர்திரு நாகமலை ஐயர்பத மேபணிந்து
சுத்தியும்நாற் றிசைதொழுது சுபமுகுர்த்த வேளைதனில்
மத்தர்திரு வயலில்நின்று வளருங்களை யெடுத்தனரே
தத்தைமொழி மாதர்களை தானெடுத்து மருங்கில்நின்று 814

### வேறு

வல்லியரை பார்த்து மிங்கே — எல்லாம்
　　வாருங்கடி களைபறிப் போம்
மெல்லியர்எல் லோரும்வந்து — பெண்காள்
　　மிகுந்தகளை தானெடுங் கோ
நல்லிப்பெண்ணே குமரமங்கைவாழ் - வளர்
　　நாச்சிமுத்தே திருமங்கைவாழ்
செல்லியம்மா ஏமப்பள்ளி
　　திருவாயி பெரியா யி 815

நஞ்சிநாரா யணிஅரிய
　　நாச்சிவடு காயிப்பெண்ணே
குஞ்சிதயி லாயிஇளங்
　　குமரிப்பெண்ணே நீங்களெல் லாம்
கொஞ்சிவிளை யாடிக்கொண் டே
　　கூடிநிறை யாய்நெருங் கி
இன்சொல்வயல் களைசுருக்காய்
　　எடுத்திடுங்கோபள்ளிய ரே! 816

### கலிப்பா

மழைக்கால் நிறத்தழகர் மைத்துனஞர் பண்ணைவயல்
களைக்கால் பறித்துநிற்கும் கன்னியரைக் கண்டவர்கள்
உளைக்கால் இறங்கினர்போல் உற்றுநின்றே மாறிநடை
தளைக்கால் எனநடந்து தான்தவித்து வாடுவரே. 817

### சிந்து

திங்களைப் பாத்திரம் படைத்து மே — சிவ
சங்கம ரூபமொரன் றெடுத்து மே
　　தில்லைக் குயவனை மிரட்டி ஞல் —மிகு
　　வல்லடி வழக்குத் துறட்டி ஞல்

மங்கையர் தங்களைத் தீண்டா விரத
பங்கம துசெய்த ஆண்ட வர்
மானக்கஞ் சாறர்தன் மகள்மயிர்முடி
தானத்தை வேண்டிமுன் கொய்த வர்
பங்கய மாதுறை சயில ஞர் — திருச்
செங்குவ டர்பண்ணை வயலி லே
பள்ளச் சிறுக்கியர் நாட்ட மாகவும்
மள்ள ருடன்திருக் கூட்ட மாய்
கொங்கையுங் கார்குழல் அலுங்க வே — நல்ல
இங்கித பூஷணந் துலங்க வே
கொஞ்சி மொழிந்தவர் களைபறித்திடும்
ரஞ்சிதம் பாரடி பள்ளிய ரே! 818

செங்குன்ற மேருவி லாதி யாய் — வளர்
சங்கர ஞர்சிவ சோதி யார்
சிந்தை மகிழ்பண்ணை வயலி லே — பெண்கள்
வந்து களையெடுத் தொயில தாய்
நங்கையும் நாத்தியுங் கூடி யே — பழித்
திங்கித மாய்வினை யாடி யே
நஞ்சிப்பெண் ணுள்கரை மீதி லே — பிள்ளை
கொஞ்சிக் கொடுத்திடும் போதிலே
அங்கொரு மந்திவந் தருக வே — மூலை
செங்குறும் பையெனத் திருக வே
அரிய நாச்சியுங் கூவி யே — கல்லில்
எறிய வும்மரந் தாவி யே
மங்கையர் மீதினில் மாங்க னி — பறித்
தங்கிட மள்ளர்வி ளாங்க னி
மந்தியின் மீதிலே எறிந்து மே — மகிழ்
விந்தையைப் பாரடி பள்ளிய ரே! 819

வில்லுப் பிரம்படி பொறுத்த வர் — மிக
வல்லவர் வெண்கண்டங் கறுத்த வர்
வேணிச்செங் குன்றையர் வயலி லே — பயிர்
ஆணியெ னுங்களை பறிக்கச் சே

கல்லிச்சின் னான்மகன் துடித்துப் போய் — அந்தச்
செல்லி தாழ் வாய்க்கட்டைப் பிடித்து மே
கையில் பணத்தையும் வாங்கிக் கோ — அல்குல்
பையைக் கொடுத்தென்னைத் தாங்கிக் கோ
வல்லிதழ்த் தேனையுங் குடிக்க வோ — ரெண்டு
மல்லிகைச் செண்டையும் பிடிக்க வோ?
வாலப் பெண்ணே யென்று பதைக்க வே — கசு
மாலங் குடிக்கியென் றுதைக்கவே
பல்லையுங் கெஞ்சிமல் லாடி யே — உந்தன்
முல்லை நகையிதழ் நாடியே
பார்க்கி றேன்சுவை கிட்ட வாடியென்று
கேட்கி றான்பாரும் பள்ளிய ரே! 820

உடைய வர்மழுப்படைய வர் — புலி
உடையி னார்மதிச் சடையினார்
உறுப்பு ளார்பணி பொருப்பு ளார் — பண்ணை
விருப்ப மாம்வயல் வரைப்பி லே
விடைய மாய்ப்பள்ளிப் படைகள் மதுகொண்
டடையத் துவளும் நடையு மாய்
வீழ்ந்தும் உத்தியில் சாய்ந்தும் கண்களை
சோர்ந்து மலர்ந்தண் ணாந்து மே
தொடையும் நெகிழ்ந்த உடையுங் கிடந்த
கிடையுங் கண்ட ந்தச் சடைய னும்
தூக்கிக்கால்களை நீக்கமுயன்று
பார்க்கப் பின்வந்து மூக்கனும்
மடையொன் றேரியின் கடையென் றே — கல்வி
தடையில் லாமல்சொல் விடையிலே
மட்டியா னைப்பெண்கள் தட்டியெழுப்பி யே
திட்டுறதைப்பாரும் பள்ளியரே 821

வலுக்கொண் டெங்கணுங் கொலுக்கொண் டார் — திரு
வாக்கி னார்பதந் தூக்கி னார்
வயலி லேஒரு தயிலின்மனம்
வாட்டி மையலைப் பூட்டி யே

குலுக்கு ருள் நின்று அலுக்கு ருள் — முகம்
கோணு ருள் அங்கே நாணு ருள்
கோட்டு முலையைக் காட்டு ருள் — முத்தம்
கொறிக்கி ருள் சின்னஞ் சிறுக்கி தான்
சலுக்கென் றங்கனே பிலுக்கு ருள் — தலை
சாய்க்கி ருள் எனை யேய்க்கி ருள்
சகிக்கி லைகிட்ட ஐக்கிய மாய்வர
சாற்று ருள் எனைப் பார்த்துமே
கலுக்கென் றங்கனே துலுக்கு ருள் — சன்னை
காட்டு ருள் மெத்த வாட்டு ருள்
கறுத்த குமரிச் சிறுக்கி யால் — மெத்த
வருத்த மாகினேன் பள்ளியரே! 822

### கலிப்பா

பனையார் பணிக்குவடர் பண்ணை வயல் பள்ளியர் மின்
கனையால் மதனன் களைக்கக் களைபறித்து
விளைவாம் வயல்திருத்தி விட்டபின்பு நெற்பயிரும்
தளையார் அரன் அருள்போல் சாலவளர்ந் தோங்கியதே! 823

## பயிர்வளர்ச்சியும் அறுவடையும்

### சிந்து

வளைந்து கிளைத்துத் தூரு கட்டியே — உமைபரிமள
வள்ளி நிறமெய் யாகி யெட்டியே
எழுந்து வகுந்து கணுமுத் தேறியே — திவ்வியவாச
மெனவும் பருவ மேறித் தேறியே
குளுந்தென்றலில் சூல்மு திர்ந்துமே —புடைகளாகிக்
குறுத்து நீட்டிக் கதிர்செ றிந்துமே
செலுந் திருவெங்கும் பரவி யுலவவே — செந்நெலின்கதிர்
தேற விளைந்து தானு மிலங்கவே. 824

இரவ லர்க்குத விட இணங்கியே—தியாகமுதவும்
எழில்க ரங்கள் எனவ ணங்கியே
பரவும் நெற்பயிர் அனைத்துந் தாறுமேல்—கனம்பொறாமல்
பணிம லைதனைப் பணியு மாறுபோல்
விரவி நிலத்தில் படிந்து வீழவே—குடும்பன்பண்ணை
வேந்த ரிடத்தில் சென்று தாழவே
சிரமுங் கரமுங் குவித்துப் போற்றியே—நெற்கதிர்களும்
தேற விளைந்த தென்று சாற்றவே 825

சால வேமனம் பிரியந் தாக்கவே—பண்ணையாண்டவர்
தனது குடும்பன் முகத்தை நோக்கியே
“கால மேகூலி யாளைச் சேர்த்துமே—ஐயர் தன்வயல்
களையும் அறுபோ” என்னச் சாற்றியே
கோலுக் காரன் தனைய னுப்புறும்—கங்கணம்வைத்துக்
கொண்டதிகச் செல விடாமலே
ஆல மாமிடற் றண்ணல் வயலெலாம்—அறுத்துக்களத்தில்
அடித்து ரேகை செய்யுமென்றனர் 826

நல்லது புத்தியென் றுலாவியே—பாடிசேர்ந்து
‘ரா’வி டிந்தபின் ஆளைக்கூவியே
“நெல்ல றுக்கவா!” என்று கூறவே—கூலியாளும்
நெருங்கி வயலில் வந்து சேரவே
வல்ல மைசெறி கோலுக் காரனும்—கங்கணத்துக்கு
வந்து யிருந்து அறுப்பு விடுத்தனர்
கல்லெ றிந்தவர்க் கருளை நல்கிடும்—கடவுள்பண்ணைக்
காரர் சொற்படி யாக இருந்தனர் 827

## அறுசீர் விருத்தம்

தண்ணித்தா சனும்வ ராமல் தமதுதேர்க் கட வுறாமல்
பண்ணும்வா சுகிமே ரையர் பண்ணையின் வயல்க ளெல்லாம்
அண்ணிரு நூறாளாக ஆறிரு நாளாள் விட்டு
வண்ணமா யிரம்நெற் சாலி வயலெலாம் அறுப்பித் தாரே! 828

## நெல்லடித்து ராசிகாணல்

நொண்டிச் சிந்து

அறுத்தே அரிப்படுத் தி—பள்ளர்
ஐம்பது பேரிருந் துபழு தை
திரித்தே சுருட்டிவந்து—விட்டுச்
செந்நெலின் அரிதனைத் தாவிவைத் து
பருத்த சுமையென வும்—கட்டிப்
பள்ளர்கள் மீதில்எ டுத்துவைக் க
வருத்த முடன்கொடு போய்—களம்
வைத்து மறுபடி யுந்திரும் பி 829

திரும்பி யெடுத்தெடுத்தே—சுமை
சேரக் களம்வந்து சேர்த்தபின் பு
சுரும்பார் குழல் அணங் கார்—இளந்
தோகையர் நிரைநிரை யாகநின்று
கரும்பார் மொழிபகர்ந்து—கடைக்
கண்ணில் இளைஞர் தமைமிரட்டி
குரும்பை முலையலுங் க—நல்ல
கோலச் சரிகை வளைகுலுங் க 830

நீங்காத ஆசைதரும்—பள்ள
நேரிழை மார்அரி தான்கொடுக் க
வாங்கியே பள்ளர்க ளும்—நல்ல
வன்மைய தாகத் தலையுதி ர
ஓங்கி யடித்துத றிக்—களத்
தோரமாய் வைக்கலை யுங்குவித் து
தாங்காணும் நெல்லினி லே—விழும்
சங்காய மெல்லாம் அரித்தெடுத் து 831

பதர்போக வேதூற் றி—ராசி
பண்ணியுங் குப்பலெ னக்குவித் து
அதுவேளை யானபின் பு—போர்
அடித்தநெல் ராசியொன் ருய்ச்சேர்த்து

விதமான நெல்களையும்—ராசி
வெவ்வேற தாகவு மேகுவித்து
இதமான கோல்க ரன்—குறி
யிட்டஞ்சு மட்டிகை தான்போட்டு 832

பத்திர மாய்க் காக்க—நூறு
பள்ளரைக் காவல தாகவைத் து
கர்த்தரின் பண்ணையி லே—கோலுக்
காரன் குடும்பன் இருவர்க ளும்
மெத்தென வேநடந்து—பண்ணை
வேந்தரைக் கும்பிட்டு உங்களுட
உத்தர வின்படி யே—செய்து
ஊழியர் நாங்களும் வந்தோமை யா! 833

அடியார்க்குப் புத்தியென் ன—ஒரு
அப்பணையே சொல்லும் ஒப்பணையாய்
படியாளு மன்னவ னே—என்னப்
பண்ணையிலுரு மனமகிழ்ந் து
கடிதாக வேஅளந்து—நெல்
களஞ்சியஞ் சேர்த்திட வேணுமென்று
வடிவான நாகவெற் பார்—தனை
வாழ்த்தியும் நெற்களம் வந்தன ரே 834

### அறுசீர் விருத்தம்

மூன்றுபிள் ளைகளைக் கொன்று முன்வர விட்டு யாவும்
ஈன்றகண் ணுதலார் போகி யெனுமலை யாளர் ஏவத்
தோன்றுபண் ணையினர் ராசி சுற்றியே பார்த்து வந்து
கோன்றிருப் பண்ணை மேவும் குடும்பனைப் பார்த்துச் சொல்வார்

## ஆள்களுக்கு நெல் கொடுத்தல்

சிந்து

செங்குவ டார்பண்ணைக் காரர்மகிழ்ந் து—பள்ளச்
சேனையுடன் குடும்பன் தனையழைத்து
உங்களுக் குள்ளசுயந் திரங்களெல் லாம்—நீங்கள்
உள்ளபடி யேசொல்லும் உதவிடு வோம்

பங்குகளும் பிரித்துக் கொடுத்திடு வோம்—என்று
பண்ணையிரு ருஞ்சொல்லப் பள்ளனுஞ்சொல் வான்
எங்களையா தரிக்க வந்த அர சே—கேளும்
எங்கள் சுயந்திரமெ தார்த்தமாய்ச்சொல் வேன். 836

அஞ்சுமுழக் கயிற்றில்கட் டஞ்சுசுமை யே—செய்க்கு
அஞ்சுசுமை யும்பண்ணைக் கட்டொன்றுமுண்டு
மிஞ்சும் ராசி பொதிக்கஞ்சு வல்லநெல்ல தும்
விடுதலை யடிராசி மேரையுமுண்டு
பிஞ்சிளநெல் லுங்கருக்கா யென்றும்ரா சி—தனில்
பின்னுமுன்னுந் தள்ளுவது சிலதுண்டு
பஞ்சு பறந்திடும்நெல் சங்காயநெல் போரடிநெல்
பண்ணைநெல் பங்கிடும்நெல் சிலதுண்டு. 837

பள்ளச்சுயந் திரங்களிது, பள்ளிமார்க ளுக்—கும்
பரவுஞ் செயிக்குநாலு அரியதுண்டு
கள்ளுச்சாரா யத்துக்கு வள்ளநெல் லுஞ்—செயிக்குக்
கண்டுங்கா ணுமல்கட்டுப் பிசைவதுண்டு
தெள்ளுமணிகள், தெறிமணிகள், ஒதுக்குநெல்,
செய்யுங்கூலி நெல், களைச் சுயந்திரநெல்
உள்ளபடி யிதென்றுபள் ளனுரைத்திட வும்
உடையவர் இவர்க்குள்ள சுயந்திர மும் 838

சரியாக வுங்கொடுத்து அவரவர் மனமது
தான்மகிழ்ந் திடச்செய்து தயவா கப்
பரிவுட னேராசிக்குப் பூவும்பொதித்து - வள்ளம்
பாச்சி யளந்திடஅப் பணைகொடுத் தார்
புரிசடை யோனைப்போற்றிப் பொலிபொலி யென்றுவாழ்த்திப்
போட்டிரு சோடுவள்ளம் பாச்சியளந் தார்
வரிசையா கவும்ராசி வகைவகை யாய்அளந்து
வகைதொகை யானதெல்லாம் எழுதிவைத் தார் 839

### கலிப்பா

எழுதும் பிரமர்க் கிதுவென் றெழுதிடுவோன்
எழுதும் எழுத்தாய் எழுதா மறைப்பொருளாய்
எழுத அடங்கா எழில்படைத்த நாகவெற்பார்
எழுதுசெந் நெல்கணக்கு மேளழுதி வைத்தனரே! 840

### சிந்து

வைத்து மேபணி மாமலை மீதினில்
வஸ்து வாகவி ளங்கிடு தேவர்க்கு
நித்த மேவும் படித்தரத் திற்கும்
நியம பூசைநி வேத்தியத் துக்கும்
முத்துச் சம்பாமுன் னூறுச லகைநெல்
முன்ன மேதான் அனுப்பியே வைத்தார்
சுற்றி யுள்ளதெய் வங்கள்த மக்கும்
சுகந்த வல்லிப ரிமள வல்லி 841

ஈச ஞர்கயி லாசலிங் கேசர்க்
கிரண்டு நூறுச லகைய ளந்தார்
வாச மானம டங்கள்த மக்கும்
வகைக்கு நூறுச லகைய ளந்தார்
ஆச கர்பர தேசியர்க் கன்னம்
அளிக்க நூறுச லகைய ளந்தார்
நேச மாய்த்திரு வாலயந் தன்னில்
நிறைந்து ஊழியஞ் செய்பவ ருக்கும் 842

உன்ன தம்பல வாத்திய ஓசை
உலவு மாதர் கவிஞர் களுக்கும்
அன்னச் சம்பாவில் நூறு சலகை
ஐய மார்க்கொரு நூறு சலகை
மின்னல் சம்பா அளந்து கொடுத்து
மிகுந்த நெல்ரெண்டு லட்சஞ் சலகை
தன்னை நூறுக ளஞ்சிய மிட்டதில்
சாமி முத்திரை தானது மிட்டார் 843

நாட்டி லேஉள்ள பண்ணையந் தன்னிலும்
நாலு லட்சம்பொ திநெல்வருக
மாட்டி லேவைத்து நாட்டினில் உள்ளதெய்
வங்களுக் குக்கால் வாசி யனுப்பி
வீட்டி லேமச்சீ ராயிர மாக்கி
மிகுந்த நெல்லும் பதனங்கள் செய்து
தாட்டி கஞ்செறி பண்ணையி னுரும்
தயவ தாகவும் வீற்றிருந் தாரே 844

### அறுசீர் விருத்தம்

வீற்றிருந் தடியார் பங்கில் விளங்குதென் நாக வெற்பார்க் (கு)
ஏற்றதோர் வயலுக் கெல்லாம் இனிவிதைத் திடுக என்றே
சாற்றிட வகைக்கு நூறு சலகைநெல் கோட்டை கட்டி
பார்த்தவர் பதனம் பண்ணி பண்ணையார் மகிழ்ந்தி ருந்தார் 845

### கலிப்பா

கால்நடித்துத் தூக்கியுமால் கால்பிடித்துத் தூக்கியுந்தென்
பால்நிலைத்த நாகவெற்பில் பால்நிறத்தர் ஆகியும் செங்
கோல்நடத்தைதங் கோலர்பண்ணைக் கோதையராம் மூத்தபள்ளி
மேல்வழக்காய் தன்கணவன் மேல்வழக்குக் கூறினளே 846

## மூத்தவள் பொல்லாப்புக்கூறல்

### சிந்து

சின்னமுஞ் சிறுமைம்பட்ட பள்ளன்தனக் கு - வஞ்சி
சீரங்கத்தா ளிட்டபொடி மாயமயக் கம்
இன்னமுந்தெ ளியிலைநான் என்னசெய்கு வேன் - பாவி
ஏனெணையிப் படிமுட்ட வேசதிக்கு ருள்
அன்னவளோ பாவியென்று பார்த்தவர்க்கெ லாம் - மெத்த
அவதூறு செய்யுருளி தாரறிவார் கள்
என்னவிதி யெந்தனுக்குக் காலமுட்டவும் - சண்டை
யேபிடித் திருக்கவெட்க மாகுதெனக் கு 847

நாட்டுக்குநா யகம்வீட்டுக் கென்னமோஎன் பார் - அந்த
நடத்தை முழுவஞ்சனை தானிருக்குதே
வீட்டுக்குள்ந டக்குஞ்சேதி யாரறிவார் கள் - நானும்
வெளியில்வந் தாலோஇவள் பாவியென் கிறுன்
ஏட்டிக்கிப்போட் டியிவளை மேன்மை செய்கிறுன் - நான்
எத்தனைநாள் பார்த்துமனம் ஒறுத்திருப் பேன்
வாட்டென்மேல்செய் யுறுளென்று சாட்டு ருன்குற்றம் - இந்த
வல்லடிவ ழக்காரரோடே சொல்லியாறு வேன் 848

மூந்தாநா ளவள்முன்பினில் என்னையும் வைதான் - இன்று
முறைநெல்லை யும்பிள்ளையார் அடிநெல்லை யும்
சொந்தமுடன் வாரியவள் கூடையிலிட் டான் - என்
சுயந்திரநெல் தரஅவன் கையெழும்பா து
சந்த்ரசே கரநயினுர் தன்னை யலட்டிப் - பேய்த்
தண்ணிக்குவாங் கினநெல்சு மைபிசைந்த து
விந்தையாய் அரிமிதித்த நெல்கள் ஒதுக்கு - நெல்
விடுதலை தெள்ளுமணி தெறிமணி நெல் 849

பண்ணைக்கட் டடித்தநெல்லும் போரடிநெல் லும் - சரி
பங்கிட்டுப்ப கிர்ந்தெனக்குத் தந்திடா மல்
ஒண்ணிலுஞ் சரிவரக்கொ டுத்திடா மல் - பள்ளன்
ஓரவஞ் சனைசெய்தான் பாருங்கள்எல் லாம்
பெண்ணும்ஆணும் பெற்றவர்கள் பார்த்துச்சொல்லுங் கோ - ஆடு
பெருமைக்கடித் தொன்றைப்பிள்ளைக் குத்தந்தாற் போல்
மண்ணுங்கல்லுங் கலந்தநெல் பங்கிக்கொடுத் தான் - பங்கு
வந்தநெல்லைப் பாருங்கடி பள்ளிமாரே! 850

## இளையவள் மூத்தவள் ஏசலாட்டம்

(இவ்வெசலாட்டம் முழுவதும் இளையவள் மூத்தவள் மாறிமாறிக் கூறுவது இரண்டு இரண்டு வரிகள்)

என்னடிசெங் கோட்டுப்பள்ளி முண்டை முறையிட்டு - நீயும்
எல்லவரு டனுஞ்சொல்லி என்னசெய்கு வாய்! 851

செய்வதென்ன ஒன்றுமில்லை சலுகைக்காரி - எல்லாம்
தெய்வம்பொது வாயிருக்குந் தெரிந்துகொள்ள டி! 852

தெரிந்தண்டி சாடைசன்னை யாகப்பேசு ருய் – இந்தத்
தில்லுமல்லு நடவாது நல்லதல்ல டி! 853

அல்லடிகொண் டவன்பெலங் கொண்டுபேசு ருய் – எனக்
கார்பெலன்த லைகீழாய்நின் ருண்மைபேசா தே! 854

பேசாதேபோய் ஆண்டவர்க்குச் சாடிசொல்லி யே – இன்னம்
பிடித்துன் புருஷனைக்குட் டையில்போட டி! 855

போட்டவளும் நான்! பிறகு மீட்டவளும் நான்! – செத்த
பொணமேஉனக் கேன்னபெலன் உண்டுசொல்ல டி! 856

சொல்வதென்ன சீசீயென்னப் பண்ணைக்கார ஞர் – பின்
தொடர்ந்துதிரிந் தாயுனக்கு மானமில்லை யே? 857

மானமொரு சாண்மத்தாளங் கைத்தாளமென – மெத்த
வளைந்துகொக் கரவட்டி யாய்நிற்கா த டி! 858

நிற்கிறசீ ராய்நில்லடி எச்சுப்பேசா தே – எல்லாம்
நீலியென்று னைச்சொன்னது நிசமாச்சு தே! 859

நீலிபோல் வலியப்பள்ளன் தன்னைத்தொடர்ந் தே – வந்த
நிலைமையிங் காராலுந் தானறியா ரோ? 860

அறிவார் வழக்கிட்டுப் போராடி வந்தே னே – நல்ல
தாகட்டும் வெட்கத்தைவெளி யேண்டிவிடு ருய்! 861

ஏண்டியொருத் திபுருஷ னுக்கிச்சைப் பட்டே – 'தொத்தி
யே'வந்த வளுக்குபின் இத்தனை யென்ன? 862

என்னவுன்னைக் கொண்டவன்வந் தென்னையுங்கொண் டான் — உனக்
கிளப்பமோ என்னையும்நீ யேசிக்காட்டு ருய்? 863

ஏசிக்காட்ட வேண்டாமடி தூஷணக்காரி – நானும்
ஈசரடி யாளென்றும தித்துப்பேச டி! 864

பேசியேஉன் ஞண்டவனைப் பெருமைபேசு ருய் – என்ன
பெருமை சங்கரர்கொலைப் பேயனல்ல வோ? 865

பேயினுங் கடைகெட்டபி சாசேயீச ரை - நிந்தை
பேசாதேதோ ஷம்வலுத்தெண் ணினதாமடி. 866

தாமயிகு மாமனென்றும் பாராம லே - முன்பு 867
தக்கனை வதைத்தசிவ சம்புவல்ல வோ?

ஆமடியோ அவர்தானே மாமனைக்கொன் றார் - உங்கள்
ஆண்டவனு மாமனைமுன் கொல்லவில்லை யோ? 868

சிவனும்ஆ ரூரருக்குத் தூதனென வே - முன்பு
தேவதாசி யாள்மனைக்குச் செல்லவில்லை யோ? 869

அவர்தானு தூதுசென்றார் தாசிமனைக் கு - உங்கள்
ஆண்டவனுந் தூதுசென்ற தாரறியா ரோ? 870

பக்கமொரு பெண்ணிருக்க உங்களாண்டவர் - ஒரு
பைங்கொடியைத் தன்சிரசில் தான்சுமந்தா ரே! 871

ஒக்கவொரு பெண்ணிருக்க உங்கள்ஆண்டவர் - ஒரு
ஒண்டொடியை தன்சிரசில் தான்சுமந்தாரே 872

சங்கரனார் என்றுதிரு நாமம் படைத் து - எங்கள்
தாசருட நெற்றியிலே தானிருந்தாரே! 873

அங்கவருஞ் சங்கரரென் றுண்டியிடத் தில் - வெ ண்ணீ
றுகவும் உகந்துபடுத் தாரடிபள் ளி! 874

அன்றுபிரமச் சாரியென்று பேருமெடுத்தே - பெண்கள்
ஆசைகொண்ட கர்த்தன்உங்கள் ஈசனல்ல வோ? 875

என்றும்பிரமச் சாரியென்று நாமம்படைத் தே - பெண்கள்
எண்ணளவி லாதணைந்த கண்ணனல்ல வோ? 876

அந்நாளிலிலே பிரமகத்தி தானும்பிடித் தே - பித்த
னாகவுந்தி ரிந்தலைந்தார் பேய்களுட னே! 877

முன்னுளிலே பிரமகத்தி தானும்பிடித் தே – கோர
முரகரி யாகியமு ராரியல்ல வோ? 878

அம்பலந்த னிலேபத்ர காளியுட னே – உங்கள்
ஆண்டவன் திருநடன மேபுரிந்தா ரே! 879

வம்பெனவும் காளிங்க மர்த்தனமெ ன – பாம்பின்
மணிமுடி மேல்நடித்த மாயனல்ல வோ? 880

இருக்கவுந் தானிடங்க ளில்லாம லே – உங்கள்
இறைவனும் ஆலடியி லேயிருந்தா ரே! 881

பருக்கப் பிழைத்தவர் படுக்கஇட மில் – லாமல்
பண்பொடுஅவ் வாலிலையில் பள்ளிகொண்டா ரே! 882

கட்செவித ரித்திருந்துங் காணும லே – வந்த
கடல்விட முண்டநீல கண்டனல்ல வோ? 883

நச்சுவிட முண்டதினுல் மாயன்பிழைத் தார் – உங்கள்
நாதனும் பூதகிவிடந் தானுமுண்டா ரே! 884

பிச்சையெடுத் தெச்சில்தின்றும் போதாம லே – சிறு
பிள்ளைக்கறி யுகந்தபிஞ் ஞகனல்ல வோ! 885

இச்சகத்தி லேயிரந் தெச்சிலைத் தின் று – வெறி
எடுத்து நிணத்தையுண்ட தாரறியா ரோ? 886

வாகன மில்லையொரு காளையொழி ய – ஓடு
மண்ணுடையான் வீட்டினில்தி ருடினுர்போடி! 887

ஆகமகிழ் வாயதனை மேய்த்துமிடை யர் – மனை
யாடையைத்தி ருடினது நாடறியா தோ! 888

தென்னிலங்கை ராவணர்க்குப் பெண்ணைக்கொடுத் து-பின்பு
செட்டிப்பெண்ணுக் காசைகொண்ட சிவனல்ல வோ? 889

முன்னுமாசைப் பட்டிகுளில் பின்னுமெடுத் தான் – நடை
மூட்டிவந்தி டைச்சியர்க்கு மோகங்கொண்டா ரே! 890

ஆடையாப ரணமுஞ்சு கந்தமில்லா மல் – சாம்ப
லாண்டியாய் அரவணிந்து தோலையுடுத் தார்! 891

வாடையும் பணியுமந்தத் தோலுமில்லா மல் - குடல்
மாலையிட்டு மண்ணணிந்து மரவுரிபெற் ருர்! 892

மருகன் தனை வதைத்தும் ரவிமறைத் தும் - கொண்ட
மனைவியை விட்டரன்ம லையிலிருந் தார்! 893

மருகன் தனைமடித்தும் ரவிமறைத் தும் – முன்பு
மனைவியை விட்டரிவ னத்திலிருந் தார் 894

பவளசெட்டி யாகியுந்தன் பெண்ணை மயக் கிப் – பின்பு
பாரிசெய்து சிவனிடப் பாகந்தந்தா ரே! 895

கவளமென்று வந்தபெண்ணை வெட்கிடச்செய்து - உங்கள்
கர்த்தனும்பெண் ணெடுத்துரம் வைத்திடலை யோ? 896

மாடெடுக்கும் புலியூரில் தானுமிருந் து - பிர
மத்தனென்றும் வேடனென்றுஞ் சித்துமாளு ரே! 897

ஆடெடுத்துத் தேடினஇ டையனல்ல வோ - மாயன்
ஆயர்பாடி யில்சித்துவி ளையாட லையோ? 898

பிட்டுக்காக ஒட்டனென்று வேடமெடுத் தே - பின்பு
பேருருப் பள்ளனுன பெருமானன் ரே! 899

மட்டளவில் லாதகல்லு மண்ணுஞ்சுமந் து - 'பல
வான்'எனவும் பள்ளிகொண்ட மாயனல்லவோ! 900

ரட்சிக்குந்தொழில்படைத்தார் எங்கள் ஆண்ட வர் - சிவன்
நமனை மடித்துநம னுகினுர்போ டி! 901

அட்சய வரங்களீவர் எங்களாண்ட வர் - அதை
அழிக்கப் பிறந்தவருன் ஆண்டவரல் லோ? 902

வேறு

கொண்டவனுக் கடங்காத வண்டியென வே - ஊரில்
கண்டவர்சி ரிக்கலையோ குண்டுணிபோ டி! 903

சொக்கிடப்புருஷனையுன் கைக்குளடக் கிச் - சரியாய்
வெட்கமில்லா மல்பேசுருய் சக்களத்தி நீ! 904

மொண்ணணைச்சிதன் வீட்டிலேபோய் வெண்ணெய்திரு டி - நானும்
கண்ணிலேகா ணேனெனவும் திண்ணையஞ்செய் தாய்! 905

வெத்திலைப்பெட் டியிலொரு கத்தையெடுத் து - நானும் 906
சுத்தமாய றியேனென்று சத்தியஞ்செய் தாய்!

என்கணவன் உன்கிட்டத் தானும்வராட் டால் — என்மேல்
ஏனெரிஞ்சு சாகிறாய்போ நானென்னசெய் வேன்! 907

வீட்டினில்பள்ளனை வைத்து ஆட்டங்கொள்ளு றாய் - இந்தப்
போட்டிகள்போ மோயிருவெள் ளாட்டிபார டி! 908

## எண்சீர் விருத்தம்

சர்ப்பகிரி மேவுமரன் இருவர் செய்கை
தாமறிந்து நமதுபண்ணை தனிலி ருப்போர்
இப்படியெந் நாளுமிச லாட்ட மாக
இருப்பதுதான் அடைவலவென் றிரங்கி நாதன்
நற்பொறுமை புத்தியும்நல் லொழுக்கஞ் செய்கை
நலமுடனே இருவருக்குந் தோற்றி வைத்தார்
அப்பொழுதே சற்குணமா யிளைய பள்ளி
அரிவைசெங்குன் றார்மயிலோ டன்பு கூர்ந்தாள். 909

# சக்களத்தியர் சமாதானம்

## சிந்து

இளையபள்ளி யுந்தானி ளகியினி மேல் - என்றும்
இருவருமொத் துடன்பட்டி ருப்போமென் றெண்ணி
பழையபகைவிட்டிருவர் கூடிவாழ்க வே — மூத்த
பள்ளிமுகம் பார்த்திவள் பரிவுடன் சொல்வாள் 910

இப்படிப்போ ராடிமுடிய நாமுமிருந் தால் - அக்கா
ஏதுபலன் பார்த்தவர்க்கி கழ்ச்சியல்ல வோ?
அப்படியா காதுன்சொல்ப டிநடக்கு றேன் - இருவர்
அன்புடன் கணவருடன் கூடியிருப் போம் 911

மூத்தவள்:

இத்தனை நா ளாச்சுதோஉன் புத்திவர வும் – என்னை
ஏசியும்பே சியுஞ்சின்ன மேசெய்த பின்பு
சுற்றியுள்ள பேர் நகைக்கத் தானுங்கூடி யே – பின்னுந்
தூஷணஞ்செய் தென்னதோ தகம்நீசெய்வா யோ? 912

இளையவள்:

இனிநிந்தை வாராதெவ ரேன்சிரிக்கி றார் – பேதை
ஏளிதப்புத் தியில்செய்த தெல்லாம்பொறுத் தாள்!
சனியன்கொடு மையால்வந்த தாழ்விதுஅக் கா – உன்னைத்
தாயென்றெண் ணினேன்பிறந்த தங்கையென்றெண் ணே! 913

மூத்தவள்:

பேதகமென் னடி? என்றால் பேதகமில் லை! – உந்தன்
பேச்சதையு றுதிகொள்ளப் பேணிலைம னம்! 914

இளையவள்:

ஏதடியக் காயென்சொல்பூ ணிக்கையில்லை யோ – கோதை
எம்பிரான றியநிசம் நம்பிக்கையி தே! 915

மூத்தவள்:

இந்தவார்த்தை முன்னாளிலி ருந்ததா னால் – இருவர்க்(கு)
இத்தனைபொல் லாப்புவருமோ சீரங்கவல்லி! 916

இளையவள்:

உந்தன்நிலை யெண்ணிடா த கந்தைகள்செய் தேன் – நிந்தை
ஒன்றையும னதில்வைத்தி டாதேநீயக் கா! 917

மூத்தவள்:

நல்லதடி நீயும்பொறு நானும்பொறுத் தேன் – கொண்ட
நாயகரு டன்கூடிநன் றாகயிருப் போம்! 918

இளையவள்:

இல்லமும்பி ழைப்பிருப்ப தெல்லாமுன தே – நீயும்
இட்டவேலை செய்வேன்வேலை யென்னசொல்லக் கா? 919

மூத்தவள்:

என்னுடபி றப்பேஇது எல்லாமுனாதே - என்னை
எசமானி யாகவைத்தி ருந்தாலேபோதும் 920

இளையவள்:

உன்னுடசொல் படியுமீ ருமல்நடப் பேன் - எனை
உறவுகொண் டேயிருவ ருளமகிழ்ந் தார் 921

## கலிப்பா

கண்ணுதலெங் கண்ணருஞ்செங் கண்ணரெனு முற்சமயத்
தண்ணல்வடி வானசெங்குன் றண்ணல்பண்ணைப் பள்ளியர்கள்
அண்ணலரு ளாலிருவர் அண்ணுறவு தாகியுமுக்
கண்ணறைப்பு கழ்ந்துகயல் கண்ணியர்நின் றுடலுற்றுர் 922

# குடும்பர் குலப் பெண்மணிகளின் கொண்டாட்டம்.

## கும்மி

காரணக் கோதைய ரனடி யாள் - சிவ
காமிப் பள்ளியி லக்குமி சேர்
நாரண ருக்குஅ டிமையதான சீ
ரங்கப் பள்ளியிருவோ ரும்
ஆரணி வேணித ணைப்பணிந்தே - கும்மி
அடித்தி வர்விளை யாடவுமே
பூரண மாயழ குங்கன ரஞ்சித
பெண்களைத் தானழைத்திங்கித மாய் 923

ஆச்சியம் மா யடி பேச்சியம் மா - அழ
காயிப்பெண் ணே திரு வாயிப்பெண் ணே
நாச்சிமுத் தே விசா லாட்சிமுத் தே - எல்லாம்
நடந்து கும்மி யடியுங்கடி - பெண்கள்
தொடர்ந்து கும்மி யடியுங்க டி! 924

நஞ்சிமுத்தே அப ரஞ்சி முத்தே - அடி
நாகமணி அனு ராகமணி
குஞ்சிப்பெண் ணே சின்ன வஞ்சிப்பெண் ணே - எல்லாம்
கூடிக் கும்மி யடியுங்கடி - சிந்து
பாடிக் கும்மி யடியுங்கடி! 925

சின்னிப்பெண் ணே பசும் பொன்னிப்பெண் ணே - அடி
செங்கம லை! வளர் தங்கமலை!
அன்னமுத் தே யிளங் கன்னிமுத் தே - நன்றாய்
அலுக்கிக் கும்மி யடியுங்க டி - பெண்கள்
குலுக்கிக் கும்மி யடியுங்க டி 926

அங்கமுத் தே பசுந் தங்கமுத் தே - அருக்
காணிமுத் தே அயி ராணிமுத் தே
மங்கைப்பெண் ணே குண ரங்கப்பெண் ணே - எல்லாம்
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி - நன்றாய்ப்
புகழ்ந்து கும்மி யடியுங்கடி 927

அர்த்த நாரீசு ரதேவ ரும் - என்
அம்மைபா கம்பிரி யாதவ ளும்
சித்தமி ரங்கிட வே ஒயி லாகவும்
சேர்ந்து கும்மி யடியுங்கடி - லாகு
பாய்ந்து கும்மி யடியுங்கடி! 928

கொற்றவனூர் பழ னித்துரை யும் - அரி
கோவிந்தர் சீரங்க நாயக ரும்
வித்தக னுரிவர் நற்றய வாக வும்
வேண்டிக் கும்மி யடியுங்கடி - பெண்கள்
தாண்டிக் கும்மி யடியுங்கடி!
தந்தினத்தானதா - நன்னானே - தனந்
தந்தினத்தானதா - நன்னானே 929

## மங்கலம்

### பல்லவி

அர்த்தநா ரீசுரர்க்குச் செயமங்க லம் - எங்கள்
அரவகிரி வாசருக்குச் சுபமங்க லம்

சரணங்கள்

கர்த்தனை சித்தனுக் குக்
காளமி டற்றனுக் கு
வித்தகவி சுத்தனுக் கு
வேயீன்ற முத்தனுக் கு — (அர்த்தநா)

ஓம்நமசி வாயனுக் கு
உமையவள் நேயனுக் கு
வானவர்ச காயனுக் கு
வளர்கயி லாயனுக் கு — (அர்த்தநா)

தெண்டாயுதக் கையனுக் குச்
திருச்செங்கோட் டையனுக் கு
கொண்டாடன்பர் மெய்யனுக் குக்
கோதையென் னையனுக் கு — (அர்த்தநா)

சீர்பெறுகங் காளனுக் குச்
செங்கமலத் தாளனுக் குப்
பார்வதிம ணாளனுக் கு
பணிமலை யாளனுக் கு
அர்த்தநா ரீசுரர்க்குச்
செயமங்க லம். 930

## அறுசீர் விருத்தம்

நாகமா மலையும் வாழி ஞானசிற் பரரும் வாழி
பாகமே பிரியா மெல்லி பரிமள வல்லி வாழி
ஆகமெய்ப் பொருளா னந்த அரனுமை வடிவம் வாழி
நாகமும் நாக நாதர் நற்கயி லாசர் வாழி. 931

மங்கலம், உளமை நகர்,
பொன்னுச்செல்லைய புலவர் இயற்றிய
செங்கோட்டுப்பள்ளு முற்றிற்று.

# விளக்கக் குறிப்புக்கள்

பாட்டு 1: வரி 2· 'வாசுகிமேரையர்' வாசுகி-மேரு-ஐயர் வாசுகி = நாகம். மேரு = திருச்செங்கோடு. ஐயர் = அர்த்தநாரீசர் திருச்செங்கோட்டுமலை நாகம்போல் தோற்றமளிப்பதால், அதனை பாம்புக்குள்ள பெயர்கள் பலவற்றோடும் இணைத்து "நாகமலை, அரவகிரி, பன்னகமேரு, சேடகிரி, பணிக்குவடு, சக்கிரிமேரு, உரகமலை, போகிமலை" என்றுநூல்களில்பயின்றுவரும். அம்மலைக்கு 'மேரு' வென்றும் 'தென்கைலை' யென்றும் பெயருண்டு.

பாட்டு 27. வரி 3. "வலவன்தனைப்புகழ்ந்து அம்பலவனை இகழ்வாரை" (திருமாலைப்புகழ்ந்து சிவனை இகழ்வாரை)வலவன் = திருமால். குறிப்பு:— "ஒருவர் தம்தெய்வத்தைப் புகழ்ந்து கொள்ளட்டும். ஆனால் மற்றதெய்வங்களை இகழ்தல் கூடாது" என்றபடி, 29-மதுரையில் கல்லானை கரும்பு தின்றது போல், திருச் செங்கோட்டில் கல்விடபம் கடலை தின்றதாக ஒருசெய்தி உள்ளது அதனைச்செய்தவர் துறையூர் சித்தர்சிவப்பிரகாசர். அவரோடு வாதாடிப் பின்அவருக்குச்சீடரானவர் கேதாரஉடையாரென்னும் வீரசைவர் (நிசீசர்: நிச - ஈசர்; உண்மையானகுரு) இக்கேதார உடையார்தான் மலையடிவாரத்தில் ஆறுமுக சுவாமியைப்பிர திட்டை செய்தவர்.

பாட்டு 57. வரி 1. "குகையினில்வாசமுற்ற குப்பணன்" நூலாசிரியர் காலத்தில் செங்கோட்டுமலைமேல் வாழ்ந்து வந்த பிரபலமான துறவி.

116–3: ஆமிக்கை = வீரம். "நேமுகமாய்ச் சோமன்நிலா ஆமிக்கையாய்வீசுது" (செங்கோட்டு வேலவர்பதம்.)

154–3: முஸ்தேதி = தேவையான பொருள்கள் "ஐந்து வள்ளப்பச்சையரிசி பாசிப்பயறதற்குள்ள மேல்முஸ்திதி" (லட்சு மணபாரதி)

159–5: கச்சக்காச்சிறுக்கி:- கசப்புக்குணமுள்ளவள். கச்சக் காய்-கசப்பானகாய். "கச்சக்கும்கும்பச்சுரைக்காய்கரிக்காகுமோ" (படிக்காசர்)

208–8: "புரந்தரன்குலம்நான்" 'பள்ளர்' என்னும் பெருங் குடி மக்கள் தங்களைத் தேவேந்திர குலத்தினரெனச் சொல்லிக் கொள்வர். (அவர்கள் குலமுதல்வன் "மூவேந்தரின் வேண்டு

கோளுக்கிணங்கி இந்திர உலகத்திலிருந்து நெல்லைக் கொண்டு வந்து இங்குபயிர்செய்தான்'' என்பது பழஞ்செய்தி.)

223-3: *உன்னதம்பலசாதியின் நீதி:* சாதி-கூட்டம்; உழவர் கூட்டம், நெசவாளர்கூட்டம், வணிகர்கூட்டம், கொல்லர்... தச்சர்... என்றிப்படி.

230-1: *''அழுகக்கண்டது பன்னகவல்லி''* நாகவல்லி = வெற்றிலை. கொங்குநாட்டில் வெற்றிலை தான் அழுகுவதைக் காணலாமே ஒழிய, மனிதர் அழுகும் நிலையைக்காணவியலாது, ஆக அங்கு ''துன்பமோ துக்கமோ கிடையாது'' என்றபடி.

230-2: *அமரைக்கண்டது ஆண்டலைக் கூட்டம்:* அந்த நாட்டில் சண்டைசச்சரவுகளைப் பார்க்கவேண்டுமெனில் கோழிச் சேவல்களிடையேதாம் காணலாம். எனவே ''கொங்குநாட்டில் வேற்றுமை, விரோதம், குரோதம் முதலிய தீக்குணங்கள் இல்லை'' என்றபடி. இவ்விதமே நாட்டுவளங்கூறும் இந்தப்பகுதியில் சிறந்த கருத்துக்கள்பல தொனிப்பொருளில் பொதிந்து கிடப்பதை படிப்பவர்கள் உய்த்துணர்ந்துமகிழ்வார்களாக.

230-6: *உறையக்கண்டதுவே தமிழ்ச்சாரம்:*-கொங்குநாட்டில் தமிழமுதம் எங்கும் உறைந்து திண்மைகொண்டு கிடக்கும்.

குறிப்பு:- தென்தேயத்திலிருந்து கொங்கு நாட்டுக்கு வந்த தருக்கு மிக்கத் தமிழ்ப்புலவனொருவன், திருச்செங்கோட்டைப் பார்த்துக் (அதுபாம்பு வடிவமாயிருப்பதால்) கேலியாக,

> *''சமர முகத்தி நச் செங்கோடு சர்பப சபிலமென*
> *அமரிற் படம்விரித் தாடாத தென்னே?''*

என்றுபாட,

> *''அஃதாய்ந்திலையோ?*
> *நமரிற் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த*
> *குமரன் திருமரு கன்மயில வாகனங் கொத்துமென்றே''*

என்று எதிர்த்துப்பாடி அக்கவிஞனின் செருக்கை யடக்கினவன் இக்கொங்கு நாட்டின் (மாடுமேய்க்கும்) சிறுவனொருவன். படிக்காசுப்புலவரின் (மோரூர்பாம்பலங்காரர்) கோவையை வியந்து,

> *''அப்பா இவர்பாட் டழகா யிருந்ததை*
> *இப்போது சொல்லச்சொல் லே''*

என்று குறள்வெண்பா அமையக்கூறிய பெண் இக்கொங்கு மண்டலச்சிறுமி. இவ்விதம் எங்கும் யாவரும் தமிழில் ஊறிக்கிடந்தது கொங்குபூமி.

252–5-6: அன்பொடுநாகருக்குச்செஞ்சேவல் அறுத்தே...: திருச்செங்கோட்டு மலையில் 'நாகர்' என்னும் பாம்புருவுக்குச் சேவலறுத்துப் பொங்கலிடும் தீயவழக்கமொன்றுள்ளது. நாகரீகமும் கல்வியும் பெருகிவரும் இந்நாளிலும் இக்கழுத்தறுப்புவேலை நின்றபாடில்லை.

276: இது நன்னான்கு வரிகள்கொண்ட இரண்டு பாட்டுகளாகும், தவறுதலாய் ஒரே நம்பர் கொடுக்கப்பட்டு விட்டது.

283: சென்ற நூற்றாண்டில் உழவுத் தொழிலாளர்கள் வாழ்ந்த சாதாரண நிலையை இந்நூல் 837–38 பாட்டுகளில் காணலாம். இந்தப்பாட்டில் குடும்பன் தன்மனைவிக்குக் கொடுப்பதாய்க்கூறும் பொருள்களையும் 615–16-ம் பாட்டுகளில் அவன் மனைவி அவனுக்குக் கொண்டுவரும் உணவாதிகளையும் இன்னுஞ் சிலஇடங்களில் வரும் பூமாலைத்தொங்கல், பொன்னாபரணம், கச்சுக்கட்டில், காங்குமெத்தை ஆகியவற்றைக் கவனிக்குமிடத்து அவ்வுழவர்கள் மிகச்செல்வச் சிறப்பொடு வாழ்ந்தனரெனத் தெரிகிறது. இதுபுலவரின் கற்பனை; ''உழைக்குந் தொழிலாளிகள் மேலான வாழ்க்கை வாழவேண்டு''மெனஅவர்கொண்டஉயர்ந்த எண்ணத்தின் பிரதிபலிப்பு.

300–8: கறியாண்டமும்–கறியண்டமும் (திருத்தம்)

319–1: குஞ்சு தின்னிக்காற்று: சித்திரைமாதத்தில் வீசும் தென்கீழ்த்திசைக் (அக்கினிமூலை) காற்று. இக்காற்று உரந்துஅடித்தால் கருக்கொண்ட மேகங்கள் கெட்டுக்கலைந்துவிடும். (குஞ்சு தின்னிக்காற்று:- வட்டாரவழக்கு)

319–3: கஞ்சமலை போதமலை மஞ்செடுக்குது: மழைகாலத்தில்குன்றுகளிலும் சோலைகளிலும் மேகங்கள் சூழ்வது இயல்பு.

> ''செம்பொன் அலைவாய்கிரி மேல் மஞ்செடுக்குது'' (சேயூர்ப்பள்ளு)
> ''மலைகள் காவுகளெல்லாம் மஞ்செடுக்குது'' (ஈரோடைப்பள்ளு)

369–7: அவர்நெறியுடனே:- அச்செங்குந்த ஆண்டவமார்கள்ஊர்கூடிவிசாரணை செய்யுமுறையில், நீங்கள்விசாரியுங்கள் ஆண்டே! என்றபடி

குறிப்பு:- செங்குந்தர்கள் 'ஊர்'' என்றும் ''நாடு'' என்றும் அமைப்புகள் வைத்துக்கொண்டு தங்களுக்குள் நீதிநிர்வாகஞ் செய்துவரும் வழக்கம்முன்னாளில் எங்குமுண்டு. நூலாசிரியர்அவர்களோடு காலமெல்லாம் நெருங்கிப்பழகி வாழ்ந்துவந்தவர் அவர்கள் நாட்டாண்மை, பெரியதனம், காரியத்தனம் முதலிய பதவிகள் வைத்துக்கொண்டு கிராமம், கீழூர், மேலூர், நாடு,

மேல்நாடு என்னுமிவற்றில் வாதிபிரதிவாதிகளை விசாரித்தல், சாட்சிகளை விசாரித்தல், 'எழுதாதசட்டங்கள்' ஆகிய செய்திகள் இக்காலத்து நீதிமன்ற சட்டமன்ற நடவடிக்கைகளையும் தோற்கடிக்கக்கூடியனவாயிருக்கும் (சிலசமங்களில் படுமோசமாய்ப் போனாலும்) அக்கூட்டங்களில் அனுபவமிக்கவர்கள் பேசும் பேச்சின் நுணுக்கங்கள், சொற்களைக் கையாளுந் தந்திரங்கள், பெருந்தன்மைகள், முடிவில் யார்மீதுதப்பு வந்தாலும் அம்மனிதர் சபைமுன் விழுந்து மன்னிப்புக் கேட்டல், அதனை அச்சபையோர் (கொங்கு எழுகரை நாடுகளில்) அரவகிரிஆண்டவர்க்கே அர்ப்பணித்தல் ஆகிய நடவடிக்கைகளை பலகாலும்பார்த்த பழக்கத்தால் அவ்வழக்கு (தம்மை ஆதரித்தவர்கள்) விசாரிக்கும் 'சிறப்பை' மூத்தபள்ளி கூற்றில் வைத்து இங்கே குறிப்பால் புலப்படுத்துகிறார் இப்புலவர்.

512-4: *கன்னகையென்றென் குலத்துக்கன்னியர்க்கும்ஏச்சே:* இங்குகூறும் கன்னகை 'சிலப்பதிகாரத்தில்' வருங்கன்னகை (கண்ணகி) யல்லள்; "பழிக்குப்பழிகொடடா பழிகாரப்பாண்டியா நீ!" என்று, பழயகாலத்து நாடகத்தில் வரும் கோரமான கன்னகை இவள்.

768. *புலியதனைப் பிடித்திழுக்க வல்லாய்!:* கொங்குநாட்டு உழவர்கள் புலியைப்பிடித்திழுத்தல் அருமையன்று கல்லுங்கரடும் காடும்வனமும் நிறைந்த அந்த நாட்டில் பன்னூறு ஆண்டுகளாக அரும்பாடுபட்டு உழைத்துழைத்து உரமேறினோரவர்கள். துட்ட விலங்குகளை எதிர்த்தெதிர்த்துப் போரிட்டு அதில் கைதேர்ந்தவர்கள். அம்மண்ணில் உழவர்க்குடிப்பெண்களுங்கூட அப்படியே. இதனாலன்றோ அவர்களை,

> பேரெல்லாம் பொன்மன் திண்மண்
> பெண்கள் ஓநாயும் பேயும்"
> (திண்மண் - வலிமிக்கவன், ஓநாயும்பேயும் - ஓநாய்களையுங்கூடப் பிடித்துபிசைந்து கொன்றுவிடுவர்)

என்று ஒரு புலவர் பாடியுள்ளார்.

807-3, 4: அக்கிரவத்தினில் முதலினுர்பணி சொக்கநாதர் திருவயலிலே. (பி பே. ம்)

ஒருகுறிப்பு: இந்நூலில் பள்ளியர்தம் கணவனை வேண்டுதல் என்னும்பாட்டில்சிலவரிகளும், 283ம்பாட்டில் ஒருபகுதியும்நீக்கப்பட்டன. 761-62-63, 810 ஆகியபாட்டுகளின்ஈற்றடிகளில் சில சொற்கள் மாற்றியமைக்கப்பட்டன. அவையெல்லாமிகக் கொச்சையாயிருந்தமையின் இவ்விதம் செய்யப்பட்டன.

(ப. ஆர்.)

# பிழை திருத்தம்.

| பாட்டு. | வரி. | பிழை | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 78 | 5 | பிரித்தல் நிந்தை | பிரித்து நிந்தை |
| 98 | 1 | எங்கள் குலஉங்கள் | ஏங்காரி உங்கள் குலம் |
| 104 | 2 | பிடித்திழுத்தே | பிடித்து இழுத்தே |
| 149 | 8 | விசாரணை | விசாரனை |
| 161 | 1 | கடவுளர்தம் | கடவுளார்தம் |
| 182 | 2 | ஏதல்செய் | ஏதில்செய் |
| 201 | 2 | முடுக | முடுகா |
| 204 | 8 | யிருந்தங்தங் | இருந்தங் |
| 211 | 7 | பள்ளியஞ் | பல்லியஞ் |
| 221 | 6 | விளங்டும் | விளங்கும் |
| 228 | 7 | மனமில் | மனமிவ் |
| 247 | 3 | எள் 'அளவை' | 'எள்' அவை |
| 254 | 2 | ஞட்சி | ஞச்சி |
| 267 | 2 | பிராத்தனை | பிரார்த்தனை |
| 272 | 2 | மெங்பங்கில் | மெங்கள் பங்கில் |
| 283 | 18 | கிறங்கடி | கிரங்கடி |
| ,, | 19 | கட்டழசி | கட்டழகி |
| 285 | 2 | சங்கரகெங் | சங்க ராகெங் |
| 295 | 8 | சோடனை | சோடினை |
| 310 | 4 | பலுருத்து | பலுகுது |
| 312 | 2 | கள்ளான்மை | கள்ளாண்மை |
| 328 | 6 | சதேக | தேக |
| 329 | 6 | கொள்ளவாய் | கொள்ளலாய் |
| 368 | 7 | ஊதாரிசெலவு | ஊதாரிச்செலவு |
| 438 | 2 | சூலணைப் | சூலனை |
| 460 | 4 | கலக்கத்தை | கலகத்தை |
| 474 | 3 | சாரியென்றன் | சாரியென்றென் |
| 476 | 2 | ஏற்றகுழல் | ஏற்றருளும் |
| 481 | 4 | "சொல்லுமென" | "சொல்லு" மென |
| 483 | 4 | நெல்லெடுத்து | நெல்லையெடுத்து |
| 484 | 2 | மாத்திரமில்லை | மாத்திரமென்றில்லை |

| பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 484 | 3 | தம்பிவந்தாளெ | தம்பிவந்தானெ |
| 489 | 3 | கடனுக்கென்னும் | கடனுக்கென்றும் |
| 492 | 4 | பழயநெல் | பழயநெல்லில் |
| 496 | 2 | சங்கங்கற்றவளாம் | சங்கங்கற்றவளாம்— பசப்பிடும் |
| 505 | 12 | தொரட்டில்லாமல் | தொறட்டில்லாமல் |
| 517 | 2 | அன்புடைய | அன்புடனே |
| 520 | 4 | திருவென் | திருவெண் |
| 539 | 8 | பூனூல் | பூணூல் |
| 545 | 1 | மீதிலே | மீதிலே |
| 250 | 4 | அலகி | அவதி |
| 552 | 9 | புடித்தே தள்ளுவாரே! | பிடித்தேதள்ளுவாரோ |
| 582 | 10 | டிகட்டி | புகட்டி |
| 610 | 15 | உலார்ந்த | உலாந்த |
| 611 | 7 | நாயகராடே | நாயகராண்டே |
| 617 | 5 | பாதஞ்செய் | பாதகஞ்செய் |
| 619 | 1 | சினந்து-இவண் | சினந்து—இவள் |
| 639 | 8 | இறங்கிடு | இரங்கிடு |
| 643 | 5 | ஆணகை | ஆனகை |
| 656 | 6 | வளர்ந்த | வார்த்த |
| 660 | 7 | கேசென்று | கேகென்று |
| 663 | 7 | துணையுணை | துணையுனை |
| 668 | 3 | டேன்சிந்த | டேன்சிந்தை |
| ,, | 4 | மேவிதன | மேல்விதன |
| 688 | 1 | கேபாம் | கோபம் |
| 733 | 2 | கீலாறுக்காளை | கீலாரிக்காளை |
| 761 | 13 | திரும்ப முடுக்க ஓடிப்போயொரு | திரும்பிமுடுக்க ஓடியேபருங் |
| 764 | 2 | மருளுஞர் | மருளிஞர் |
| ,, | 3 | பூந்துரை | பூந்துறை |
| 102 | 1 | பணிந்தவர் | பணிந்தவர்-திருச் |
| 828 | 4 | நெற்சாவி | நெற்சாவி |

குறிப்பு:— மேலும் உள்ள பிழைகளைத் திருத்திப்படிக்க.

செங்கோட்டுப்பள்ளு கிடைக்குமிடங்கள்:—

கவிஞர். ந. கந்தசாமி, மல்லசமுத்திரம்.
வித்வான். மா கணபதி, திருச்செங்கோடு.
புலவர். மி. மு. சின்னாண்டார், நத்தமர் தெரு,
அம்மாப்பேட்டை - சேலம் 3.

கவிஞர். கந்தசாமி அவர்களின் நூல்கள்

| | | |
|---|---|---|
| பாரதி பராக்கிரமம் | காசு | 40 |
| குமரன் தியாகம் | ,, | 40 |
| திருக்குறள் சிதம்பர வெண்பா | ,, | 30 |
| காந்தி நான்மணி மாலை | ,, | 30 |
| காந்தி காவடிச்சிந்து | ,, | 30 |
| தமிழா கேள்! | ,, | 25 |
| உழைப்பவர் உள்ளம் | ,, | 50 |

இந்நூல்கள் அனைத்தும் ஒரே கட்டடம் ரூ. 3-00

## இனி யாம் வெளியிடவிருக்கும் நூல்கள்:—

### 'அல்லிப்புரம் நொண்டி'

ந. கந்தசாமி.

ஆசிரியர் தனது அரசியல் ஈடுபாட்டைக் கூறுமுகத்தால், நாட்டுரிமை போராட்டச் செய்திகளை, எளிய சந்தப்பாட்டுகளில் விறுவிறுப்பாகக்கூறும் நாடகநூல். (நாமக்கல் கவிஞரின் அணிந்துரையுடன்) (அச்சில்)

### 'பாட்டுக்கொருபுலவன்'

க. மணிவாசகன்

பாரதியின் சரிதையை டல கண்ணோட்டத்தில் விவரித்துக்காட்டும் உரைநடை நூல் (அச்சில்)

### 'மார்க்கண்டேயர் சங்கீதசார ஒயிற்கும்மி'

கீரம்பூர், அப்பாவு நாவலர்.

### 'சேமூர்ப்பள்ளு'

முருகதாசர்.

### 'அலைவாய்கிரிக்குமரன் விறலிவிடு தூது'

வெண்ணந்தூர், பரமானந்தப்புலவர்.

பழகுதமிழ்ப் பதிப்பகம், வெங்கடேசபுரி, மல்லசமுத்திரம்.

☎ நெ 2433 / 2933. / 4623

தந்தி: "சொஸைட்டி"

ஸ்தாபிதம்: 1938.

சிறந்த கைத்தறி ஜவுளிகளுக்கு

## சேலம் அம்மாப்பேட்டை சொஸைட்டி ஜவுளிகளே

★ புதுமையான டிசைன் சேலைகள்,

★ சோளி பீஸ் ரகங்கள்,

★ வேட்டிகள், குண்டஞ்சு, பாவாஞ்சு,

★ ஜரிகை அங்கவஸ்திரங்கள், ஜரிகைவேட்டி,

★ நவீன ரக பெட்ஷீட்டுகள்

மற்றும் உங்களுக்குத் தேவையான கைத்தறி ஜவுளிகள் எல்லாவிதமான டிசைன்களிலும் எல்லா கெஜங்களிலும் கிடைக்கும்.

---

சென்னை தியாகராயநகர் விற்பனை டெப்போ,

9, உஸ்மான் ரோடு, டி. நகர், சென்னை-17.

போன் எண். 41723.

---

**ஏ. மாரியப்பன்,**

தலைவர்.

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிமிடெட் எண். 532

அம்மாப்பேட்டை, சேலம்-3.

---

குறிப்பு:- எங்கள் ஜவுளிகள் எல்லா "கோவாப்டெக்ஸ்" எம்போரியங்களிலும் ஹேன்ட்லூம் ஹவுஸ்களிலும் மற்றும் எங்கள் டெப்போக்களிலும், எங்களுடைய ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

ஸ்தாபிதம்: 1957.  தொலைபேசி எண். 24

வாழ்க கூட்டுறவு!

# மல்லசமுத்திரம் தியாகி குமரன் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட் No. S. 1267.

மல்லசமுத்திரம் அஞ்சல்,  சேலம் மாவட்டம்.

*எங்கள் சங்கத்தில் 40s 51" 2x7, 2x8, 2x9, 2x10 பேட்டு, 2x8 பெரிய பேட்டு, சி. இ. மோ. பெ. இ. மோ. வேஷ்டி கொத்துகளும். 60s 52" 1x4, 60s 56" 2x8 வேஷ்டி சின்ன பாவஞ்சி, பெரிய பாவஞ்சி, சின்னப்பேட்டு. பெரிய பேட்டு வேஷ்டிகளும். தேர்ச்சி பெற்ற நெசவாளர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டது.*

---

எங்கள் சங்க ஜவுளிரகங்கள் எல்லா 'கோ ஆப்டெக்ஸ்" எம்போரியங்களிலும் கிடைக்கும். தங்கள் தேவைக்கு எங்கள் சங்கத்திற்கு வருகை தரவேண்டுகிறேம்.

---

இங்ஙனம்,

**M. A. வேலுசாமி,**

தலைவர்.

M. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

ம. செ. அருணசலம்,
உபதலைவர்.

நிர்வாகஸ்தர்.

ஆ. பழனியப்பன்,
கி. ராமசாமி,

மு. முருகேசன்,
க. அப்புக் கவுண்டர்,

சிறந்த வேஷ்டிகள் எனப் பாராட்டப்பட்டு
சென்னை அரசாங்க முதல் பரிசுகள் பெற்ற
எங்களது சங்கத்தில் தயாராகும் ரகங்கள்:—

20, 40. 60, 80. 100-ம் நம்பர் நூல்களில் வேஷ்டிகள், துண்டுகள், காடா பீஸ், கர்சீப் ரகங்கள், கலர் சேலைகள் முதலியன.

தேவைக்கு வருகை தாருங்கள்:

**No. S. 844. குருசாமிபாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்.**

குருசாமிபாளையம் அஞ்சல். சேலம் மாவட்டம்.

---

**மல்லசமுத்திரம் கொல்லு தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம் நெ. 308. மல்லசமுத்திரம்.**

எங்கள் சொஸைட்டியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான பம்பு செட் ரிப்பேர், பைப்புகளுக்கு மரை வெட்டுதல், போரிங் செய்வது, சாப்ட் பெண்ட் எடுத்தல். கரும்பு ஆலைகளுக்கு கதிர் வெட்டுதல், மற்றும் கரும்பாலை சீர் முதலியன சரி செய்து கொடுத்தல், புதிய சாப்ட்கள் மற்றும் இதர வேலைகளும் டிரில் போடுதல், ஆயில் இன்சின் ரிப்பேர் செய்தல் முதலியவைகள் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் நேர்த்தியாகவும், நீடித்து உழைக்கும்படியும் செய்து கொடுக்கிறோம் என்பதை அன்புடன் அறிவிக்கின்றோம்.

மற்றும் எங்களிடம் அலுவலகங்களுக்கும், பள்ளிகளுக்கும் வீடுகளுக்கும் தேவையான மரச் சாமான்கள் சிறந்த மரங்களைக் கொண்டு நேர்த்தியான முறையில் குறித்த காலத்திற்குள் செய்து தருகிறோம் பெரிய மரங்களை தேவைக் கேற்ற அளவில் எந்திரத்தில் அறுத்துக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்

**M. கிருஷ்ணன் B. A.,**
காரியதரிசி

**ம. க. ராமசாமி ஆச்சாரி,**
தலைவர்

வளர்க கூட்டுறவு!  வாழ்க கைத்தறி!!



# மல்லை டெக்ஸ்,

## மல்லசமுத்திரம்.

தந்தி: மல்லைடெக்ஸ். போன்: 23,

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், S. 1142,**

***மல்லசமுத்திரம் அஞ்சல், — சேலம் மாவட்டம்.***

---

எங்கள் சங்கத்தில் கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு நல்லமுறையில் தயாரிக்கப்பட்ட 20s, 30s, 40s 60s, 80s, ரகங்களில் 2x7, 2x8, 4x8, 2x9, 4x9, 2x10 ஆகிய கெஜங்களில் வேட்டிகளும் 60s ரகங்களில் 2x8, 2x9, 2x10 துண்டு ரகங்களும் பாவஞ்சு & மில் பார்டர் ரகங்களும், 20வெள்ளை கலர் பீஸ் ரகங்களும், 60s, 1x12 சர்ட்டிங், வாயில் பிரிண்ட் சுங்கடி சேலை ரகங்களும், நேர்த்தியான முறையில் தயார் செய்கிறோம். எங்கள் சங்க ரகங்கள் ஈரோடு மார்க்கெட்டில் பெயர் பெற்றவை.

---

எங்கள் ரகங்கள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

---

***தங்கள் தேவைக்கு ஒருமுறை வருகை தாருங்கள்.***

வாழ்க கைத்தறி! வளர்க கூட்டுறவு!!

# சேலம் டவுன் பாவடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், No. S. 1184.

***66, ராமசுந்தரமுதலி தெரு, சேலம் 1.***

**உங்களின் தேவைக்கு கைத்தறி ஆடைகளையே வாங்குங்கள். அதுவும்**

**சேலம் டவுன் பாவடி சொஸைட்டி ஆடைகளையே கேட்டு வாங்குங்கள்**

**ஏனெனில்**

வண்ண நிறங்களில் எண்ணற்ற ரகங்களின் கண்ணைக் கவருவனவாய், கருத்தை ஈர்ப்பனவாய் எல்லோரும் எப்போதும் விரும்பும் வகையில் தயாரிக்கப்படுகிறது.

சாயத்திற்கு உத்திரவாதம்:— 20s முதல் 100s வரை இரும்பு பண்ணையில் தயாரிக்கப்பட்ட வேஷ்டிகள் சேலைகள் கிடைக்கும்.

*எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.*

**A. V. நடேச முதலியார்,**

தலைவர்.

துவக்கம் 1942. வாழ்க கைத்தறி வளர்க கூட்டுறவு!

# பாச்சல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். நெ. S700.

பாச்சல் அஞ்சல், புதுசத்திரம் வழி,

சேலம் மாவட்டம்.

சங்கத்தில் 20நெ நூல்முதல் 80நெ. வரை நூல்களில் வேட்டி ரகங்கள் கெட்டியான சாயத்தில் பாவஞ்சு, சன்னஞ்சு, பேட்டு ரகங்களில் கரை போடப்பட்டவை, 2x7, 2x8, 2x9 கெஜம் ஜோடிகளில் தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றன. நீடித்த உழைப்பு, நெசவுக்கு உத்திரவாதம் சங்கத்தின் வேட்டிகளின் விலைகள் நயமானவை. எல்லோரும்வாங்கி ஆதரிக்கக் கோருகிறோம் தமிழ்நாடுகைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க விற்பனை நிலையங்களில் சங்கத்தின் வேட்டிகள் கிடைக்கும்.

S. கருப்பண்ண முதலியார், உபதலைவர்.

R. லக்ஷ்மண முதலியார், தலைவர்.

கூட்டுறவு வாழ்க!　　　　　　　　துவக்கம் 1952.

# நடுப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்.,

அலவாய்ப்பட்டி P. O. வெண்ணந்தூர் (வழி), (சேலம் Dt)

எங்களிடம் 20-ம் நெம்பர் முதல் 100-ம் நெம்பர் வரை பலதரப்பட்ட வேஷ்டி ரகங்களும், 20-ம் நெம்பரில் துண்டு தான் ரகங்களும், பீஸ்ரகங்களும், 60-ம் நெம்பரில் ஸ்பெஷில் பீஸ் ரகங்களும், சேலை ரகங்களும், துண்டு ரகங்களும் தயாராகிறது.

---

**எங்கள் சங்க ஜவுளிகள் ஈரோடு மார்க்கெட்டில் பெயர் பெற்றது.**

---

தேவைக்கு ஒருமுறை விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

**K. S. ஆறுமுகம்,**

**தலைவர்.**

வாழ்க கைத்தறி! வளர்க கூட்டுறவு!

ஸ்தாபிதம் 1957 ☎ ஆட்டையாம்பட்டி 28




## S. 1266, தியாகி குமரன் கைத்தறிநெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்.

கைலாசம்பாளையம் புதூர், S. பாப்பாரப்பட்டி P. O.
(வழி) ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்

எங்கள் சங்கத்தில் கீழ்க்கண்ட ஜவுளி ரகங்கள் சிறந்த முறையில் தேர்ச்சிபெற்ற நெசவாளர்களைக்கொண்டு தயார்செய்கிறோம்.

**ஆர்ட் சில்க் லைட்கலர், வெள்ளை பீஸ்,**
**ஆர்ட் சில்க்/80s நூல் கலப்புரக சலவை வேட்டி**
**ஆர்ட்சில்க்/100s நூல் கலப்பு ஸ்பெஷல் கப்பு வேட்டி**
**60s நூல்/ஆர்ட் சில்க் கலப்பு பிளைன் பெமிடா சேலை**
**100s, 80s, 60s, நூல் காரிகம் பேட்டு, பாவஞ்சு & குண்டஞ்சு வேட்டி.**

**40s, 30s நூல் பேட்டு, பாவஞ்சு கொத்து. 100s, நூல் கலர்பிளைன் வாயில் பீஸ்.40s. நூல் 6 கெஜம், 8 கெஜம் சேலை**

தங்கள் மேலான தேவைக்கு எங்கள் சங்க ஜவுளிகளை வாங்கி திருப்தியடையுங்கள். தங்கள் திருப்தியே எங்கள் லட்சியம்

எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும், சென்னை கைத்தறி மாளிகையிலும் கிடைக்கும்.

K. M. மாணிக்கம், உப. தலைவர்.

ரா. க வேலாயுதம்
A பழனியப்பன்,
ல குப்புசாமி.
டைரக்டர்கள்.

P.A. வட்டமலை, தலைவர்.

# கைத்தறியில் கைராசியுள்ள ஆடைகள்.




V. ராஜகோபாலன்,
காரியதரிசி.

K. பெருமாள்,
தலைவர்.

ஸ்தாபிதம்: **1962.**

வாழ்க கைத்தறி! ☎ No. 32. வளர்க கூட்டுறவு!!

# S. A. 2. வேலநத்தம்

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்.

வேலநத்தம், ஆட்டையாம்பட்டி அஞ்சல். (சேலம் மாவட்டம்.)

எங்களிடம் 40s, 60s, 80s 100s நூல்களில் 2x8 பேட்டு ஜோடிகளும், 1x4 பேட்டு வேட்டிகளும், 40s சன்னஞ்சி துண்டுகளும், 20 நெ. வேட்டி & துண்டுகளும். 60s பாவஞ்சு துண்டுகளும், 60s கலர் சேலைகளும், ஆர்ட் சில்க் வேட்டிகளும், ஆர்ட் சில்க் கலர் பீஸ்களும், தயார் செய்கிறோம்.

மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

T. A. *பழனியப்பன்,*
தலைவர்.

PHONE: 35. ESTD: 1943.

# THARAMANGALAM

## Handloom Weavers Co-op. Production & Sale Society Ltd., No. S. 730,

*Tharamangalam, Salem Dt.*

சிற்பக்கலைக்குப் பெயர் பெற்ற இடம் - தாரமங்கலம்!

அது போலவே

ஜவுளி ரகங்களுக்கும் பெயர்பெற்ற இடம்

தாரமங்கலம் கூட்டுறவு நெசவாளர் சொசைட்டியே!

---

தாரமங்கலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு

உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. S. *730*,

தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

---

எங்கள் சங்கத்தில் தயாராகும் ஜவுளிகள் சென்னை

ராஜ்ய நெசவாளர் சங்கத்தின் எல்லா

"கோ - ஆப்டெக்ஸ்"

எம்போரியங்களிலும் கிடைக்கும்.

★ அனைவரும் புகழும் அருமையான

★ அழகிய ஆடைகள்

| | |
|---|---|
| பெட்ஷீட்டுகள் | துண்டுகள் |
| மேஜைத் துணிகள் | சேலை ரகங்கள். |
| திரைக்கான துணிகள் | அலங்காரத் துணிகள். |

உற்பத்தியாளர்:

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம்
லிமிடெட், No. K. 885.

சென்னிமலை P. O., கோயமுத்தூர் ஜில்லா.

தந்தி: "CHENTEX" போன் நெ. 32,

---

படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகளின் தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், கெட்டி சாயத்திற்கும், குறைந்த விலைக்கும், சென்னை அரசாங்கத்தாரால் முதல் பரிசும், அநேக கண்காட்சிகளில் தங்க மெடல் சர்ட்டி பிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

---

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் விற்பனை எம்போரியங்கள் எல்லாவற்றிலும் எங்கள் சங்க ஜவுளித்தினுசுகள் கிடைக்கும்.

*M. P.* நாச்சிமுத்து, B. A., B. L., தலைவர்.

PHONE 35. ESTD. 1943.

# THARAMANGALAM

## Handloom Weavers Co-op. Production & Sale Society Ltd., No. S. 730,

*Tharamangalam, Salem Dt.*

சிற்பக்கலைக்குப் பெயர் பெற்ற இடம - தாரமங்கலம்!
அது போலவே
ஜவுளி ரகங்களுக்கும் பெயர்பெற்ற இடம்
தாரமங்கலம் கூட்டுறவு நெசவாளா சொஸைட்டியே!

தாரமங்கலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. S. 730,
தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

எங்கள் சங்கத்தில் தயாராகும் ஜவுளிகள் சென்னை
ராஜ்ய நெசவாளர் சங்கத்தின எல்லா
"கோ - ஆப்டெக்ஸ்"
எம்போரியங்களிலும் கிடைக்கும்.

★ அனைவரும் புகழும் அருமையான

★ அழகிய ஆடைகள்

பெட்ஷீட்டுகள் — துண்டுகள்

மேஜைத் துணிகள் — சேலை ரகங்கள்.

திரைக்கான துணிகள் — அலங்காரத் துணிகள்.

உற்பத்தியாளர்:

## சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், *No. K. 885.*

சென்னிமலை *P. O.*, கோயமுத்தூர் ஜில்லா.

தந்தி: "CHENTEX" போன் நெ. 32,

படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகளின் தரத்திற்கும், நவீன ரகத்திற்கும், கெட்டி சாயத்திற்கும், குறைந்த விலைக்கும், சென்னை அரசாங்கத்தாரால் முதல் பரிசும், அநேக கண்காட்சிகளில் தங்க மெடல் சர்ட்டி பிகேட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் விற்பனை எம்போரியங்கள் எல்லாவற்றிலும் எங்கள் சங்க ஜவுளித்தினுசுகள் கிடைக்கும்.

*M. P. நாச்சிமுத்து*, B. A., B. L., தலைவர்.


எந்த விழாவிற்கும் சந்தர்ப்பத்திற்கும்
எல்லோரும் சால விரும்புவது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி துணிகள்
தமிழ் நாடு.
கைத்தறி
நெசவாளர்
கூட்டுறவு
சங்கம்.
லிமிடேட்.
பாலசுந்தரம் பில்டிங்ஸ்.
எழும்பூர், சென்னை-8